# உதயன்

■ பதிப்பு: ★ ■ விலை: ரூபா 30
■ சுடர் 28 ■ கதிர் 118
■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 11 ஞாயிறு 24.03.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

பக்கங்கள் - 64

கனடா விசா ஆலோசனைக்கு தனிப்பிரிவு ஆரம்பம்
* கனடாவில் படிக்க, உழைக்க, நிரந்தர குடியுரிமை பெற Visit Visa ஆலோசனைகள்.
* இன்று (24.3.2013) மு.ப. 10 மணிக்கு விசேட கருத்தரங்கு நடைபெற உள்ளது
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
☏ 021 221 9016, 021 568 9090
7 நாள்களும் காலை 8 முதல் இரவு 8 வரை திறந்திருக்கும்

64 பக்கங்கள்

**உதயன் 24**

■ கிராம அலுவலர் போட்டிப்பரீட்சை நடைபெறுமா? பக். 5
■ வவு. வைத்தியசாலையில் மருந்துக்கு தட்டுப்பாடு பக். 6
■ சிங்கங்களிடம் சிக்கியது வங்கப் புலிகள் பக். 19

**சூரியகாந்தி 24**

■ தகிப்பின் தொடர் கணங்கள் பக். 1
■ வெள்ளைப் பூரான்கள் யார் கொண்டு வந்தது? பக். 20
■ அரக்கு மாளிகை ஆபத்து பக். 24

**விளம்பரம் 16**

# அமெ. தீர்மானம் உப்புச்சப்பற்றது

## வடபகுதி சிவில் சமூகம் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 24

பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிடும் செயற்பாடாகவே, ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் உள்ளது. நாங்கள் சர்வதேசத்துக்கு எத்தனையோ விடயங்களை அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லியுள்ளோம். ஆனால் அதில் ஒன்றைத்தானும் இதில் உள்ளடக்காமை எங்களுக்கு ஏமாற்றத்தையளிக்கின்றது.

இவ்வாறு வடபகுதி சிவில் சமூகத்தினர் 'உதயனிடம்' கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் இரண்டாவது வருடமாகவும் அமெரிக்காவினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் தொடர்பில் வடக்கிலுள்ள சிவில் சமூகத்தினரிடம் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது குறித்து மன்னார் ஆயர் இராசப்பு யோசப் ஆண்டகை தெரிவிக்கையில், கள்ளனிடமே களவு தொடர்பில் விசாரிக்கச் சொன்னால் எப்படியிருக்கும்? நாங்கள் இங்குள்ள நிலைமை தொடர்பாகவும், சர்வதேச தலையீடு ஏன் என்பது தொடர்பிலும் தெளிவாக விளக்கியும் அவர்கள் அதனை தமது வரைபில் உள்ளடக்காதது ஏமாற்றம் தான் - என்றார்.

தனது பெயரை வெளியிட விரும்பாத அரச உத்தியோகத்தர் ஒருவர் தெரிவிக்கையில், ஜெனிவா தீர்மானத்தால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அமெரிக்கா, இந்தியாவுக்கு எது தேவையோ அதைக் கொடுத்தால் சரி. எங்களைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

தமிழக மாணவர்களிடம் இருக்கின்ற உணர்வுகள் எங்கள் இளைஞர்களிடம் இருக்கின்றதா என்பதை நாம் ஒருமுறை பார்க்க வேண்டும்.

பார்க்க பக்கம் 04

## யாழ்.மாநகர சபையில் துப்பாக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 24

''உங்களுக்குத் துவக்குத் தான் சரி'' என்று மாநகர சபை முதல்வர் கூற; 'உங்களுக்கு அதைத் தெரியும். எங்களுக்கு அதைப் பயன்படுத்தவும் தெரியும்' என்று சட்டெனப் பதில் கூறினார் எதிரணி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்த வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றன.

கடந்த வெள்ளிக்கிழமை மாநகரசபையின்

பார்க்க பக்கம் 04

## முள்ளியவளையில் குடியேற்றத்துக்கு தமிழர் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 24

முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில் முஸ்லிம் மக்களைக் குடியேற்றும் பொருட்டு அந்தப் பகுதியில் நில அளவை செய்ய முயன்ற அதிகாரிகள் அங்குள்ள தமிழ் மக்கள் திரண்டு நடத்திய எதிர்ப்பை அடுத்துப் பின்

பார்க்க பக்கம் 04

## பிரதேச செயலர்களை மிரட்டும் சீருடையினர்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

இராணுவ முகாம்கள் அமைப்பதற்கு யாழ்.மாவட்டத்தில் கேட்கப்பட்ட அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை வழங்குமாறு கோரிப் பிரதேச செயலர்கள் சீருடையினரால் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீருடையினரின் நிர்ப்பந்தம் தொடர்பில் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசியல் தரப்பினர் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் நிரந்தர முகாம் அமைப்பதற்குக் காணிகளைக் கோரி வருகின்றனர். குறிப்பாக அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான ஏராள

பார்க்க பக்கம் 04

### காணாமற்போனோர் தொடர்பில்

## 3,000 முறைப்பாடுகள் ஜெனிவாவில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

காணாமற்போனவர்கள் தொடர்பில் எமது அமைப்பிடம் பதிவு செய்யப்பட்ட 5 ஆயிரம் பேர் தொடர்பான முறைப்பாட்டில் 3 ஆயிரம் பேரின் முறைப்பாடுகள் ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சியோரின் முறைப்பாடுகளையும் அங்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் எஸ்.மகேந்திரம் தெரிவித்தார்.

காணாமற்போன 37 பேர் தொடர்பில் நேற்றைய தினம் (உதயனில்) வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களின் உறவினர்கள் தன்னுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போதும் அதற்கு முன்னரும் போரின் பின்னரும் ஆயிரக்கணக்கானவர்கள் இலங்கையில் காணாமற் போயுள்ளனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்களால் காணாமற்போனவரைத் தேடிக் கண்டறியும் குழுவுக்கு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதுவரை 5 ஆயிரம் பேர் வரையில் காணாமற்போயுள்ளனர் என அவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ள

பார்க்க பக்கம் 04

## முள்ளிவாய்க்காலில் கொத்துக்குண்டுகளா?

யாழ்ப்பாணம்,மார்ச் 24

முள்ளி வாய்க்காலில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் வெடிக்காத நிலையில் காணப்படும் குண்டுகள் கொத்துக் குண்டுகளாக இருக்கலாம் எனப் பலரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றைய உதயனில் வெளியான புகைப்படங்களைப் பார்வையிட்ட பலர் அதில் உள்ளவை கொத்துக் குண்டுகளாக இருக்கலாம் என்று அச்சம் வெளியிட்டனர்.

அத்துடன் வேறு பலர்

பார்க்க பக்கம் 04

## "புலிகளின் பாதையிலேயே பயணிப்போம்"

### ■ தமிழக மாணவர்கள் மிரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மத்திய அரசு எங்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காவிட்டால் ''புலிகளின் பாதையிலேயே நாங்களும் பயணிப்போம்'' என்று தமிழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நாள்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழக மாணவர்களின் போராட்டம் இன்னமும்

பார்க்க பக்கம் 04

## சிங்கர் காட்சியறை திறப்பு விழா அழைப்பு

27.03.2013 புதன்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு SINGER Plus முல்லைத்தீவு காட்சியறை கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளதால் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் வீட்டிற்கு, அலுவலகத்திற்கு தேவையான சகல தளபாடங்களையும் மற்றும் அனைத்து வகையான இலத்திரனியல் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.**

**03.04.2013 வரை கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு விசேட சலுகைகள்** (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

பிரதான வீதி முல்லைத்தீவு

(C/6061)(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் படுகொலைகள் குறித்து விசாரணைகளை ஆரம்பியுங்கள்

## இலங்கையிடம் மீண்டும் அமெ. வலியுறுத்தல்

வொஷிங்டன்.மார்ச் 24

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இறுதிப்போரின் போது, அரச படையினரால் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அமெரிக்கா இலங்கையிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. சர்வதேச சமுகத்தின் சொல்லுக்கு மதிப்பளிக்குமாறும் அது கூறியுள்ளது.

வொஷிங்டனில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

அவர்கள் நடைமுறைப் படுத்தாத திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அவர்கள் அனைத்துலகச் சமூகத்தின் சொல்லைக் கேட்க வேண்டும். உங்களுக்குத் தெரியும், நாம் முன்வைத்த பிரேரணையை வரவேற்பதற்கு 25 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

தனது சொந்த மக்களுக்கு அதன் பொறுப்புகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம்.நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறலில் இன்னமும் நிறைவேற்றப்படாத விவகாரங்களுக்குப் பதிலளிப்பதற்கு இலங்கை அரசுக்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவை,பிரேரணை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு நாம் ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே எச்சரிக்கை விடுத்திருந்தோம். வொஷிங்டனுக்கு வந்த இலங்கையின் மூத்த அதிகாரி உள்ளிட்டோரிடம், நாம் மிகத்தெளிவாகவே கூறியிருந்தோம்.

நீங்கள் முன்னே அடியெடுத்து வைக்காவிட்டால் நாம் இதேபோன்று மீண்டும் பிரேரணை கொண்டு வருவோம் என்று அவர்களிடம் கூறியிருந்தோம். அது ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்தது. ஆனால் எந்த முன்னேற்றத்தையும் நாம் காணவில்லை. மீண்டும், இலங்கை என்ன முடிவுகளை எடுக்கப் போகிறது என்று பார்க்க வேண்டும்.

நாம் முன்னரே கூறியது போன்று, அவர்கள் எதையும் செய்யவில்லையென்று அனைத்துலக சமூகம் கருதினால், நாம் அடுத்த அடிகளை எடுத்து வைக்க முடியும்-என்றார். (த)

## இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கும் எண்ணம் எதுவுமில்லை

### அமெ.தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 24

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் மீண்டும் அமெரிக்கா பிரேரணை கொண்டு வந்துள்ள போதிலும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கும் எண்ணம் ஏதும் அமெரிக்க அரசுக்குக் கிடையாது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளையும், மனித உரிமைகளையும் பாதுகாப்பது தான், ஐ. நா மனித உரிமைகள் சபையில் பிரேரணை கொண்டு வரப்பட்டதற்கான காரணம்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு பொது மக்கள், சமூக அமைப்புகள், சிறுபான்மையினரின் உதவியை நாட வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாத்தல், கருத்து சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். போர் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தப் பரப்புகளில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இலங்கையில் அமைதி, ஐக்கியம், அபிவிருத்திக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும்-என்றார். (த)

## இலங்கையுடனான உறவில் பாதிப்புக்கள் எதுவுமில்லை

### இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி,மார்ச் 24

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததால், அந்த நாட்டுடனான உறவுகள் பாதிக்கப்படாது என்று நம்புவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கை - இந்தியா இடையிலான உறவுக்கு மிகப்பெரிய பெறுமானம் உள்ளது. இலங்கையில் போரினால் இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுக்கு இந்தியா உதவி வருகிறது. எனினும், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா கடுமையான அறிக்கையை வெளியிட்டது. காரணம், அது முக்கியமான விவகாரம் என்று நான் உணர்ந்தேன்.

இலங்கையில் உள்ள தமிழர்களின் அரசியல் உரிமையை உறுதிப்படுத்தும் அதிகாரப்பகிர்வு பற்றிய நீண்ட வாக்குறுதியை கொழும்பு அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார். (த)

## கனேடிய செனட்டருடன் பீரிஸ் கருத்து மோதல்

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றின்போது கனேடிய செனட்டரான ஹக் சீகல் மற்றும் வெளிவிகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகிய இருவரும் காரசாரமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலின்போது விசேட விருந்தினராக கலந்து கொண்ட கனேடிய செனட்டரான ஹக் சீகல் சொற்பொழிவு ஆற்றினார்.

செனட்டரின் சொற்பொழிவு நிறைவடைந்ததைத் தொடர்ந்து கேள்வி பதிலுக்கான நேரம் ஒதுக்கப்பட்டது. இதன் போதே காரசாரமான கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இதன்போது கனேடிய செனட்டரின் கருத்துக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் காரசாரமாகக் கருத்துக்களை பரிமாறியதாகத் தெரிவிக்கப் பட்டது. (த)

## இலங்கை பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் இந்திய அரசு

### மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை

சென்னை,மார்ச் 24

ஈழத்தமிழர் படுகொலைக்கு கண்டனம் தெரிவிப்பதற்காக இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்கவேண்டும் என்று பா.ம.க நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்,

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனப்படுகொலைகளுக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தண்டிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடுமையான பிரேரணை நிறைவேற்றப்படும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் நம்பிக்கொண்டிருந்த நிலையில், உப்புசப்பில்லாத பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க போராடுவதாகக் கூறி களமிறங்கிய அமெரிக்கா, இந்தியாவுடன் கை கோர்த்து, தமிழர்களுக்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்திருக்கிறது.

ஈழத்தமிழர் படுகொலைக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அமெரிக்கப் பிரேரணையில் திருத்தம் கொண்டு வரப்படும்; இந்திய நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வரப்படும் என்று கூறி வந்த மத்திய அரசு, இந்த இரண்டையுமே செய்யாமல் தமிழர்களை நம்ப வைத்து ஏமாற்றி விட்டது. இதை தமிழர்கள் ஒருபோதும் மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் உதவியுடன் தப்பித்துக்கொண்ட இலங்கை, அடுத்ததாக உலக நாடுகளின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ள பொதுநலவாய மாநாட்டை நடத்த ஆயத்தமாகி வருகிறது. இந்த மாநாட்டில் பொதுநலவாயத் தலைவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் ஏற்றி, அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்வது தான் ஜனாதிபதி மஹிந்தவின் நோக்கமாகும்.

கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் கனடா பங்கேற்காது என அந்நாட்டு பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் அறிவித்துள்ளார். அதேபோல் பொதுநலவாய அமைப்பின் தலைவரான எலிசபெத் மகாராணியும்,பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் இந்த மாநாட்டை புறக்கணிப்பது குறித்து ஆய்வு செய்துவருகின்றனர்.

ஆனால், ஈழத்தமிழர் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிப்பதற்காக இந்த மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டிய இந்தியாவோ, அதனை வெற்றிகரமாக நடத்துவதற்காக இலங்கைக்கு உதவி வருகிறது.

தமிழக மக்களும், மாணவர்களும், இனி இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும். பொதுநலவாய அமைப்பில் இருந்து இலங்கையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட வேண்டும்-என்றுள்ளது. (த)

## பனிச்சங்கேணி பிரதேசத்தில் மனித எலும்புக் கூடுகள் மீட்பு

மட்டக்களப்பு,மார்ச் 24

மட்டக்களப்பு, பனிச்சங்கேணி பிரதேசத்தில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர். பனிச்சங்கேணி- எல்லத்தீவு பிரதேசத்திலேயே நேற்றுச் சனிக்கிழமை இந்த எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் உணவு விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளில் ஈடுபட்டிந்தவர்கள் இந்த எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக வாகரைப் பொலிஸாருக்குத் தெரிவித்தனர். இதையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்தியதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## ஈழக் கோரிக்கையை கனவாக்கிவிட்டோம்

### ஜனாதிபதி பெருமிதம்

கொழும்பு,மார்ச் 24

இலங்கையின் ஒரு பகுதியாக இருந்த ஈழ நாட்டை, இப்போது தாம் ஒரு கனவாகச் சுருக்கி விட்டதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போயகலவில் உள்ள விஜயபா இலகு காலாட் படைப்பிரிவின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

2009இற்கு முன்னர் இந்த நாட்டின் ஒரு பகுதி, ஈழப் பிராந்தியம் என்று அடையாளப்படுத்தப்பட்டது. போர் நிறுத்த உடன்பாடு கூட அதற்கு ஒப்புதல் அளித்திருந்தது.

அனைத்துலக சமூகத்தினால் கொண்டு வரப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை நாம் 2008 இல் முடிவுக்குக் கொண்டுவராது போயிருந்தால், இன்று இந்த நாட்டின் நிலைமை என்னவாகியிருக்கும்?

அவர்கள் விரும்பியபடி, அனைத்துலக சமூகத்தின் உத்தரவாதத்துடன், போர் நிறுத்த உடன்பாட்டைப் பயன்படுத்தி இந்த நாடு இரண்டாகப் பிளவுபட்டிருக்கும்.

ஈழ நாட்டை நாம் தற்போது ஒரு கனவாக சுருக்கி விட்டோம். அதற்காக அவர்கள் இப்போது எம்மைப் பழிவாங்க நினைக்கிறார்கள்.

தீவிரவாதிகளுக்கு எதிராக மனிதாபிமானப் போரைத் தொடங்க முடிவு செய்த போது, நடவடிக்கையின் வெற்றியைத் தொடர்ந்து ஏற்படக் கூடிய தாக்கங்கள், அதன் விளைவுகளை நாம் நன்றாகவே அறிந்திருந்தோம்.

உங்களின் மொழியில் விளக்குவதென்றால், எதிரிக்கு எதிராக எல்லா முனைகளிலும் அதிர்ச்சித் தாக்குதலை நடத்துவது முக்கியம்.

போர் வெற்றியின் பின்னர், சனல்-4 போன்ற தொலைக்காட்சிகள், பொய்யான குற்றச்சாட்டுகளுடன் இது போன்ற அதிர்ச்சித் தாக்குதலை எம்மீது நடத்த முனைகின்றன.

வடக்கில் மனிதாபிமானப் போரின் போது, மற்றைய நாடுகளைப் போல ஊடகங்களுக்குக் கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படவில்லை.

இந்தத் தாக்குதல்கள் எமக்கு அதிர்ச்சியளிக்கவில்லை. இந்தத் தாக்குதல்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை-என்றார். (த)

## பிரபாகரன் பற்றி அவதூறு ஈழ ஆதரவாளர் கொதிப்பு

சென்னை,மார்ச் 24

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றி அவதூறாக பேஸ்புக்கில் செய்தி வெளியிட்ட காங்கிரஸ் பிரமுகர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாம் தமிழர் கட்சியினர், தமிழ் உணர்வாளர்கள் பொலிஸ் நிலையத்தில் நேற்று சனிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு ஊராட்சி தோழன் பட்டியைச் சேர்ந்தவர் பாலையா மகன் மனோஜ்(வயது-2%). காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். இவர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், பெண் ஒருவரைப் பிடிப்பது போல ஒரு படத்தை கணினியில் உருவாக்கி அதற்கான தேவையற்ற விளக்கம் ஒன்றையும் சேர்த்து தனது பேஸ்புக்கில் நேற்றுமுன்தினம் இரவு வெளியிட்டுள்ளார். இதனைப் பார்வையிட்ட தழிழக ஈழ ஆதரவாளர்கள் பலர் கொதித்தெழுந்தனர்.

இவ்வாறு பிரபாகரனின் படம் வெளியிட்டமை தமிழினத்தையும், தமிழர்களையும் அவமதிப்பதாகும். இத்தகைய செயலில் ஈடுபட்ட மனோஜ் என்பவரைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் செல்வராஜ், அந்தக் கட்சியின் மாவட்டத் தலைவர் துரைப்பாண்டியன், நிர்வாகிகள் தரணிரமேஷ், வழக்குரைஞர் போத்தியப்பன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் வடகாடு பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## 45 கேணல்கள் பிரிகேடியர்களாக பதவி உயர்வு

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 45 கேணல்கள் பிரிகேடியர்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியின் அனுமதியுடன் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன. (த)

## கொழும்புத் துறைமுகத்தில் ஈரானிய போர்க் கப்பல்கள்

இரண்டு ஈரானிய போர்க் கப்பல்கள் கொழும்பில் நங்கூரமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இரண்டு போர்க்கப்பல்களையும் இலங்கை கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே பார்வையிட்டுள்ளார். இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்தும் முகமாக இவர்கள் வந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 இல் ஐந்து வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது 16.6 மில்லியன் ரூபா நிதி

## மூன்று வேலைத் திட்டங்களே நிறைவுசெய்யப்பட்டுள்ளன; ஏனையவை இழுபறியில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

*நகர அபிவிருத்தி அதிகார சபையால் யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5 வேலைத் திட்டங்கள் 16.6 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டே நிறைவுறுத்தப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

யாழ். நகர் கடற்கரை பூங்கா பகுதியில் முதல் கட்ட அபிவிருத்தி வேலைக்கு 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இதில் 75 சதவீதமான வேலைகளே இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கோட்டைப் பூங்கா பகுதியில் முதல்கட்ட அபிவிருத்தி வேலைக்கு 1.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் பூரணமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

புல்லுக்குளத்தின் மீள் அபிவிருத்திக்கு 0.7 மில்லியம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் பூரணமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

வண்ணன் குளத்தின் மீள் அபிவிருத்திக்கு 0.9மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தில் 75சதவீதமான வேலைகளே நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

நகரப் பகுதி மண் நிரவும் செயற்திட்டத்துக்கு 0.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வேலைகள் நிறைவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு யாழ். நகர் கடற்கரைப் பூங்கா அபிவிருத்தி வேலைத்திட்டம், இரண்டாம் கட்டத்துக்கு 8 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனைவிட கோட்டைப் பூங்கா புனரமைப்பு இரண்டாம் கட்டத்துக்கும் ஓய்வு விடுதி, ஆரியகுளம் அழகுபடுத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-5)

## வைத்தீஸ்வரா கல்லூரியில் மடிக் கணினி திருட்டு

வலி.வடக்கு, மார்ச் 24

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இரவு புகுந்த திருடர்கள் கல்லூரியில் இருந்த மடிக் கணினி உட்பட மற்றும் சில பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதேவேளை அவர்கள் கையடக்கத் தொலைபேசி ஒன்றைத் தவறவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியில் திருடர்களின் நடமாட்டத்தை அவதானித்த காவலாளி திருட்டு முயற்சிகளைத் தடுக்கும் நோக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஆனால் திருடர்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது கையடக்கத்தொலைபேசி ஒன்றைத் தவறவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் குறித்த கையடக்கத் தொலைபேசியை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

## இந்தியன் வீட்டுத் திட்டத்துக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு

### சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குக் கிடைத்தது

நவாலி, மார்ச் 24

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்தியன் வீட்டுத் திட்டத்துக்கு தெரிவாகிய மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, மாசீன் கூடல் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 54 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

ஐந்தரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த வீட்டுத் திட்டத்துக்கான கொடுப்பனவு நான்கு கட்டங்களாக வழங்கப்படுவுள்ளது.

முதலாம் கட்டக் கொடுப்பனவு ஒரு லட்சம் ரூபாவில் வீடு மலசல கூட அத்திவாரத்துக்கும், இரண்டாம் கட்டக் கொடுப்பனவு இரண்டு லட்சம் ரூபாவில் வீடு மலசலகூட சுவர்கள் அமைப்பதற்கும், மூன்றாம் கட்டக் கொடுப்பனவு இரண்டு லட்சம் ரூபா வீடு மலசல கூட கூரைகள் கதவு என்பனவற்றுக்கும், நாலாம் கட்டக் கொடுப்பனவு ஐம்பதினாயிரம் ரூபா வீட்டைச் சீர் செய்வதற்குமாக வழங்கப்படும்.

இந்த வீடுகள் 3 மாத காலத்தில் பூர்த்தியாக வேண்டும் என்றும் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார். (ம-100)

## சேதமடைந்த வீதிகளின் புனரமைப்பு விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மோசமாகப் பாதிக்கப்பட்டுக் காணப்படும் யாழ். பிறவுண் வீதியையும் இராசாவின் தோட்டம் வீதியையும் புனரமைக்கும் வேலைத் திட்டம் இந்த மாதத்தில் இடம் பெறும் என்று யாழ். மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

அதேசமயம் 'கெயர்' திட்டத்தில் யாழ்ப்பாணம் கஸ்தூரியர் வீதி புனரமைப்புப் பணிகளும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியர் வீதி, பிறவுண் வீதி என்பன மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கோம்பயன் மணல் மயானத்தில் மின்சார எரியூட்டும் மண்டபம்

### யாழ். மாநகரசபை ரூ. 10 இலட்சம் வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

கோம்பயன் மணல் மயானத்தில் தற்போது அமைக்கப்பட்டுவரும் மின்சார எரியூட்டும் மண்டபத்துக்கு யாழ். மாநகர சபை நிதியில் இருந்து 10 லட்சம் வழங்குவது என்று நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

முதல்வர் திருமதி யோகஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கோம்பயன் மணல் மயானத்தில் எரியூட்டும் மண்டபத்தின் வேலைகள் பூர்த்தியடைய மாநகரசபை நிதியுதவிகளை வழங்க வேண்டும் என்று உறுப்பினர் எஸ். விஜயகாந் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கட்டடத்துக்கென மாகாண சபை நிதியுதவியை வழங்கியிருந்தது. எனினும் கட்டட வேலைகளுக்கு அவை போதாமையால் இந்த வேலைகளை முடிப்பதற்கு மாநகரசபை நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அது ஒரு முக்கியமான தேவை என்பதால் மாநகர சபை அதற்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்பதை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். (ம-7)

## கலசங்கள் திருட்டு

வலி.வடக்கு, மார்ச் 24

ஏழாலை வடக்குப் பிள்ளையார் கோவிலின் கோபுரத்தில் உள்ள கலசங்கள் திருடர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

கோவில் கோபுரத்தில் உள்ள கலசங்கள் திருட்டுப் போயுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஆலய தர்ம கர்த்தா சபையால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய கோபுரத்தில் திருடர்கள் மிகவும் துணிச்சலான முறையில் ஏறி கலசங்களைத் திருடிச் சென்றுள்ளமை மக்களிடத்தே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ம-86)

## யாழ்.செயலகம் அருகில் புரண்டனர் தரகர்கள்



கைதடி, மார்ச் 24

மதுபோதை தலைக்கேறிய நிலையில் தரகர்கள் வீதியால் சென்றோரை தகாத வார்த்தைகளால் ஏசி விட்டு வீதி ஓரத்தில் தூங்கிய சம்பவம் ஒன்று அண்மையில் கச்சேரி வை.எம்.சி.ஏ. கட்டடத்துக்கு முன்னால் பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.செயலகப் பகுதியில் செயற்படும் தரகர்களில் சிலர் அண்மையில் சென் ஜோன்ஸ், மத்திய கல்லூரி அணிகளுக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியைப் பயன்படுத்தி கல்லூரிகளின் கொடிகளை தாங்கிச் சென்று சிலரிடம் தாம் பழைய மாணவர் எனக் கூறி நிதி சேகரித்து அப்பணத்துக்கு மதுப் போத்தல்களை வாங்கி வீதியில் வைத்து அருந்தியுள்ளார்கள். போதை தலைக்கேறிய நிலையில் வீதியில் அட்டகாசம் புரிந்த நான்கு தரகர்களும்வீதியால் பயணிப்போர் தகாத வார்த்தைகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு ''கஷ்டப்பட்டு உழைத்த''பணத்தில் மது வருந்திய அவர்களில் இருவர் தடுமாறிய நிலையிலும் தாம் சிக்கிக்கொள்ளக் கூடாது என்பதை உணர்ந்து மெதுவாக அங்கிருந்து கழன்று விட்டனர். ஆனால் ஏனைய இருவரும் நடக்க முடியாத நிலையில் வை.எம்.சி.ஏ.கட்டடத்துக்கு முன்பாக இருந்த 'பிளாஸ்ரிக்' கதிரைகளை தூக்கி எறிந்து விட்டு அங்கேயே மதிய நேரத்தில் ஆடைகள் களைந்த நிலையில், சுக மான சயனத்தில் மூழ்கினர்.

இதேவேளை அண்மைக் காலமாக தரகர்களில் சிலர் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கல்லூரிகளின் பெயரைப் பயன்படுத்தி நிதி சேகரித்து மது அருந்தி அட்டகாசம் புரிந்து வரும் அதே சமயம் யாழ்ப்பாண செயலகச் சுற்றாடலில் சிங்கமாக நடந்து கொள்வதாகவும் பலராலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அட்டகாசங்களை அடக்கி ஒடுக்குவது யார்...? (ஓ-288)

## நிகழ்வுகள் இன்று

பொதுக் கூட்டம்

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 31 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் காலை 8.30 மணிக்கு கலட்டி சீனியர் ஒழுங்கையில் உள்ள அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

ப.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நிறுவனத்தின் போசகரான நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.சண்முகநாதன் உரை நிகழ்த்துவார். (ம)

★★★

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

★★★

வலி.தெற்குப் பிரதேச பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலி.தெற்கு உதவி பிரதேச செயலர், பிரதேச ஓய்வூதிய உத்தியோகத்தர், கணக்காளர், யாழ். மாவட்ட நிதியச் சங்கத்தின் தலைவர்ஆகியோர் கலந்து கொள்வர். புதிய வருடத்துக்கான உத்தியோகத்தர்கள் தெரிவும் இடம்பெறும். (ஒ-7)

கருத்தரங்கு

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக தலைவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் செயற்றிட்ட நெறிப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆற்றல்மிக்க சிறந்த தலைமைத்துவப் பண்புள்ள இனத் தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும் எனும் நோக்குடன் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இளைஞர் மற்றும் பிரதேச நலத் திட்ட செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விடயங்கள் ஆராய்வதற்கென இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் வடமாகாண பணிப்பாளர் சிவதட்சணாமூர்த்தி மற்றும் லயன்ஸ் மாவட்ட தலைமைத்துவப் பயிற்சிப் பிரிவுத் தலைவர் த.குணராஜா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொள்வர். (ம-14)



எல் பி மோட்டார் சைக்கிள் லீசிங்
காப்புறுதி பணத்தில் 50% சேமிப்பு
அங்கு இங்கு எங்கு சென்றாலும்
குறைந்த பதிக்கட்டணம் எம்மிடமே!
தொடர்புகளுக்கு 0777 571082
* நிபந்தனைகளுக்குட்பட்டது
யாழ்ப்பாணம் - 0212 219455, 0214 920310-1 நெல்லியடி - 0777 718426, 0214 923358-9
சுன்னாகம் - 0777 718412, 0214 920331-9 சாவகச்சேரி - 0777 718428, 0214 923360-1
மானிப்பாய் - 0212 255955, 0214 923356-7 கிளிநொச்சி - 0777 718407, 0214 923362-3
LB FINANCE
எல் பி பினான்ஸ் பி எல் சி
இல.275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07 www.lbfinance.com
தொலைபேசி 011 4 521000
(C/7087)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி, பலாலி மீனவர்களை அங்கேயே குடியமர்த்த வேண்டும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை

வரமராட்சி, மார்ச் 24

வலி. வடக்கைச் சேர்ந்த மயிலிட்டி, பலாலி மீனவர்களை அவர்களின் சொந்த இடமான காங்கேசன்துறை தொடக்கம் தொண்டமானாறு வரையான 12 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பகுதியிலேயே குடியேற்ற வேண்டும். அதற்கேற்றவாறு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுத் தலைவர் அ.குணபாலசிங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது :-

பலாலி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்தோருக்கு வீட்டுத்திட்டம் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கடந்த கூட்ட அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளது. அப்படி எந்தவிதமான குடியேற்றமும் நடைபெறவில்லை.

மயிலிட்டி, பலாலி மீனவர்கள் இடம்பெயர்ந்து 23 வருடங்களைத் தாண்டி விட்டது. அவர்களில் ஒரு பகுதியினர் தொண்டமானாறுக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்து. இந்தப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் கடல் பகுதியிலேயே தொழில் செய்து வருகின்றனர். 23 வருடங்கள் உருண்டோடியதால் நிரந்தரமாக இடம்பெயர்ந்து வசிப்போர் மத்தியில் இனப் பரம்பல் ஏற்பட்டுள்ளது.

இனப்பரம்பலினால் கடல்தொழில், குடியிருப்பு என்பவற்றில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. நிரந்தரமாக வசிப்போர் தமது பிள்ளைகளுக்கு வீடுகள் அமைக்கக் காணிகளும் தொழில்செய்யக் கடற்பரப்பும் தேவைப்படுகின்றன. இடம்பெயர்ந்தோரின் பிள்ளைகளுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மயிலிட்டி, பலாலி கடல் தொழிலாளர் குடும்பங்களை மேட்டு நிலத்தில் குடியேற்ற முடியாது. கடற்றொழிலாளர்களால் விவசாயம் செய்ய முடியாது வலி.வடக்கில் அனைத்துக் காணிகளையும் அரசு சுவீகரிக்கப் போவதில்லை. கீரிமலை தொடக்கம் தொண்டமானாறு வரையான 12 கிலோமீற்றர் கரையோரப் பகுதியிலேயே கடல்தொழிலாளர்கள் குடும்பங்கள் குடியேற்றப்பட வேண்டும். முந்திய காலங்களில் இலங்கையின் மீன் தேவையில் மூன்றிலொரு பங்கை மயிலிட்டி மீனவர்கள் வழங்கி வந்தார்கள். எனவே அந்தக்கரையோரப் பகுதியில் எம்மை மீளக்குடியேற்ற உரிய நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டார். (த-8)

## மாடியிலிருந்து தவறி விழுந்த சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 24


புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மாடியிலிருந்து தவறி விழுந்த சிறுவன் தலையில் வெடிப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். திருநெல்வேலியிலுள்ள சிறுவர் காப்பகம் ஒன்றில் நேற்று சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் யாழ். கோம்பயன்மணல் பகுதியைச் சேர்ந்த ஜி.துஷியந்தன் (வயது-9) என்ற சிறுவனே படுகாயமடைந்தான். இவரது பெற்றோர் உயிரிழந்து விட்ட நிலையிலேயே சிறுவன் காப்பகம் ஒன்றில் தங்கி வாழ்ந்ததாகக் காப்பகப் பொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று பாடசாலை சென்று திரும்பிய சிறுவன் சகசிறார்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்துள்ளான். அங்கு சமையலறை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. கட்டடத் தொழிலாளர்கள் மதிய உணவுக்காகச் சென்றிருந்த வேளை பிரஸ்தாபச் சிறுவர்கள் அந்த மாடிப்பகுதியில் ஏறி விளையாடியுள்ளனர். இதன்போதே பிரஸ்தாப சிறுவன் தவறிக் கீழே விழுந்து, தலையில் வெடிப்பு ஏற்பட்டதுடன், காலிலும் படுகாயமடைந்தான்.

சிறுவன் சுயநினைவிழந்த நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டானென்றுபொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர். (த-4)



## மாநகர...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் கடந்த மூன்று மாதங்களில் மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பான படங்கள் உறுப்பினர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. படம் முடிந்ததும் யாழ். நகரம் சுடலை மாதிரி இருக்கிறது என அடிக்கடி குறிப்பிடும் உறுப்பினர் விந்தனுக்கு இது சமர்ப்பணம் என முதல்வர் கூறினார்.

வீதிகளில் எல்லாம் விபத்தும் மரணங்களும்தான். சுடலை மாதிரித்தானே யாழ்ப்பாணம் உள்ளது என்று பதிலுக்குக் கூறினார் விந்தன்.

இதனையடுத்து 'உங்களுக்குத் துவக்குத் தான் சரி' என்று முதல்வர் கூறினார். உடனே 'உங்களுக்கு அதைத் தெரியும்; எங்களுக்கு அதைப் பயன்படுத்தவும் தெரியும்' என்றார் - விந்தன். (த-7)

## முள்ளிவாய்க்காலில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வன்னியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பல பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன என்றும் கூறினர்.

இறுதிப் போரின் போது மனிதப் பேரவலத்தைச் சந்தித்த முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்தப் பகுதிகளில் மக்களின் வீடுகளுக்கு அருகில் வெடிக்காத நிலையில் பல வெடி பொருள்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் சில வெடிபொருள்கள் மூலம் ஏற்படவுள்ள அபாயம் குறித்து 'உதயன்' நேற்றைய தினம் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தப் புகைப்படத்தை பார்வையிட்ட பலர் 'உதயனுடன்' தொடர்பு கொண்டு, மேற்படி படத்தில் உள்ளவை கொத்துக் குண்டுதான் என்றும், நாம் இறுதிக் கட்டப் பேரின்போது வீசப்பட்ட இவ்வாறான சில குண்டுகள் வெடிக்காமல் இருப்பதைக் கண்டதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட பல பிரதேசங்களில் இவ்வாறான கொத்துக் குண்டுகள் காணப்படுவதாகவும் அவர்கள் கூறினர்.

பலர் இவ்வாறு, கொத்துக் குண்டுதான் என்று தெரிவித்த தற்கமைய 'உதயன்' இதனைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முயன்ற போதும் அந்தத் தரப்பினர் அதனை உடனடியாக உறுதிப்படுத்த முடியாது எனக் கூறிவிட்டனர். (த-5)

## முள்ளியவளையில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வாங்கிச் சென்றனர் எனத் தெரிக்கப் படுகிறது.

முள்ளியவளைப் பகுதியிலுள்ள 540 ஏக்கர் தேக்கம் காட்டை அழித்து அந்தப் பகுதியில் ஆயிரத்து 445 முஸ்லிம் குடும்பங்களைக் குடியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

முள்ளியவளை 6 ஆவது மைல்கல் அருகிலுள்ள இந்தத் தேக்கங் காட்டுப் பகுதி இன்னமும் வனப் பரிபலனத் திணைக்களத்தால் பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை.

முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ள காணியை நில அளவைத் திணைக்களத்தைக் கொண்டு அளவீடு செய்வதற்கான நடவடிக்கையை வனப் பரிபாலனத் திணைக்களம் எடுத்திருந்தது.

இதற்கமைய குறித்த பகுதியை நில அளவை செய்வதற்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர், நில அளவையாளர்கள் சென்றுள்ளனர். இதனை அறிந்து அங்கு திரண்ட 80 தமிழ்க் குடும்பங்கள் எங்களுக்குக் காணியை வழங்கிய பின்னரே முஸ்லிம்களுக்குக் காணியை வழங்கலாம் என்று விடாப்பிடியாக இருந்த னர்.

இதனால் நில அளவை செய்வதற்கு அங்கு வந்த அதிகாரிகள் திரும்பிச் சென்றுள்ளனர்.

முஸ்லிம் மக்களைக் குடியேற்றும் நடவடிக்கையின் பின்னணியில் சிறுபான்மையின அமைச்சர் ஒருவரே முழு மூச்சாக நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5-400)

## 3,000...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னர். இதில் 95 வீதமான முறைப்பாடுகள் தமிழ் மக்களுடையவை. எஞ்சியவை முஸ்லிம் மக்களதும், சிங்களவர்களுடையதும் ஆகும்.

எமது அமைப்பில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 3 ஆயிரம் முறைப்பாடுகள் வரை ஜெனிவாவுக்குச் சமர்ப்பித்துள்ளோம். எஞ்சியோரின் முறைப்பாடுகளையும் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் காணாமற்போனவர்களாகச் சொல்லப்பட்ட 37 பேரை இலங்கை அரசு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி வருவது தொடர்பில் நேற்று எங்களால் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

அந்த 37 பேரில் 25 பேரின் உறவினர்கள் வரை எங்களுடன் தொடர்பு கொண்டனர். அவர்களின் உறவுகள் இலங்கை அரசால் எங்கு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்ற விடயத்தை தெரிவித்துள்ளோம்.

அத்துடன் நூற்றுக்கணக்கானோர் என்னுடன் தொடர்பு கொண்டு காணாமற்போன பதிவு செய்யாத காணாமற்போனவர்களின் உறவினர்கள் பதிவு செய்து கொள்ள விரும்பினால் 0776400478 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றார். (த-5)

## புலிகளின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஓயாமல் தொடர்கின்றது. மாணவர்களின் இந்தப் போராட்டத்துக்குப் பொதுமக்களின் ஆதரவும் பல்கிப் பெருகியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், இலங்கையில் தனித் தமிழீழம் அமைய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைத்து மாணர்கள் தொடர்ந்து 12 ஆவது நாளாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

விருத்தாச்சலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும், மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியையும் பாடையில் வைத்து வீதிகள் வழியாக எடுத்து வந்து பாலக்கரையில் வைத்து அதனைக் கொளுத்தினர்.

அறந்தாங்கியில் அண்ணா சிலை முன்பாக மாணவர்கள் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். விருதுநகரில் மாணவர்கள் கறுப்புத் துணியால் வாயைக் கட்டி மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினர்.

கரூரில் பொறியியல் மாணவர்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். வேலூர் மாவட்டத்தில் 3 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைவிட நாம் தமிழர் கட்சியினரால் சிதம்பரத்திலும், திருவண்ணாமலையிலும் போராட்டம் நடத்தப்பட்டது. (த-5)

## அமெ.தீர்மானம்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

நீங்கள் நடத்துவது ராஜதந்திரம். அமெரிக்கா நினைத்திருந்தால் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அன்றே தடுத்திருக்கலாம் - என்றார்.

வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் அருணாச்சலம் குணபாலசிங்கம் தெரிவிக்கையில் :-

இலங்கையின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை அமெரிக்கத் தீர்மானம் பாராட்டியுள்ளது. இது எங்களுக்கு ஏமாற்றமாக இருக்கின்றது.

இலங்கையில் உள்ளக இடப்பெயர்வு என்று சொல்வதைத் தொடக்கிவைத்தவர்கள் எங்கள் மயிலிட்டி, பலாலி மக்கள். முதன் முதலாக இடம்பெயர்ந்த இலங்கை மக்கள் நாங்கள். இன்னமும் சொந்த இடத்துக்குத் திரும்ப முடியாமல் இருக்கின்றோம்.

மீள்குடியமர்வு என்று சொல்லிக் காடுகளுக்குள் இரண்டு தடியும், தகரமும் வழங்கி மீளக்குடியமர்த்தினால் சரியா? எனவே அமெரிக்கத் தீர்மானம் எங்கள் மீள்குடியமர்வு பற்றிச் சொல்லத் தவறிவிட்டது - என்றார்.

காணாமற் போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவிக்கையில்,

காணாமற் போனோர் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெற்றால் மாத்திரமே நீதி நிலைநாட்டப்பட வாய்ப்பு இருக்கின்றது. எனவே இந்த விடயத்தில் ஐ.நாவின் தலையீட்டைக் கோரி நிற்கின்றோம். அமெரிக்கத் தீர்மானத்தில் காணாமற் போனோர் தொடர்பில் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்று கூறப்பட்டதை வரவேற்கின் றோம் - என்றார்.

மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை ஜெபமாலை தெரிவிக்கையில் :-

அமெரிக்கத் தீர்மானம் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிடும் செயற்பாடு போலுள்ளது. ஆரம்பத்தில் அமெரிக்கா தான் சமர்ப்பித்த வரைவுத் தீர்மானத்தில் உறுதியாக இருந்திருக்க வேண்டும் - என்றார்.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவிக்கையில் :-

எமக்கு ஏமாற்றமாக இருக்கின்றது. இந்தத் தீர்மானத்தில் எங்களுக்கு எந்தப் பலனும் இல்லை.

இருப்பினும் எங்களுக்காகக் குரல் கொடுக்கும் தாய்த் தமிழக மாணவர்களுக்காக நாங்கள் தலை வணங்குகின்றோம் - என்றார். (த-5)

## பிரதேச...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மான காணிகளை அவர்கள் தமக்குத் தருமாறு கேட்டிருந்தனர்.

இதனை வழங்குவதற்கு குறித்த அரச திணைக்களங்களின் சம்மதங்கள் கிடைக்காமையாலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதி கிடைக்காமையாலும் பிரதேச செயலர்கள் குறித்த காணிகளை படையினருக்கு வழங்காமல் இருந்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், படையினர் கோரிய அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை வழங்குவதற்கு பிரதேச செயலர்களுக்கு ஆட்சேபனை இல்லையென்ற கடிதத்தை விரைவில் வழங்குமாறு கூறியிருந்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதி எதுவும் இதற்குத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய சீருடையினர் தற்போது பிரதேச செயலகங்களுக்குச் சென்று தனிச்சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதங்களைக் கொடுத்து கையெழுத்து இடுமாறு கோரி வருகின்றனர். மேற்படி நடவடிக்கையை காணி அமைச்சின் பணிப்புரைக்கு அமையவே மேற்கொள்வதாகவும் சீருடையினர் குறிப்பிட்டுள்ளனர்.


படையினர் கோரிய காணிகளை வழங்குவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லையென்று தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதத்தில் வேறு வழியின்றி பிரதேச செயலர்களும் ஒப்பமிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் மௌனமாக இருப்பது அவர்களும் சீருடையினருக்கு காணி வழங்கும் நடவடிக்கைக்குத் துணை போகின்றனரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியைக் காப்பாற்றும் இந்தியாவின் முயற்சி தோல்வியில்...

தகனான்



15 பெப்ரவரி 2012,

இந்திய மீனவர்கள் சிலர் இந்தியாவின் கிழக்குக் கரையோரம் சர்வதேச கடற்பரப்பில் சென்.அன்ரனிஸ் என்ற பெயர் கொண்ட படகில் மீன்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ''பிரெடி லூயிஸ்'' ''தலைமையிலான இக்குழுவில் 11 மீனவர்கள் இருக்கிறார்கள். ''ஜெலஸ்ரைன்'' என்ற மீனவர் படகைச் செலுத்திக்கொண்டிருக்கிறார். அவர் அருகில் ''அஜேஸ் பிங்கி'' என்ற மீனவர் கதைத்துக் கொண்டே பயணிக்கிறார்.

**மாலை 5 மணி**

சற்றுத் தூரத்தில் ''என்ரிக்காலெக்சி ''என்ற இத்தாலிய எண்ணெய்க் கப்பல் சிங்கப்பூரில் இருந்து எகிப்து நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. இத்தாலிய கடற்படை வீரர்கள் சிலரும் அந்தக் கப்பலில் இருக்கிறார்கள்'. அவர்களில் சிலர் சென்.அன்ரனிஸ் படகில் பயணிப்போர் கடற்கொள்ளையர்கள் என்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. உடனே துப்பாக்கியை எடுத்து சரமாரியாகச் சுடத் தொடங்கினர். பாய்ந்து வந்த சன்னங்களுக்கு இரையாகிய 'ஜெலஸ்ரைனு'ம் 'பிங்கி'யும் அவ்விடத்திலேயே உயிர் துறக்கின்றனர்.

சென்.அன்ரனிஸ் படகில் இருந்துஎதிர்ப்பு வெளிப்படாததால் அதுஒருமீனவர் படகு என்பதை இத்தாலியரால் ஊகிக்க முடிகின்றது. அவர்கள் தமது பிழையை உணர்கிறார்கள். எனினும் கப்பலை நிறுத்த மனம் வரவில்லை. கப்பல் எகிப்து நோக்கி இன்னும் வேகமெடுக்கத் தொடங்குகின்றது. சென்.அன்ரனிஸ் படகில் இருந்து இந்திய கடலோர காவல் படைக்கு தகவல் கொடுக்கப்படுகின்றது. விமானப்படையினரின் உதவியுடன் அந்த இத்தாலியக் கப்பலைத் தேடும் பணிகள் முடக்கி விடப்படுகின்றது.

**இரவு 7 மணி**

சம்பவம் நடந்த இடத்திலிருந்து 70 கிலோமீற்றர்கள் தூரம் சென்றிருந்த ''என்ரிக்காலெக்சி'' கப்பல் சுற்றிவளைக்கப்பட்டு மீண்டும் கேரளாவின் கொச்சி துறைமுகத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்த கேரள காவல் துறையினர் ''மசிமிலியானோலதோர்'', ''சல்வடோர் கிரோனே'' என்ற இரண்டு இத்தாலிய கடற்படை வீரர்களைக் கப்பலிலிருந்து கைதுசெய்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

**இத்தாலியைக் காப்பாற்றத் துடித்த இந்திய மத்திய அரசு**

குற்றம் சாட்டப்பட்ட இரண்டு வீரர்களும் கடந்த ஜூன் மாதம் 1 கோடி ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக நடமாட விடப்பட்டனர். பொதுவாக இந்தியாவில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்படுவது அரிதாகவே நடைபெறும். ஆனால் இவர்களுக்கு ஆரம்பத்திலேயே பிணை வழங்கப்பட்டிருந்தமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது.

எனினும் கேரளமீனவர்கள் கொல்லப்பட்டனர் என்பதை கேரளாவின் பிரச்சனையாக முன்வைத்து கேரள எதிர்க்கட்சிகளும், ஊடகங்களும் இந்த வழக்குக்கு முக்கியத்துவமளித்திருந்தன. இதன் காரணமாக குற்றம் சாட்டப்பட்ட இத்தாலியப் படை வீரர்களை விடுவித்து இத்தாலிக்கு அழைத்துபோக இத்தாலிய அரசும்,இந்திய மத்தியஅரசும் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இதற்கு மத்தியிலும் கடந்த வருடம் டிசம்பர் மாதம் தமது குடும்பத்துடன் கிறிஸ்மஸ் கொண்டாடுவதற்கு இத்தாலிபோய் வர அனுமதிக்ககோரி குற்றம் சாட்டப்பட்ட இத்தாலியர்கள் கேரள உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். சில கட்டுப்பாடுகளோடு கேரள உயர் நீதிமன்றம் இவர்களது கோரிக்கைக்கு அனுமதி அளித்தது. மீண்டும் இவ்வாண்டு ஜனவரி 10 ம் திகதிக்கு முன்னர் கொச்சி காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் "என்றும் உத்தரவிட்டிருந்தது.

இத்தாலிய தூதரக அதிகாரிகள், இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள், இந்திய மத்திய அரசு என்று பலதரப்பினர் மீதும் நீதிமன்றத்தால் பொறுப்புசுமத்தப்பட்டிருந்ததால், குடும்பத்துடன் கிறிஸ்துமஸ் கொண்டாடிவிட்டு ஜனவரிமுதல் வாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட இத்தாலியகப்பல் படைவீரர்கள் கேரளா திரும்பினார்கள்.

**வழக்கு புதுடில்லிக்குக் கைமாறியது**

''இந்தியக் கடல் எல்லைக்கு வெளியே நடந்தசம்பவத்தை விசாரிக்க கேரளமாநில காவல் துறைக்கு அதிகாரம் இல்லை "என்று இந்த வருட ஆரம்பத்தில், இத்தாலிய அரசு இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட இந்திய உச்சநீதிமன்றம், குறித்த வழக்கை புதுடில்லிக்கு மாற்றும் படி உத்தரவிட்டது. இதன் படி கேரள காவல் துறையின் கண்காணிப்பில் இருந்த இருவரும் டெல்லியிலுள்ள இத்தாலிய தூதரகத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடத்தில் தங்கவசதிஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. கொச்சி பொலிசார் வசமிருந்த அவர்களது கடவுச் சீட்டுக்கள் இந்திய உள்துறை அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

**2 நாள் தேர்தலுக்கு 4 வாரம் விடுப்பு**

இத்தாலிய அரசின் கோரிக்கைக்கு அமைவாக, கடந்த பெப்ரவரி மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இத்தாலியில் நடந்ததேர்தலில் வாக்களிப்பதற்காக நான்கு வாரங்களுக்கு இத்தாலி சென்று திரும்ப அவர்களுக்கு நீதிமன்றம் அனுமதிவழங்கியது. 2 நாள்கள் நடக்கவிருக்கும் தேர்தலில் வாக்களிப்பதற்கு 4 வாரங்கள் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அவர்களைத் திரும்ப ஒப்படைப்பதாக இந்தியாவுக்கான இத்தாலிய தூதர் ''டானியல் மஞ்சினி நீதிமன்றில் உறுதிமொழிவழங்கியிருந்தார்.

இந்நிலையில், குறிப்பிட்ட இரு கடற்படை வீரர்களும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படமாட்டார்கள் என்று கடந்த 11 ஆம் திகதியன்று இத்தாலி அரசு அறிவித்திருந்தது.

ஆரம்பத்தில் இந்தஅறிவிப்பை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை. ஆனாலும் இந்திய ஊடகங்களாலும், எதிர்கட்சிகளாலும் இவ்விடயம் பூதாகாரமாக கிளப்பப்படவே பிரதமர் மன்மோகன் சிங் ஒப்புக்காக தனதுஎதிர்ப்பை வெளியிட்டிருந்தார். ஆனாலும் இந்த விடயத்தில் இந்திய உச்சநீதிமன்றம் விடாப்பிடியாக நின்றது. இரு வீரர்களுக்கும் பிணை நின்ற இத்தாலிய தூதுவர் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதற்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்தது. எனினும் தூதுவ அதிகாரிகளுக்கான சிறப்புரிமையைப் பயன்படுத்தி இத்தாலியத் தூதுவர் தப்பித்துக் கொள்ளக் கூடும் என்ற கருத்து ஒரு புறம் நிலவியது. ஆனால் மீண்டும் கூடிய நீதிமன்று ''இத்தாலியத் தூதுவர் நீதிமன்றத்தை அவமதித்திருக்கிறார்'' எனக் கூறியிருந்தது.

**இத்தாலியுடன் இரகசிய ஒப்பந்தம்**

இவ்வாறு நிலைமை கட்டுமீறி போகவே தமது தூதரைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட இத்தாலிய அரசு வீரர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்ப முடிவுசெய்தது. இதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தின் சிறப்புவிமானம் மூலம் இவர்கள் இருவரும் இந்தியா திரும்பியுள்ளார்கள். ஆனாலும் இத்தாலியிடம் இந்திய அரசு ''இரு வீரர்களுக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்படமாட்டாது ''என்ற உறுதிமொழியை வழங்கியதாக செய்திகள் வெளியாகின.

இத்தாலிய வீரர்களை காப்பாற்ற இறுதி வரை போராடிய மத்திய அரசு ஈற்றில் தோல்வியடைந்துள்ளது. கேரளாவில் உள்ள தமது வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொள்வதற்காக வேறு வழியின்றி மத்தியஅரசு இத்தாலிக்கு உதவமுடியாது பின்வாங்க நேர்ந்துள்ளது.

ஆனாலும் பலஆண்டு காலமாக இலங்கை கடற்படையினரால், தமிழக மீனவர்கள் கொல்லப்படுகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் இந்திய மத்தியஅரசு தொடர்ந்து மௌனம் காத்துவண்ணமே இருக்கின்றது. தமிழக அரசியல் தலைவர்களும் இவ்விடயத்தில் மத்திய அரசுக்குப் போதுமான அழுத்தங்களை வழங்க தவறியிருக்கின்றனர். கேரளாவில் அரசியல்கட்சிகள் ஒரேநிலைப்பாட்டில் உறுதியாக நின்றதைப் போன்று தமிழக அரசியல் தலைவர்கள் செயற்படாத வரையில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது தொடர் கதையாகவே நீளும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## Dr. சபாபதி சபாரத்தினம்

அவர்களது திடீர் மறைவுச் செய்தி அறிந்து பேரதிர்ச்சி அடைவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரம் தில்லைக் கூத்தன் திருவருள் சேர பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!!! சாந்தி!! சாந்தி!

(34825-23-14-16)

S.M.T.DEVELOPERS
Director & Staff,
Kasthuriyar Road, Jaffna.

MANOJ ELECTRICAL
#100, Stanley Road, Jaffna.
0777517019

# மரண அறிவித்தல்கள்

## அரியகுட்டி தருமலிங்கம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி தருமலிங்கம் நேற்று முன்தினம் (22.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரட்ணசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி, சாந்தகுமார், சுகந்தினி, வினோதரன் ஆகியோரின் தந்தையும் இராசலிங்கம், ஸ்ரீவாகினி, தவச்செல்வன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம், சீதாலட்சமி, சிவபாக்கியம், தம்பித்துரை, சிவலிங்கம், பரமேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் சகோதரனும் பிரமிளா, நிசாந்தன், டனுஷா, துஷியந்தினி, தரணிகா, ரம்மியா, கஜபவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.03.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆவரைவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(34820)(23-14-16)

தகவல்:
வினோதரன் (மகன்)

## திருமதி சீதாதேவி சதானந்தகுமார்



மாலு சந்தியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சதானந்தகுமார் சீதாதேவி (22.03.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருள்நந்தி-கமலாதேவி தம்பதியரின் புதல்வியும், சதானந்தகுமாரின் அன்பு மனைவியும், சசிந்தர், சதுசாயினி ஆகியோரின் அன்புத் தாயும், பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் மருமகளும், நந்தாதேவி, யசோதாதேவி, ராஜாரஞ்ஜித், இந்திரஜித், சந்திரஜித், அமுதா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24.03.2013) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(34810)(10.6.)

தகவல்:
பா.சதானந்தகுமார்.
(கணவர்)

## திருமதி தங்கச்சிப்பிள்ளை நாகலிங்கம்



உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் தங்கச்சிப்பிள்ளை நேற்று (23.03.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை-சீதேவன் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின்(ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, பொன்னுச்சாமி, இரத்தினம், பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தலிங்கம்(கனடா), சசிகலா(கலா), சந்திரவதனா(கனடா), சுஜாதா(திருகோணமலை), சுகிர்தலிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ஆனந்தசிவம், பரராஜசிங்கம், வரதகுமார், சுகன்ஜா, சர்வோஜினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராசம்மா, கந்தசாமி, தம்பித்துரை மற்றும்சின்னத்தம்பி(கனடா)ஆகியோரின் அன்பு மைத்துனியும், கவாஸ், ஒமேஸ், கிசோக், லக்ஷி, மிதுலன், மேனுகன், மிலானி, விதுஷன், மிதுசன், காயத்திரி, கிருஸ்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கறும்பா வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி.
T.P. 021 3734304

தகவல்:
குடும்பத்தினர்.

# கை கலப்பில் சாரதி காயம்

தெல்லிப்பழை மற்றும் அளவெட்டி மினி பஸ் சங்க பேருந்துக்களிடையே நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கைகலப்பில் அளவெட்டி மினிபஸ் சங்கச் சாரதி ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாவடிச் சந்திப் பகுதியில் நேற்றுக் மு.ப.11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.கஜன் (வயது-30) என்ற வாகனச் சாரதியே காயமடைந்தவராவார்.

(த-5)


## Rooms வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்குண்டு. (பிறவுண் வீதியில்)
தொடர்பு-0776116308

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், டல்மேசன் பெண் நாயும் டாசோன் ஆண், பெண் குட்டிகளும், பொமேரியன் ஆண், பெண் நாயும், மணிதாரா, முயல்

தொடர்பு-லி.மயூரன்

## வாடகைக்கு

யாழ்.நகர் அண்மையில் 3 கடை அறை மேல் வீடு 7 அறைகளுடன் நீண்ட காலத்துக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். (நிறுவனங்கள்/ NGO/றெஸ்ரோரன்ஸ்களுக்கு உகந்தது)
தொடர்பு 0779371896, 0212219767

## கடை வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக முதலாம் மாடி, இரண்டாம் மாடி 60 அடி நீளம்,16 அடி அகலம் (இரண்டு தட்டு) கடை வாடகைக்குண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 021 222 3461,
077 604 2264
(34634)(6.7.11)

## Soft View Computer Center

கணினி, சிங்களம், ஆங்கிலம், Phone Repairing போன்ற புதிய பிரிவுகள் ஆரம்பம்.
102, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
E.C. கொலின் 0779053545
Night Classes Time 6-9 pm

## வான் விற்பனைக்கு

58 - XXXX தொடரிலக்க Toyato ஹைஎஸ் டுவல் AC, Adjustable seats வசதிகளுடன்
தொடர்பு: 0777902524

## கார் விற்பனைக்கு

Toyato, 1997 மொடல் (301-XXXX), A.C, Power steering, power mirror, Auto Geor, Additional in.fo-Alloy weel, Pioneer sound system, 16 Km per Liter, Good condition car விற்பனைக்கு.
விலை 1590000/-
தொடர்பு-0721834186

## தவறிவிட்டது

சுன்னாகம் சந்திக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் 7 Nokia Soft Logic bill books மற்றும் சில ஆவணங்களுடன் பொதி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 0776752171
021 224 1552

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி, கண்டுவில், 1ஆம் ஒழுங்கையில் 2 அறைகள், சமையலறை, குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு-0714546814,
0214922673

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் நிக்கிளஸ் வீதியில் இலக்கம் 15இல் உள்ள 2 ½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0774125876

## காணி விற்பனை

கட்டுடை சந்திக்கு அருகில் உபதபாற் கந்தோருக்கு முன்பாக பிரதான வீதியை முகப் பாகக் கொண்ட 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-
0712242277,0775907500,
0112729571

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- 0776333133
021 2230774


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



அமரர்
## கணபதி பூரணம்

தோற்றம்:- 10.06.1937
மறைவு:- 22.02.2013

எமது அன்புத் தெய்வத்தின் இழப்பு குடும்பத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னார் காலமானதை அறிந்து எம்முடன் உணர்வுகளைப் பகிர்ந்து, இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கடந்த (22.02.2013) அன்று இறைபதம் அடைந்த அமரர் கணபதி பூரணம் அவர்களின்ன் 31 ஆம் நாள் நினைவாக இன்று (24.03.2013) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"துஷந்தினி இல்லம்",
ஆவரம்பள்ளம்,
கைதடி மத்தி, கைதடி.
T.P. 021 3002596

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பஞ்சேந்திரம் துரைராசா



பண்டத்தரிப்பு பிரான்பற்றைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பஞ்சேந்திரம் துரைராசா நேற்று (22.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசாவின் (இலங்கை சுங்கத்திணைக்கள அதியுயர் அதிகாரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவலிங்கம்-பார்வதி தம்பதியரின் மருமகளும் பவளரத்தினம், அழகையா, தேவராசா, செங்கமலம், தெய்வேந்திரம், அழகேந்திரம் ஆகியோரின் சகோதரியும் நடராசா, இராசரத்தினம், அழகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் தவரஞ்சினியின் பெரியம்மாவும் ரகுராம், நிரஞ்சலாதேவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2013) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது மகளின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விழாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிலவொளிகாந்தன்(மகன்)
"பொன்பொழில்"
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணையா சீதேவி
### (மதனாபிஷேகம்)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணையா சீதேவி (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற கண்ணையாவின் அன்பு மனைவியும், சிவகுமாரி (ஜீவா-Swiss), உதயகுமார் (செட்டி-Germany), விஜய குமார் (Canada), செல்வகுமார் (Canada) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தவமணி அவர்களின் பாசமிகு சகோதரியும். கௌரவகௌரி (Canada), பாலச்சந்திரன் (Canada), இராமச்சந்திரன் (Canada), காலஞ்சென்ற உதயராணி மற்றும் இந்துராணி (Germany), விமலச்சந்திரன் (Canada), ரவிச்சந்திரன்(Canada), ஜெயராணி ஆகியோரின் சிறியதாயும், நடேசமூர்த்தி (Swiss), சுவாஜினி (Germany), விஜயசிறி (Canada), ராதிகா (Canada) ஆகியோரின் மாமி யும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசரெத்தினம், பொன்னுத் துரை, தங்கலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிசோக் குமார், நித்தியா, தினேஷ், ரஜிதன், சந்தோஷ், ஜனனி, ஜசித்தா, சுஜந், விதுனா, அவின், திலீபன், சியானா ஆகியோரின் அருமை பேர்த்தியும், சித்தானியா, கிருஷாந், அக்ஷயா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Brampton Crematorium and Visitation Center Inc 30 Bramwin Crt, Brampton, ONL 6T5G2, (26.03.2013) செவ்வாய்க்கிழமை (இலங்கை நேரப்படி) அன்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா
+19059131254
+16476226823
+16478344836

(34813) (10,6)

தகவல்:
பிள்ளைகள் (Canada)
N.சுந்தரராஜா(Srilanka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

தலைமையகம்:
மின் அஞ்சல்
செய்தி:
news@uthayan.com
கருத்து:
comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com




## தக்க வேளையில் தப்புத்தாளம் போட முனையும் போக்குத் தேவையா...?

தமிழகம், சேலம் மாவட்டத்தில் பச்சிளம் பாலகர்களும் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்திருக்கிறார்கள். இலங்கை தொடர்பான தமிழகத்தின் சமகாலப் போராட்டங்களில் சின்னஞ்சிறிசுகளும் தங்களை இணைத்துக்கொண்ட கனதியான நிகழ்வாக அதனைக் கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும்-

தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் இலங்கைக்கு எதிரான மாணவர் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றே வருகின்றன. கல்லூரி மாணவர்கள் தொடக்கி வைத்த போராட்டம் இப்போது மக்கள் போராட்டமாக உருவெடுத்து வருகிறது.

தமிழகத்தில் வாழும் ஈழத் தமிழர்களும் தமிழீழத் தனியரசை உருவாக்கும் பொருட்டுப் பொதுவாக்கெடுப்பு நடத்தக்கோரி சென்னையில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

மதுரை நீதிமன்ற சட்டத்தரணிகள், அனைத்துலக நீதிமன்றம் போன்று வடிவமைக்கப்பட்ட மேடையில் வித்தியாசமான வகையில் இலங்கை அரசின் செயற்பாடுகளைக் கண்டித்தனர்.

இலங்கை அரசுக்கு எதிரான போராட்டம் தமிழகம், புதுச்சேரி மாநிலங்களையும் தாண்டி, மத்திய பிரதேசம், மும்பை, டில்லி வரை கால்பதித்து வருகிறது.

இவை அனைத்திலும், சேலம் மாவட்டத்தில், சிறுவர்கள் நடத்திய போராட்டம், தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஓர் இலச்சினையாகக் கருதத்தக்கது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்த தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்தமையில் இந்தியாவுக்குப் பெரும் பங்குண்டு என்பது இப்போது முழு நிலாவின் வெளிச்சம் போலாகிவிட்டது.

அரச உயர் மட்டங்கள் பேரவைக் கூட்டத்துக்கு முன்னர் தெரிவித்ததற்கு இணங்க ஜெனிவா மாநாட்டில் இந்திய அரச தரப்பு செயற்படவில்லை. எதிர்பார்த்தவாறு எதுவும் தலைகாட்டவில்லை. இதுகுறித்து நேற்றும் இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதனைச் சமாளிக்கும் விதத்தில் மத்திய அமைச்சர் வாசன் முழுப்பூசினிக்காயை சோற்றில் புதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்தித் தர மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சப்புக்கொட்டியுள்ளார்.

அதற்கும் மேலாக, தமிழக மக்களும் மாணவர்களும் சேர்ந்து இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் ஒட்டுமொத்தமாக உறுதுணையாக இருப்பதற்கு மத்திய அரசும் துணைநிற்கும் என்று டில்லி அரசின் தரகராக நின்று தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் காதில் பூச்சுற்ற முனைந்துள்ளார்.

சேலம் மாவட்ட சிறுவர்களுக்கு உள்ள உணர்வில் ஒரு சதவீதமேனும் இல்லாமல் அமைச்சர் வாசன் நிதானம் இழந்து உளறிக் கொட்டியுள்ளார். மாணவர்களின் போராட்டங்கள் ஏனைய தரப்புகளால் தூண்டப்பட்டவை என்று அரச தரப்பில் தானும் ஒருவர் என்ற நிலையில் அவர் தப்புக் கணக்குப் போடுவதாகவே தோன்றுகிறது.

அநீதிக்கும், அதிகாரத்துக்கும் எதிராக மாணவர்கள் மேற்கொண்ட போராட்டங்களே பின்னர் அரசியல் போராட்டங்களாகவும் ஆயுதப் போராட்டங்களாகவும் பரிணமித்தன என்பதனை அமைச்சர் வாசன் வசதியாக மறந்துவிட்டார் போலும்.

தமிழக மக்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவே, சகோதர உணர்வே இலங்கை அரசுக்கு எதிராக சேலம் மாவட்டச் சிறுவர்களையும் ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டியது என்பதில் வாதப் பிரதிவாதங்களுக்கு இடமில்லை.

இலங்கை அதிகார வர்க்கத்தினரால் தமிழர் பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட உரிமை மறுப்புகள் காலப்போக்கில் ஒடுக்கு முறைகளாக வடிவங்கள் எடுத்து, அவர்களின் இருப்பையே கபளீகரம் செய்யுமளவுக்குப் பெருத்துக் கொழுத்ததன் விளைவே, இலங்கையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டம். இதனை இந்திய அரசும் சரி, அரசுக்குப் பந்தம் பிடிக்கும் தமிழக காங்கிரஸ்காரர்களும் சரி தெரிந்தும் தெரியாதவர்கள் போன்று நடிக்கிறார்கள்.

இதனைப் பகுத்துணராதவராக, இந்திய மத்திய அமைச்சர் வாசன் வெளியிட்டுள்ள கருத்து, தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரியும் வல்லமை அவருக்கு இல்லையென்பதனையே பட்டவர்த்தனமாகக் காட்டுகிறது. அவர் சார்ந்திருக்கும் அரசுக்கு வக்காலத்து வாங்கி தமது விசுவாசத்தை வெளிப்படுத்தவும் அவர் முன்கண்ட கருத்தை முன்வைத்திருக்கலாம்.

ஆனால் இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழ் நாட்டைத் தாண்டியும் நீதி கோரி மக்கள் எழுச்சி தலையெடுத்து வரும் வேளையில், அதனை அணைபோட்டுத் தடுக்க முயலும் மத்திய அரசின் ஊதுகுழலாகச் செயற்பட அவர் முனைவது கபடத்தனம் மிகுந்ததே.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக முதன் முதலில் இந்திரா காந்தி காலத்தில் குரல்கொடுத்த மத்திய அரசும் அதன் ஆதரவாளர்களும் இப்போது தப்புத்தாளம் போட முனைவது எந்தவகையில் நியாயம்...?

# கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்ப போட்டிப் பரீட்சை இம்மாதம் நடைபெறுமா?

### சாத்தியம் இல்லை என்கின்றனர் விண்ணப்பதாரிகள்

வலி.வடக்கு, மார்ச் 24

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை இந்த மாத இறுதிக்குள் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட போதிலும் அது நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை முழுவதும் சுமார் இரண்டாயிரத்தி அறுநூறுக்கும் மேற்பட்ட கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் கூட பரீட்சையை நடத்துவதற்கான முன்னோடிச் செயற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் விண்ணப்பங்களை அனுப்பி விட்டுப் பரீட்சைக்குத் தோற்றக் காத்திருக்கும் விண்ணப்பதாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இறுதியாகக் கிராம அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பின்னர் புதிய கிராம அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் எவையும் நடைபெறவில்லை.

ஏற்கனவே நடந்த பரீட்சையிலும் கூட, யாழ். மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய பலருக்கு யாழ்.மாவட்டத்துக்கு வெளியில் உள்ள பிரதேசங்களின் கீழ் பெயர்கள் குறிப்பிட்டு புள்ளிகள் அனுப்பப்பட்டன.

இதனால் தமது பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களை விட கூடிய புள்ளிகள் பெற்றிருந்தும் அவர்கள் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பை இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## சிறுபோக மரக்கறிச் செய்கையில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ். குடாநாட்டில் தற்போது சிறுபோக மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட மரக்கறிப் பயிர்களுக்கு மாற்றாக மீண்டும் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் தற்போது தீவிரம் காட்டியுள்ளனர்.

அதிகமான விவசாய நிலங்கள் மீண்டும் சீர் செய்யப்பட்டு பசளையிடப்பட்டு மரக்கறிச் செய்கைக்குத் தயாராக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கோவா, கரட், போஞ்சி, பிற்றூட், லீக்ஸ் போன்ற மரக்கறி செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (ம-17)

# 88 ஆயிரத்து 190 குடும்பங்கள் மலசலகூடங்கள் அற்ற நிலையில்

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் 88 ஆயிரத்து 190 குடும்பங்கள் மலசல கூடங்கள் அற்ற நிலையில் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த வீட்டுத் தொகுதிகளின் எண்ணிக்கை 51 இலட்சத்து 88 ஆயிரம்.

அவற்றுள் 5 இலட்சத்து 81 ஆயிரம் வரையிலான குடும்பங்கள் பிறிதொரு வீட்டுத் தரப்புடன் இணைந்து கொண்டு கூட்டாக மலசல கூடங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

தாம் குடியிருக்கும் வீட்டுத் தொகுதிக்கு மலசல கூடம் இல்லாதிருப்பதன் காரணமாக ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 701 குடும்பங்கள் மற்றவர்களது குடியிருப்புகளில் உள்ள மலசலகூடங்களைப் பயன்படுத்துகின்றன என்று அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# இந்தியாவுக்கு வரும் யாத்திரிகர்களுடன் அநாகரிகமான முறையில் நடப்பது தவறு

### லங்கா சமசமாஜக் கட்சியின் யாழ்.கிளை கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மாணவர்கள் ஜனநாயக வழியில் போராடுகின்றனர். அவர்களுக்கு ஒத்தாசை வழங்குவது இந்தியாவின் கடமை. ஆனால், இந்தியாவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள், சுற்றுலாப் பயணிகள், விளையாட்டு வீரர்கள் தீங்கு விளைவிக்கும் வகையில் அநாகரிகமாக நடப்பதோ, நடத்த முற்படுவதோ, தவறான விடயம்.

யாழ்.கிளை லங்கா சமசமாஜக்கட்சி இவ்வாறு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு புத்த மதகுருமார்கள் சென்றபோது இந்தியர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கையை லங்கா சமசமாஜக்கட்சியின் யாழ்.கிளை வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியர்களின் இவ்வாறான செயற்பாடுகளால் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை.மாறாக நொந்து போயுள்ள நிலையில் தற்போது சிறிது சிறிதாக தம்மைக் கட்டியெழுப்பிக்கொண்டுவரும் எமது மக்களையே பின்னோக்கி நகர்த்தும்.

இலங்கை அரசு அல்லது இராணுவம் போரில் தமிழ் மக்களைக் கொன்று விட்டது என்று கூறுகிறீர்கள் இந்த நிலையில் நீங்களும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளீர்கள். இந்த நிலையில் உங்களுக்கும் நீங்கள் கூறும் இலங்கை அரசுக்கும் இடையே என்ன வித்தியாசம் உள்ளது?

இந்தியாவில் மட்டும் தான் எமது மக்களை 'இலங்கை அகதி' என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வாறான செயற்பாடுகள் ஒருபோதும் இலங்கையில் வாழும் மக்களுக்கு இடையில் இன ஒன்றுமையை ஏற்படுத்தி விடாது- என்றுள்ளது. (ம-13)

### சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

# காசநோய் வாரத்தை முன்னிட்டு சளிப் பரிசோதனைக்கு ஏற்பாடு

தென்மராட்சி, மார்ச் 24

உலக காசநோய் வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விசேட சளிப் பரிசோதனைகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

காசநோய்க்கான பின்வரும் குணங்குறிகள் உள்ளவர்கள் வைத்தியசாலை மேற்பார்வையாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட கப்களைப் பெற்று சளியை அவற்றில் சேகரித்து சளிப் பரிசோதனை ஆய்வு கூடத்தில் தங்களது தொலைபேசி இலக்கத்துடன் கொடுத்து விட்டுச் செல்லுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீடுகளில் இருந்து வைத்தியசாலைக்கு வர முடியாத நிலையில் உள்ள வயோதிபர்களிடம் வைத்தியசாலையில் உரிய பாத்திரத்தைப் பெற்று சளியைச் சேகரித்து ஆய்வு கூடத்தில் வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாக இருமல் காணப்படல், இருமும் போது இரத்தம் வருதல், பசியின்மை, இரவில் குளிருடன் கூடிய காய்ச்சல், நிறை குறைதல், கட்டுப்பாடற்ற மூச்சிழுப்பு போன்ற குணங்குறிகள் உள்ளோர் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

வைத்தியசாலை சளி பரிசோதனை ஆய்வு கூடத்தில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட சளியை ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 31 ஆம் திகதிவரை இந்த விசேட சளிப் பரிசோதனை இடம்பெறும் எனவும், வைத்தியசாலைக்கு வர விரும்பாதவர்கள் நகர்ப் பகுதியில் உள்ள தனியார் மருந்தகங்கள், தனியார் வைத்தியசாலையிலிருந்து பரிசோதனைக் குவளைகளைப் பெற்று அவர்கள் ஊடாகவும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள தனியார் மருந்தகங்கள், தனியார் வைத்தியசாலைகளை ஒத்துழைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓமந்தை அரச ஊழியர்களின் வீட்டுத்திட்டப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒரு வீடு. (402)

## வீட்டுத் தோட்டத்தில் இறப்பர் மரங்கள்

நெடுங்கேணி, மார்ச் 24

நெடுங்கேணிப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையாக இறப்பர் மரங்களை வளர்க்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் ஒலுமடு கிராம அலுவலர் எஸ்.சிவகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு இறப்பர் செய்கை தொடர்பாகவும், காடு அழிப்பு தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

மேலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இறப்பர் கன்றுகளும் வழங்கப்பட்டன.

மேலும் இறப்பர் செய்கைக்கான உதவிகளும், ஊக்குவிப்புகளும் வழங்கப்படுமென்ற உறுதிமொழிகளும் வழங்கப்பட்டன.

இதில் அரச உயரதிகாரிகள், வனவள அதிகாரிகள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-435)

## வர்த்தகர்களின் வருகை குறைந்ததால் நெல் கொள்வனவில் மந்த நிலை

கிளிநொச்சி, மார்ச் 24

தென்னிலங்கை வர்த்தகர்களின் வருகை குறைவடைந்ததால் தாம் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதில் விவசாயிகள் இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

மழை வெள்ளத்தால் பெரும் பயிர் அழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகள் தாம் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த வர்த்தகர்கள் சம்பா நெல்லை மூடை ஒன்றுக்கு 2 ஆயிரத்து 50 ரூபாவிலிருந்து 2 ஆயிரத்து 100 ரூபா வரை வழங்கிக் கொள்வனவு செய்து வந்தனர். தற்போது அவர்களின் வருகை குறைவடைந்ததால் ஒரு மூடை நெல் ஆயிரத்து 900 ரூபா வரையே விற்பனையாகின்றது. இதனால் விவசாயிகள் மேலும் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நெல் கொள்வனவில் ஈடுபட வேண்டுமென கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் சம்பா நெல் 30 ரூபாவாகவும், சிவப்பு இன நெல் 28 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு நெல் சந்தைப்படுத்தும் சபையினை சம்பா நெல்லை கிலோ ஒன்று 32 ரூபாவாகவும், சிவப்பு ரக நெல்லை 30 ரூபாவாகவும் கொள்வனவு செய்திருந்தனர்.

தென் பகுதிக்குக் கொண்டு செல்லப்படும் நெல் மூடைகள் ஓமந்தை சோதனைச் சாவடியில் இறக்கி ஏற்றப்படுவதால் அதற்கு ஏற்படும் செலவை ஈடு செய்யும் பொருட்டு வர்த்தகர்கள் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

# வவுனியா பொது மருத்துவமனையில் சிலவகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## விரைவில் நீங்கிவிடும் என்கிறார் வைத்திய அத்தியட்சகர்

நெளுக்குளம், மார்ச் 24

வவுனியா பொது மருத்துவமனையில் சிலவகை மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக அங்கு செல்லும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மருத்துவமனை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கும் சேவையை வழங்கி வருகின்றது.

இங்கு தினமும் பல்வேறு நோய்களுக்கான கிளினிக்குகளும் இடம்பெற்று வருகின்றன. இதில் ஏராளமான நோயாளர்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

ஆனால் மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட மருந்துகள் அனைத்தும் மருந்தாளர்களால் வழங்கப்படுவதில்லை என நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வசதி படைத்தவர்கள் தனியார் மருந்துக் கடைகளில் இத்தகைய மருந்துகளைப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளுகின்றனர். ஆனால் வசதி குறைந்தவர்கள் பணம் கொடுத்து மருந்துகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளதைக் காணமுடிகின்றது.

இவர்கள் இத்தகைய மருந்துகளைப் பாவிக்காமல் விடுவதனால் நோய்களின் தாக்கத்துக்கு ஆளாகி வருவதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக வவுனியா பொது மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகரான மருத்துவர் சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்:-

அரச மருத்துவமனைகளில் இலங்கை பூராகவும் சிலவகை மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவிவருவதை அவதானிக்க முடிகின்றது.

இதே நிலைதான் வவுனியா மருத்துவமனையிலும் நிலவி வருகின்றது. இது தொடர்பாக உரியவர்களுக்கு நாம் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளோம்.

விரைவில் மருந்துகளுக்கான தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றார். (க-402)

## மன்னார் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது நிறைவு தினம்



மன்னார், மார்ச் 24

மன்னார் பொலிஸ் நிலையத்தில் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது நிறைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் மன்னாரிலும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னார் உதவிப் பொலிஸ். அத்தியட்சகர் ஐ.வி.ரி சுகதபால முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இங்கு கடமையின்போது உயிர்நீத்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. (க-12)

## தமிழ்ச் சங்கத்தினால் மாணவரிடையே போட்டிகள்

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினர் திருக்குறள் மாநாட்டையொட்டி மாணவர்களிடையே போட்டிகளை நடத்துவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினர் ஆண்டுதோறும் திருக்குறள் மாநாட்டை நடத்தி வருகின்றனர். இதனையொட்டி வழமை போன்று மாணவர்களிடையே திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், பாக்கள் என்பவற்றில் எழுத்துத் தேர்வும், நாவன்மைப் போட்டியும், பாடசாலைகளுக்கிடையில் குறள் இசை, சங்கக் கொடிப் பாடல் தமிழ் இசைப் பாடல், நாட்டுப்புறக் கலை, இலக்கிய நாடகங்கள், சிறுவர் நாடகம் ஆகியவற்றில் போட்டிகளுக்கும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

இந்தப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் முதலில் நடத்தப்பட்டு பின்னர் மாவட்ட மட்டத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 31 ஆம் திகதி எனவும் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வே.இறைபிள்ளை அறிவித்துள்ளார். (க)

## கிளிநொச்சி மாணவர்களுக்கு நிவாரணப் பொருள்கள்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில்



கிளிநொச்சி, மார்ச் 24

வெள்ளப் பாதிப்புக்களை எதிர்கொண்ட கிளிநொச்சி மாணவர்களுக்கென நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

இதனைக் கருத்தில் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் இவர்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு முன் வந்துள்ளனர்.

இந்தப் பொருள்களை சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கவென வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோரிடம் கையளித்தார்.

இதன்போது மாகாண அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் உடன் இருந்தனர். (க)

## அணைகளை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் தமது விவசாய நிலங்களில் காணப்படும் மண் அணைகளை அகற்றி உதவுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உமையாள்புரம் கிராமத்தில் பொதுமக்களின் விவசாயக் காணிகளை ஊடறுத்து அமைக்கப்பட்ட மண் அணைகள் இதுவரை அகற்றப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்த போதிலும் விவசாயச் செய்கை எதனையும் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த கால இடப்பெயர்வுக்கு முன்னர் சுமார் 390 குடும்பங்கள் இந்தப் பகுதியில் வசித்து வந்தன. தற்போது குறைந்த அளவிலான குடும்பங்களே மீள்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## சித்திரைப் புத்தாண்டையொட்டி விளையாட்டுப் போட்டிகள்

வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழகத்தினர் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

இதனடிப்படையில் கிளித்தட்டு மற்றும் அணிக்கு நான்குபேர் கொண்ட 30நிமிட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி என்பனவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பிந்தாமல் தலைவர், கலைமகள் விளையாட்டுக் கழகம் மன்னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாகவும் அந்தக் கழகத்தின் உபதலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக மைதானம் மற்றும் நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ள பல்வேறான போட்டிகளின் போது சிறுவர், சிறுமியர், வனிதையர், முதியோருக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் அவர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கல்வி வளர்ச்சிக்கான உதவிகள்

நெடுங்கேணி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இந்தப் பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிவரும் சேவைகளை இங்குள்ள மக்கள் பாராட்டியுள்ளனர்.

இந்த வகையில் இங்கு பணி புரிந்து வரும் எட்டு முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் நிதி வழங்கி வருகின்றது.

மேலும் இந்த ஆண்டில் தம்மால் இயன்ற உதவிகளை கல்வி வளர்ச்சிக்கென வழங்குவதற்குத் தயாராக உள்ளதாகவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். அங்கத்தவர்களின் கடின உழைப்பில் இருந்து சேமிக்கப்படும் நிதியின் மூலமாக இந்த உதவிகளை வழங்க முடிவதாக சங்கத்தின் பொது முகாமையாளர் தி.செந்தில்செல்வன் தெரிவித்துள்ளார். (க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

## கண்ணி வெடி அகற்றுனருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடி அகற்றும் பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணி வெடியகற்றல் துப்புரவற்றதும், தேக வலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணி வெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதுடன் முற்றாக நீக்க முடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக் கோவையை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி பங்குனிமாதம் 2013 அன்று சனிக்கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

**ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

(26256)(6.11)

## செலான் வங்கியின் வெள்ளி விழா நிகழ்வுகள் நாளை

தென்மராட்சி, மார்ச் 24

செலான் வங்கியின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகள் நாட்டில் உள்ள அனைத்து கிளைகளிலும் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி கிளையில் கடந்த டிசெம்பர் மாதம் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான 'டிக்கிரி' சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 20 சிறுவர்களுக்கு நாளைய நிகழ்வில் பரிசில் வழங்கப்படவுள்ளதாக வங்கியினர் தெரிவித்தனர். (ஒ-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக கின்னஸ் சாதனை நாயகன் யாழ்.மண்ணின் மைந்தன் பொனிபஸ் அன்ரன் டயஸ்



ஒரே மேடையில் 163 பேரைக் கொண்டு "கீபோட்" இசைத்து கின்னஸ் உலக சாதனையை அண்மையில் படைத்த திரு. பொனிபஸ் அன்ரன் டயஸ்
இன்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை சாதனை படைத்த அதே கொழும்பு தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கில் கின்னஸ் உலக சாதனைக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் வேளையில் நெஞ்சாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**இளைஞர் உருவாக்கல் இயக்க முன்னாள் உறுப்பினர்கள். யாழ். மரியன்னை பேராலயம்.**

## Happy Birth Day

## 100 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



கடின உழைப்பும்
மன உறுதியும் கொண்டு
தன் கனவுகளை வென்றெடுத்து
ஆத்ம திருப்தியுடன்
இன்று அகவை நூறை
கடந்து செல்லும் எம்
குடும்பத் தலைவன்
மேலும் நலமுடன் வாழ
வாழ்த்தி நிற்கின்றோம்.

**திரு. இளையதம்பி கோவிந்தசாமி**
(ஆயர்பாடி, துன்னாலை மத்தி)

ஆயர்பாடி,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(34792)(10.6)

### வாகனங்கள் விற்பனைக்கு

57 -xxxx இலக்கமுடைய டொல்பின் வான், NPPP-xxxx Batta Full Body யுடனும் மற்றும் NPRB -xxxx டிராக்டர் பெட்டி, கலப்பை என்பவற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
021 791 5871,077 666 0719

(34794)(5-6)

### காணி விற்பனைக்கு


யாழ். திருநெல்வேலியில், தபால் பெட்டிச் சந்திக்கு அருகில் CAMPUS LANE இல் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு
பரப்பு: 35 லட்சம்
**(Not Negotiable)**

(சி/7093) (15.6)

தொடர்பு: **077 3658 485**

# TELESONIC Air Power

TL- 1611




### Wall Fan

Soft Touch Tilting Angle Adjustable
3 speed Choices
Oscillation Controlled By Double-line Pull Switch


TL- 2040

### Industrial Fan

Large Air Volume at Low Noise
Strong Motor for Long Service Life
3 Speeds and Adjustable Oscillation Angle
Available Sizes 20", 26", 30"
12 Months Warranty on Motor








### Summer King

Double Ball Bearings Motor
Well Balanced Blades For Quiet Operation
16 - Pole Powerful Motor
Embossed SLS Logo On Motor Cover
Hum-Free Electronic Regulator
24 Months Warranty on Motor
Available Sizes 36" 56"

TL- 1224

### Box Fan

12" Blades
Complete Plastic Body For Easy Maintenance
Low Energy Consumption
12 Months Warranty On Motor





### Exhaust Fan

Available Sizes 8", 10", 12"
12 Months Warranty On Motor

TL- 1632

### Floor Fan

Available Sizes 12", 16", 18", 20"
Built-in Over Load Protecting Device For Safe Operation
Aluminium Blade For Powerful Wind
Ideal For Home, Office, Hotel, Store & So On
12 Months Warranty On Motor




TL- 1216FF

### Stand Fan

3 Speed Oscillating Option
Low Energy Consumption 60 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available

TL- 1674



### Cabin Fan

16" Rust Free Blades
3 Speed Oscillating option
Low Energy Consumption 50 w
12 Months Warranty
Spares Freely Available

TL- 16130F

### Table Fan

3 Speed Oscillating Option
Low Energy Consumption 50 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available



TL- 1603

விலை 3275/= இலிருந்து

A Lifetime Of Refreshing Air

Jaffna : - Selva Electricals - 0777 113 884 / Sundharson Manipal - 021-2 255 136 / Midea Electro Mart - 0777 238 542 / Minnila Electricals - 0778 392 107

ஏக விநியோகஸ்தர்

**TELESONIC INTERNATIONAL**

இல 18. டேசி ...(...),கொழும்பு-04.
Tel: 2 50 81 60 - 2 Fax: 2 50 17 26 E-mail: info@telesonicintl.com Web : www.telesonicintl.com
Mr. Croos :- 077 3 424 191 / 071 4 414 048

(சி/7091)(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# URGENT STAFF VACANCIES FOR OUR NEW LOCATIONS

இலங்கையில் வேகமாக வளரும் U.A.E யை மையமாகக் கொண்ட எமது நிறுவன வலையமைப்பில், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளில் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்து க.பொ.த சா/த, உ/த பரீட்சையில் தோற்றியுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் மூன்று பிரிவுகளில் பயிற்சியாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் பல பதவி வெற்றிடங்களில் உடனடி வேலை வாய்ப்புகள் காணப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கீழ் காணப்படும் தொ.பே இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**Free accommodation,Trainee income up to Rs 30,000/= after Rs.60,000/=+**

*021 221 9995,075098588*
*275 1/3,Clock tower Road, Jaffna.*

(34787) (6.11)



## பிரதிநிதிகள் தேவை

ஐக்கிய இராச்சியத்தின் மிகப்பெரிய அரச கல்லூரியான Ealing Hammer Smith & மேற்கு லண்டன் கல்லூரிக்குப் பிரதிநிதிகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு தேவைப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ளவும்
Ron at
077 5280383
011 2733636

(C/7086)(5.6)




## ப்ருந்த கான லய நிறுவனத்தினரின் மனமுவந்த நன்றிகள்

09.03.2013 யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இந்திய துணை தூதரகம் மற்றும் ப்ருந்த கான லய நிறுவனம் இணைந்து வழங்கிய "ப்ருந்த கானம்" நிகழ்வு மற்றும் ப்ருந்தகான லய நிறுவனம் வழங்கிய "மும்மூர்த்திகள்" விழாவிற்கும் கலை நிகழ்ச்சிகளை மனமுவந்து தங்களது நிகழ்வாகவே கருதி வழங்கிய கலைஞர்கள்மற்றும் தங்கள் சிரமம் பாராது வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பித்த யாழ். வாழ் மக்கள் அனைவருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் விழா சிறப்பிக்க உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் "ப்ருந்த கான லய நிறுவனம்" தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மேன்மேலும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு யாழ். வாழ் மக்களின் உதவியினை அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**ப்ருந்த கான லய நிறுவனம்.** (C/7193)(6.11)



# 'லீசிங்'இல் கட்டட வசதிகள்







யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்கும் தனியாரின் Northern Central வைத்திய சாலைக்கும் அருகில், பலாலி வீதி ஓரமாக கந்தர்மடத்தில் மூன்று அடுக்குகளைக் கொண்டதும், லிப்ட் வசதி கொண்டதும், பல்நோக்குக்கு பாவிப்பதற்கும் ஏற்ற விதத்தில் ஒவ்வொரு தளமும் சராசரி 6000 சதுர அடி கொண்டதாக லீசிங் முறையில்/ வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு கட்டட வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. போதியளவு கார் தரிப்பிட வசதியும், கொங்றீட் கூரையில் ஒரு திறந்தவெளி சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான வசதிகளுமுண்டு.

**விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்**

திட்ட முகாமைத்துவ மதியுரைஞர்
"உருத்திரா" பொறியியல் கட்டடக்கலை மதியுரைஞர்
114/1, Temple Road, Jaffna.
T.P: 021 222 5534 Mobile: 077 7111469 / 077 3798116




# சிற்பவேலைகளில் புதிய அத்தியாயம்

இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள ROBO-X5 அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் முதிரை,வேம்பு,தேக்கு போன்ற வைரமான மரங்களில் யாழ். மக்களின் மனங்கவர்ந்த அன்னம், தீபநாயகி,மயில் போன்ற சிற்பங்களை மிகத்துல்லியமான வடிவமைப்புடன் மூன்று நாள்களில்... உங்கள் கனவு இல்லங்களின் கதவுகள்,நிலைகள்,இல்லங்களின் பெயர்ப்பலகைகள் போன்றனவற்றை ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தம் புதிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள

## மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்

62/20,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.0212221358 (சி/7195) (2,6)





Are you planning to study or train abroad?
Then we are the right people to prepare you.

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

# IELTS

(Duration: 40 hrs with Free 5 mock exams )

- ☒ Latest training materials.
- ☒ Skills development in all four categories.
- ☒ Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- ☒ Depend on individual needs, the student can access other English Modules FREELY.




விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்.

British Council - IELTS பரீட்சைக்கு நீங்கள் எங்குபடித்திருந்தாலும் DMI இன் எந்தகிளையிலும் பரீட்சை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இலவச கருத்தரங்கு 31/03/2013 அன்று யாழ் DMI இல் நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் உங்கள் பெயர் விபரங்களை 0777 173517 தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யவும். அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

DMI COMPUTER EDUCATION City & Guilds

# DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) | கண்டி வீதி, (HNB அருகில்) | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

(சி/7198) (2,6)



# சவுதி அரேபியாவில் உடனடி வேலை வாய்ப்பு

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம்(றியால்) |
|---|---|---|
| 1. Autocad தெரிந்த சிவில் போமன் | 04 | 2000+200 |
| 2. பைப்பிங் தரக்கட்டுப்பாட்டாளர் | 04 | 2500+200 |
| 3. பாதுகாப்பு அலுவலர் | 03 | 1500+200 |
| 4. குழாய் திருத்துநர் | 05 | 1500+200 |
| 5. எலக்ரீசியன் | 05 | 1400+200 |
| 6. சாரம் கட்டுபவர்(Scaffolders) | 07 | 1000+200 |
| 7. மெக்கானிக் உதவியாளர் | 10 | 900+200 |
| 8. உருக்கு பொருத்துபவர் | 07 | 1000+200 |
| 9. தச்சுவேலை செய்பவர் | 07 | 1200+200 |
| 10. மேசன் | 07 | 1200+200 |
| 11.குழாய் பொருத்துநர் | 07 | 1200+200 |
| 12. மெக்கானிக் (டீசல்/பெற்றோல்) | 03 | 1500+200 |
| 13. வெல்டர் | 05 | 1500+200 |
| 14. வெல்டர் (தரக்கட்டுப்பாட்டாளர்) | 07 | 2500+200 |
| 15. சிவில் இஞ்சினியர் | 03 | 3000+200 |
| 16. மெக்கானிக்கல் இஞ்சினியர் | 03 | 3000+200 |

நிபந்தனைகள்:
- மருத்துவம்,போக்குவரத்து மற்றும் இருப்பிட வசதி என்பன வழங்கப்படும்.
- இரண்டு வருடகால ஒப்பந்தம்
- 8 மணித்தியால வேலை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு.
- இரண்டு வருட முடிவில் பிரயாணசீட்டு வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் பாஸ்போர்ட் அளவு கொண்ட வெள்ளைநிற பின்னணியில் அமைந்த 8 கலர் படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இலங்கை தூதரகத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
**சுதாகரன்: 077 958 0588**
Mantek Enterprises
Labour LIC No: 1449
No.: 535/2/1,Galle Road, Wellawatte,Colombo-06
T.P.No.: 011-2363193/011-4375911 Fax:011-4510549
Email: mantek.enterprises@yahoo.com (C/7194)(5.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலைகளுக்கான மின் உபகரணங்கள் ஒரேஞ் எலெக்ரிகல் நிறுவனம் அறிமுகம்


இலங்கையின் மின் உதிரிப்பாக உற்பத்தியில் முன்னிலை நிறுவனமாக விளங்கும் ஒரேஞ் நிறுவனம் தொழிற்சாலைகளுக்கான புதியரக மின் உபகரணங்களை இலங்கை, தெற்கு ஆசியா, தென் கிழக்கு ஆசியா ஆகிய சந்தைகளுக்கு ஒரே நேரத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவற்றை அறிமுகப்படுத்தும் வைபவத்தில் உரையாற்றிய ஒரேஞ்ச் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குஷான் கொடிதுவக்கு போட்டித்தன்மைமிக்க தொழிற்துறைவரை எமது உற்பத்திகளை விஸ்தரிக்க முடிந்துள்ளது.

இதன்மூலம் ஒரேஞ் வர்த்தக குறியீட்டின் பெறுமதி அதிகரித்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

''எமது உற்பத்திகளுக்கான உதிரிப் பாகங்கள் சர்வதேச ரீதியான உற்பத்தியாளர்களிடமிருந்து உயர்ரக தரத்துக்கு அமையப் பெறப்படுவதால் ஒரேஞ் வர்த்தக குறியீட்டின் மூலம் உயர்ரக பொருட்களை தயாரிக்கலாம். இவை அனைத்தையும் உற்பத்தி செய்வது திறமைவாய்ந்த எமது தொழிலாளர்களே. அதன்மூலம் இலங்கையின் திறமைகளை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்ல முடியும்'' என குஷான் கொடிதுவக்கு மேலும் தெரிவித்தார்.

ஒரேஞ் உற்பத்திகளை ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடு களுக்கு விஸ்தரிப்பதே நிறுவனத்தின் அடுத்த இலக்காகும் எனக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் தற்போது குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.





இலங்கை வங்கி, வல்வெட்டித்துறை கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின வைப்புக்களைத் திரட்டல் நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட முகாமையாளர் ரி.குமார் வாடிக் கையாளர் ஒருவருக்கு வைப்பு கையேடு ஒன்றினை வழங்குகிறார். அருகில் வங்கி முகாமையாளர் எஸ்.சிறீகாந்தன் மற்றும் வங்கி அதிகாரி திருமதி ஆர்.தவச்செல்வன் ஆகியோர் காணப்படுகின்றனர். (கு)

# குளோபல் சி.ஈ.ஓ விருதினை வென்ற கலாநிதி.டேன் சீவரட்ணம்

வட்டவல பிளான்டேஷன்ஸ் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி டேன் சீவரட்ணம் 'Global CEO of the Year" எனப்படுகின்ற வருடத்தின் உலகளாவிய சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரிக்கான விருதை வென்றெடுத்துள்ளார்.

உலக மனிதவள விசேஷத்திறமை விருது (Global HR Excellence Awards 2012/2013) வழங்கும் நிகழ்வு இந்தியாவின் மும்பை நகரில் அண்மையில் நடைபெற்ற போதே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

88 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் போட்டியிட்டே அவர் இவ்விருதை வென்றெடுத்ததுடன், அதனைத் தன்வசப்படுத்திக் கொண்ட முதலாவது இலங்கையர் என்ற புகழையும் பெற்றார்.

பூகோள ரீதியாக பலர் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் முக்கியமானதொரு தளமாகவும் உலக மனிதவள விசேஷத் திறமை விருது விழா கருதப்படுகின்றது.

வட்டவல பிளான்டேஷன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றுகின்ற கலாநிதி. டேன் சீவரட்ணம், அதற்கும் அப்பால் தேயிலை ஆராய்ச்சி சபை, தெங்கு ஆராய்ச்சி சபை மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி சபையின் பணிப்பாளராகவும், இலங்கை பெருந்தோட்ட சேமலாப நிதியத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்

இலங்கை மனிதவள முகாமைத்துவ நிறுவகத்தால் ''வாழ்நாளுக்கான தங்க விருது 2012'' ஆசிய பசுபிக் மனிதவள முகாமைத்துவ வாழ்நாள் சாதனையாளர் 2012 ஆகிய விருதுகளையும் அண்மையில் வென்றெடுத்த பெருமையும் கலாநிதி.டேன் சீவரட்ணத்தை சாருகின்றது.

மஸ்கெலியா பிளான்டேஷன்ஸ், நமுனுகுல பிளான்டேஷன்ஸ் (ஜோன் கீல்ஸ் நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்ட), களவத்தை பிளான்டேஷன்ஸ் (போர்பஸ் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகின்ற) ஆகியவற்றிலும் பணியாற்றிய அனுபவத்தை கொண்ட அவர் வட்டவல பிளான்டேஷன்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக 2008 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது முதல் இன்றுவரை நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வருகின்றார்.

கண்டி திரித்துவ கல்லூரியின் பழைய மாணவரான டேன் சீவரட்ணம், உதவிப் பயிற்சி முகாமையாளராக பெருந்தோட்ட துறையில் பிரவேசித்து 40 ஆண்டுகளாக அத்துறையின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் ஏராளம் அத்துடன் தமது அனுபவங்களையும் வழிகாட்டல்களையும் ஏனையவர்களுக்கு வழங்கு வதிலும் முன்னின்று செயற்படுகின்றமை அவரது ஆளுமைக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். (த)

# தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி ஏப்ரலில்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை முயற்சியாளர்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் துறையுடன் தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சியொன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி யாழ்.பிள்ளையார் சுற்றுலா விடுதியில் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தகத் தொழில்துறை மன்றமும், அரச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமுகவர் நிறுவனமும் இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை முயற்சியாளர்களின் தற்கால அபிவிருத்தித் திறன்களைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கென இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான தீர்வுகளை இந்தக் கண்காட்சியில் பெற்றுக்கொள்ள முடியும்.

வியாபார மற்றும் தொழில்துறை சமூகத்தினரையும் தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குநர்களையும் ஒன்றாக இணைத்து தகவல் தொழில்நுட்ப பாவனையூடாக வியாபார செயற்பாடுகளை இலகுவாக மேம்படுத்துவது தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குநர்களின் சந்தை வாய்ப்புகள் அதிகரித்தலும் மேற்படி கண்காட்சியின் நோக்கமாகும்.

முறைசார்ந்த தகவல் தொழில்நுட்ப பிரயோகங்கள் ஊடாக வியாபார பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல், தொழில் முயற்சியாளர்களின் தேவைக்கேற்ப தகவல் தொழில்நுட்ப மென்பொருள்களை சேவை வழங்குதல் ஊடாக பெற்றுக்கொள்ளுதல் போன்ற பல்வேறு பயன்பாடுகளை மேற்படி கண்காட்சி மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (த-14)

# 5 வருடங்களில் ரூ.400 கோடி இழப்பீடு
## ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், மார்ச்.24

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் இலங்கையில் மட்டும் வாடிக்கையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ஆயிரத்து 400 கோடி ரூபாவை வழங்கியுள்ளது என்று ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வடக்கு, கிழக்கு உதவிப் பொது முகாமையாளர் வேதநாயகம் ஸ்ரீவிஜயகாந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

2002ஆம்ஆண்டு தொடக்கம் இலங்கையில் காப்புறுதிச் சேவையை வழங்கிவரும் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் இதுவரை கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் மட்டும் வாடிக்கையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ஆயிரத்து 400 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. அத்துடன் 2006ஆம் ஆண்டு வன்னி மாவட்டத்தில் இடப்பெயர்வால் பாதிப்படைந்த வாடிக்கையாளர்களுக்குப் பொதுக்காப்புறுதியில் ஆறு கோடி 75 இலட்சம் ரூபாவையும், ஆயுட் காப்புறுதியில் ஒரு கோடி 26 இலட்சம் ரூபாவையும் இழப்பீடாக வழங்கியுள்ளது.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் வடமாகாணத்தில் 8 கிளைகளையும், யாழ்.மாவட்டத்தில் 4 கிளைகளையும் கொண்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தற்போது கிளைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது-என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவனேஸ்வரி கீதம்




**மாதகல், பாணாகவெட்டி**
**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன்**

ஆலய வருடாந்த உற்சவ தேர்த்திருவிழா நாளை (25.03.2013) திங்கட்கிழமை நடைபெறும். அன்றைய தினம் ஆலய தர்மகர்த்தா தலைமையில் புனேஸ்வரி அம்மன் கீத இறுவெட்டு பிற்பகல் ஒரு மணியளவில் வெளியிடப்படும்.

**இசை:** சத்தியன் (முரளி)
**பாடலாக்கம்:** துரை கணேசமூர்த்தி (மாதகல்)

(34780) (10.6)

**காலை 8 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி பகல் 12 மணியளவில் அம்பாள் தேரில் ஆரோகணிப்பாள்.**

**அனுசரணை:**
N. சுபாஸ்கரன் (ராசன்-லண்டன்)
பிரதான வீதி, மாதகல்.

ஸ்ரீ புவனேஸ்வரி ஆலய
தர்மகர்த்தா,
திருப்பணிச் சபையினர்.

# பதவி வெற்றிடம்

இலங்கையின் பிரபல்ய காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக சாவகச்சேரி பிரதேசத்தில் பொது காப்புறுதி உத்தியோகத்தர்களை உள் வாங்க உள்ளது.

தகைமை ➡ O/L 6 பாடங்கள் சித்தி (கணிதம் உட்பட)
➡ சந்தைப்படுத்தல் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சலுகைகள் ➡ ★ அடிப்படை வேதனம்- 10,000-35,000/=வரை
★ கொமிஷன்+ மேலதிக கொமிஷன்
★ வெளிநாட்டு சுற்றுலாக்கள்+ சர்வதேச பயிற்சிககள்
★ வாகன கடன் வசதிகள்

மேற்படி தகைமையுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களில் உங்கள் தொலைபேசி இலக்கத்தினை குறிப்பிட்டு எதிர்வரும் 01.04.2013 இக்கு முன்னதாக விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல. 4445, மே/பா உதயன்.**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (34793) (6.11)

# 27 ஆவது பிறந்தநாள் நினைவும் 6 ஆம் மாத நினைவஞ்சலியும்



**அமரர்**
**கனகலிங்கம் சுதர்சன்**

(கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ உதவியாளர்)

அன்னை மடியில்
24.03.1986
ஆண்டவன் அடியில்
17.09.2012
திதி: 13.03.2013

அன்பினில் விளைந்துஆருயிராய் நின்றாயே
எங்களில் கலந்து எங்களை ஆள் பவனே - உனக்கு
எதிர்பாராத ஒரு நோய் வந்து பிரித்ததுவோ ?- எமைவிட்டு
உனைப் பிரிந்த நினைவுகளில் ஆறாம் மாதமும்
உன் பிறந்த நாள் நினைவும் வந்து எம் நெஞ்சைப் பிளக்குதே
சுந்தரா எங்கள் சுதர்சா எங்கே உன் திருமுகம். (C/7189)(2.6)

இல.337, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

திருமதி
## சோமசுந்தரம் தங்கச்சியம்மா



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நவாலியில் வசித்தவரும், தற்போது ஆனைக் கோட்டையில் வசித்தவரான சோமசுந்தரம் தங்கச்சியம்மா 21.03.2013 வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சபாபதி-தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் மனைவியும், பொன்னப்பா, சிவபாதம், தங்கராசா ஆகியோரின் சகோதரியும், கணேஸ்வரி, கனகசபாபதி, நாகேஸ்வரி, ஜெயக்குமார் ஆகியோரின் தாயும், யோகராணி, பூபாலசிங்கம் (சின்னராசா), சசீலா ஆகியோரின் மாமியும், ஜெயந்தா, சுஜித்தா, சயந்தன், கேதா, சுயா, தீபா, திரேஷன், கிறிஷான் ஆகியோரின் பேர்த்தியும், த்திரிஷன், தனுஷிகா, கவிநயா, அபிநயா, ஸ்ருதி, ஆதீஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
அரசடி, கொக்குவில்.
T.P: 0770712452

(34771) (10,6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மக்கள் வங்கி சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோர்

தென்மராட்சி, மார்ச் 24

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மக்கள் வங்கியின் 'இசுறு உதான', 'சிசு உதான' ஆகியவற்றில் வைப்புச் செய்தவர்களிடையே நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

'இசுறு உதான' சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு கற்றல் மடிக்கணினிகளும் 'சிசு உதான' சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு 'மொழிக் கூட்டாளி' களும் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் சாவகச்சேரி மக்கள் வங்கியில் 'இசுறு உதான', 'சிசு உதான' கணக்கு வைத்துள்ள பின்வருவோருக்கு பரிசில்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'இசுறு உதான' கணக்கு வைத்துள்ளவர்களில் பரிசில் பெற்றோர்:-

சிவதீபன்டிலோஜி (மிருசுவில் தெற்கு), தயாபரன் ஹஜீதன் (கல்வயல் சாவகச்சேரி).

'சிசு உதான' கணக்கு வைத்துள்ளவர்களில் பரிசில் பெற்றோர்:-

நகுலேஸ்வரன் துஷியா (மிருசுவில் வடக்கு), தேவஈஸ்வரன் சோபிதன் (விடத்தற்பளை), சிறிதரன் அபிலக்ஸன் (குடமியன் வரணி), சுபாஸ்கரன் தனுஷன் (கைதடி நுணாவில்). (எ-9)

## 110 வயது மூதாட்டி இயற்கை எய்தினார்

சாவகச்சேரி, மார்ச் 24

மட்டுவில் வடக்குப் பகுதியில் 110 வயதை எட்டிய மூதாட்டி இயற்கை எய்தினார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வேலன் - தெய்வானை என்ற வயது 110யைக் கொண்ட வயோதிபப் பெண்ணே இவ்வாறு இயற்கை எய்தியுள்ளார்.

இவர் புத்தூர்ப் பிரதேசத்தைப் பிறப்பிடமாக கொண்டவர். திருமணமாகி மட்டுவில் வடக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்.

இந்த வயோதியப் பெண் தனது வாழ்நாளில் குரக்கன் தானிய உணவு, பனாட்டு, ஒடியல்மா உள்ளிட்ட உணவு வகைகளை உட்கொண்டு வாழ்ந்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-131)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சங்கரப்பிள்ளை தம்பையா**

(இளைப்பாறிய மேற்பார்வையாளர்- புடைவை கைத்தொழில் திணைக்களம்)

தோற்றம்
10.07.1927

மறைவு
23.02.2013

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (25.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் தொலைபேசி மூலம், தந்தி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் மேலும் பல வழிகளில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்).

6/3, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.

(34790) (45.6)

**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர்**
**கந்தசாமி பராசக்தி**

தோற்றம்:- 04*10*1935
மறைவு :- 22*02*2013

கருவைச் சுமந்து கருவறைக்குள் சுவாசம் தந்து
கண்ணயராது விழித்திருந்து சீராட்டி வளர்த்த தாயே!
எம் வலிகளை ஏற்று வேதனைகளைச் சாதனைகளாக்கி
வாழ்வில் இடையே பல சவால்களை வெற்றியாக்கி
சுமைகளிலும் சுகம் கண்ட அம்மா....
பசிக்காத போதும் உன் சுவைகேட்டு புசித்தோம்
இன்று பசிக்கிறது ஆனால் புசிக்க முடியவில்லை....
வாயடைத்துப் போனோம் எங்கள் அம்மா – சடுதியில்
இறைவனவன் உங்களை அழைத்ததாலே –இறைதொண்டு
தளராது செய்ததால் தன்னருகில் அழைத்தானோ இறைவன்!
அன்பின் வடிவாக அவதரித்த தியாகத்தின் வாழ்விடம் – அம்மா
உன்னிடம் பெற்ற கடனதனை எத்தனை பிறவி எடுத்தாலும்
தீர்த்திட முடியாது – தீராத சோகமதில் புரண்டு அழும் எங்களுக்காய்
மீண்டும் மண் மீது வந்து ஆறுதல் தந்திடம்மா....

எமது குடும்ப விளக்கின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

மில்லியன் தோட்டம்,
சாமியன் அரசடி, கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 108

# உங்கள் குழந்தையின் உணவு திருப்திகரமானதா?

**வைத்தியர்:** பிள்ளைக்கு எப்படி சாப்பாடு கொடுக்கிறீர்கள்?
**தாய்:** அதில் பிரச்சினை இல்லை... காலையில் நூடில்ஸ், மத்தியானம் சோறும் பருப்பும், இரவில் இடியப்பம் சொதியுடன் கொடுக்கிறேன்.
**வைத்தியர்:** இடைநேரத்தில்
**தாய்:** ஏதாவது கடைத்தீன் கொடுக்க வேணும்... பிஸ்கட், சொக்கிலேட் சாப்பிடுவான்.
**வைத்தியர்:** சாப்பாட்டின் அளவு எப்படி?
**தாய்:** ஓரளவு சாப்பிடுவான்... 3–4 வாய் சாப்பிடுவான்.

உங்கள் பிள்ளையின் உணவூட்டல் பற்றிய உங்கள் எண்ணக் கருக்கள் வேறுபடலாம். மிகத் திருப்திகரமாகவோ/ திருப்தியற்றதாகவோ இருக்கலாம்.

ஏதோ பரவாயில்லை என்பதாக இருக்கலாம். இவ் எண்ணக் கருக்கள் பெரும்பாலும் உங்களைச் சுற்றியுள்ள சூழலின் பிரதிபலிப்பாக இருக்கின்றது.

ஆனால் குழந்தைகளுக்கு வயதுக்கேற்ப, நிறையைப் பொருத்தமாகப் பேணவேண்டிய போஷணைப் பொருட்கள் அடங்கிய உணவைப் போதுமான அளவில் வழங்கும் போதே அவ்வுணவு திருப்திகரமானதாகக் கொள்ளப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு வேளைக்குரிய உணவூட்டலிலும் உங்களை நீங்களே வினவுங்கள்....

★ இவ்வுணவு குழந்தைக்குத் தேவையான போஷணைகளைக் கொண்டிருக்கின்றதா?

★ இவ்வுணவு வேளையில் குழந்தை உள்ளெடுக்கும் அளவு போதுமானதா?

உணவூட்டத் தொடங்கிச் சில மாதங்களின் பின்னர் படிப்படியாகக் கையால் தயாரிக்கப்பட்ட உணவுகளை அறிமுகப்படுத்த முடியும். பிரதான உணவுகளையும், சிற்றுணவுகளையும் கொடுக்க முடியும். ஒரு வயது பூர்த்தியாகும் போது குடும்ப உணவினைப் பகிர முடியும். இவ்வுணவுகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

பிரதான உணவு: காலை 7-8 மணி
மதியம் 12-1 மணி
இரவு 6-7 மணி
சிற்றுணவுகள்: காலை 10 மணி
பிற்பகல் 4 மணி
இரவு 9 மணி (பொருத்தமெனின்)



பிரதான உணவின் முன் குழந்தையின் பசியைக் குறைக்கின்ற சிற்றுணவுகள், பாற்பொருள்கள் என்பவற்றை 1-2 மணித்தியாலத்துக்குத் தவிருங்கள்.

பிரதான உணவினை நீர்த்தன்மையாகக் கொடுக்கும் பழக்கத்தைத் தவிருங்கள். இயன்ற வரை திண்மத் தன்மையாக வழங்குங்கள்.

நிறைகுறைந்த பிள்ளையெனில் ஒவ்வொரு பிரதான உணவிலும் எண்ணெய் வகை மற்றும் கொழுப்புவகையைச் சேருங்கள். தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், மாஜரீன், சீஸ், பட்டர், தடிப்பான தேங்காய்ப் பால் என்பன இவ்வாறு சேர்ப்பதற்கு உகந்தவை.

எந்தவேளையிலும் கொடுக்கக் கூடியதாக பொதி செய்யப்பட்டு விற்கப்படுகின்ற உணவுகளை இயன்றவரை தவிருங்கள்.

**உணவின் தரம்**

உணவைத் தேர்ந்தெடுக்கும் போது கிடைக்கும் தன்மை, விலை என்பன இத்தேர்வில் தாக்கம் விளைவிக்கின்றன.

சமநிலையிலுள்ள நாளாந்த ஆரோக்கிய உணவில் இடம்பெறும் சத்துப் பெறுமானங்கள் பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்.

முழு உணவில்
காபோவைதரேற்று- 55%
கொழுப்பு- 30 %
புரதம்- 15 %

ஒவ்வொரு சாப்பாட்டு வேளையிலும் தினமும் பின்வரும் 6 வகையான உணவுகளும் உள்ளடங்கி இருக்க வேண்டும்.

★தானியங்கள், சோறு, கிழங்கு வகை
★ அவரைவகை , பருப்பு வகை
★ காய்கறிகள்
★பழவகைகள்
★பாற் பொருள்கள்
★ இறைச்சி, மீன், முட்டை, வித்துக்கள் (கச்சான், கஜு)

தினமும் மேற்குறிப்பிட்ட ஆறு தொகுதியிலிருந்து உணவுகளை மாற்றி எடுப்பது எல்லா விதமான போஷாக்கையும் பெறுவதை உறுதி செய்யும். இதனால் நாளாந்தம் உடலுக்குத் தேவையான போசாக்குத் தேவை நிறைவு செய்யப்படுகின்றது.

★ஒரே விதமாக அல்லாது மூன்று வேளைகளுக்கும் வெவ்வேறு உணவு வகையுள்ள உணவு அட்டவணையைப் பாவித்தல்.

★பிள்ளைகளுக்கு உண்ணும் விருப்பத்தை அதிகரிக்கும்.

★உணவைத் தேவைக்கேற்ப படிப்படியாக அறிமுகப்படுத்துங்கள்

★உண்ணும் அளவையும் படிப்படியாகக் கூட்டுங்கள் .

★உங்களுடைய உணவுப் பழக்கத்தை நாளேட்டில் குறிப்பிடுங்கள்.

நீங்கள் பின்பற்றும் பழக்கத்தை சரியான விதத்தில் அமைத்துக் கொள்ள இது உதவும். எவ்விதமான உணவுகளில் நிறை அதிகரிப்பு அதிகமாக உண்டு என்பதை அறிய உதவும்.


உதாரணத்துக்கு ஒரு உணவு அட்டவணை கீழே காட்டப்படுகிறது.

| | காலை | மதியம் | மாலை |
|---|---|---|---|
| திங்கள் | இடியப்பம் முட்டைப் பொரியல் | சோறு, காய்கறி | திரிபோஷா |
| செவ்வாய் | கடலை | சோறு, கீரை, இறைச்சி, காய்கறி | தோசை |
| புதன் | ..... | ..... | ..... |

**வைத்தியர். குமுதினி கலையழகன்**
**குழந்தை நல வைத்தியர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

# மேக நோய் (Syphilis)

**வைத்தியர். யோ.சிவாகரன்**



**மேக நோய் / சிபிலிஸ் (Syphilis) என்றால் என்ன?**

மேகநோய்/சிபிலிஸ் எனும் நோய் பாலியல் தொடர்பு மூலம் பரவுகின்ற Treponema pallidum எனும் சுருளி வடிவம் கொண்ட அசையும் ஆற்றலுடைய பற்றீரியாவினால் ஏற்படுகிறது. இந்த நோய் அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**இந்த நோயின் தாக்கமும், பரவுகையும் எவ்வாறு உள்ளது?**

இந்த நோய் பாலியல் தொழிலாளர்கள், போதைப்பொருள் பாவனையாளர் போன்றவர்களையே அதிகமாகப் பீடிக்கிறது. மேலும் ஓரினச் சேர்க்கையிலீடுபடும் ஆண்கள், நோயாளித் தாய்மாருக்குப் பிறக்கும் சிசுக்களையும் தொற்றுகின்றது. முதன்மையான (Primary Syphilis) மற்றும் துணையான (Secondary Syphilis) மேகநோய் பெருமளவில் தாயிலிருந்து சிசுவுக்குக் கடத்தப்படுகிறது.

மேக நோய்க் கிருமி அகவணியில் ஏற்படும் காயமூடாகத் தொற்றுகிறது. நோய்க் கிருமி தொற்றி 10-90 நாள்களில் நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்படுகின்றன.

**மேக நோய்க்கான அறிகுறிகள் எவை?**

மேக நோய் ஏற்படும் காலம், ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றைக் கொண்டு முதன்மையான மேகநோய் (Primary Syphilis) துணையான மேகநோய் (Secondary Syphilis) மற்றும் மூன்றாவது மேக நோய்(Tertiary Syphilis) என வகைப்படுத்தலாம்.

**முதன்மையான மேகநோய்**

இது நோய்க்கிருமி தொற்றி 2-10 கிழமைகளில் ஏற்படுகிறது. நோய்க்கிருமி தொற்றிய பகுதியில் நோவற்ற சிறிய வீக்கம் முதலில் தென்படும். இது பின்னர் சிறிய புண்ணாக மாறுகிறது. தொடர்ந்து வலியற்ற இறப்பர் தன்மையான நிணநீர்க் கணுக்கள் குறிப்பிட்ட பகுதியிலும் பின் உடலெங்கும் தோன்றும். மேக நோய்ப் புண் மல வாசலை, வாயைச் சூழவுள்ள பகுதியிலும் ஆண்குறி, பெண்ணில் யோனி வழி, கருப்பைக் கழுத்து போன்ற அங்கங்களிலும் ஏற்படும்.

**துணையான /இரண்டாவது மேகநோய்**

முதன்மையான மேகநோய் தோன்றி 2-10 கிழமைகளின் பின் துணையான மேக நோயாக மாற்றமடைகிறது. நோய்க்கிருமி தொற்றிய பகுதியிலிருந்து குருதி மூலம் உடலெங்கும் பரவுகிறது. இதன்போது காய்ச்சல், தசை நோவு, தலையிடி, கைகால் நோவு போன்ற அறிகுறிகளும், தோல் அழற்சி, நிணநீர்க்கணு வீக்கம், அகவணிப்புண் போன்றவையும் வெளிக்காட்டப்படும்.

தோல் அழற்சியானது ஆரம்பத்தில் சிவப்புநிறமானபொட்டுகளும், தொடர்ந்து செப்பு நிறமான கணு வடிவிலான வீக்கமாகவும் விருத்தியடைகிறது. இவை பொதுவாக உள்ளங்கை, உள்ளங்கால் மற்றும் அக்குள் பகுதிகளில் காணப்படும். ஈரலிப்பான பகுதிகளில் பாலுண்ணி வடிவிலான கணுக்கள் தோன்றும்.

இதன் போது ஈரல் அழற்சி, என்பு அழற்சி(என்பு நோவு), கண்ணின் கருமணியழற்சி மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்களும் ஏற்படும். அத்துடன் விழித்திரை, சிறுநீரகம் போன்றவையும் பாதிக்கப்படலாம். முதன்மையான மற்றும் துணையான மேகநோய் தாமாகவே குணமானாலும் வீரியமான தொற்றுகையை ஏற்படுத்தக் கூடியன.

மேக நோயாளிகளில் 30 வீதமானோர் சிகிச்சையின்றித் தாமாகவே குணமடைவர். 30வீதமானோர் நோய் உறங்கு நிலைக்குச் செல்வர். மிகுதியானோர் மூன்றாவது மேகநோய்க்கு (Tertiary Syphilis) ஆளாவர். நோய் உறங்கு நிலைக்குட்பட்டோர் நோய் அறிகுறிகளைக் கொண்டிராதவர்களாகவும் ஆனால் நோய் காவிகளாகவும் தொ[illegible]

**மூன்றாவது மேகநோய் (Tertiary syphilis)**

★ இந்த நோய் நிலைமை நோய்க் கிருமி தொற்றி 3-5 வருடங்களின் பின் வெளிக்காட்டப்படும்.

★இதன் போது எதட்ச் எனப்படும் இழைய வளர்ச்சி, தோல், எலும்பு மற்றும் ஈரலில் ஏற்படுகிறது.

★தோலில் ஏற்படும் இழைய வளர்ச்சி பொருக்கு அல்லது புண் போன்று விருத்தியடையும். ஈற்றில் மாறி வடுக்களைத் தோற்றுவிக்கும். மேலும் இவை ஈரல், விதைகள், இரப்பை, நாக்கு போன்ற அங்கங்களையும் பாதிக்கின்றன.

**மேக நோயால் ஏற்படும் சிக்கல் நிலைகள் எவை?**

அ. இருதய மற்றும் குருதிக் கலன் பாதிப்பு-பொதுவாக நோய்க் கிருமி தொற்று ஏற்பட்டு அண்ணளவாக 20 வருடங்களின் பின் ஏற்படலாம். தொகுதிப் பெருநாடி அழற்சி, கல்சியம் படிதல், வால்வு பாதிப்பு, இருதயச் செயற்பாட்டுத்திறன் குறைவு, தொகுதிப்பெருநாடி வீக்கம் ஏற்பட்டு மரணத்துக்கு இட்டுச் செல்லலாம்.

ஆ.நரம்புப் பாதிப்பு-பொதுவாக அறிகுறியை வெளிக்காட்டுவதில்லை. மைய நரம்புகளின் செயலிழப்பு பாரிசவாதம், நரம்பு அழிவு ஏற்படலாம். ஞாபகமறதி, கவனக்குறைபாடு, வலிப்பு, பலவீனம், நடத்தலில் பாதிப்பு போன்ற பிரச்சினைகளும் ஏற்டலாம்.

**தாய்-சேய் பரவுகை பற்றிய விபரம்**

★நோய்த் தொற்றுகைக்குட்பட்ட கர்ப்பிணித்தாய் தனது சிசுவிற்கு 10-15 கர்ப்பகால வாரங்களில் சூல் வித்தகம் மூலம் நோய்க்கிருமி பரவக் காரணமாகின்றார்.

★நோய்த் தொற்றிற்குட்பட்ட சிசுக்களின் கருச்சிதைவு, சிசு இறப்பு பிரசவத்தின் போது இறப்பு, முதிராப் பிறப்பு, காரணமாகிறது.

★நோய்த் தொற்றிற்குட்பட்ட [illegible] ஈரல் [illegible]பாடு, என்பு அழற்சி, நரம்புப் பாதிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

**மேகநோயை எவ்வாறு கண்டறியலாம்?**

மேகநோயை குருதிப் பரிசோதனை, நுணுக்குக் காட்டிப் பரிசோதனை போன்றவை மூலம் கண்டறியலாம்.

**மேக நோய்க்கான சிகிச்சை**

மேக நோய்க்கான அறிகுறிகள் காணப்படுமிடத்து அல்லது மேக நோயாளிகளுடன் பாலுறவு வைத்திருப்பின் உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சை பெறுவதுடன் பாலுறவுப் பங்காளியையும் சிகிச்சைக்குட்படுத்த வேண்டும். இதன் மூலம் நோயினைக் குணப்படுத்துவதுடன் பரவுதலையும் தடுக்கலாம்.

கர்ப்பிணித் தாயை உடனடியாகச் சிகிச்சைக்குட்படுத்துவதால் சிசுவிற்கு நோய் பரவுவதையும் அதன் சிக்கல் நிலையையும் தவிர்க்கலாம். பிரசவத்தின் பின் சிசுவையும் பரிசோதனைக்குட்படுத்தி தகுந்த சிகிச்சையளிக்க வேண்டும்.

**மேகநோயை எவ்வாறு தடுக்கலாம்?**

★சகல மேக நோயாளிகளுக்கும் முறையாகக் சிகிச்சையளித்தல்.

★நோயாளியின் பாலியற் பங்காளிகளைக் கண்டறிந்து சிகிச்சைக்குட்படுத்தல்.

★ஆணுறை/பெண்ணுறை அணிந்து பாதுகாப்பான உடலுறவை மேற்கொள்ளல்.

★தனி மனித ஒழுக்க விழுமியங்களை இறுக்கமாகப் பேணுதல்.

★மேகநோய் தொர்டர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாக (ஏ9 வீதியில் இருந்து 50மீ தூரத்தில்) 48 பரப்பு சவன் கோட்டை மணற் காடு வளவு காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 548 0755 (35437)(5.6)

## பணிப்பெண் தேவை

வவுனியா நகரில் ஆசிரியர் வீட்டில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிக்கவும் சமையல் வேலைகள் தெரிந்தவருமான 30-50 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை. தங்குமிடம் உணவு இலவசம். மாதாந்த சம்பளம் 10,000/=

உடன் தொடர்பு: 077 480 1686, 077 613 9150

சனி,ஞாயிறு தவிர்ந்த நாள்களில் மாலை 5.00மணிக்கு பின்பு தொடர்பு கொள்ளவும்.

(26191)(5.6)

## கணக்குப் பதிதல்

வணிக நிறுவனங்களின் கணக்குகளை தங்கள் இடத்திற்கே வந்து உரிய நேரத்தில் செய்து தரப்படும்.

தொடர்பு: S.M ரூபன்

075 065 9459 (34791)(5.7.11)

## வேலையாள் தேவை

பான்சி தொழிலில் முன் அனுபவம் உள்ள பெண்கள் தேவைப்படுகின்றனர். பல்கலைக்கழக சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:077 774 8989, 077 987 9882 (34790)(6.11)

## நீங்காத நினைவில் வருடங்கள் 21



தோற்றம் 10.05.1926

மறைவு 15.03.1992

அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி:- 24-03-2013

எம்மை விட்டுப் பிரிந்து இருபத்தொரு
ஆண்டுகள் சென்றாலும்
கருணை உள்ளங் கொண்ட
எமது அன்புக்குரிய பப்பாவை
என்றும் மறவோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவில்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C7185)(2.6)

## முதலாம் வருட சிரார்த்ததின அழைப்பு



கடந்த (03.04.2012) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

தோற்றம் 10.07.1923 — அமரர் — மறைவு 03.04.2012

**கோபாலபிள்ளை பாக்கியலட்சுமி**


அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(34786)(6.11)

குடும்பத்தினர்.

## நெஞ்சம் நெகிழ்ந்த முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**சுதர்சினி ஸ்ரீராம் [ஆஷா]**

வசந்தம் மலர்ந்தது 05.11.1993
வாடிப்போனது 04.03.2012

மாண்புடன் நீ வாழ்ந்த இவ்வுலகில்
காண்பதெல்லாம் நீயாய் இருக்க
ஆண்டொன்று கடந்து போயினும்
மீண்டும் நீ வருவது எப்போது?
கண்மணியில் வாழுகின்றாய்!
புன்னகையில் வாட்டுகின்றாய்
தாங்காத வலியோடும் தூங்காத விழியோடும்
எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருப்பாய்

இன்று (24.03.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்.
புளியங்குளம் வீதி, நெடுங்கேணி, வவுனியா.

(34784)(2.6)

## பொதுக்கூட்டம்

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். (ஓ-400)




# QP மூலம் சவுதி அரேபியாவுக்கு பலதியா சுத்திகரிப்பாளர்கள்

## உடனடி வேலைவாய்ப்பு

**இலங்கையிலிருந்து பயணிக்க பணம்தேவையில்லை**

**சம்பளம் - SR 650/-** (1 SR = Rs.35/-)

பயணத்திற்கான செலவு மாத சம்பளத்திலிருந்து அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 38,500/- அறவிடப்படும்.

AL/1316 Advt:/04/13

**Terms & Conditions:**

- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 3 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபிய சட்டத்திற்கு உட்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்களுடன் உடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு: **0112681515**

**QP Employment (pvt) Ltd,**
No.06, Campbell Terrace, Punchi Borella, Colombo -10.
Tel: 0112 681212, 2684433, 2681515. e-mail: admin@qpjobsonline.com


# ஸ்ரீமத் ஆனந்த சடாக்ஷர குரு

சுமார் இற்றைக்கு எழுபதாண்டுகளுக்கு முன்பு குப்பிழான் வடக்கிலே சித்த புருஷரொருவர் வாழ்ந்து வந்துள்ளார். சரவணமுத்து எனும் இயற்பெயர் கொண்ட அச்சித்தர் ஏழாலை மேற்குச் சாதுசங்க மடாலய வளாகத்துக்கு அடிக்கடிபோய் வரும் வழக்கம் பூண்டிருந்தார். இயல்பான தெய்வீக ஈடுபாடும் அடியார் சேவை, குருசேவை என்பவற்றின் பலனும் தலயாத்திரை விருப்பினை விளைவித்தன.

தமிழக யாத்திரை புறப்பட்டு வழிபாடு செய்து வருங்காலத்தில் 'திருவொற்றியூர்' என்னும் தலத்திலே சிவராத்திரி நாளொன்றில் தங்கித் தவநிஷ்டை கூடி அசைவற்றிருந்தார். தூங்காமல் தூங்கி அவர் இருக்கும் போது ஒற்றித்தியாகரே அவருக்கு உபதேசமளித்துச் சென்றனர். அதன்பின்பு சுவாமிகள் ஊர் திரும்பி வந்து சிவகாமியம்மையின் திருவுருவை நாவல் மரத்தினடியிற் தாபித்து அல்லும் பகலும் அனவரதமும் மனமொழி மெய்களால் பூசித்து வந்தார். கைப்பொருள் யாவும் அன்னதானப் பணிக்காகி வந்தது.

அம்பாளின் அருள்விலாசம் சுவாமிகளுக்கு மிகவோங்கவோங்க சுவாமிகளை நாடி அடியார் கூட்டம் நாலாதிசைகளினின்றும் வரத் தொடங்கியது. தீராநோய்க்கு மருந்தாக திருநீற்றையே அள்ளிக்கொடுப்பார். நோய்கள் பகலவன் முன் பனிபோலாய்விடும்.

சுவாமிகளின் அருள்விலாச வீச்சுக்கு எடுத்துக்காட்டாக அவரின் சமாதி நிகழ்வு அமைந்துவிட்டது. சமாதி நிகழ்வு பற்றி தன் முதன்மைச் சிஷ்யராகிய ஸ்ரீமாணிக்கம்மாவுக்கும் பிறருக்கும் மூன்று தினங்களுக்கு முன்பே கூறிவைத்துள்ளார்.

சுவாமிகளைச் சமாதி வைத்த இடத்தில் நாட்டிய வாழைமரம் தானக திரும்பிநின்ற அற்புதத்தையும் பலரும் கூறி இன்புறுகின்றனர்.

சுவாமிகளின் சமாதிக் கோயில் இன்றும் சிவகாமியம்மன் ஆலய வலப்புறத்தில் சிவாலயமாக மிளிர்கின்றது.

''சித்தர்களும் ஞானிகளும் எரிக்கப்படுதல் ஆகாது. அவர்களைப் புதைத்து அதன் மேலே பலிபீடமோ, லிங்கமோ தாபித்துப் பூசிப்பதே முறையாகும். ஆயிரம் சற்பாத்திரராகிய பிராமணர்களுக்குத் தானம் கொடுப்பதும், ஆயிரம் கோயில்களைக் கட்டிக் கும்பாபிஷேகாதிகள் செய்வதும் ஞானிகளின் வழிபாட்டுக்கு ஈடாகமாட்டா'' என்கிறார் திருமூலர்.

**சைவசமயிகளே!**

ஞானிகளின் சமாதிக் கோயில்கள் எங்கெங்கு உள்ளனவோ அங்கங்கெல்லாம் தேடி ஓடிச் சென்று தரிசனம் செய்யுங்கள்.

குப்பிழான் சமாதிக் கோயிலுக்கும் ஒரு தரம் வந்து வழிபடுங்கள்.

*வாழ்வில் வளம் பெறலாம்.*

குறிப்பு: சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று (2013.03.24) ஞாயிற்றுக் கிழமை நிகழ்வுள்ளன.
அதிகாலை 5.30மணிமுதல் திருவாசக முற்றோதலும் நண்பகல் விஷேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நிகழவுள்ளன.
அடியார்கள் ஆசார சீலர்களாக வந்து பாடிப் பரவி அருள்பெற்று இருமைப்பேறும் பெறுக.
சிவசிவ

(34789)(5.6)

அருட்பணியில் S.காந்திமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 லட்சம் ரூபா பெறுமதியான வாகனங்கள் யாழில் திருட்டு

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் கார், 2 மோட்டார் சைக்கிள் என 15 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான வாகனங்கள்திருடப்பட்டுள்ளன.அவற்றில் விசாரணையின் மூலமாக 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கார் மீட்கப்பட்டது. சந்தேகத்தின் பேரில் திருநெல்வேலி மாரியம்மன் கோயிலடியைச் சேர்ந்த இராசையா கதிரமலை என்பவர் கைது செய்யப்பட்டு 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு செல்ல முற்பட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தின் முன்னால் மோட்டார் சைக்கிளை விட்டுச் சென்ற கதிர்வேலாயுத சுவாமி கோயிலடி புலோலியைச் சேர்ந்த க.சிவகுமார் 2 இலட்சம் ரூபா பெறுதியான மோட்டார் சைக்கிளைப் பறி கொடுத்தார்.

சுன்னாகம் மேற்கில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் தென் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கச்சேரியடியைச் சேர்ந்த ஒரு வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்தன தெரிவித்தார்.


## வகுப்புக்கள்

பட்டதாரி ஆசிரியரினால் பின் வரும் வகுப்புக்கள் ஏழாலை தெற்கில் ஆரம்பமாகவுள்ளன.
Maths, Physics, Chemistry, Spoken English, Tamil / English Medium.
RGads
Contact :
0776 314 454

## காணி விற்பனைக்கு

பெரியவிளான் வடசேரிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் சண்டிலிப்பாய் றோட்டில் 36 பரப்புக் காணி வற்றாத கிணற்றுடன் மூன்று அறை வீடும் 2 பாத்றூம் 30 காய்க்கும் தென்னை, 250 திராட்சைக் கன்றுகள் சகல பிரயோசனமும் அடங்கிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777758950

## O+ சிறுநீரகம் தேவை

முப்பத்தைந்து வயதுக்கு கீழ்ப்பட்ட நல்ல திடகாத்திரமானவரின் O+ சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தானம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:072 158 9474
(சி/7090)(5-6)


## கண்ணீர்க் காணிக்கை



துரைராஜா பாலசுப்பிரமணியம் (மணியண்ணை)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நவபவனம் குடும்பத்தினர். (34798)(6.11)


## STUDY IN CANADA, LONDON, FRANCE, ITALY, NEWZLAND & MALAYSIA

- GCE O/L பொதுவான தகைமை
- IELTS தேவையில்லை
- பகுதிநேர தொழிலுக்கு உத்தரவாதம்
- குறைந்த விலையில் தங்குமிட வசதி

Visit Visa வுக்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்

COURSES (Diploma, Degree&Masters)
Marketing
Banking & Finance
Accounting
Nursing
Computing
Beauty Culture
Hotel Management
Travel & Tourism

CSC
CANADIAN STUDY CENTER
19-1/1,Galle Road,Dehiwela
Tel: 0776503622, 0770261447, (c/7095)


## விண்ணப்பம் கோரல்

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக்கழகம், வட மாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மற்றும் யாழ் மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்ட போட்டி என்பனவற்றை விரைவில் நடத்தவுள்ளது. எனவே மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்கள் பதிவுகளை **சி.அருண், செயலாளர், சரஸ்வதி விளையாட்டுக்கழகம், கைதடி மேற்கு** என்ற முகவரியுடனோ அல்லது 0776128435 என்ற தொலைபேசியூடாகவோ இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளலாம்.

செயலாளர்,
சரஸ்வதி விளையாட்டுக் கழகம்,
கைதடி மேற்கு. (c/7191)(6.11)


## மாத வாடகைக்கு

Toyota Hilux (Double Cap)
மாத வாடகைக்கு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 071 497 7019 (34809)(5-6)

## வேலையாள்கள் தேவை

தனியார் வியாபார நிறுவனம் ஒன்றுக்கு ஆள் (ஆண்) தேவை.
தொடர்பு: 192, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
077 773 7072 (34799)(5-6)

## IELTS,SPOKEN ENGLISH வகுப்புக்கள்

நாளை 25.03.2013 ஆரம்பம்
தொடர்பு: 22, பண்டாரக்குளம் வீதி, நல்லூர்.
நேரம்: 4.30Pm 077 314 5675 (34803)(5-6)

## காணி விற்பனைக்கு

நெல்லியடி,முடக்காடு,2 பரப்புக் காணி (வீடு கட்ட உகந்தது) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 757 3924 (சி/7097)(5-6)

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் பாடசாலையில் இருந்து 150 யார் கொழும்புத்துறை வீதியில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். (சி/7098)(5-6) தொடர்பு: 0750736183

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுயிஸ் / ஜெர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
Saving Book - FD- Statement
விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.
077 4789289
077 9122334 (சி/7095)
FLEX Graphic
No. 52 Davidson Road, Colombo 04.
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 104 1736, 077 458 9670 (34796)(5-6)

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- 1969, அனுஷம் 3, Management Consultant, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1978, சுவாதி 4, Programme officer,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1980, சுவாதி, Doctor, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1981,திருவோணம் 4 Engineer,Srilanka, Vegetarian மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1986, கார்த்திகை 2, IT Prefessional,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1980, கேட்டை 2, Engineer, Srilanka, மணமகனுக்கு மணமகள் தேவை
- 1978, விசாகம் 2, Field officer, Spain PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1985, பூசம் 2, Business, German மணமகனுக்கு மணமகள் தேவை
- 1987, சதயம், Goldsmith, Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1977, உத்தரம் 4, Business,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1978, உத்தரம், Business, London PR மணமகனுக்கு மணமகள் தேவை
- 1978, பூரட்டாதி, Manager, Cyprus மணமகனுக்கு மணமகள் தேவை (சி/7099)

MMW
இல.05, ஸ்ரான்லி றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com


## பரீட்சை விண்ணப்பம்

உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான முதலாம் பருவகால பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பணிப்பாளர் எஸ். சகாயன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதால் அதற்கு முன்னர் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும்-

வார இறுதிநாட்களில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்களது பரீட்சைக்கட்டணங்களை 24, 30, 31 ஆம் திகதிகளில் நிதிக்கிளையில் செலுத்தமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-5)

## மரண அறிவித்தல்

### P.N. மரியநாயகம்

*(இளைப்பாறிய சிறாப்பர், ஊர்காவற்றுறை மேற்கு)*



ஊர்காவற்றுறை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொட்டாஞ்சேனை புளுமென்டல் தொடர்மாடி இல.B2/F20ஐ வசிப்பிடமாகவும் கொண்ட P.Nமரியநாயகம் 22.03.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முன்னாள் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனக் காசாளரும் (Shroff) காவலூர் புனித யாகப்பர் நலன்புரி சங்கத் தலைவரும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்க முன்னாள் பொருள்ளாளரும் ஆவார். அன்னார் றோஸ்மேரியின் அன்புக் கணவரும் பெல்சியா (ஜேர்மனி), யேசுரெட்னம் (நோர்வே), அனன்சியா (கனடா), யுதாரெட்ணம் (நோர்வே), அன்ரனி (Seevam Industries, Kotahena) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.03.2013 முதல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 27.03.2013 புதன்கிழமை மு.ப. 8 மணிக்கு பொரளை ஜெயரத்ன மலர்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 3 மணிக்கு கனத்தை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தொலைபேசி: 011 233 5553 (34808(6-)


## Study in MALAYSIA
## மலேசியாவில் உயர்கல்வி

மலேசிய அரசாங்கத்தினால் அங்கிகரிக்கபட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY
**Pastry Certificate Course - 1 Year**

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்றபின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகமை: கணிதம், ஆங்கிலம் உற்பட O/L சித்தி.

மார்ச் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

Call : 0777-767818

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
(சி/34803)

## பதவி வெற்றிடங்கள்

15 ஆண்டு காலமாக சேவை வழங்கி வரும் LM& A Insurance Brokers and Consultants (pvt) Ltd நிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கவுள்ள கிளை அலுவலகத்திற்கு பின் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

**Manager**
தகைமை- காப்புறுதி துறையில் 3 ஆண்டு அனுபவம்
வயது- 25-40
அனுகூலங்கள் - மாதச் சம்பளம், கொண்டு வரும் வியாபாரத்தின் மீது கமிஷன் தொகை EPF,ETFசுகாதாரக் காப்புறுதி மற்றும் பல

**Team Leader**
தகைமை- காப்புறுதி துறையில் அனுபவம்
அனுகூலங்கள் - மாதச் சம்பளம், கொண்டு வரும் வியாபாரத்தின் மீது கமிஷன் தொகை மற்றும் பல

தகுதியானவர்கள் தொலைபேசி இலக்கத்தையும் குறிப் பிட்டு தமது விண்ணப்பப் பத்திரங்களை 2013 ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

Managing Director
LM & A Insurance Brokers and Consultants (pvt) Ltd
24-1/1, Flower Road, Colombo-03.
தொலைபேசி- 011 256 4480, 011 555 0077, 011 555 7700 (c/7089)(6.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு உழைத்துக் கொடுத்த நாம் வறுமைக்குள் தள்ளப்பட்டுவிட்டோம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அரச அலுவலர்களுக்கு சம்பள உயர்வு, வரவு-செலவுத் திட்டம் மூலம் உயர்த்தப்படுகின்ற அதேநேரம், அரசுக்கு உழைத்து ஓய்வு பெற்றுள்ள எமக்குச் சொற்ப அதிகரிப்பையே அரசு வழங்கியுள்ளது.

அதனால் பகிரங்க ஓய்வூதியர் ஆகிய நாம் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். இன்றைய பணவீக்கம் எமது ஓய்வூதியத்தை செல்லாக் காசாக்கி விட்டது.

இவ்வாறு வலி. தென்மேற்கு பிரதேச செயலக பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் வை. செகரராஜசிங்கம் தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம், தலைவர் எம்.எக்ஸ். சர்வானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலகட்டத்தில் மனிதன் சாதாரணமாக வாழக்கூடிய நிலைமாறி, மாற்றத்துக்குள்ளாகி வாழ்வு மறுதலையாக மாறிவிட்டது.

இன்று பணவீக்கம், பொருளாதார பெருமந்தம், வேலையின்மை என்ற எதிர் மறையான பொருளாதார நெருக்கடியில்வாழ்ந்துவருகின்றோம்.

தாய்-தந்தை, குழந்தைகள் உட்பட 5பேர் கொண்ட சாதாரண குடும்பம் ஒன்றுக்கு மாதம் குறைந்தது 50 ஆயிரம் ரூபா கூட போதுமானதல்ல.

அந்த அளவுக்கு பணவீக்கம் அதிகரித்து பணம் பெறுமதியற்றதாகிவிட்டது. இந்த நிலையில் இன்று தொழிற் சங்கங்கள் சம்பள உயர்வு கோரித் தமது நியாயங்களை முன்வைத்து சம்பள உயர்வுகளைப்பெற்று வருகின்றன.

ஆனால் எம் போன்ற ஓய்வூதியர்கள் அரசினால் வழங்கப்படும் ஓய்வூதியத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றோம்.

எமக்குத் தற்போது வழங்கப்படுகின்ற "கோலா" என்றழைக்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி போதுமானதல்ல.

சொல்லப்போனால் வாழ்க்கைச் செலவு அடிப்படையில் வழங்கப்படும் வாழ்க் கைச் செலவுப்படியானது இரட்டிப்பாக வழங்கப்படவேண்டும்.

அதேவேளை அரச ஊழியர்களுக்கு வேதன உயர்வு வழங்கப்படும்போது பகிரங்க ஓய்வூதியர்களுக்கு சிறிய தொகையே அதிகரிக்கப்படு கின்றது.

எனவே இவ்வாறான நிலைகளை மாற்றி அமைக்க அரசும்-அரசு சார்ந்தஅதிகாரிகளும் நிலைமையைக் கருத்தில் எடுத்து செயற்படுத்தவேண்டும்.

இவ்வாறான ஒரு திட்டத்தின் மூலம் அரசுக்கு உழைத்துக் கொடுத்து அதனை இயங்க வைத்த நாம் இன்று மிகவும் கஷ்டப்படுகின்றோம்.

எனவே அரசுக்கு நாம் கூறும் விடயம் செல்லவேண்டும்.

இதன்மூலம் நாடு தழுவிய ஓய்வூதியர்கள் முழு நன்மை பெற்று சுபீட்சம் அடைவார்கள் என்ற முழு நம்பிக்கை எமக்கு உண்டு.

எனவே எமது வாழ்வாதாரத்தை உயர்த்த அரசு முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-50)

## ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ். யோகநாதன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் எஸ். பிரணவநாதனும் கலந்துகொள்வர்.

கூட்டத்தில் யாழ். மாவட்ட இணைப்பாளர் வீ.வீ. பொன்னம்பலம், வடமாகாண உள்ளுராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான தொழிற் சங்க இணைப்பாளர் ஏ. அன்ரனி ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ந-9)

## சேவைத் திட்டம் இன்று தீவகத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

தீவகம் லயன்ஸ் கிளப் பின் ஏற்பாட்டில் மாபெரும் சேவைத் திட்டம், இன்று ஞாயிற்றுக் கிழமை புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதியோருக்கு மதிப்பளித்தல், சலரோகம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு, சலரோக இரத்தப் பரிசோதனையும் மருந்து வழங்கலும், பொது மருத்துவ பரிசோதனையும் மருந்து வழங்கலும், மரம் நடுகையும் மரம் வழங்கலும் ஆகிய சேவைகள் வழங்கப்படவுள்ளன. (ந-13)

## "மன்னிக்கத் தெரிந்தவர்களே கடவுளின் முகத்தைக் காட்டுகின்றார்கள்

தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பார்கள். பாவமில்லாத நிலையே தூய்மையான நிலையாகும். கொலை செய்வது மட்டுமல்ல "தன் சகோதரனை முட்டாளே அல்லது அறிவிலியே என்பவன் எரிநரகத்துக்கு ஆளாவான். (மத்.5:22) என்று இயேசு குறிப்பிடுகின்றார். மற்றவர்களை மன்னியாதவர் நிலையும் இப்படியானதே என்பதை எம்மில் பலர் உணர்வதே இல்லை. மற்றவர்கள் மன்னியாதபோது நாம் கடவுளின் பிரசன்னத்தை உணரவே முடியாது.

முடக்குவாதக்காரனைக் குணமாக்கும்போது "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று கூறி அவனைக் குணமாக்கினார். பாவங்கள் நோய்களாகவும் இருக்கின்றன. சாபங்களாகவும் இருக்கின்றன. எம்முடைய ஏற்றுக்கொள்ளா நிலைகளே மற்ற வர்களை மன்னிக்க எம்மால் முடியாமல் இருக்கின்றது. மனம் வருந்தி இயேசுவிடம் வந்தவர்கள் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டார்கள். அதனால் அவர்களின் மனமாற்றம் அவர்களை இயேசுவின்




சீடர்களாக மாற்றியது மட்டுமல்ல. அவர்கள் இயேசுவுக்காகவே தமது உயிர்களையும் கொடுக்குமளவுக்குத் துணிவு பெற்றார்கள்.

மன்னிக்காமையின் நிழல்களே தொடர்கின் றன. மற்றவர்கள் மேல் குற்றம் சுமத்தி தாம் நீதிமான்களாக மதிப்பும் மரியாதையும் பெற்றிட முற்படுகின்றார்கள். பாவிகள் என்று ஏற்றுக்கொள்ளா நிலையே பாவம் பெருகிட ஏதுவாகவும் அமைகின்றது. நமதில்லாதவற்றில் ஆசை கொள்வதில்லை. பாவச் சார்புடைய செயல்கள் மலிந்து போயுள்ளன. மன்னிப்போ, இரக்கமோ மனித நேயச் செயல்களோ இன்னும் மறைந்து போய் விடவில்லை. "சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவார்கள்" கடவுளின் மக்களாகும் உரிமைப் பேற்றினை அடைந்திடவே தவக்காலம் எம்மை இறைவனை நோக்கி வழி நடத்தும் காலமாக அமைந்திருக்கின்றது. எமக்கு எதிராகச் செயற்படுபவர்களை நாமும் எதிர்த்துச் செயற்படாமல் மன்னிப்பின் நாயகனாம் இயேசு கற்றுத் தந்த சமாதான வழியை எம் வாழ்வில் கடைப்பிடிப்போம்.

ஒருவர் ஒருவரை மன்னித்து உண்மை அன்பில் நிலைத்து வாழுவோம்.

-அன்ரனி பீற்றர்- ஆசிரிய ஆலோசகர் (R.C)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 24

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வர வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விநாயகர் சனசமூக நிலையத்தின் பொருளாளர் பொ. கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராஜா, தென்மராட்சி முன்பள்ளி உதவிப்பணிப்பாளர் சு.பாக்கியராசா, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.சிவானந்தன், யாழ். புள்ளி விவரவியல் உத்தியோகத்தர் து.சிறிகரன், சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி த.சுபத்திராதேவி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர். (ந-13)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை

பங்குனி-12 திங்கட்கிழமை 25.03.2013
திதி: திரயோதசி பி.ப. 05.04 வரை
நட்சத்திரம்: மகம் மு.ப. 10.21 வரை
சுபநேரம்: 12.15- 01.45 வரை
இராகுகாலம்: 07.45- 09.15 வரை



**மேடம்:** நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளின் உடல்நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பெற்றோரின் ஆதரவு உண்டு. வாகனத்தைச் சீர்செய்வீர்கள்.



**இடபம்:** மன உறுதியுடன் செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.



**மிதுனம்:** புது முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கடகம்:** குடும்பத்தினர் சிலர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வார்கள். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**சிங்கம்:** மறைமுக விமர்சனங்களும், எதிர்காலம் குறித்த பயமும் வந்து நீங்கும். குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்து போகும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். விருந்தினர்களின் வருகையால் செலவினங்கள் அதிகரிக்கும்.



**கன்னி:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்து போவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள்.



**துலாம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடன் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகளை விரைந்து வசூலிப்பீர்கள்.



**விருச்சிகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள்.



**தனுசு:** அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் கொடுக்க வேண்டாம். பண விடயங்களில் சாக்குப்போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். தலைச்சுற்றல், முழங்கால் வலி வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்புக் குறையும்.



**மகரம்:** கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.



**கும்பம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. வருங்காலத் திட்டங்களைப்பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.



**மீனம்:** இன்றைய தினம் திறம்படச் செயல்பட்டு சில வேலைகளைக் முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். [illegible] வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | 6 | 9 | | |
| 7 | | | 9 | | 2 | | | 8 |
| | 9 | | | 1 | | 6 | | 7 |
| | 4 | 2 | | 7 | 1 | | 6 | |
| | 8 | 3 | | | | 7 | 4 | |
| | 7 | | 8 | 9 | | 3 | 1 | |
| 2 | | 9 | | 4 | | | 7 | |
| 4 | | | 6 | | 9 | | | 3 |
| | | 8 | 1 | | 7 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | 5 | 2 | 8 | 4 | 9 | 7 |
| 7 | 4 | 5 | 6 | 9 | 3 | 8 | 1 | 2 |
| 8 | 2 | 9 | 1 | 7 | 4 | 6 | 5 | 3 |
| 9 | 3 | 6 | 2 | 4 | 5 | 7 | 8 | 1 |
| 4 | 7 | 1 | 9 | 8 | 6 | 2 | 3 | 5 |
| 2 | 5 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 | 4 |
| 3 | 9 | 2 | 7 | 6 | 1 | 5 | 4 | 8 |
| 1 | 8 | 7 | 4 | 5 | 9 | 3 | 2 | 6 |
| 5 | 6 | 4 | 8 | 3 | 2 | 1 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# காசமற்ற தேசம் நோக்கி....

சோமசுந்தரம் ரூபதாஸ்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

1882 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் நாள் றொபேட் கொச் (Robert Koch) என்ற விஞ்ஞானி காச நோயை ஏற்படுத்தும் கிருமி மைக்கோ பக்ரீரியம் ரியூபகிலோசிஸ் (Mycoba cterium tuberculosis) என நுணுக்குக் காட்டியினால் கண்டறிந்து உலகுக்கு கூறிய தினமே உலக காச நோய்த் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதியில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் ஏழு பேருக்கு ஒருவர் காசநோயினால் மரணித்துக் கொண்டிருந்தனர்.


இற்றைக்கு ஏறத்தாழ 8000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்திய மம்மிகளில் (Mummies) இக் கிருமி காணப்பட்டது. இது காசநோய்க் கிருமியின் உலக காலநிலை மாற்றங்களுக்கும் தப்பி உயிர் வாழும் தன்மையைக் காட்டுகின்றது.

இலங்கையில் 2012 ஆம் ஆண்டு 9342 பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். இதே அளவு காச நோயாளிகள் 2013 ஆம் ஆண்டும் பாதிக்கப்படக்கூடிய நிகழ்தகவு உள்ளது.

யாழ். மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு 348 பேரும், 2010 ஆம் ஆண்டு 420 பேரும், 2011 ஆம் ஆண்டு 354 பேரும், 2012 ஆம் ஆண்டு 319 பேரும் காச நோயாளிகளாக இனங் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் போலவே இந்த வருடமும் உலக காசநோய் தினத்தின் தொனிப்பொருள் "எம் வாழ்நாளில் காசத்தினை இல்லாது செய்வோம்" என்பதே ஆகும். காசநோய்க் கட்டுப்பாட்டில் முக்கியமான செயற்பாடுகள் நோயாளிகளை இனங் காணல், நோயாளிகளுடன் தொடர்புடையவர்களைப் பரிசோதித்தல், மருந்துகளை இடையில் கைவிட்டவர்களை மீளவும் ஒழுங்காக மருந்தை எடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தல், காசநோய் அதிகம் உள்ள பிரதேசங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் விசேட கவனம் செலுத்தல், சலரோக நோயாளிகளில் காசநோயின் அறிகுறிகளை ஆராய்தல், முதியவர்களில் காசநோய் அறிகுறிகளை ஆராய்தல் என்பனவாகும். வேலை செய்யும் இடங்களில் காசநோய் அறிகுறிகளுக்கு விசேட மருத்துவ பரிசோதனையை ஊக்குவிக்க வேண்டும். காச நோயின் அறிகுறிகளாக தொடர்ச்சியாக 2 கிழமைகளுக்கு மேற்பட்ட இருமல், உடல் மெலிதல், மாலை நேரக் காய்ச்சல், சளியுடன் இரத்தம் வெளிவரல், உணவில் விருப்பம் இன்மை, இரவில் வியர்த்தல் என்பன காணப்படலாம். இத்தகைய அறிகுறியுடையோர் மருத்துவரை அணுகி, சளிப் பரிசோதனை மூலம் தமக்கு காசநோய்த் தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் மிக அவசியம்.

காசநோய், பரம்பரை நோயல்ல. சுவாசம் மூலம் பரவும் ஒரு தொற்று நோயாகும். காசநோய் முற்றாக,



இன்று உலக காசநோய் (24.03.2013) தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

இலகுவாகக் குணப்படுத்தக்கூடிய நோயாகும். காச நோய் வராது தடுக்கப்படக் கூடிய நோயாகும். காசநோய் தொடர்பான சமூக நுணுக்கத்தினை அகற்ற இவை விழிப்பூட்டப்பட வேண்டியவை.

உலகில் காச நோயை இல்லாது செய்வதற்கு 4 படிகளில் நாம் வெற்றி அடையவேண்டும். முதலாவதாக, காச நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கையைப் பூச்சியமாக்கல் வேண்டும். இரண்டாவதாக காசநோயினால் பாதிப்புக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கையைப் பூச்சியமாக்க வேண்டும். மூன்றாவதாக, காச நோயின் தாக்கத்துக்கு உள்ளாகுவோரை பூச்சியமாக்கல் வேண்டும். நான்காவதாக காசநோய்த் தொற்று ஏற்படுத்துபவர்களின் எண்ணிக்கையைப் பூச்சியமாக்கல்வேண்டும். காசநோய் தொடர்பான விழிப்புணர்வை நாம் பொது மக்களுக்கு வழங்கல் வேண் டும். மருத்துவர்களுக்கும் மருத்துவ சேவை வழங்குநர்களுக்கும் விசேடமாக வழங்கவேண்டும். இதன் மூலம் சர்வதேச தரத்திலான மருத்துவப் பராமரிப்பினை காசநோயாளிகளுக்கு நாம் வழங்க முடியும்.

உலக காசநோய்த் தினம் ஒவ்வோர் வருடமும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. ★

அரசாங்கத்தின் ஊடாக உடன் பயணம்

ஜப்பான், கொரியா, இத்தாலி, நாடுகளில் தொழில் செய்யும் வாய்ப்பு உள்ளது. உத்தரவாதத்துடன் பெற்றுத் தருவதற்கு இலவச ஆலோசனையும் குறைந்த செலவில் யூரோ, யுகே எந்த நாட்டு விசாவுக்கும் ஸ்பொன்சர் வங்கி ஸ்டேட்மெண்ட். இந்த சேவையைப் பெற

தொடர்பு:

0775977626

(C/7080)(10.8.7)

இந்தியாவில் உயர்கல்வி

ENGINEERING COURSES
- Aeronautical Engineering
- Electronics and Communication
- Mechanical Engineering
- Civil Engineering
- Information Technology
- Textiles Technology
- Textile Chemistry

SCIENCE DEGREES
- Bsc Microbiology
- BSc Biotechnology
- BSc Genetics
- BSc Nursing
- BSc Computer Science
- BSc Physiotherapy
- BSc Fashion and Apparel Design

❑ Bachelor of Computer Application (BCA), ❑ Business Management (BBM), ❑ Business Administration (BBA), ❑ Hotel Management (BHM), ❑ BA Journalism, ❑ Textiles and Fashion Designing, ❑ B.Com, ❑ BSc Maths,

ANNA ENGINEERING UNIVERSITY, BANGALORE UNIVERSITY, PERIYAR UNIVERSITY affiliated Colleges

* இந்தியாவில் சேலம், பெங்களூர் இல் உள்ள சிறந்த கல்லூரிகளில் அனுமதி.
* Engineering Courses 4 வருடம், மற்றய Degreeகள் 3 வருடங்கள்.
* எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்கின்றனர்.
* Degree ஐ பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் UK, CANADA, USA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு குடும்ப சகிதம் Permenant Residental Visa பெறுவதற்கான வாய்ப்புண்டு.


மார்ச் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

MBBS / MD
UKRAINE (யுக்கிரேன்) EUROPE

* LUGANSK STATE MEDICAL UNIVERSITY - UKRAINE
* Sri Lanka Medical Council இனால் அங்கிகரிக்கப்பட்டது.
* 6 வருட பாடநெறி. * GCE A/L Bio-2C + 1S தேவை
* எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 30க்கும்மேற்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் தற்பொழுது கல்வி கற்கின்றனர்.

Call: 0777 - 767 818
Scholars Information Centre, No. 01, Veverset Place, Colombo 06.

இலங்கையில் பற்களின் கூர்உணர்ச்சிக்கு எதிராகப்



போராடுவோம்

பற்களின் கூர்உணர்ச்சி என்பது நீங்கள் எண்ணுவதை விடவும் பாரதூரமான ஒன்றாக அமையலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

சூடான, குளிரான, புளிப்பான அல்லது இனிப்பான, ஏதேனும் ஒன்றை நீங்கள் உள்ளெடுக்கும் சமயத்தில் உங்களுடைய பற்களில் சிறிய நேரத்திற்கு ஏற்படுகின்ற கூரிய வலியே பற்களின் கூர் உணர்ச்சி எனப்படுகின்றது. பற்களில் கூர்உணர்ச்சி உள்ள போது கூரிய வலி ஏற்படுவதும், பின்னர் அற்றுப்போவதுமான நிலைமை காணப்படுகின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளாத பட்சத்தில் நிலைமை மோசமாக மாறலாம்.

உரிய காலத்தில் சிகிச்சையை மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து உங்களுடைய வாழ்வில் மோசமான பாதிப்பிற்கு முகங்கொடுக்க வேண்டாம்

பற்களின் கூர்உணர்ச்சிக்கு உரிய சிகிச்சையை மேற்கொள்வது மிக முக்கியமானது. உங்களுடைய பல்வைத்தியரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களையும், உரிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியத்திற்கான இச்செய்தியை உங்களுக்கு வழங்குவது இலங்கை பல் மருத்துவர்கள் சங்கம்

வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்பு - கிளக்ஸோஸ்மித்கிளைன்

SRI LANKA DENTAL ASSOCIATION


GSK GlaxoSmithKline

GREY

(சி/7088) (2,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
24-08-1942

மறைவு
23-02-2013

அமரர்

## சுப்பையா கேதீஸ்வரன்

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும் ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறிடுமா எம் துயரம்

அன்னாரின் பிரிவால் நாம் துயரமடைந்திருந்த போது பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (25.03.2013) திங்கட்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகளிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை.
தொடர்பு-0215684503 (34819)(8,16,14) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சண்முகக் குருக்கள் சாம்பசிவசர்மா (கண்ணன்)



நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த சண்முகக் குருக்கள் சாம்பசிவசர்மா (இளைப்பாறிய, முகாமையாளர், கமலா மோடி மண்டபம்)22.03.2013 வெள்ளிக்கிழமை சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகக் குருக்கள் மற்றும் சாரதாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மூர்த்தி ஐயர் - மங்களாம்பாள் தம்பதியரின் மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சாரதா, மதுசூதனன், பிரகாஷ் (ரவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீரங்கநாத ஐயர், கோமதி, மருதுளா ஆகியோரின் அன்பு மாமனும் கோபிராம், அனந்தராம், மாதவராம், ஷாத்விகா ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.03.2013 புதன்கிழமை சிட்னியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7306) (23- 14-16) தகவல்:
சோமசுந்தரசர்மா, பருத்தித்துறை. குடும்பத்தினர்.0061296369166

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து சிவபாலேந்திரன்

(சாரதி - பாலு)



வெளிச்சீமா,
அல்வாய்.

வரணி நாவற்காடு, குடமியனைப் பிறப்பிடமாகவும் வெளிச்சீமா அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவபாலேந்திரன் 22.03.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் தேவமலரின் அன்புக் கணவரும் பிரகாசினி, சிவரூபன், சுதர்சினி (CIC Agri Business pvt ltd, Jaffna) அன்புத் தந்தையும் செல்வராணி, சிவலோகநாயகி, சிவசோதி, சிவஈஸ்வரி, சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணபாலசிங்கத்தின் (கனடா) அன்பு மாமனும் இந்திராணி, காலஞ்சென்றவர்களான தவராசா, செல்வராசா, பாலசுப்பிரமணியம் (கிளி) மற்றும் உதயகுமாரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற இந்திரபாலன் மற்றும் பாலராணி (கனடா), பாலசுமதி (கனடா), இராசகுமார் (கனடா), பாலகுமார் (கனடா), பாலநளினி, தவகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும் பவராஜ் (கனடா), குருபரன் (கனடா), சுயந்தினி (கனடா) ஆகியோரின் மாமனும் நிகாஷன், லிலக்ஷன், சந்தோஷ் (கனடா), சாரங்கா (கனடா), கஜானி (கனடா), விதுஷன் (கனடா), றக்ஷிகன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.பிரபாகரன்,
ஆசிரியர் ஆலோசகர், (உளசமூக தலையீட்டு வழிபாட்டலும் ஆலோசனையும்)
பதுளை வலயக் கல்விக் காரியாலயம்



# சிறுவர் துஷ்பிரயோகமும் அதனைத் தடுப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு

இன்று இலங்கையில் தலைவிரித்தாடும் பல சமூகப் பிரச்சினைகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் பிரதான இடத்தை வகிக்கின்றது. அதிலும் பாடசாலைச் சிறுவர்களுக்கு ஏற்படும் இத்தகைய சம்பவங்கள் பெற்றோர்களை சிந்திக்க வைக்கின்றது.

பெண்களின் சுதந்திரத்திற்கான அமைப்பு அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் "இலங்கையில் தினமும் ஐந்து சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் இங்கு நடைபெறும் பல்வேறுபட்ட குற்றச் செயல்களின் பிரதான இலக்கு பெண்களும் சிறுவர்களும் என்று குறிப்பிட்டுள்ளதுடன் இந்த நிலைமைகள் இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைவதாக குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

கடந்த வருடத்தில் இலங்கையிலேயே மிக அதிகமான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் மற்றும் வன்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக உள்நாட்டு ஊடகங்களும் பொலிஸ் அறிக்கைகள் மூலமாகவும் அறிய முடிகின்றது. இவ்வறிக்கைகளின் படி கடந்த வருடம் சிறுவர் வன்புணர்வுகள் 1085 ஆகவும்? 1503 பாலியல் தொந்தரவு மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவாகியுள்ளன. புள்ளிவிவரங்களின்படி 758 சிறுவர்கள் பாலியல் தொந்தரவுகளுக்குள்ளாகிறாம்? 745 சிறுவர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும்? இவர்களில் ஒன்பது சம்பவங்கள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறிருக்க 22 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டும் 10 கொலை முயற்சிகளும் 247 தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தரப்புக்கள் குறிப்பிடுகின்றன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளது என இலங்கையின் இணையப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்கள் நிலைமையின் பாரதூரத்தன்மையை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. பாடசாலைகளை மையப்படுத்திய சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் நடந்த வண்ணம் உள்ளது என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. மிக அண்மையில் வடமாகாணத்தின் பிரபல மகளிர் பாடசாலையொன்றில் அப்பாடசாலையின் காவலாளியினால் மாணவி ஒருவர் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்குள்ளான சம்பவமும் பதிவாகியுள்ளது. இவை வெளியே தெரிந்த சம்பவங்களாக அமைய வெளியில் தெரியாமல் நடைபெறும் சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக மலையகப் பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது இரகசியமான விடயமல்ல. இத்தகையதொரு நிலைப் பின்னணியில் இந் நிலைமைகளைத் தடுப்பதில் பாடசாலைச் சமூகத்திற்கு பிரதான பங்குள்ளது என்பதை மறுக்க முடியாது.

பாடசாலையைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் மாணவர்களின் இரண்டாம் நிலைப் பெற்றோர்களாகவே கருதப்படுகின்றார்கள். இத்தகைய ஆசிரியர்கள் தம்மிடம் பேரும் எதிர்பார்ப்புடன் ஒப்படைக்கப்படும் மாணவர்களை மிகுந்த நேயத்துடனும் கரிசனையுடனும் கல்வி கற்பிப்பது மிகவும் அவசியமாகும். ஆசிரியரானவர் வெறுமனே புத்தகத்தை மாத்திரம் போதிப்பவராகவன்றி மாணவரின் நலனில் பெரிதும் அக்கறை செலுத்தும் நல்ல வழிகாட்டியாகவும் சிறந்த ஆலோசகராகவும் செயற்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய பணியில் ஈடுபடும் ஆசிரியர் பிள்ளையின் அனைத்து நடவடிக்கைகளையும் நன்கு அறிந்து கொள்ள முயல வேண்டும். ஆரம்பப் பிரிவு மாணவராயிருந்தாலும் இடைநிலை மற்றும் சிரேஷ்ட இடைநிலை மாணவராயிருந்தாலும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் தம்மிடம் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மாணவர் தொடர்பாகவும் அவர்களின் நலனில் கரிசனை கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

பாடசாலை மாணவர்கள் பல்வேறுபட்ட துஷ்பிரயோகத்திற்குள்ளாவதன் பிரதான காரணம் மாணவர்களுக்கு இது தொடர்பாக போதியளவிலான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளாமையாகும். பாடசாலையானது தமது மாணவருக்கு அவரவரின் வகுப்பு மட்டத்திற்கேற்ப பாடசாலையின் மாணவர் ஆலோசகருடன் இணைந்து பல்வேறுபட்ட துஷ்பிரயோகம் தொடர்பாக கலந்துரையாடல் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்வது அவசியமாகும். சில பாடசாலைகள் தமது மாணவருக்கு இத்தகைய நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் மாணவருக்கு ஏற்பட்ட பாதிப்பை விடவும் பாடசாலையின் பெயருக்கு எவ்வித களங்கமும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக இத்தகைய சம்பவங்களை மூடி மறைத்து விடும் சம்பவங்களும் நடைபெறத்தான் செய்கின்றன. இதனால் மாணவருக்கு ஏற்படும் பாதிப்பை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. இத்தகைய நிலை மாறி வந்த பின் தடுமாறுவதை விடவும் வருமுன் காப்பது சிறந்ததாகும்.

துஷ்பிரயோகத்திற்குள்ளாகும் மாணவர் தொடர்பாக ஆசிரியர்கள் மிகவும் இரகசியமான முறையில் மாணவருடன் தொடர்பைப் பேணிகுறித்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு ஏற்படக் கூடிய மனவடுவை தவிர்ப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும். அல்லாதுவிடில் மாணவர் தனக்கேற்படும் மனவடுவின் காரணமாக பாரிய உளநோய்க்குள்ளாகக் கூடிய ஆபத்தான நிலைமை ஏற்படலாம். மாணவரின் நிலைமைக்கு மாணவர் காரணமல்ல என்பதை தெளிவுபடுத்தி அவருக்கு நம்பிக்கை வழங்கி எதிர்காலத்தை தைரியமாக எதிர்நோக்கும் ஆற்றலை வளர்ப்பது ஆசிரியர்களின் இன்றியமையாத பொறுப்பாகும்.

பாடசாலையானது பொருத்தமான வள நபர்களைக் கொண்டு மாணவருக்கு நல்ல தொடுகை? தவறான தொடுகை தொடர்பான விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்குவதுடன் மாணவர்களை தவறான எண்ணத்துடன் அணுக முயலும் நபர்கள் தொடர்பாக எவ்வாறு செயற்படல் வேண்டும் என்பது தொடர்பான தெளிவுபடுத்தல்களை மேற்கோள்வது அவசியமாகும். இதற்காக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவற்றின் வெளியீடுகளைக் காட்சிப்படுத்தி மாணவர்களை வாசிக்கச் செய்யும் தெளிவுபடுத்தல்களை மேற்கோள்ளலாம்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பாடசாலையானது பெற்றோருக்கான தெளிவுபடுத்தல்களை மேற்கொள்வது அவசியமாகும். பாடசாலையானது வெறுமனே மாணவருக்கு கல்வியைப் போதிக்கும் கல்விச் சாலையாக மட்டுமன்றி பெற்றோர்களுக்கும் கல்வியறிவூட்டும் சமூக நிறுவனமாக செயற்படல் வேண்டும். பெரும்பாலான பெற்றோருக்கு இத்தகைய விடயங்கள் தொடர்பாக போதிய விளக்கமின்மையால் தமது பிள்ளைகளுக்கு இத்தகைய வன்கொடுமைகள் நடந்து முடியும் வரை தெரியாதிருப்பது கவலைக்குரியதாகும்.




பாடசாலை மாணவருக்கு இத்தகைய நிலைமை ஏற்படும் போது குறித்த வகுப்பாசிரியரோ? அதிபரோ உடனடியாக பாதிப்புக்குள்ளான மாணவரை உரிய வைத்திய ஆலோசனை, சிகிச்சைக்காக தமது பிரதேசத்தின் அரச பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுதல் அவசியமானதும் அவசரமானதும் பணியாகும். குறிப்பாக இத்தகைய சம்பவம் நடைபெற்றவுடன் மாணவர் அப்போதிருக்கும் நிலைமையிலேயே வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படல் வேண்டும். ஆடைகள் அதிகளவில் கிழிந்திருப்பின் மாணவரின் அந்தரங்கத்தைப் பேணக் கூடிய வகையிலான போர்வை அல்லது ஆடையை அணிவித்து அழைத்துச் செல்லல் வேண்டும்.. வீட்டில் அல்லது வெளியிடங்களில் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக அறிய வரும் போது சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மாணவனை அல்லது மாணவியை உடனடியாகவே வைத்திய ஆலோசனை, சிகிச்சைக்குட்படுத்த வழிப்படுத்துவது ஒவ்வொரு பாடசாலையின் அதிபர், ஆசிரியரின் தலையாய பொறுப்பாக அமைகின்றது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர் மேலும் பாதிக்கப்படும் நிலையை தவிர்க்கக் கூடியதாக இருப்பதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவரை உடனடியாவே சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரக் கூடியதாக இருக்கும்.

பாடசாலையானது தனது மாணவன் மாணவியை முழு நேரமும் தனது பிள்ளையாகவே கருதுதல் அவசியமாகும். பாடசாலைக்கு வெளியே நடைபெறும் சம்பவங்களுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது என்று விலகி விடாமல் எப்போதும் தமது பிள்ளைகளான மாணவர்களுக்கு இத்தகைய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்கான தவிர்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும். இதற்கு பாடசாலைச் சமூகமானது பெற்றுக் கொள்ளக் கூடிய அனைத்து வளங்களையும் பேற்று எமது பிள்ளைகளின் பாதுகாப்பான ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உறுதுணை புரிதல் அவசியமாகும்.

பாடசாலைகளில் மாணவர் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை சிறப்பாக முன்னெடுப்பதன் மூலம் மாணவரின் இத்தகைய பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வுகளைக் காண முடியும்.

பாலியல் துஷ்பிரயோகங்களை நிறைந்த அன்பும் அரவணைப்பும்? பாதுகாப்பும் கொண்ட குடும்பங்களின் மூலமாகவே சமூகத்தில் இடம் பெறும் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட பல்வேறுபட்ட சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க முடியும். அத்துடன் அரசு மற்றும் சமூக நலன்சார் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களான சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்கள், சமூக சேவை அமைப்புக்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, பொலிஸ், உள்ளூர் சமூகங்கள், பெற்றார்கள் ஆகியோரை இணைத்து அமைத்துக் கொண்ட வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலமாகவே இத்தகைய துஷ்பிரயோகங்களை தடுக்க முடியுமே தவிர அதிகரித்து வரும் இத்தகைய சமூக ஆபத்தினை ஒரு போதும் எவரினாலும் தனித்து கையாண்டு தீர்வுக் காண முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்



உயர்தர வகுப்புகளுக்கு வணிகம் மற்றும் பொருளியல் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையினால் செயலமர்வு ஒன்று அண்மையில் வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

கிளை முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மத்திய வங்கியும் பொருளாதாரமும் என்ற தலைப்பில் சிரேஷ்ட முகாமையாளர் பா.சிவதீபன் கருத்துரை நிகழ்த்தினார். [ம-5]





இந்து அபிவிருத்தித் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளுக்கு மாணவர்களுக்கான சீருடைகள், சுருதிப் பெட்டிகளை வழங்கும் நிகழ்வு நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்து அபிவிருத்தி உதவியாளர் திருமதி மா.அனந்தலட்சுமி சுருதிப் பெட்டியைக் கையளிக்கிறார். அருகில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரகதீஸ்வரன் அறநெறி உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி ஆகியோரும் உள்ளனர். [ம-7]



தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது பிரதம விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். [ம-253]



நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உபகரணப் பொதிகளை கழக அங்கத்தவர்களுக்கு வழங்குகின்றார். [ம-ரி]





இந்து தர்மாசிரியர்களுக்கான கருத்தரங்கு அண்மையில் யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் உரையாற்றுவதையும், மாவட்ட இந்து அபிவிருத்தி உதவியாளர்கள், விரிவுரையாளர்களையும் காணலாம். [எ-7]



யாழ். போதனா வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்திய அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நிகழ்வில் பங்கு பற்றியோர். [ம]



வேலணை பிரதேச சபையில் முப்பரிமாண நூலகக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன.

இதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த சி.மகேந்திரன் 'உள்ளூராட்சி நிர்வாகம்' எனும் தலைப்பில் உரையாற்றினார். விருந்தினர்கள் மேடையில் உள்ளனர். [ம-50]



யாழ். மாவட்ட சுவடைப்பந்தாட்டப் போட்டியில் தேசிய ரீதியில் வெற்றி பெற்றமைக்கு தேசிய இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் அண்மையில் மன்ற உதவிப் பணிப்பாளர் எஸ்.ஈஸ்வரராஜாவினால் பயிற்றுவிப்பாளர் சே.றமணனுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன. [ம-ரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிக் கொள்கையை மீறும் வகையில் செயற்படுபவர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு,மார்ச் 24

மொழிக் கொள்கைகள் மீறப்படும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மீண்டும் உறுதியளித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவனால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே இந்த உறுதிய ளிக்கப்பட்டுள்ளது.

மொழிக் கொள்கை மீறப்படுமாயின் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்ட போதும் அவை தொடர்ந்தும் மீறப்பட்டே வருகின்றன.

தமிழ் மொழி மூலப் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் பதவி உயர்வு தொடர்பான கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் மட்டுமே அனுப்பப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பாகப் பயனாளிகள் தமிழில் எழுதும் கடிதங்களுக்குச் சிங்கள மொழி மூலமே பதில் கிடைக்கின்றது. இது தமிழர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

எனவே இவ்வாறு மொழிக் கொள்கை மீறப்படுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா? சகல ஆவணங்களும் தமிழ் மொழி பெயர்ப்புடன் வழங்கப்படுமா? என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தார்.

பாடசாலை அதிபர்களுக்கு தனிச் சிங்களத்தில் அனுப்பப்படுமாயின் அவ்வா றான கடிதங்களை அரச கரும மொழிகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்தால் அதன் தமிழாக்கம் பெற வழி செய்யப்படும். அதேவேளை சம்ப ந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக் கப்படும்.

அதே வேளை ஊழியர் சேமலாப நிதி தொடர்பாகப் பயனாளிகளுக்கு அனுப்பப்படும் சகல பிரதிகளும் தமிழ்மொழி பெயர்ப்புடன் வழங்கப்பட வேண்டும் எனத் தொழில் ஆணையாளருக்கு உத்தரவிடப்பட் டுள்ளது.

இது தொடர்பாக தொழில்ஆணையாளர் நாயகத்துக்குத் தேசிய மொழிகள் ஆணைக்குழுத் தலைவரினால் கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அமைச்சினால் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலையில் வாய் மூலவிடைக்கான கேள்வியாக எழுப்பப்பட்ட இதற்கான பதில் சபாபீடத்தில் சமர்ப்பிக் கப்பட்டது. இந்தப் பதிலுடன் தொழில் ஆணை யாளருக்கும் மொழிகள் அமுலாக்க அதிகா ரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் நகலும் இணைக்கப்பட் டுள் ளன.

அதன் விவரம் பின்வருமாறு;

அரச கரும மொழிக் கொள் கையை நடை முறைப்படுத்துவது சம்பந்தமாக 2012.05.03 ஆம் திகதி காரியாலயத்தில் நடத்தப்பட்ட மொழி ஆய்வு மற்றும் அவதானிப்பும் முடிவுற்ற பின் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கீழ்க்காணும் பிரச்சினைகள் தெளிவாகியுள்ளன.

பொதுமக்களின் தகவலுக்காகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ள சில தனிப்பட்ட பெயர்ப் பலகைகள், பிரிவுகளுக்கான பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள் மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டிருக்காமை.

உங்கள் காரியாலயத்தின் சகல பெயர்ப் பலகைகளும் (நிறுவன பெயர்ப்பலகைகள், பதவிப் பெயர்ப்பலகைகள் உள்ளக மற்றும் வெளிப்புறப் பெயர்ப்பலகைகளும், வீதிப் பெயர்ப்பலகைகள் பிரிவுப் பெயர்ப் பலகைகள், வழிகாட்டல் பெயர்ப்பலகைகள் என்பன ) சரியான சொற்கள் மற்றும் சமமான எழுத்துக்களை பாவித்து முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்க வேண்டும். (அரச பொது நிர்வாக சுற் றறிக்கை இல. 22/91 ன் படி)

பொதுமக்களுக்கு வழங்கப்படும் சில படிவங்கள் அறிவுரைப் பத்திரங்கள் சிங்கள மொழியில் இருப்பது போலவே உங்கள் திணைக் களத்தின் பலவித பிரிவுகளினூடாக பொதுமக்களுக்கு அனுப்புவதற்கு தயார் நிலையி லுள்ள தயாரிக் கப்பட்டிருக்கும் படிவங்கள் சிங்கள மொழியில் மாத் திரம் தயாரித் திருத் தல்.

உங்கள் நிறுவனத்தினால் பொதுமக்களோடு செயற்படும் போது ஏதாவது எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் பாவிக்கப்படுகின்ற அல்லது வழங்குகின்ற சகல விண்ணப்பப் பத்திரங்களின் வெளியீடுகள், திட்டங்கள், உப விதிகள், கட்டளைகள், அறிவித்தல்கள், சுற்றறிக்கை மற்றும் படிவங்கள் என்பன ஆங்கில மொழி பெயர்ப்புடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்க வேண்டும். (அரச பொது நிர்வாக சுற்றறிக்கை இல: 22/91 ன்படி)

இவ்வாறு செயற்படும்போது உங்களுக்கு எற்படும் சிக்கல்களை பின்வரும் வழிகளில் தீர்க்கலாம்.

மொழி பெயர்ப்பாளர்கள் இல்லையெனின் தேவையான மொழி பெயர்ப்புக்காக

மொழி பெயர்ப்பாளரின் உதவியைப் பெறுவதற்காக பொது நிர்வாக சுற்றறிக்கை இல 12/2003 (1) ன் படி துண்டு முறையிலான கொடுப்பனவு அடிப்படையில் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பு தரவு பதிவேட்டில் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ள மொழி பெயர்ப்பாளர்களையோ அல்லது அரச கரும மொழிகள் திணைக் களத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப் பட்ட மொழி பெயர்ப்பாளர் குழுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மொழி பெயர்ப்பா ளர்களினூடாக மொழி பெயர்ப்புகளைச் செய்து கொள்ள முடியும்.

தற்போது இருக்கும் உத்தியோகத்தர்களின் மொழித் திறனை விருத்தி செய்வதற்காக பயிற்சி கற்கை நெறியினை ஆரம்பிக்க அவசியமாயின் இல 155/5 A காசல் வீதி, கொழும்பு 08 ல் தேசிய மொழிகள் மற்றும் கல்விப் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பிக்க முடியும்.

அரச கரும மொழித் தேர்ச்சி பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் சேவையைச் சரிவர பெற்றுக் கொள்வதுடன் அவர்களுக்கு குறித்த கடமையினை வழங்க முடியும் (உ-ம்) விசாரணைகளுக்காக இரண்டாம் மொழி தெரிந்த உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல்)

அரச கரும மொழிக் கொள்கை நடை முறைப்படுத்துவது சம்பந்தமாக இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவ தற்காக எதிர்வரும் 06 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கு தாங்கள் எடுக்கும் எதிர்கால நடவடிக்கை சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்புமாறும் தயவுடன் அறியத்தருகின்றேன். உங்கள் நிறுவனத்தினால் எடுத்த/ எடுக்கின்ற அந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆணைக்குழு தொடர்ந்து அவதானிக்கும் என்பதனையும் மேலும் தெரிவிக்கின்றேன்.- என்றுள்ளது. (த-2)


## பதவி வெற்றிடம்

* கணக்கு வேலைகளில் முன்அனுபவம் உள்ள பெண்பிள்ளை ஒருவர் தேவை.
* ஆங்கில அறிவு உள்ளராக இருத்தல் வேண்டும்
* சிட்டை எழுதுநர் (பெண்) ஆங்கில அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
* பான்சி கடைக்கு முன்அனுபவம் உள்ள ஆண்கள் தேவை.
* அரச உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்ற காசாளர் ஒருவர் தேவை.

தங்கள் சுயவிவரக்கோவையுடன் நாளை (25.03.2013) நேரில் வரவும்.
சமுகம் தரும் நேரம்-10.00-4.00
இல 25 நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம்.
021-222 2084



ஓம் சக்தி!
குருவடி சரணம்! திருவடி சரணம்!
சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் மேல் மருவத்தூர்-யாழ் வழிபாட்டு நிலையம்
பங்குனி மாத பௌர்ணமி பூஜை நிகழ்வு

அன்னை ஆதிபராசக்தியின் பௌர்ணமிப் பூஜை நிகழ்வை யாழ்.வழிபாட்டு நிலையமான நல்லூர், திவ்ய ஜீவன சங்கம், சட்டநாதர் கோயிலடி எனும் முகவரியில் பங்குனி மாத பௌர்ணமிப் பூஜை வழிபாட்டுடன் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (26.03.2013) காலை 9.00 மணியளவில் ஆரம்பிக்க குருவருள் கைகூடியுள்ளது. அதனைத்தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு மாத பௌர்ணமிப்பூஜை வழிபாடுகளும் அதே இடத்தில் நடைபெற உள்ளன.

ஆர்வலர்கள் அன்னையின் வழிபாடுகளில் இணைந்து தொண்டாற்றி அன்னையின் அருளாசியைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.( குறிப்பு மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்)

இவண்,
அன்னையின் பணியில் செவ்வாடைத் தொண்டர்கள்,
யாழ்.வழிபாட்டு நிலையம்.
தொடர்பு- 0718565662, 0775332394

## மருந்தாளர் தேவை



யாழ். புறநகர் மருந்தகத்துக்கு மருந்தாளர் (Pharmacist) தேவை. ஓய்வுபெற்ற அல்லது வெளிவாரி மருந்தாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0752430276


## கண்ணீர் அஞ்சலி

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளராக யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும்
**செல்வி சதாசிவம் கோதை**
அவர்களின் அன்புத்தந்தை
**பொன்னையா சதாசிவம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட இணைப்பாளர்கள்
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா,
மன்னார், முல்லைத்தீவு,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.


## வான் விற்பனைக்கு

மகேந்திரா படி வான் விற்பனைக்கு
சுந்தரம் ஸ்ரோர்ஸ்,
சீனியர் லேன் கலட்டி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

அரசடி வீதி திருநெல்வேலியில் அமைதியான சூழலில் அழகிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு-0772366357

## Toyota Vitz கார் விற்பனைக்கு

WP-KM XXXX, 2007 Model 8 Airbags, Alloy Wheels, R.camera, Winker mirror
தொடர்புகளுக்கு-0772366357


## அறைகள் வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு மிக அருகில் அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக் கழக மாணவர்கள் அல்லது உத்தி யோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0718565662

## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு (1½ பரப்பு) விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 710 0884
(33760) (5.6.7)

## கணினி மலிவு விற்பனை



D/core 3.2 GHZ,
19"LED MONITOR
250GB HDD,
2GB RAM, DVD WR, SPEAKER
FREE-4GB PENDRIVE / WEB CAMARA
39,500/=
SKY COMPUTER
162, MAIN STREET, JAFFNA.
0750698608, 0212224865
(15ஆவது வருட சேவையில்)
(c/731)

advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசரத்தினம்



கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிட மாகவும், மட்டுவில் தெற்கு சாவகச் சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் நேற்று (23.03.2013) சனிக்கிழமை காலமா னார்.

அன்னார் பொன்னையா-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதி யின் அன்புக் கணவரும், முத்துக் குமாரு, விஜயரத்தினம், பரமேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் அன் புச் சகோதரனும், சிவரூபி, சிவரூபன், மோகனரூபி, ஜெயரூபன், புஸ்பரூபன், ஜிந்துரூபி, கீதாரூபி, தயாரூபன் ஆகியோரின் அன் புத் தந்தையும், பாலகணேசமூர்த்தி, தயாளன், மதன் ஆகியோரின் அன்பு மாமனும், நிந்துஜன், நிந்துஜா ஆகியோரின்அன்பு பாட் டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.03.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில்தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிகரனின் சிறப்பான பந்து வீச்சு சென். ஜோன்சை வென்றது சென்றல்



யாழ்.மத்திய கல்லூரிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் ஆகியது.

நேற்று சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான ஆட்டத்தில் முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித் தலைவர் அமிர்தயன் முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார். அதற்கமைய முதல் துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 46.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிறோஜ் 34 ஓட்டங்களையும் அலன்ராஜ் 41 ஓட்டங்களையும் யூலியஸ் கலிஸ்ரன் 17 ஓட்டங்களையும் டார்வின் 38 ஓட்டங்களையும் நிரோஜன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 32 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் பிரிசங்கர் 4.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் ஞானமிதன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு ஓட்டங்களையும் லோகதீஸ்வர் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் பிரிந்தாபன் 4 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும் யதுசன் 10 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

208 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். ஜோன் கல்லூரி அணி 44.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காஸ்கர் 45 ஓட்டங்களையும் அமிர்தயன் 38 ஓட்டங்களையும், துவாரக சீலன் 25 ஓட்டங்களையும் , சயன் 38 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 21 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் ஹரிகரன் 8.2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் சௌமிதரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும் நிரூபன் 7 பந்தப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் அலன்ராஜ் பத்துப் பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 1 இலக்கினையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக யாழ்.மத்திய கல்லூரி வீரன் ஹரிகரன் தெரிவு செய்யப்பட்டார்.(23)

## இன்றைய ஆட்டங்கள்



கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7மணி

கைதடி துர்க்கா அணி எதிர் கைதடி சரஸ்வதி வி.க

★ ★ ★

இளையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பி.ப. 4.மணி

வதிரி பொமர்ஸ் வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க.

★ ★ ★

யாழ் சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வீ.டி ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஜொலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இறுதியாட்டத்துக்கு முன்னதாக மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ந-23-253 -288-400)

## விக்ரோறியன்ஸ் வி.க வெற்றி

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடை பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இறுதிப் போட்டியில் சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டக்கழக அணி மோதிக்கொண்டது.

3 சுற்றுக்களைக்கொண்ட முதல் இரண்டு நேர் சுற்றுக்களை சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி பெரும் போராட்டத்தின் மத்தியில் 25 : 21, 25 :23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (86)

# ஹாட்லி, கலட்டி றோ.க கபடியில் வென்று சம்பியன்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கபடிச் சுற்றுப் போட்டியில் 15 வயதுப்பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் கலட்டி றோ.க.வித்தியாலயமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன. முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் கலட்டி றோ.க வித்தியாலயமும், வேலாயுதம் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

வடமராட்சி பிரதேசத்தில் இடம்பெறுகின்ற கபடிச் சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றும் இந்த இரு அணிகளும் பல தடவைகள் மாறி மாறி வெற்றிக் கனியைச் சுவைத்துள்ளன.

இதனால் இந்தப்போட்டி மிகவும் இறுக்கமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இருந்த போதும் வேலாயுதம் மகாவித்தியாலய அணியினர் ஓரளவு எதிர்ப்பையே காட்டினர். இதனால் 61:31 என்ற புள்ளி அடிப்படையில் கலட்டி றோ.க.த. வித்தியாலயம் வெற்றிவாகை சூடியது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், வேலாயதம் மகாவித்தியாலயமும் மோதின. இதில் ஹாட்லிக் கல்லூரி அணி 36-22 என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தை கலட்டி றோ.க.த.வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (400)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியினர். (86)

## வெற்றி பெற்ற அணிகள்

வவுனியா கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் நடத்தப்பட்ட எல்லே சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம்- வவுனியா இந்துக் கல்லூரி

இரண்டாமிடம்- கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்

மூன்றாமிடம் - பூந்தோட்டம் மகாவித்தியாலயம்

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம்- இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி

இரண்டாமிடம்- பூவரசங்குளம் மகாவித்தியாலயம்

மூன்றாமிடம் வவுனியா இந்துக் கல்லூரி (த-400)

## போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 57 ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியிலான 'செற்-அப்' முறையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினையும் யாழ். மாவட்ட ரீதியாலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது. எனவே மேற்படி போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் அஜிதனிடம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (த-23-288)

# கரைச்சிக் கோட்டத்தில் சாதித்த பாடசாலைகள்

கிளிநொச்சி கரைச்சி கோட்ட பாடசாலைகளுக்கான பெரு விளையாட்டுப்போட்டியில் ஆண்களுக்கான மென்பந்து போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

முதலாமிடம்- கிளிநொச்சி மத்திய கால்லூரி இரண்டாமிடம்- கிளிநொச்சி மகா வித்தியாலயம் மூன்றாமிடம் - இராமநாதபுரம் மகாவித்தியாலம்

சதுரங்க போட்டி 15 வயது பிரிவு

முதலாமிடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி இரண்டாமிடம்- கிளிநொச்சி மகா வித்தியாலயம் மூன்றாமிடம் வட்டக்கச்சி மகா வித்தியாலயம்

**19 வயதுப் பிரிவில்**

முதலாமிடம்- கிளிநொச்சி மகாவித்தியாலயம் இரண்டாமிடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி மூன்றாமிடம் வட்டக்கச்சி மகாவித்தியாலயம்

**பூப்பந்தாட்ட போட்டி 15 வயதுப் பிரிவு**

முதலாமிடம் -கிளிநொச்சி இந்துக்கல்லூரி இரண்டாமிடம்- கனகபுரம் மகாவித்தியாலயம் மூன்றாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலம்

**19 வயதுப் பிரிவு**

முதலாமிடம்- கிளிநொச்சி மகாவித்தியாலயம் இரண்டாமிடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி மூன்றாமிடம்- கனகபுரம் மகாவித்தியாலம்

**கரம் போட்டியில் 15 வயதுப் பிரிவு**

முதலாமிடம்- கிளிநொச்சி இந்துக் கல்லூரி இரண்டாமிடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி மூன்மிடம்- கனகபுரம் மகாவித்தியாலம்

**19 வயதுப் பிரிவில்**

முதலாமிடம்-கிளிநொச்சி இந்துக் கல்லூரி இரண்டாமிடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி மூன்றாமிடம் - கனகபுரம் மகாவித்தியாலம் . (400)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிங்கங்களிடம் சிக்கிய வங்கப்புலிகள்

திலகரட்ண டில்ஷானின் அதிரடிச் சதமும், குமார் சங்ககராவின் சிறப்பான இணைப்பாட்டமும் கை கொடுக்க இலங்கை அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை முதலாவது ஆட்டத்தில் வீழ்த்தியது. பங்களாதேஷ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் பொறுப்புணர்ந்து ஆடிப் பெற்றுக் கொடுத்த சதமும் வீணானது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 2 டெஸ்ட் ஆட்டங்கள், 3 ஒரு நாள் ஆட்டங்கள், ஓர் 'ரி-20' ஆட்டம் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முன்னதாக இடம்பெற்ற டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி இழந்தது.

இந்த நிலையில் முதலாவது ஒரு நாள் ஆட்டம் அம்பாந்தோட்டை சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

அதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணி 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் ஒரு முனையில் நிலைத்திருந்து அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். மறுமுனையில் பங்களாதேஷின் இலக்குகள் சீரான




வரிசையில் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தன.

மத்திய வரிசையில் களமிறங்கிய நஷ்ஒர் ஹஒஸைன், அதிரடியாக வெளுத்துக்கட்ட இலங்கையின் பந்து வீச்சுக்கு திண்டாடத் தொடங்கியது. மறுமுனையில் கலக்கிய தமிம் 129 பந்துகளில் சதம் கடந்து கலக்கினார். இறுதியில் அவர் 112 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் அதிரடியில் அசத்திய நஷ்ஒர் இறுதிவரை வெளுத்துக்கட்டி 59 பந்துகளில் 73 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்து வீச்சில் இலங்கை அணிசார்பில் மலிங்க, மத்தியூஸ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி களமிறங்குவதற்கு முன்பதாக மைதானத்தில் மின்சார பிரச்சினை காரணமாக மின் விளக்குகள் ஒளிரவில்லை. இதனால் ஆட்டம் தடைப்பட்டது. பின்னர் ஆட்டம் 41 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக்கு வெற்றியிலக்காக 238 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

பெரேரா, டில்ஷான் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. இந்த ஜோடி ஆரம்பத்திலிருந்தே அடித்தாடியது. இவர்களின் அதிரடியில் பங்களாதேஷ் பந்து வீச்சாளர்கள் நொந்து நூலாகினர்.

டில்ஷான் 32 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்த இலங்கை அணி 64 பந்துகளில் 100 ஓட்டங்களை முதலாவது இலக்கு இணைப்புக்காக கடந்தது.

அதிரடியாக ஆடிய பெரேரா 35 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து களமிறங்கிய சங்ககார , டில்ஷானுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை முன்னெடுத்தார். டில்ஷான் 93 பந்துகளில் தனது 15 ஆவது சதத்தை கடந்தார். மறுமுனையில் சங்கா அரைச்சதம் கடந்தார்.

வெற்றியை நெருங்கும் இறுதிக் கணத்தில் சங்கா 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் இலங்கை அணி 35.4 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக சதம் கடந்த டில்ஷான் தெரிவு செய்யப்பட்டார். (400)







# ஆஸியும் சுழலில் கலக்குகின்றது







ஆஸ்திரேலியாவின் நாதன் லியான் சுழலில் ட்ட ஓட்டங்களைப்பெறமுடியாது திணறுகிறது இந்திய அணி.

இந்திய– ஆஸ்திரேலிய அணிகள் பங்குபற்றும் 4வது டெஸ்ட்போட்டி நேற்றுமுன்தினம் டெல்லியில் ஆரம்பமாகியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி அஸ்வினின் சுழலில் சிக்கி ஓட்டம் எதனையும் பெறமுடியாது திக்குமுக்காடினர். இதனால் முதலாம் நாள் ஆட்டத்தின் நிறைவில் 8 விக்கட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது ஆஸ்திரேலியா அணி.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை சிடிலும், பற்றிசனும் தொடர்ந்தனர். முதல்நாள் ஆட்ட நேர இறுதியில் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த சிடில் டெஸ்ட் அரங்கில் தனது முதலாவது அரைச்சதத்தைப் பெற்றதுடன் மேலும் 51 ஓட்டங்களைப் பெற்றவேளை அஸ்வினின் சுழலில் சிக்கி தனது இலக்கைப் பறிகொடுத்தார். இதன் பின்னர் களம்புகுந்த ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறியதால் 262 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலியாவின் முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

அந்த அணியின் துடுப்பாட்டம் சார்பாக எட்கோவற் 38 ஓட்டங்களையும் ஹியூயிஸ் 45 ஓட்டங்களையும்,சமித் 46 ஓட்டங்களையும் பீற்றர் சிடில்51 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சுச் சார்பாக அஸ்வின் 5 இலக்குகளையும், ஜடேஜா, இர்சாந் சர்மா, ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் பிரெக்கன் ஓஜா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் அதிரடியாக ஆடினாலும் பின்னர் நாதன்லியானின் சுழலில் சிக்கி ஓட்டங்களைக் குவிக்கமுடியாது திணறியது.

கடந்த போட்டியில் அதிரடியாக ஆடிய தவான் காயம் காரணமாக இந்தப் போட்டியில் பங்குபற்றவில்லை. அவருக்குப் பதிலாக முரளி விஜயுடன் தொடக்க ஆட்டக்காரராக களம்புகுந்த புஜாரா ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்தார்.

இவர்கள் இருவரும் சிறப்பாக ஆடி அரைச்சதம் கடந்தனர். இவர்கள் இருவரும் ஆரம்ப இலக்குக்காக 108 ஓட்டங்களைப் பெற்று பலமான ஓர் அடித்தளத்தை இட்டுக் கொடுத்தனர்.

இதன் பின்னர் இவர்களின் ஆட்டமிழப்பை அடுத்து இந்திய அணி ஆட்டம் காணத்தொடங்கியது. விஜய் முரளி 57 ஓட்டங்களையும் புஜாரா 52 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ஒரு பக்கம் இலக்குகள் சரிந்த போதும் பின்வரிசை ஆட்டக்காரர்களின் அசத்தலான ஆட்டத்தில் இந்திய அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது.

சச்சின் டெண்டுக்கர் 32 ஓட்டங்களையும், டோனி 24 ஓட்டங்களையும் ரவீந்திர ஜடேஜா 43 ஓடங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். இலக்குகள் சீராக வீழ்த்தப்பட்டபோதும் ஜடேஜா நிதானமான ஆட்டத்தின் மூலம் இந்திய அணியை வீழ்ச்சியில் இருந்து மீட்டார்.

நேற்றைய இரண்டாம் நாள் நிறைவில் இந்திய அணி 8 இலக்குகளை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இரண்டாம்நாள் நிறைவுக்கு வந்தது. களத்தில் புவனேஸ் குமார் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சுச் சார்பாக நாதன் லியான் 5இலக்குகளையும் பற்றிசன் ,பீற்றர்சிடில் மற்றும் மேக்கிஸ்வெல் ஆகியோர் தலா ஓர் இலக்குகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும். (400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GERMAN, SWISS

மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன.
German institute, 10 Palaly Road, Jaffna.
T.P: 0771604823 (34764)(8.6)

## கார் விற்பனைக்கு

18 - XXXX
தொடரிலக்கமுடைய
NISSAN Palsure
கார் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771169182

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

GCE(O/L) தகமை போதுமானது

April/ May Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## 5 கற்கைநெறிகளை

கற்கைநெறிக்கட்டணம் இன்றி கற்கலாம்
Hardware & Networking, DTP, Web Design
Sinhalam, Internet & email

கல்வியங்காட்டில் மட்டும்
Qualified Lectures panel, 12 Years Experience
243, Adiyapatham Road

**MCAI CAMPUS**
Supported by Jaffna Computer Society

## காணி விற்பனைக்கு

நல்ல சூழலில் 383/15 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்திலுள்ள 1¾ பரப்புக்கு 2 குளி குறைவாய் உள்ள காணி இருபக்க மதிலுடனும், சகல ஆவணங்களுடனும் உடன் விற்பனைக்கு உண்டு.
T.P- 0777704457, 0755546000
**யாழ்ப்பாணம்.** (34735)

## AVG ANTI VIRUS

இலங்கையில் முதன்முறையாக மிகவும் குறைந்த கட்டணத்தில் AVG ANTI VIRUS (5 years-Full PROTECTION) மற்றும் WIN-8 உங்கள் இடத்துக்கு வந்து செய்து தரப்படும்.
T.P: 0772328391

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111



## R. J அழுக்கலை நிலையம்

[குளிரூட்டப்பட்ட வசதியுடன்]

புதுவருடத்தை முன்னிட்டு 30% Offer.

மணப்பெண் அலங்காரம், (f)பேசியல், கெயார்ஸ்ரைல்ஸ், சாறிவேக்ஸ், கேக்ஜசிங், தலைமுடி சுருட்டுதல், அயன் செய்தல் போன்ற வசதியுடன்

**அனுபவம் மிக்க வேலையாள் தொடர்பு கொள்ளவும்.**
111/2, பிறவுண் றோட், கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல-0776471194
இணை நிறுவனம்: ஆஷா அழகு நிலையம்
பிறவுண் றோட், கலட்டி, யாழ்ப்பாணம்.

## Banking CBF, Chartered கற்கை நெறிகளுக்கான Spectra Skills இன் மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

**Banking CBF**
A/L
3A Passess 40% Discount
2A Pasess 30% Discount
1A Pass 20% Discount
மற்றவர்களிற்கு 10% Discount

முடிவு திகதி- ஏப்ரல் 5ஆம் திகதி 2013

**Special offer for Bank Staff -**
50% CBF Course Fee refund!
If you continue in DBF Classes in our Centre

**Chartered A/L**
3A Passes 20% Discount
2A Passes 15% Discount
1A Pass 10% Discount
மற்றவர்களுக்கு 5% Discount (34757)

தொடர்புகளுக்கு-
spectra skills
19, Stanley Road, Jaffna.
Tel: 0212221422, 0212221423

## BIT Semester 2, 4, 6 மற்றும் Project வகுப்புகள்

- 2007 இல் இருந்து Supervisor(40 Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- 2012 இல் சென்ற 12வரில் 11பேர் pass, 1வர் திருத்திய project

இல:28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796
Classes From 23.03.2013: Sat & Sun 8am-9pm, Mon to Fri 4.30pm-9pm
இதுவரை BIT Complete செய்தோர் (under my Supervision, Subject and Project classes)
P.Asoktha, J.Satheechan, P.Kobikrishna, N.Vipushany, R.Naresh, M.Kohulan, T.Logini, N.Sarathadevi, A.Thirumakal, Liyoni xavier, S.Vinotha, S.Gobikrishna, B.Suhirtha, V.jacitha, T.Sinthuja, K.Kalaivani, N.Aingaresan, R.Thiruchchenthooran, S.Mathusoothan, S.Balananthini, N.Kajan, ......

## கடை வாடகைக்கு

1 தளம் 1500 சதுர அடி கொண்ட 3 மாடி கடை தனியாகவோ பிரித்தோ வாடகைக்கு கொடுக்கப்படும். (கஸ்தூரியார் வீதியில் உள்ள செம்மாதெரு பள்ளிவாசல் அருகில்) அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
T.P - 0777324648
0777324637

## A/L வரலாறு

கடந்த வருடமும் மாவட்ட தேசிய மட்டங்களில் மாணவர்கள் முன்னணிப் பெறுபேறுகள் பெறுவதற்கு வழிகாட்டிய உங்கள் ஆசிரியர்
M. பத்மன் M.A (History)
அவர்களின் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்

| | | |
|---|---|---|
| D.M.I யாழ்நகர் | புகழ் கல்வி நிலையம் மானிப்பாய் | உயர்கலைக்கல்லூரி குளப்பிட்டி |

- A/L 2013 மற்றும் Day Class அனுமதிகள் இம்மாத இறுதியுடன் நிறுத்தப்படும்.
- A/L 2014 மற்றும் A/L 2015 மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படும். (34721)(8.6)

## Study - Work - Live Abroad



Australia, UK, U.S.A, New Zealand, Canada Swiss, Germany, France, Cyprus, Malta, Russia, Ukraine, Malaysia, Singapore


- # Top Ranked Universities
- # Entry with G.C.E O/L or G.C.E A/L
- # IELTS Not required **
- # Free Accommodation **
- # Full Scholarships Available **
- # Free IELTS Classes **
- # Credit Transfer to year 2 / 3 available
- # Sponsorships Available
- # Low University fee for Europe

Admissions Open for Next intake 2013

** Conditions Apply

iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060
www.icssrilanka.com

HIGH QUALITY PRESTIGE WORLDWIDE RECOGNITION
ரஷ்யாவில் மருத்துவக் கல்வி




## Study Medicine in RUSSIA

உலகெங்கும் உள்ள 200 நாடுகளில் 165 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளி நாட்டு மாணவர்கள் ரஷ்யாவில் மருத்துவக் கல்வியைத் தெரிவு செய்யக் காரணம் வேலைவாய்ப்பு மற்றும் உலக புகழ்மிக்க பல்கலைக்கழகம் என்பதால்

Study in RUSSIA RACUS

**அரச பல்கலைக்கழகங்கள்**

- Astrakhan State Medical Academy
- Saint-Petersburg State I.P.Pavlov Medical University
- People's Friendship University of Russia (Moscow)

AVERAGE TUITION FEES PER YEAR: 4200 – 6000 USD

ENROL FOR 2013 INTAKE

☑ பொது மருத்துவம் - ஆங்கில மொழி
☑ இலங்கை மருத்துவக் கல்லூரியாலும் உலக சுகாதார அமைப்பாலும் அங்கீகாரம் பெற்றது.

RACUS Representative Office in Sri Lanka. ICBT Study Abroad
502A, R.A டி மெல் மாவத்தை கொழும்பு 03 (British Council இக்கு முன்பாக)
Telephone: (+94) 114 36 25 25; 0773631138
E-mail: aarthi@icbtcampus.edu.lk
WWW.ICBT.LK WWW.EDURUSSIA.RU

## தற்போது யாழ் நகரில்...

edexcel
UNIVERSITY OF WOLVERHAMPTON

சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்

UK Degree in
- Marketing
- Business Management
- Human Resources Management

- பகுதி / முழு நேர பாடநெறியை தொடரும் வாய்ப்பு
- உங்கள் தொழில் தகைமையை கூட்டிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பு
- இலகு தவணைக் கட்டண முறைமை
- பட்டப்படிப்பு வரை யாழ்ப்பாணத்திலேயே நிறைவு செய்ய முடியும்
- நவீன கற்றல் சூழலில் கற்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு



www.bcas.lk
ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைகளில் Writing, Speaking, Reading, Listening என்பவை ...
Excellent Teachers' Panel & Individual Attention

### Diploma in English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### Spoken English With Grammar-Quick Learning Course (1½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

### Advanced Diploma in English (4 Months)

- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகைமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரியாக விளங்கிக்கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

### IELTS Academic / General

Duration : (2½ Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

### A1 Exam-Sponsor/Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

### B1 Exam-Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன்

Duration : 2 Months

### Young Learners for English (YLE)

(வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.
- British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March 15ஆம் திகதிக்கு முன் பதியவும்.
- பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May 8ஆம் திகதிகளில் நடைபெறும்.

Batch I - 25.03.2013 Batch II - 30.03.2013 Batch III - 01.04.2013 Batch IV - 06.04.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**Jaffna Branch:** No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
**Vavuniya Branch:** No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



மாணவர் போராட்டமும் இந்திய அரசியல்வாதிகளும்

04

வெறியோடும் வேட்கையோடும் போராட வேண்டும்



21



05

தமிழுக்கு வந்த நிலை



திருவிழா முடிந்துவிட்டது எல்லோரும் திரும்பிவிட்டனர்!

21

தூய்மைவாதம் சுயங்களின் வைக மாதிரி



13


# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் | 24 மார்ச் 2013 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்துநான்கு


சென்னையிலிருந்து
ஜெரா

# தகிப்பின் தொடர் கணங்கள்



மெரீனா கரையில் திரண்ட மாணவர் எழுச்சி

மெரீனா, சென்னையிலுள்ள மிகப் பரந்த கடற்கரை. உலகளவில் மிகப் பிரபலமானது. அழகும், அசிங்கமும் ஒருசேர அறிமுகமாகும். காதலர்களின் கொண்டாட்ட நிலம். தமிழ் சினிமா காட்டாத அத்தனை காதல் முகங்களையும், காதலின் முகங்களையும் இங்கு பார்க்க முடியும்.

மாலை 3 மணிக்குப் பின் அது காதலர்கள் மைதானம். பல்வேறு மாநில, நாட்டு காதலர்களையும் அணைத்துக்கொள்ளும் மெரீனா, காலை 10 மணிவரைக்கும் ஒரு மைதானமாயிருக்கும். நடப்போர், ஓடுவோர், உடற்பயிற்சியில் ஈடுபடுவோர் எனக் கூட்டம் அலைமோதும்.

10 மணியிலிருந்து 3 மணி வரைக்கும் அளவுக்கதிகமான அந்த மணற்காட்டுக்குள் மனிதர்கள் தடமிடுவதில்லை. வெயில். அங்குமட்டும் அப்படியொரு வெயில் வீசும். காற்றிலும் அனல் இருக்கும். அந்த நேரத்தில் அங்கு நடப்பது தீ மிதிப்பதற்குச் சமமானது. ஆகவே அந்தப் பொழுது மெரீனாவில் அச்சம் மிகுந்தது. கடற்கரையை யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை.

ஆனால், அன்று, அந்த வெயில் பேயாட்டப்பொழுதில் என்றுமே மெரீனா கண்டிராத கூட்டம் அங்கு உணர்வேறி நின்றது. எண்ணிக்கையில் அடங்காத தலைகள். தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம் அவர்கள் படையெடுத்திருந்தனர்.

அழுக்கும், அலங்கோலமும், தூக்கமின்மையும் அந்த இளையவர்களின் பயணக் களைப்பை அம்பலப்படுத்திக் கொண்டிருந்தது. பலருக்கு அதுவே மெரீனாவில் வைத்த முதல் தடமாயிருந்தது. அப்போதுதான் சென்னையை அறிமுகமாகிக் கொண்ட கிராமத்துப் பையன்களும்கூட அதில் இருந்தனர்.

பல கல்லூரிகளின் மாணவர்களும் அங்கு கூடியிருந்தனர். கூடிக் கொண்டிருந்தனர். ஒளிப்படக் கருவிகளைக் காவியோர் எப்படியாவது முழுத் தலைகளையும் அடக்கி ஒரு படம் எடுத்துவிடுவதற்காக உயரங்களை நாடிக் கொண்டிருந்தனர்.

நடக்கவே முடியாத கொதிக்கும் மணல்தரையில் அவர்கள் அமர்ந்திருந்தனர். அந்த இடத்தில் அமர்ந்திருக்கச் சொல்லியோ, கத்திக்கதறி விடுதலைக் கலவரம் செய்யச் சொல்லியோ யாரும் அவர்களைக் கட்டாயப்படுத்தியிருக்கவில்லை. காசுகொடுத்திருக்கவும் இல்லை. தன்னெழுச்சியான உணர்வால் உந்தப்பட்ட கூட்டத்தினராதலினாலேயே அது சாத்தியமாயிருந்தது.

அனைவர் கைகளிலும் பாலச்சந்திரனதும், அவனது அப்பாவினதும் படங்கள். தமிழீழம், விடுதலை, ஐ.நா, அமெரிக்கா, [illegible], கொலை, [illegible] என்ற சொற்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர். உடையாக அணிந்திருந்தனர்.

கண்களில் வெற்றிக்கும், தோல்விக்கும் இடையிலான அந்தர உணர்வு தெறித்துக் கொண்டிருந்து. ஏனெனில் அவர்கள் வெயிலோடும், பசியோடும் போராடிக் கொண்டிருக்கும் அந்தத் தருணத்தில்தான், புதுடில்லியிலும், ஜெனீவாவிலும் இறுதிக்கு முதலிலான [illegible] மாற்றங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

தமது கோரிக்கைகளில் அரைவாசியாவது தீர்மானம் எடுக்கும் 'ஏசி' அறைகளின் சொகுசுக் காதுகளுக்குப் போகும் என்ற நம்பிக்கையில் துடித்துக் கொண்டிருந்தனர்.

தமது போராட்டத்தில் எவ்வித அரசியல் அடையாளங்களும் வந்துவிடக் கூடாது என்பதற்காக அரசியல் கலந்த யாரையும் மெரீனாவுக்கு அழைக்கவும் இல்லை. பேசவிடவும் இல்லை. வைகோவும், அவரது கட்சியினரும், இன்னும்

(02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகிப்பின் தொடர் கணங்கள்

''தமிழீழம் இல்லையேல் தனித்தமிழ் நாடு'' என்ற கோரிக்கை பரவலடைந்திருக்கின்றது. தொலைக்காட்சியில் தோன்றும் ஒவ்வொரு மாணவனும் தமிழகமும், தமிழக மக்களும் இந்தியாவில் இருந்து புறக்கணிக்கப்படுவதாகச் சொல்லுகிறான். எங்களைப் பிரிந்து செல்லத் தூண்டுகின்றீர்கள் என்கிறான். ஆக, ஈழ விடுதலைப் போராட்டம் தமிழர் வாழும் எங்காவது ஒரு தேசத்தில் சாத்தியமாகும் காலத்தேவை எழுந்துள்ளது; அதற்கான ஏது நிலைகளும் இன்னொரு தலைமுறையினர் மத்தியில் உருவாகி வருகின்றது

*(முதலாம் ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பல ஈழ ஆதரவுக் கட்சிகளும் உடனுக்குடன் திருப்பியனுப்பப்பட்டனர். தமது கொள்கையிலிருந்து எதையும் அவர்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் இது மாணவர் போராட்டம். அதற்குள் அரசியல் இல்லை என்பதை அடிக்கடி நிரூபிக்க வேண்டிய தேவையிருந்தது. ஊடகங்களும், சூழ்ச்சிகளோடு காத்திருந்த அரசியல் கட்சிகளும் எப்படியாவது குழப்பியடிக்க அலைந்தன. மாணவர்களின் உறுதி அதற்கு வாய்ப்பைத் தரவில்லை.

சமநேரத்தில், முற்றுகைப் போராட்டங்களையும் மாணவர்கள் முன்னெடுத்தனர். ஐ.நா. தீர்மானம் வெளியாவதற்கு முதல்நாள் தொடங்கி அதிக வீரியத்துடன் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. மாணவர்களுக்கு ஆதரவாக பொதுமக்களும் ஆங்காங்கே உண்ணாவிரதப் போராட்டங்களைத் தொடக்கியிருந்தார்கள். இறுதிக் கட்டத்திலாவது தீர்மானத்தில் ஏதாவது மாற்றங்கள் கொண்டுவர இந்தியா முன்வர வேண்டும் என்பது அனைவரின் கோரிக்கையாகவும் இருந்தது. ஆனால் அன்றிரவே மத்திய அரசு தன் முடிவைத் தெளிவாக அறிவித்துவிட்டது.

ஜெனீவாத் தீர்மானத்தில் அமெரிக்கா வென்றது. ஆனாலும் மாணவர்கள் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. முன்னர் இருந்த வேகம் இப்போது குறைந்துவிட்டதாகப் பலரும் சொல்கிறார்கள். ஆனாலும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

**அடுத்து என்ன?**

மாணவர்களின் போராட்டத்தை தன்னெழுச்சியானது என்றே பலரும் குறிப்பிடுகின்றனர். உண்மையும் அதுவே. மாணவர்களாகத் தெருவுக்கு வந்தார்கள். போராடினார்கள். ஆனால் வென்றார்களா? இவ்வளவு திரண்டும் என்ன மாற்றத்தை நிகழ்த்த முடிந்தது? வெற்றுக் கோசங்களும், பசியும், வியர்வையும் மட்டும்தானா? இந்தக் கேள்விகள் உருவாகிக் கொண்டிருக்கையில் போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன என்ற கேள்வி எழுந்து நிற்கின்றது. இந்தக் கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் மாணவர்கள் இதற்கான காரணத்தை கண்டுபிடிக்கவும், அதனை திருத்திக் கொள்ளவும் தவறவில்லை. அதற்கான பணியில் தற்போது தீவிரமாகியிருக்கின்றனர்.

போராட்டத்தில் இறங்கிய ஒவ்வொரு மாணவனும் வெவ்வேறுபட்ட அரசியல் புலம் கொண்டவர்கள். பெரும்பாலான மாணவர்கள் ஏதாவது ஒரு அரசியல் கட்சியின் ஆதரவைத் தழுவியவர்களாக இருக்கின்றனர்.

கல்லூரி மட்டங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் கொண்டியங்கும் கட்சிப் பின்னணி வெளிப்படுகின்றது. தாம் சார்ந்த கட்சியை இதில் அடையாளப் படுத்திக் கொள்ள முனைகின்றனர். இதனால் கருத்து மோதல்களும், சிதைவுகளும், கோவித்துக் கொண்டு போதல்களும் தாராளமாக நடந்தன.

எல்லாம் விடுத்து மெரீனா போன்ற பொது இடத்துக்கு போராட்டம் வரும் போதும், முற்றுகை போன்றவற்றில் ஈடுபடும்போதும் கட்சிச் சாயம் மாயமாகிவிடுகின்றது. ''மாணவர்கள்'' என்ற பொது அடையாளத்தை தாங்கிப் போராடுகின்றனர். அங்கு எந்தக் கட்சிக்கும் இடமற்றுப் போகின்றது. மாணவர் கையில் எடுத்திருக்கும் அரசியலைத் தவிர வேறெதுவும் அங்கு பேசமுடியாது. மீறிப் பேசினால் ''தமிழ் நாட்டு மாணவர் கவனிப்பு'' கிடைக்கின்றது. வைகோவுக்கும், பழ. நெடுமாறனுக்குமேகூட அங்கு இடமில்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு எந்த அரசியல் தலைமைத்துவத்தின் தாங்கலும் இல்லாது போராடவந்தமை, ஜெனீவா முடிவுக்குப் பின்னர் என்ன செய்வது என்ற கேள்விக்கான விடையைத் காண்பதில் சிரமத்தை உண்டுபண்ணியிருப்பதாக மாணவர்கள் தெரிவித்திருக்கின்றனர். போராட்டத்தை தொடங்கும்போது அவர்களிடம் தெளிவான திட்டமிருக்கவில்லை. லொயோலா கல்லூரி உண்ணாவிரதத்துடன் அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படும் என்ற முடிவோடுதான் களத்தில் இறங்கினர். ஆனால் 3ஆம் நாள் அது வேறுவடிவம் பெற்றது. உண்ணாவிரதம் பரவலடைந்தது. அடுத்த 6ஆம் நாள் மாணவர்கள் இந்தியா முழுவதும் தெருவில் இறங்கிப் போராடினார்கள். போராடும் பலருக்கு ஏன் போராடுகின்றோம் என்றே தெரியவில்லை. போராட்டம் குறித்து ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கருத்து. போராட்டம் விரிவுபெற்றுக்கொண்டே போனது. யாரிடமும் ஒருங்கிணைப்பு, திட்டமிடல் எதுவுமில்லை.

இப்போதுதான் அதனை உணர்ந்திருக்கின்றனர். இயலுமானவரை அனைவரும் கலந்து பேசுகையில் சில பூசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் தமது போராட்ட ஓர்மத்தை அவர்கள் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. அவரவர் கொண்டிருக்கும் கொள்கை அடிப்படையில் பிரதானமாக மூன்று இயக்கங்களாக பிரிந்து போராடுவதாக முடிவெடுத்திருக்கின்றனர். இதிலும் தனித்தனியே போராடாமல் ஒரு இயக்கம் போராடினால், ஏனைய இரண்டு அமைப்புக்களும் அதிலும் கலந்து ஆதரவாயிருக்கும் என உறுதியெடுத்திருக்கின்றனர். அவர்கள் ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளுடன் புதியனவற்றையும் இணைத்திருக்கின்றனர். அதன்படி ஏனைய மாநிலங்களுக்கும் போராட்டங்களை விஸ்தரிப்பு செய்வதோடு, தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் ஒரு இடத்தில் திரண்டு பிரமாண்டமான மாணவ எழுச்சியை உலகுக்குக் காட்டப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

**விளைவு என்ன?**

''தமிழீழம் இல்லையேல் தனித்தமிழ் நாடு'' என்ற கோரிக்கை பரவலடைந்திருக்கின்றது. தொலைக்காட்சியில் தோன்றும் ஒவ்வொரு மாணவனும் தமிழகமும், தமிழக மக்களும் இந்தியாவில் இருந்து புறக்கணிக்கப்படுவதாகச் சொல்லுகிறான். எங்களைப் பிரிந்து செல்லத் தூண்டுகின்றீர்கள் என்கிறான். ஆக, ஈழ விடுதலைப் போராட்டம் தமிழர் வாழும் எங்காவது ஒரு தேசத்தில் சாத்தியமாகும் காலத்தேவை எழுந்துள்ளது; அதற்கான ஏது நிலைகளும் இன்னொரு தலைமுறையினர் மத்தியில் உருவாகி வருகின்றது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கின்றது.

இந்தப் போராட்டத்துடன் விடுதலைப் புலிகள் பற்றிய தமிழக அபிப்பிராயத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது விடுதலைப் புலிகள், ஈழப் போராட்டம் குறித்த சாதகமான மனநிலையைத் தமிழகம் கடந்து பிற மாநிலங்களிலும் உருவாக்கிச் சென்றுள்ளது. இதுவரை பிரபாகரன் படமோ, தமிழீழப் படமோ பத்திரிகைகளில் மட்டும்தான் பிரசுரமாகித் தொங்கிக்கொண்டிருக்கும். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவருமே தடைசெய்யப்பட்டிருந்தவரின் படங்களைத் தாங்கியிருந்தனர்.

மாணவர் மத்தியில் ஓரளவுக்காவது அரசியல்மயம் நிகழ்ந்திருக்கின்றது. பொது அரசியல் ஒழுங்கிலிருந்து விலகியிருந்த மாணவர்கள் மைய அரசியல் ஓட்டத்துக்கு இழுத்துவரப்பட்டிருக்கின்றனர். 1965ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பின்னர் மாணவர்கள் அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்தமை இதுவே முதல்தடவை என்கின்றனர் நோக்கர்கள். ஆகவே இனிவரும் காலங்களில் தமிழகம் எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சினைக்கு எதிராகவும் மாணவர் குரல் ஓங்கியொலிக்கும் எனலாம். அதற்காகவே அவர்கள் கலைந்துபோகாமல் அமைப்பாகியிருக்கின்றனர்.

ஆயினும் இதற்குத் தடைகளும் தயாராகிவிட்டன. இதுவரை பொறுத்திருந்த ஜெயலலிதா பொலிஸாருக்கு ஆணை வழங்கிவிட்டார் எனச் சொல்லப்படுகின்றது. அதாவது போராடும் மாணவர்கள் இனி காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்படுவார்கள்.

கட்டுரை தயாராகிக் கொண்டிருக்கும் பொழுதிலும் ஒரு மாணவன் தாக்கப்பட்டு, படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான். போராட்டத்தை ஒருங்கிணைக்கும் மாணவர்கள், மாணவத் தலைவர்களைத் தனியாகக் 'கவனிக்க' தமிழக புலனாய்வுத் துறையினர் தயாராகிவிட்டனர். கல்லூரிகளிலிருந்து, அவர்கள் யாருடன் தொடர்புபட்டிருக்கின்றனர் உள்ளிட்ட விடயங்கள் திரட்டப்படுகின்றன. கவனிப்புக்குள்ளாகும் மாணவர்கள் எந்தவித அரச பதவியையும் பெற முடியாது என்று மிரட்டப்படுகின்றனர்.

இவ்வளவுக்கு மத்தியிலும் போராடுவீர்களா? என்று கேட்டால், ''எம்மால் முடியும்'' என்கின்றனர் தமிழக மாணவர்கள். இளம் கன்று பயமறியாது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா: ஆட்டம் சமநிலை

நிலாந்தன்

"பலம் வாய்ந்த நாடுகளும் கடன்களைப் பெற்றே நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்கின்றன. அம்பாந்தோட்டை லுகமவேரவிலிருந்து ஊவாவுக்கு உப்பு ஏற்றிச் சென்ற உப்பு வண்டிச் சில்லுகளின் சுவடுகள் இருந்த வீதிகள் இன்று காப்பெற் செய்யப்பட்டுள்ளன. காட்டு யானைகளின் அட்டகாசம் மட்டுமின்றி குடிதண்ணீர்கூட இல்லாத பிரதேசமாகவே இந்தப் பிரதேசம் இருந்தது. இன்று அந்த நிலை மாற்றப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் நிலவும் காலநிலையைத் தாங்கிக் கொண்டால் எதனையும் தாங்கிக் கொள்ளலாம்."

இப்படி சொல்லியிருப்பவர் இலங்கையின் அரசுத் தலைவர். அண்மையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மத்தளவில் புதிய சர்வதேச விமான நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

ஜெனிவாவில் அனைத்துலக சமூகம் இலங்கைத் தீவை தனிமைப்படுத்துவதற்கான எத்தனங்களை மேற்கொண்டிருந்த ஒரு பின்னணியில் இலங்கைத் தீவின் இரண்டாவது அனைத்துலக கதவை அரசுத் தலைவர் மத்தளவில் திறந்து வைத்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் மத்தள விமான நிலையம் அமைந்திருக்கின்றது. இரண்டுமே சீனாவின் காசில் கட்டி எழுப்பப்பட்டவைதான். எந்தக் காரணத்தை முன்னிட்டு மேற்கு நாடுகள் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைகின்றனவோ அதே காரணத்தை மேலும் பலப்படுத்தும் ஆகப்பிந்திய ஒரு நடவடிக்கையே மத்தள விமான நிலையம் ஆயின், ஜெனிவாவில் தன்னை சுற்றிவளைக்க முற்பட்ட மேற்கு நாடுகளுக்கு இலங்கை அரசு தெரிவிக்க முயன்ற செய்திதான் என்ன?

இந்தப் பிரதேசத்தின் கால நிலையைத் தாங்கிக் கொண்டால் எதையும் தாங்கிக் கொள்ளலாம் என்று அரசுத் தலைவர் கூறுகிறார். இது இந்த அரசின் இயல்பைக் காட்டுகிறது. இந்த அரசானது இதற்கு முன்னிருந்த அரசுகளைக் காட்டிலும் அதிக பட்சம் தேசியத் தன்மை மிக்கது. மிகக் குறைந்தளவே சர்வதேசத் தன்மை பெற்றது. அல்லது ஆகக் கூடிய பட்சம் ஆசிய மையச் சிந்தனையுடையது என்று சொல்லலாம். ஜெனிவாவில் பெருமளவிற்கு ஆசிய நாடுகளே அரசை ஆதரித்து வாக்களித்தன. அதனுடைய ஆசிய மையச் சிந்தனையே ஜெனிவாத் தீர்மானத்தின் கடுமையைக் குறைக்கவும் உதவியது.

ஜெனிவாவில் இந்த அரசு தோற்கடிக்கப்படும் என்பது முன்கூட்டியே தெரிந்த ஒரு முடிவுதான். எனவே, அரசின் முன் மூன்று தெரிவுகளே இருந்தன. ஒன்று எதிர்ப்பின் பருமனைக் குறைப்பது. இரண்டு தீர்மானத்தின் தொனியின் கடுமையைக் குறைப்பது. மூன்று தீர்மானத்தை ஏற்றுக் கொள்வது.

ஆடுகளத்தில் மூன்றாவது 'அம்பயர்'ஆகக் காணப்பட்ட இந்தியா திரைமறைவில் ஆட்டக்காரராக மாறியபோது தீர்மானத்தின் கடுந்தொனியைக் குறைக்க முடிந்தது. ஆனால், பார்வையாளர் தரப்பிலிருந்து சற்றும் எதிர்பாராத விதமாக தமிழ்நாடு கொந்தளித்தபோது இந்தியா கடைசி நேரத்தில் வேறுவிதமாகச் சிந்தித்தது என்று ஒரு தகவல் உண்டு.

பெரிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்கள் சில இரவுகளுக்குள் மாற்றப்படக் கூடியவையும் அல்ல. எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு மட்டுமல்ல, சிங்களவர்களுக்கும் கூட இந்தியாதான் ஜெனிவா.

இலங்கை அரசு முதலில் இந்தியாவைதான் அணுகியது. இந்தியா ஏறத்தாழ கால் நூற்றாண்டுகளுக்கு முன் ஜெயவர்த்தன தனக்கு எதைச் செய்தாரோ அதையே செய்யுமாறு கொழும்பிற்கு ஆலோசனை கூறியது. 1987இல் இந்தியா 'ஒப்பரேசன் பூமாலை' என்ற பெயரில் இலங்கைத்தீவுக்குள் வானிலிருந்து உணவுப் பொதிகளைப் போட்டது. ஆனால், தந்திரசாலியான ஜெயவர்த்தன 'ஒப்பரேசன் பூமாலையை' ஓர் உடன்படிக்கையாக மாற்றினார். அதன் பின் மத்தியஸ்தராக இருந்த இந்தியாவை ஆடுகளத்துள் இறக்கி விடுதலைப் புலிகளோடு மோதவிட்டார்.

அதேசமயம், உடன்படிக்கையின் உள்ளடலை படிப்படியாக உருவியெடுத்து ஒரு கட்டத்தில் அதை கோறையாக்கிவிட்டார். ஜெயவர்த்தன சிங்கள மக்களுக்குத் தேடிக் கொடுத்த முதுசொம் அது. ரஜீவ் காந்தி படுகொலை அதற்கு மேலதிக 'போனஸ்' ஆகக் கிடைத்தது. இப்படியாக ஜெயவர்த்தன தேடிக் கொடுத்த முதுசொத்தின் பயனைத்தான் இன்றைய ஆட்சியாளர்கள் அனுபவிக்கிறார்கள்.

> "
> ஆடுகளத்தில் மூன்றாவது 'அம்பயர்'ஆகக் காணப்பட்ட இந்தியா திரைமறைவில் ஆட்டக்காரராக மாறியபோது தீர்மானத்தின் கடுந்தொனியைக் குறைக்க முடிந்தது.

ஆனால், ஜெயவர்த்தனவைப் போல அச்சுறுத்தலை உடன்படிக்கையாக மாற்ற இப்போதுள்ள அரசு தயாராக இருக்கவில்லை. எதிர்த்தீர்மானத்தைக் கூட்டுத் தீர்மானமாக மாற்றினால் கூட்டுப் பொறுப்பை ஏற்கவேண்டியிருக்கும். கூட்டுப் பொறுப்பை ஏற்றால் காலப்போக்கில் அது ஒரு 'தர்மர் பொறி'யாக மாறலாம் என்று அரசு அஞ்சுகிறது. எனவே, கூட்டுப் பொறுப்பை ஏற்பதை விடவும் எதிர்ப்பது சிக்கல்கள் குறைந்தது.

எதிர்த்தீர்மானத்தில் தொனியைக் குறைத்தாலேபோதும் அதற்குமப்பால் இத்தீர்மானமானது ஒரு செயற்பாட்டுப் பொறிமுறையாக இப்போதைக்கு மாறாது என்ற நிலை உள்ளவரை கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு நம்புகிறது. எதிர்த் தீர்மானங்களால் அனைத்துலக அரங்கில் அவமானம் அல்லது தலைகுனிவே ஏற்படும். அதற்குமப்பால் பிரயோக நிலையில் அச்சுறுத்தல் இருக்காது. தீர்மானங்கள் செயலுருப் பெறுவதற்கான செய்முறை ஒழுங்குடன்கூடிய ஒரு அனைத்துலகப் பொறிமுறை இல்லாதவரை தீர்மானங்கள் தூலவடிவத்தைப் பெறுவதில்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை இஸ்ரேல் எத்தனையோ தடவை உதாசீனம் செய்துள்ளது. அதிலும் குறிப்பாக அதிகபட்சம் தேசியத் தன்மை மிக்கதும், மிகக் குறைந்த அளவே சர்வதேசத் தன்மை உடையதுமான ஓர் அரசை செயலுக்குப் போகாத் தீர்மானங்கள் அதிகம் அசைப்பதில்லை. எனவே, செயலுக்குப் போகாத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதை விடவும் எதிர்ப்பதானது தனக்குரிய கால அவகாசத்தை வழங்கும் என்று அரசு நம்புவது தெரிகிறது.

மேலும் அனைத்துலக அரங்கில் அழுத்தங்களை எதிர்ப்பதன் மூலம் போரின் வெற்றிகளை இந்த அரசு பாதுகாக்கின்றது என்று உள்நாட்டில் சிங்கள வாக்காளர்கள் நம்புவார்கள். அதாவது இந்த அரசு தனது வீரப்படிமத்தை மேலும் பலப்படுத்த முடியும். இது இந்த அரசை ஆட்சியிலிருந்து அகற்ற நினைப்பவர்களைத் தோற்கடிக்கும்.

ஜெனிவா மாநாட்டின் பின்னணியில் வன்னிக்குப் பயணித்த இராணுவத் தளபதி அங்கு உரையாற்றும்போது, வெளிச் சக்திகள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்ற தொனிப்படக் கூறியிருந்தார். மேற்கு நாடுகள் இலங்கைத் தீவில் [illegible] முயற்சிக் [illegible] மனமாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

> "
> தமிழ்நாட்டில் மொத்தம் மூவர் தீக்குளித்து இறக்க, பல இலட்சக்கணக்கான மாணவர்கள் தெருவிலிறங்கிய அதே காலப் பகுதியில்தான் யாழ்ப்பாணத்தில் ஆறு பெரிய பாடசாலைகள் பங்குபற்றிய மூன்று வேறு பெருந்துடுப்பாட்டங்கள் நிகழ்ந்தன.

ஆட்சியாளர்களின் மனம் மாறுகிறதோ இல்லையோ தற்போதுள்ள நிலைமைகளின் படி வெளியாரைத் துணிந்து எதிர்கொள்ளும் இந்த அரசைத் தேர்தல்களின் மூலம் இப்போதைக்கு அகற்ற முடியாது. எனவே, பொழிவாகக் கூறின், ஜெனிவாத் தீர்மானமானது இந்த அரசுக்கு அனைத்துலக அரங்கில் ஒரு தலைகுனிவு ஏற்படுத்தியது என்ற அடிப்படையில் ஒரு தோல்விதான். இது முதலாவது.

இரண்டாவது - தீர்மானத்தின் தொனியிலுள்ள கடுமையைக் குறைக்க உதவிய இந்தியா அரசின் பக்கம் நிற்க முடியவில்லை என்பதும் ஒரு தோல்விதான்.

மூன்றாவது - தமிழ் நாட்டில் தன்னியல்பாக தோன்றிய மாணவர் எழுச்சி என்பது நீண்ட கால அடிப்படையில் அரசைப் பொறுத்தவரை ஒரு எதிர்மறை வளர்ச்சிதான். அதாவது, தோல்விதான்.

நாலாவது - அனைத்துலக விசாரணைக்கான ஒரு பொறிமுறையின் அவசியம் குறித்து மங்கலான வார்த்தைகளிலேனும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது என்பதும் பின்வரக்கூடிய ஒரு தோல்வியின் தொடக்கம்தான்.

அதாவது, மேற்சொன்னவைகளின் பிரகாரம் ஜெனிவாத் தீர்மானமானது அரசைப் பொறுத்தவரை ஓரளவுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு தோல்விதான்.

அதேசமயம் தோல்வியை ஒத்திவைத்தமை உடனடிக்கு ஒரு வெற்றிதான். இது மேலும் ஒரு கால அவகாசத்தைப் பெற்றுத் தரும். இது முதலாவது வெற்றி.

இரண்டாவது - தீர்மானத்தின் கடுமையைக் குறைத்தமை ஒரு வெற்றி.

மூன்றாவது - தீர்மானத்தின் மையமானது நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு அப்பால் போகாதுள்ளதும் ஒரு வெற்றி.

நாலாவது - போர்க்குற்றம் தொடர்பில் குறிப்பிட்டு எதுவும் கூறப்படாததும் ஒரு வெற்றி.

எனவே, கூட்டிக் கழித்தும் பார்த்தால் ஜெனிவாவில் அரசு முற்றாகத் தோற்கடிக்கப்படவில்லை.

அதேசமயம் தமிழர் தரப்பைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விமர்சனங்களோடு ஜெனிவாத் தீர்மானத்தை வரவேற்றிருக்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது எதிர்மறைக் கருத்துக்களோடு மட்டுமே காணப்படுகிறது.

ஜெனிவாவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சில சிறிய அழுத்தக் குழுக்களுமே தீர்மானத்தைக் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததாக அறிய முடிகிறது. தீர்மானத்துக்கு ஆதரவான நிலைப்பாடே பெரும் போக்காகக் காணப்பட்டிருக்கிறது.

அரசை அனைத்துலக அரங்கில் தோற்கடிப்பதே ஒரு பொதுத் தமிழ் மனோநிலையாகக் காணப்படுகிறது. அந்த வெற்றியின் உட்சித்திரத்தைக் குறித்தும் அதன் நடைமுறைச் சாத்தியம் குறித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சில அழுத்தக் குழுக்களும் சில விமர்சகர்களுமே கேள்வி எழுப்பியிருந்தார்கள்.

தொகுத்துப் பார்த்தால் முதலாவதாக ஜெனிவாத் தீர்மானமானது தமிழர்களைப் பொறுத்தவரை அரசை அனைத்துலக அரங்கில் தோற்கடித்தமை என்ற அர்த்தத்தில் ஒரு வெற்றிதான்.

இரண்டாவதாக இந்தியாவானது ஆதரித்து வாக்களித்தமையும் ஒரு வெற்றிதான்.


மூன்றாவதாக தமிழ் நாட்டில் தன்னியல்பான எழுச்சி என்பது ஒரு வெற்றிதான்.

நாலாவதாக புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலுள்ள அழுத்தக் குழுக்கள் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஒரே அலைவரிசையில் செயற்பட்டமை என்பதும் ஒரு வெற்றிதான்.

ஐந்தாவதாக ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறை குறித்து கலங்கலாகவேனும் குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு வெற்றிதான்.

(சூரியகாந்தி 24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் போராட்டமும் இந்திய அரசியல்வாதிகளும்

ஞாயிறு காரம்



சந்திரசேகர ஆஷாத்

இன்று இந்தியத் தமிழகத்தில் மாணவர்கள் பிரமாண்டமான முறையில் எழுச்சி பெற்று தமிழகத்தையே உலுக்கும் வகையில் போராட்டக் களத்தில் குதித்துள்ளனர். இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்படும் கண்டனத் தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஆதரிக்க வேண்டுமெனவும் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகச் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை நியாயமாகவும் நிரந்தரமாகவும் தீர்க்கப்பட வேண்டும் எனவும் இப்படியான நடவடிக்கைகளில் இந்திய மத்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரி இந்தப் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இவை உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டப் பேரணிகள், சாலை மறியல் போராட்டங்கள், தன்னைத் தானே தீ மூட்டி எரித்தல் எனப் பல வடிவங்களிலும் இடம்பெற்று வருகின்றன. சென்னை லொயோலா கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதத்துடன் ஆரம்பமான இந்தப் போராட்டம், இன்று நாடு முழுவதும் பரந்து தமிழகத்தில் 400 இற்கும் மேற்பட்ட கல்லூரிகளை அரசே மூடிவிட வழியேற்படுத்தியுள்ளது. எனினும் கூட மாணவர்கள் போராட்டம் மேலும் மேலும் உத்வேகமடைந்து வருகிறது.

### போராட்டத்தை முடக்கும் பொலிஸாரின் முயற்சி தோல்வி

உண்ணாநோன்பில் ஈடுபட்ட மாணவர்களைப் பொலிஸார் தலையிட்டு பலவந்தமாக மருத்துவமனையில் சேர்த்தனர். அதனுடன் அந்தப் போராட்டம் முடிவடைந்துவிடும் என்ற அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அந்த இடத்தை வேறு மாணவர்கள் இட்டு நிரப்பி வேறு மாணவர்கள் உண்ணாநோன்பைத் தொடர்கின்றனர். அதுமட்டுமன்றி, வேறு பல கல்லூரிகளின் மாணவர்களும் உண்ணாநோன்புப் போராட்டத்தில் குதித்துவிட்டனர்.

இந்த மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக பல தரப்பினரும் களத்தில் குதித்துள்ளனர். இவை காரணமாக போராட்டம் மேலும் மேலும் வலுவடைந்து தமிழகமெங்கும் பெரும் அலையாகப் பரவி வருகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் பின்பு முழு இந்திய தேசத்தையும் உலுக்கும் பிரமாண்டமான போராட்டம் இதுவென ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

இது காலவரை தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எந்த ஒரு போராட்டம் நடந்தாலும் அதற்கு ஒரு அரசியல் நோக்கம் இருக்கும். சில அரசியல் கட்சிகளின் நலன்கள் அதில் பொதிந்திருக்கும். ஆனால் அ.தி.மு.க. அரசு என்றாலும் சரி, இன்று எதிர்க்கட்சியாக விளங்கும் தி.மு.கவும் சரி போராட்டங்களை தேர்தல் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

வேறுசில கட்சிகளும் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினையை அடிக்கடி கையில் எடுக்கத் தவறுவதில்லை. எப்படியிருப்பினும் தமிழக மக்களின் ஆதரவைப் பெற பல்வேறு அரசியல் தரப்பினரும் ஈழத்தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தி வந்தனர் என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும்.

### அரசியல் கட்சிகளின் ஆதரவை புறக்கணித்த மாணவர்கள்

இப்படியான ஒரு தமிழகச் சூழலில் தான் எந்தவொரு அரசியல்வாதிகளினதோ அரசியல் கட்சிகளினதோ பின்னணியின்றி எவ்வித அரசியல் கலப்புமின்றி, இலங்கைத் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு போராட்டமாக இயல்பான முறையில் கிளர்ந்தெழுந்துள்ளது. ஒரு தன்னலமற்ற உறுதியான இலட்சிய வேட்கையின் அடிப்படையில் வீரம், தியாகம், உறுதி என்பவற்றால் மெருகூட்டப்பட்டு இந்தப் போராட்டம் முன்நகர்த்தப்படுகிறது. இந்திய அரசியலில் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின்பு எவ்வித அரசியல் கட்சியின் பின்னணியுமின்றி மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடுவது கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான போராட்டமாகும். எந்தவொரு அரசியல் கட்சிகளாலும் பயன்படுத்தப்பட முடியாத வகையில் இந்தப் போராட்டம் நீண்டகாலமாக நியாயமாகவும் உறுதியாகவும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. அடக்குமுறைகள் மூலம் இந்தப் போராட்டத்தை முறியடிக்க முடியவில்லை. வாக்குறுதிகள் மூலம் அவர்களை ஏமாற்ற முடியவில்லை. வெளிநாட்டுப் பணத்தில் போராட்டம் நடத்தப்படுகிறது போன்ற அவதூறுகளால் போராட்டத்திலிருந்து மக்களைப் பிரிக்க முடியவில்லை. இன்று வரை அந்தப் போராட்டம் எந்தவொரு அரசியல் சக்திகளிடமும் விலை போகாமல் முழுவீச்சுடன் தொடர்கிறது. அதேபோன்றே இன்று மாணவர் போராட்டமும் எவ்வித அரசியல் பின்னணியோ சுயலாப அரசியல் நோக்கோ இன்றி இலங்கைத் தமிழ் மக்களின் விமோசனம் என்ற ஒரே இலட்சியத்துடன் வேகமடைந்து வருகிறது. அடக்குமுறைகளாலோ ஏமாற்று மொழிகளாலோ இந்தப் போராட்டத்தை சிதைத்துவிட முடியவில்லை.

### வன்முறையைத் தூண்டிப் பழியை மாணவர் தலையில் போட்ட முயற்சி

ஆனால் தமிழக அரசியல்வாதிகள் இந்தப் போராட்டத்தைத் தமது சொந்த அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்த முயற்சிக்காமல் இல்லை. அதேவேளை வேறு சில தீய சக்திகள் வன்முறைகளில் இறங்கி மாணவர்கள் தலை மீது பழி போடத் தயங்கவுமில்லை. இந்திய உளவுப் பிரிவு மாணவர் போராட்டத்தின் மீது சேறு பூசும் வகையிலான தகவல்களை வெளியிடாமலுமில்லை. ஒரு போராட்டத்தைச் சீர்குலைக்கவும் திசை திருப்பவும் என்னென்ன திருகுதாளங்கள் செய்யவேண்டுமோ அவையனைத்தையும் வெவ்வேறு தரப்பினரும் செய்து வருகின்றனர்.

முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர் வி.தங்கபாலு போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களைச் சந்திக்கச் சென்றபோது மாணவர்கள் அவரைச் சந்திக்க மறுத்துவிட்டனர். இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இலங்கை அரசுக்கு சகலவிதமான உதவிகளையும் மத்திய அரசு வழங்கியது. காங்கிரஸ் தலைமையிலான இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எவ்வித உருப்படியான நடவடிக்கைகளும் அது எடுக்கவில்லை. அதுமட்டுமன்றி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தைத் திருத்தங்கள் மூலம் வலுவிழக்க செய்ததும் இந்திய மத்திய அரசே. அது மட்டுமன்றி இந்த வருடம் கொண்டு வரப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தைத் நீர்த்துப் போக வைத்தது இந்தியாவே என சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது. இப்படியான ஒரு நிலையில் இந்திய மத்திய அரசின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் ஒரு முக்கிய தலைவருடன் மாணவர்கள் எதைத்தான் பேசுவது? உண்மையிலேயே வி.தங்கபாலு இலங்கைத் தமிழர்கள் மேல் அக்கறை கொள்வாரானால் மாணவரின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி பிரதமரிடமும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியிடமும் வலியுறுத்தியிருக்க வேண்டும். மாறாக காங்கிரஸ் தலைமையின் நடவடிக்கைகளுக்குத் தலையாட்டி விட்டு வந்து மத்திய அரசை மக்களிடம் நியாயப்படுத்த முயலும் இவர் போன்றவர்களை மாணவர்கள் ஏன் சந்திக்க வேண்டும்? அதே வேளையில் தங்கபாலு மீது யாரோ ஒரு விஷமி கல்லெறிந்ததில் அவர் காயமடைந்தார். மாணவர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த சில விஷமிகள் திட்டமிட்டே இப்படியான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் அதை வைத்துக் கொண்டு காங்கிரஸாரும் இலங்கை அரச ஊடகங்களும் மாணவர்களின் அஹிம்சைப் போராட்டத்தைக் காடைத்தனம் எனக் கொச்சைப்படுத்துகின்றன.

இப்படிப்பட்டவர்களை ஏன் மாணவர்கள் சந்திக்க வேண்டும்.

### இலங்கைத் தமிழர் விடயத்தில் கருணாநிதியின் இரட்டை வேடம்

அடுத்து தி.மு.க. சார்பில் தி.மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஒரு குழு மாணவர்களைச் சந்திக்க முயன்றது. அவர்களையும் மாணவர்கள் சந்திக்க மறுத்துவிட்டனர். போரின் இறுதிக் கட்டத்தின் போது போரை நிறுத்த இந்திய மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிடில் அரசை விட்டு வெளியேறப் போவதாகக் கருணாநிதி அறிவித்தார். அமைச்சர்களிடமும், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் ராஜிநாமாக் கடிதங்களை வாங்கினார். பின் அதைக் கிடப்பில் போட்டு விட்டு சாகும் வரையான உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தார். அவர் காலையில் உண்ணாவிரதத்தைத் தொடங்கிப் பிற்பகலில் போர் நிறுத்தப்பட்டு விட்டதாகக் கூறி அதை முடித்துக் கொண்டார். ஆனால் அவர் உண்ணாவிரதம் தொடங்கிய போதும் சரி நடத்தி முடிந்த போதும் சரி இலங்கைப் படைகள் ஒவ்வொரு நிமிடமும் தமிழ் மக்களை ஆயிரக் கணக்கில் கொன்றுகுவித்துக் கொண்டிருந்தன.

இறுதியில் ஏறக்குறைய 4 லட்சம் மக்கள், பல்லாயிரக்கணக்கான உறவுகளைப் பறிகொடுத்துவிட்டு அகதிகளாக நிவாரண முகாம்களில் சரணடைந்தனர். அதுமட்டுமன்றி இப்போது இலங்கை அரசினால் தமிழ் மக்களின் எஞ்சியிருந்த சில உரிமைகள் கூடப் பறிக்கப்படுகின்றன. இப்படியாக ஒரு நீண்ட துரோக வரலாற்றைக் கொண்ட கலைஞர் ஜெனிவா மாநாட்டில் அமெரிக்கா சமர்ப்பிக்கும் பிரேரணையில் இலங்கைப் போர்க் குற்றவாளி எனவும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், திருத்தம் கொண்டு வரக் கோரிப் போராட்டம் நடத்துவதாகக் காட்டிக் கொண்டார்.

இந்திய மத்திய அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில் அரசை விட்டு வெளியேறப் போவதாகத் தெரிவித்ததுடன் இந்திய நாடாளுமன்றத்தில், இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை எனவும், அதற்கான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அரசைவிட்டுவெளியேறும்முடிவை மீள் பரிசீலனை செய்யத்தயார் என்றும் கூறியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுமானால், அதனால் விளையத்தக்க பயன் என்ன? பத்திரிகைகளுக்கு ஒரு தலைப்புச் செய்தி கிடைக்கும். இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடித் தீர்மானம் நிறைவேற்றியதாக அடுத்த தேர்தல் மேடைகளில் தி.மு.க.வினர் பிரசாரம் செய்ய உதவும். ஆனால் அடிப்படையில் இது எவ்வித பயனுமற்ற அப்பட்டமான ஒரு ஏமாற்றாகும்.

இப்படியான ஒரு கபட நாடகத்துக்கு மாணவரின் போராட்டத்தையும் பயன்படுத்தவே தி.மு.கவினர் முயன்றனர். ஆனால் மாணவர்கள் தெளிவான பார்வையுடன் அவற்றை நிராகரித்துவிட்டனர். இவ்வாறே பல அரசியல் கட்சிகளையும் தமது அரசியல் சுயலாப நோக்கத்துக்குப் பயன்படுத்த முனைந்தபோதும் மாணவர்கள் உறுதியாக நின்று வலையில் விழ மறுத்துவிட்டனர். ஆனால் இந்திய உளவுத் துறை இன்னொரு வகையில் மாணவர் போராட்டத்துக்கு சேறு பூசும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. மாணவர் போராட்டம் இந்தியாவில் ஒரு தமிழீழம் அமைப்பதற்கான ஆரம்ப முயற்சியெனத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அது தெரிவித்து வருகின்றது.

### இந்திய- இலங்கை உளவுத் துறைகள் மீது வலுக்கும் சந்தேகம்

இந்தியாவில் தனித் தமிழீழம் அமைக்க முயற்சிப்பதான பிரசாரம், தங்கபாலு மீதான கல்லெறி, இந்தியாவில் புத்த பிக்குகள் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் இலங்கை உளவுத் துறையினராலும் இந்திய உளவுத் துறையினராலும், திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளோ என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளன. இவற்றின் மூலம் மாணவர் போராட்டத்தை ஒரு தேச விரோத வன்முறையாகக் காட்டி அவர்கள் மீது ஒடுக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படலாம். இலங்கை இந்திய அரசியலில் இது சர்வசாதாரணமானதொன்று.

எப்படியிருப்பினும் சுயாதீனமான இயல்பான அர்ப்பணிப்புடன் கூடிய தமிழக மாணவர்களின் போராட்டம் நிச்சயமாக நீண்டகால அடிப்படையில் பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்தும் என்பது மட்டும் நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழுக்கு வந்த நிலை

## அகமும் புறமும்

12-02-2013 அன்று உதயனின் சூரியகாந்தியில் வெளியாகியிருந்த 'அர்த்தம் தெரியாமல் மொழியும் புரியாமல்' என்ற கட்டுரைக்கான எதிர்வினையாக, 10-03-2013 அன்று 18ஆம் பக்கத்தில் 'விளம்பிய மொழியும் விபரீத விளக்கமும்' என்ற தலைப்பில் ஒரு விமர்சனம் வெளியாகியிருந்தது. அதில் கட்டுரையாளர் ஸனா, பெயர்கள் தொடர்பாகக் கூறியிருந்த சில விடயங்கள் தொடர்பான சில பதிவுகள்

■ ம.கிருஸ்ணராஜன்,

இன்று எங்களுடைய சமூகத்தில் வழக்கத்தில் இருக்கின்ற பெயர்கள் சரியான தமிழ்ப்பெயர்கள் தானா..? அல்லது வேற்றுமொழிக்கலப்புடைய சொற்களா..அவற்றின் அர்த்தங்கள் பற்றி மதுவிழி எழுதியிருந்த கட்டுரையை "ஸனா" கடுமையாக சாடியிருந்தார். அவரின் விமர்சனத்தில் "லிங்கம்" என்பது தொடர்பாக கட்டுரையாளர் மதுவிழியின் விளக்கத்தையே அவர் கடுமையாக் சாடியிருந்தார். அதனடிப்படையில் சமயம் ஒரு காரணியாகி மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பலையை தோற்றுவிக்கும் சூழ்நிலை ஒன்று தோன்றியிருந்தது'.



இனி நாங்கள் விடயத்துக்கு வருவோம். அதிகமாக சாடப்பட்ட 'லிங்கம்' என்ற சொல் பற்றியும் பெயர்களின் தன்மை பற்றியும் நாம் கொஞ்சம் நோக்கலாம்.லிங்கம் என்பது உண்மையில் ஒரு சமஸ்கிருதச் சொல்லேயாகும். அதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட அர்த்தங்கள் காணப்படுகின்றன. அது மறு அல்லது கறை அல்லது தடம் எனவும்,ஒரு காரணத்திலிருந்து உண்டாகும் விளைவு எனவும், இறைவனின் அருவுருவ நிலையை காட்டுவதாகவும், ஆணின் பிறப்புறுப்பு எனவும் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளன. இங்கு பின்னைய கட்டுரையாளர் நாகரிகம் கருதி ஆணின்பிறப்புறுப்பு என்பதை லிங்கம் எனக் குறிப்பிட்டிருந்தார். நேயர்களின் குழப்பத்தைத் தணிப்பதற்காக நான் அச்சொல்லை அப்படியே தருகிறேன்.

சமஸ்கிருதத்தில் குறிப்பிட்ட அச்சொல்லானது பல்வேறு அர்த்தங்களைக் கொண்டுகாணப்பட்டாலும் அதன் சாராம்சம் இதுவாகவே காணப்படுகிறது. அப்படியானால் இறைவனை துதிக்க இந்த லிங்கம் எனும் சொல் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்ற கேள்வி எழலாம். இங்கு லிங் என்பது அண்ட சராசரங்கள் யாவும் ஒடுங்குமிடம் எனவும் 'கம்' என்பது ஒடுங்கிய அனைத்தும் மீண்டும் தோன்றும் இடம் எனவும் பொருள் கொள்ளலாம். ஆவுடை லிங்கம் என்ற பதம் அனேக இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.இங்கு லிங்கம் என்பது ஆணின்பிறப்புறுப்பு எனவும் ஆவுடை என்பது பெண்ணின் பிறப்புறுப்பு என்றும் இவை இணைந்திருக்கும் நிலையே ஆவுடை லிங்கம் எனவும் கூறப்படும். அதாவது உயிர்களின் உற்பத்தி இங்கு குறியீட்டால் காட்டப்படுகிறது. பிறப்புக்களை உலகத்தின் மேன்மையான விடயமாக இங்கு கருதியிருக்கலாம்.

இன்னுமொருவிதத்தில் இச்சொல் அருவமும் உருவமுமான இறைவனின் நிலையை காட்டுவதாக 'ஸனா' அவர்கள் உறுதிப்படுத்தல்களோடு தந்திருந்தார். அது மேற்காட்டிய வகையில் எல்லாவற்றையும் அடக்கவும் ஆக்கவும் கூடியவன் என்ற அர்த்தத்தை காட்டக்கூடும். எனினும் எல்லாவற்றின் அடியும் சுற்றிச்சுற்றி ஒரே விடயத்தில் போய்நிற்பதைக் காணலாம். இத்தகைய சூழ்நிலையில் கனியிருக்க காய் கவர்வது போல, அழகான தமிழ்ச் சொற்கள் இருக்கத்தக்கதாக சிக்கலான அர்த்தங்கொண்ட இத்தகைய வேற்றுமொழிச்சொற்களை எதற்காக பயன்பயடுத்த வேண்டும் என்பது முன்னைய கட்டுரையாளரின் ஆதங்கமாக இருந்திருக்கலாம்.

தெரிந்து செய்வது பிழை. தெரியாமல் செய்தால் தவறு. அத்தகைய தவறுகளை திருத்திக் கொள்ளலாமே என்ற சமூக நோக்கில் மதுவிழியின் கட்டுரையமைந்திருக்கக்கூடும் என நான் நினைக்கிறேன். ஆரம்ப காலத்தில் தமிழர் எம் வாழ்வியலிற்கான சவால்கள் அதிகம் இருந்திருக்கவில்லை. (தற்போதிருக்கின்ற அரசியல் போன்ற திட்டமிட்ட சதிகள்). மக்கள் ஆன்மிகத்தில் அதிகம் நாட்டமுள்ளவர்களாகவும் இறைபக்தியில் திளைத்தவர்களாகவும் காணப்பட்டனர். அதனால் அவர்களுக்கு புறச்சூழலிலிருந்து இப்போதிருப்பது போன்ற சவால்கள் அச்சுறுத்தல்கள் காணப்பட்டிருக்க வாய்ப்பில்லை.அந்நிலையில் அவர்கள் தமது பெயர்களை இறைவனைப்பாட பயன்படுத்தும் சொற்களைக்கொண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அந்தப் பெயர்கள் அப்படியே பரம்பரை பரம்பரையாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது, வருகிறது.ஸனா அவர்கள் குறிப்பிட்டது போல பேரன் என்பது பெயரைத்தாங்குபவன் என்ற அர்த்தத்தைக் கொண்டிருப்பதால் அத்தகைய பெயர்கள் பரம்பரை பரம்பரையாக கைமாற்றப்பட்டே வருகின்றன.

ஆரம்பகாலத்தில் இல்லாத சவால்கள் இப்போது எமை நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.நாளாந்த செய்திகள் தினம் தினமும் அதையே சொல்கின்றன. இப்போது நாங்கள் எங்கள் தனித்துவத்தை காப்பாற்றுவதில் மொழியைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்ற கருத்தில் தவறு இல்லை.எங்கள் மொழியைத்தொலைத்து விட்டு இன்னொரு மொழியை வாழவைத்து என்ன இலாபம்..? தமிழ் அல்லாத பிறமொழிகளை நாங்கள் அதிகம் நாடுகின்ற போது அழிவடைந்து போன பல மொழிகளின் நிலையே தமிழுக்கும் தோன்றக்கூடும். மொத்த நாடே தங்களது என்றவர்கள் மொழியும் அழிந்து போனால் தமிழ் என்றொரு இனமுமே இல்லை எனச்சொல்ல எவ்வளவு காலமாகும்..?ஆகையால் இப்போது இத்தேவை இருக்கின்றது என்ற அடிப்படையில் முன்னைய கட்டுரையாளர் மதுவிழியின் கூற்று தவறானதல்ல என்றுநான் நினைக்கிறேன்.

மரபுகள், விழுமியங்கள் வாழ்க்கைக்கு மிக முக்கியமானவை. அவற்றை மாற்றுவது சரியல்லவென நாங்கள் இருந்தோமானால் தமிழிருப்பே கேள்விக் குறியாகும் நிலை விரைவில் தோன்றும். ஒரு நியாயமான தேவைக்காக நியாயமான முறையில் மரபுகளை மாற்றியமைத்தல் தவறானது அல்ல.சில மரபுகள் மாற்றப்பட வேண்டியவை மாறாமல் அப்படியே இருக்கின்றன, ஆனால் மாற்றப்படவே கூடாத சில மரபுகள் ஏற்கனவே மாறிவிட்டன. அந்த விழிப்புணர்வினையே அவர் ஏற்படுத்தியிருக்கிறார். அதற்காக நான் கிருஸ்ணராஜன் என்கின்ற எனது பெயரை உடனடியாக மாற்ற முடியாது.வேற்றுமொழி கலந்த பெயர்கள் உடையவர்கள் எல்லோரும் பெயரை உடனடியாக மாற்றமுடியாது. ஆனால் இனி வருகின்ற எம் சமூகம் அதை செய்யமுடியும். தவறொன்றைச் சுட்டிக்காட்டும்போது மனம் வலிப்பது உண்மையே.அந்த வலிக்காக நாம் விட்டது தவறு என்று தெரிந்தும் பேசாமல் இருப்போமானால் இன்னும் பலநூறு சந்ததிகள் இதைவிடப் பெரிய வலியையும் வேதனையையும் எதிர்கொள்ளக்காத்திருக்கின்றன.அந்த நிலையை தவிர்க்க, இனி வைக்கின்ற பெயர்களை அழகான தமிழில் வைப்பதான ஒரு மாற்றம் ஏற்பட்டால்கூட எமது மொழி பாதுகாக்கப்படுவதோடு இருப்பும் பாதுகாக்கப்படும்.

> மரபுகள், விழுமியங்கள் வாழ்க்கைக்கு மிக முக்கியமானவை. அவற்றை மாற்றுவது சரியல்லவென நாங்கள் இருந்தோமானால் தமிழிருப்பே கேள்விக்குறியாகும் நிலை விரைவில் தோன்றும். ஒரு நியாயமான தேவைக்காக நியாயமான முறையில் மரபுகளை மாற்றியமைத்தல் தவறானது அல்ல.

ஆலயங்களில் செய்யப்படும் பூசைகளில் கூட மந்திர உச்சாடனங்கள் தமிழில் இல்லை என்பதை எத்தனையோ பெரியவர்கள் சுட்டிக்காட்டியும் வாதித்தும் அந்த நடைமுறை மாறவேயில்லை. ஆரம்பம் முதல் பூசை முடியும் வரை சமஸ்கிருதத்தில் உச்சரிக்கப்படும் மந்திரங்களிற்கிடையில் பஞ்சபுராணத்திற்காக ஐந்துநிமிடம் கொடுக்கப்படுகிறது அவ்வளவே.இறைவனை துதிக்கும் மொழியை மாற்றக்கூடாதுஎன்றோ.. மாற்றினால்ஏற்கமாட்டேனென்றோ இறைவன் கூறவில்லையே. ஆரம்பகால சித்தாந்தங்கள் கூட தமிழ்மொழியிலே உள்ளதாகவே நான் அறிகிறேன்.இப்படி எத்தனையோ விடயங்களில் நாம் தமிழை இரவல்கொடுத்து இன்னொன்றை வாங்கிக்கொண்டு நாளடைவில் நம் இருப்பையே இழந்துவிடப்போகிறோமா.. கொஞ்சம் சிந்திக்கவேண்டிய விடயம் இது.

அதிகம் நீட்டி முழக்காமல் இன்னும் ஒருவிடயத்தை மட்டும் குறிப்பட்டுவிட்டு என் கருத்தை முடித்துக்கொள்கிறேன். பத்திரிகை என்பது சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஓர் ஊடகமாகும். அந்தவகையில் உதயனுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு இத்தகைய பத்திரிகைகளில் கட்டுரைகளையும் விமர்சனங்களையும் முன்வைப்பவர்கள் தனிப்பட்டரீதியில் தாக்கும்படியோ ஏளனப்படுத்தும் வகையிலோ எழுதுவது சரியல்ல என நான் நினைக்கிறேன். ஏனிதை இங்கு குறிப்படுகிறேனென்றால் லிங்கம் பற்றி கட்டுரையாளர் மதுவிழி கொடுத்த விளக்கத்தை விமர்சகர் ஸனா கடுமையாக சாடியிருந்ததோடு, அவர் நல்ல கருத்துக்களும் இருக்கத்தக்கதாக ஏன் இத்தகைய விளக்கத்தை மட்டும் முன்வைக்கவேண்டுமெனவும் "காகத்திற்கு கனவிலும்.என்பது போல மதுவிழி மயக்கத்தில் எழுதியதை மறப்போம் மன்னிப்போம்" என்று குறிப்பிட்டிருந்தார். இந்தச் சொற்றொடர் எவ்வளவு தூரம் நாகரிகமானது என்பதையும் கொஞ்சம் கவனத்திற் கொள்க. தவிர, அத்தனை நல்ல விடயங்களை செய்தாலும் நாம் செய்கின்ற ஒரு தீயவிடயம் அவற்றையெல்லாம் மறைத்துவிடும்.அதுபோல எத்தனை அழகான அர்த்தங்களையும் ஒரு அபத்தமான அர்த்தம் தின்றுவிடக்கூடும் என்ற நியாயப்படுத்தலை அவர் முன்னிறுத்தி நல்லவை மட்டுமல்ல இதுபோன்ற எதிரான விளக்கங்களும் இருக்கிறது என்பதையும் இத்தனை சிக்குப்பாடுகளையும் மீறி என்ன நிபந்தனைக்காக வேற்றுமொழிச் சொற்களை வலிந்து தமிழில் திணிக்கவேண்டும் என்றும் எதிர்பார்த்திருக்கக்கூடும். இவற்றையெல்லாம் மீறி ஒருவரை அளவுக்கதிகமாக சாடுவது நல்ல அணுகுமுறையல்ல.

காலத்தின் தேவை கருதியும் சமுகத்தின் தேவை கருதியும் தமிழர்கள் ஒவ்வொருவரும் கொஞ்சம் சிந்தியுங்கள்! அதன் வழி செயற்படுங்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதரின் கடைசிப் பாடல்கள்



■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ஆதீனத்துக்கு உரிமை கோரும் பத்மசாலிச் செட்டியார் பிள்ளைகள் பரம்பரையில் வைணவர்கள் மட்டுமல்ல சிவனடியார்கள் பரம்பரையும் உள்ளது. இவர்களையும் சிலர் சிவனடியார்கள் என்றும் அழைப்பதுண்டு. நாமதாரிகளான வைணவர்களில் வடகலையாரும் தென் கலையாரும் என இரு பிரிவினர்கள் உள்ளனர். சிவனடியார்கள் நெற்றியில் திருநீற்றுக் குறிவைப்பார்கள் இப்பொழுது யாரும் நாமம் தரிப்பதில்லை. இதனால் வடகலை, தென் கலை என்ற வேறுபாடும் இல்லை! பத்மசாலிச் செட்டிப்பிள்ளைகள் இப்பொழுது எல்லோருமே வேறுபாடின்றி நெற்றியில் திருநீற்றுக் குறிதான் வைக்கிறார்கள்.

கோயிலின் கோபுர வாசலிலேயே இடது பக்கத்தில் உள்ள சுவரில் சிறிய மண்டபத்தில் அடியவர்கள் திருநீறு அணிந்து செல்ல வசதியாக திருநீறு வைக்கப்பட்டிருக்கிறது. முன்னுள்ள துவார பாலகர்கள் இருக்கும் அடைப்பிலும் திருநீறு, குங்குமம், சந்தனம் வைக்கும் வழக்கம் இருந்தது.

பண்டிதர் நெ.வை. செல்லையா விஷ்ணு மீது பக்தியுடையவர். ஸ்ரீ வேங்கடேசன் மீது பாடல்கள் பல பாடியுள்ளார். அதே சமயம் முருகப் பெருமான் மீதும் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார்.

பண்டிதர் நெ.வை. செல்லையா வேறு பல நூல்களையும் படைத்திருப்பதாக தெரிகிறது. கையெழுத்துப் பிரதிகள் இருக்கிறதாகவும் பரம்பரையினர் போற்றிப் பாதுகாத்து வருவதும் போற்றுதற்குரியது.



## அந்த நாள் ஞாபகம்..

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வரலாறு பற்றிய முழு விபரம் கோயிலில் இருக்குமா என்பது சந்தேகம். எனக்குத் தெரிந்தவரை நான் முன்னரே குறிப்பிட்டபடி கோயிலில் இருந்த பல பல பிரசுரங்கள் பின்னர் கண்ணில் படவில்லை. ஆலயம் பற்றிய வரலாற்றை அறிந்து படைக்கும் ஆற்றல் இல்லாவிடில் இருந்தவற்றைப் பாதுகாத்து எதிர் காலச் சந்ததியினருக்குக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல சிந்தனையாவது இருக்க வேண்டும். அந்தச் சிந்தனை இருந்த சிறு பரம்பரையும் இன்றில்லையென்றே தோன்றுகிறது. உருவாக்க முடியாவிட்டாலும் இருப்பதை அழிக்காமல் விட்டால் நல்லது. நல்ல வேளை பண்டிதரின் படைப்புக்களை ஆலயத்தின் பொறுப்பில் பாவனைக்கோ படைப்பாக்கத்துக்காகவோ கொடுத்து அவரின் வாரிசுகள் பாதுகாப்பாக வைத்திருப்பது பாராட்டுக்குரியது.

என்றாலும் பண்டிதர் வேங்கடேசன் மீது பாடிய பாடல்களையும் ஆலய வரலாற்றையும் தகுந்த ஆய்வாளர்களைக் கொண்டு விரிவான நூல் வெளியிடப்பட வேண்டியது அவசியம். இப்பொழுது கோயிலுக்கு வரும் வருமானம் வேங்கடேசன் மகிமையை பரப்புவதற்கும் மக்கள் பயனடைவதற்கும் உபயோகப் பட வேண்டும்.

பண்டிதர் செல்லையா மூல நோயினால் பெரும் அவஸ்தைப்பட்டார். பண்டிதர் மரணப்படுக்கையிலும் முன் முருகா, சண்முகா, நாராயணா என்று அலறியபடி முருக நாமத்தில் பாடிய கடைசிப் பாடல்கள் இவை:-

*நல்லை வாழ்வு கந்த நாயகா எனியேன்*
*நலிவுறு மூலநோய் தன்னால்*
*எல்லையில் துயருற்றேங்கி வாடுதலுடன்*
*னிருங்கருணைக் கிழுக்கன்றோ*
*வல்லையிலோர் காற் சத்திரமிட்டு*
*மறித்துமிட்டு ஞுற்றவே மதித்தார்*
*ஒல்லையில் வந்தென பக்கத்திலிரந்தே*
*யுறுதுணை புரிந்து காத்தருளே*

*கரணமொரு தளர்க்கருவி கால்கரங்கள்*
*கண் பஞ்சிட்டறி வீழ்ந்து கதியொன்றில்*
*பரண முறப்பாய் துணையாய்க் கிடக்கும் போது*
*பன்னிரு கண்ணுடைய நல்லைப் பதியாயென்னைத்*
*திரண மெனுங் கபம் வருத்தஞ் செய்யாதுன்றன்*
*சிந்தனையில் என் மன நிலைக்கச் செய்து நீங்கா*
*மரணமுறும் போதுனது மடிமேலென்னை*
*வைத்திருக்க வேண்டு மிந்த வரந்தருளே*
*கந்தா, பழனிப் பதியா, வள்ளி மணாளா, பாலகுமாரா*
*நல்லைக் குமரா குருபர சண்முகனே!*

(வண்ணை ஸ்ரீ வேங்கட வரதரின் புராதன வரலாறும் வைணவ சமய மகிமையும்)

## தாய் நிலம்




–சடா கோபன்

நீண்டு விரிந்திருக்கிறது
நீலக்கடல்
அலைகள்
எழுந்து எறிந்து
கரையை நனைத்து
எழுப்புகிற ஓசையில்
எப்படித்தான்
இந்த
அமைதி வருகிறதோ!
நீண்டு விரிந்திருக்கிறது
நீலக்கடல்

சுவர்களில்
காய்ந்து போன
இரத்தக் கறைகளை மூடி
சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன

விசாரிக்கவும்
விசாரித்து தீர்ப்பு வழங்கவும்
ஆளேயில்லாத சபைகளிற்காகவா
சாட்சியங்கள் வெளி வருகின்றன

காணாமல் போனவரால்
எழுகின்ற துயரோடு பார்க்கையில்
மரணம் தருகின்ற
துயரொன்றும் துயரில்லை

காணாமல் போவதை விட
மரணம் மகத்துவமானது

அந்தர நிலை வாழ்வை
வரைய
வர்ணங்கள் என்னிடமில்லை

சாட்சியங்கள் ஒவ்வொன்றும்
வெளிவர வெளிவர
தொலைந்து போன மனிதரின் தொகை
குறைந்து கொண்டே போகிறது

எங்கள்
ஊரெங்கும் மரணவீடு

உலகின் எங்கோ ஒரு முனையில்
வெளிவருகின்ற காட்சிகளால்
இங்கே அந்தரிக்கும் உறவு மனங்கள்
ஆறுதல் பெறுகின்றன
என்கின்ற உண்மை
நெஞ்சை அடைகிறது

காணாமல் போவதை விட
மரணம் மகத்துவமானது

மரணத்தை ....
போராட்ட ஆயுதமாய்
தரிக்கின்ற தைரியம்
மானிடர்க்கு எப்போதும்
இருந்துதான் இருக்கிறது

ஜெருசலேமில் தொடங்கி
பெல்ஜியப் புரட்சி தாண்டி

இரண்டாம் உலகப் போரிலும்
இது நடந்துதான் இருக்கிறது.

ஈரானில் ஈராக்கில்
பாலஸ்தீன போராட்டத்தில்
சிரியாவில் பாகிஸ்தானில்
இங்கேயும் எங்கேயுமாய்

மரணத்தை....
போராட்ட ஆயுதமாய்
தரிக்கின்ற தைரியம்
இருந்துதான் இருக்கிறது

ஆயினும்
மரித்த பிறகும்
போராளிகள்
நிகழ்த்துகின்ற போராட்டம்
இப்போதுதான் நடக்கிறது

காட்சிகளின் இடையினில்
மௌனம் செய்கின்ற போர்
வலியது

காணாமல் போவதை விட
மரணம் மகத்துவமானது

நீண்டு விரிந்திருக்கிறது
நீலக்கடல்
அலைகள்
எழுந்து எறிந்து
கரையை நனைத்து
எழுப்புகிற ஓசையில்
எப்படித்தான்
இந்த
அமைதி வருகிறதோ!
நீண்டு விரிந்திருக்கிறது
நீலக்கடல்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்





இவற்றைச் சமாந்தரமாக டிஜிற்றல் (Digital) நிலைப்படுத்தி மெய்போலி வெளி (Virtual Space) நிலைப்படுத்துவதன் மூலம் அதன் பாதுகாப்பை ஒப்பீட்டளவில் அதிகரிக்கலாம் என்பதோடு பரந்துபட்ட பார்வைக்கும் – பகிர்வுக்கும் அவற்றைத் தரமுடியும்.

### கலைவட்டத்தின் முதுசம் நிகழ்ச்சித் தொடர்

■ ம.திருக்குமரன்

# பதிவு – அ.யேசுராசாவின் காண்பியக்கலை தொடர்பான ஆவணங்களின் காட்சி

"ஒரு செழிப்பான பாரம்பரியத்தை மற்றவர்களுக்காக விட்டுச் செல்வோம்" என்ற மகுட வாசகத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையும், அதன் கலை வரலாற்று மாணவரொன்றியமான கலைவட்டமும் இணைந்து முதுசம் என்ற பெயரில் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், ஆவணப்படுத்தல், கையளித்தல் முதலியவற்றை நோக்காகக் கொண்ட பல நிகழ்ச்சிகளை அதன் வனைய கருத்தரங்குகள், படக்காட்சிகள், பயிற்சிப் பட்டறைகள், சமகாலக் காண்பியக்கலைக் காட்சிகள் முதலியவற்றுக்குச் சமாந்தரமாகவும், தொடர்ச்சியாகவும் நடத்திவருகிறது. இதன் 14 முதுச நிகழ்ச்சியாக "பதிவு" (trace) எனும் பெயரிலான யாழ்ப்பாணத்தில் காண்பியக்கலை தொடர்பான அ.யேசுராசாவின் தனிநபர் சேகரிப்பாவணங்கள் நுண்கலைத்துறைக் காட்சிக்கூடத்தில் 15 - 22 மார்ச் 2013 வரையான காலப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கடிதங்கள், பத்திரிகை நறுக்குகள், அழைப்பிதழ்கள், கையேடுகள், காட்சியட்டைகள், புகைப்படங்கள், விவரணச்சித்திர வரைபுகள் (ILLUSTRATIONS), அட்டைப்படங்கள், ஓவியங்கள், சுவரொட்டிகள் உள்ளிட்ட ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, ஒளிப்படம், சினிமா முதலான காண்பியக்கலை சார்ந்த சுமார் 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியை உள்ளடக்கிய நூற்றுக்கணக்கான ஆவணங்கள் காட்சிக்கு எடுத்துவரப்பட்டிருந்தன.

இங்கு ஆவணமென்பது பரந்த பொருள்கோடலைக் கொண்டுள்ளது. அது வெறுமனே சொற்கள் அல்லது வசனங்களின் எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட தொகுதியை மட்டும் குறிப்பதில்லை. பதிலாக எந்தவொரு காட்சித்தடயமும், அது எந்த வடிவத்தில் அமைந்தாலும் அது ஆவணமாகும். பரந்துபடச் சொன்னால் யாவுமே ஒருவகையில் ஆவணந்தான்.

மேற்படி ஆவணங்களை அவற்றின் பண்பாட்டுப் பெறுமானம், வரலாற்று அல்லது தடய ரீதியான முக்கியத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் நிரந்தரமாக அல்லது நீண்ட நாட்களுக்குப் பாதுகாத்துக் கொள்ளும் இச்செயற்பாடு அடிப்படையில் ஒரு ஆவணக்காப்பகச் செயற்பாடாகக் கொள்ளப்படும். இச்செயற்பாடு நிறுவன ரீதியாகவோ அல்லது தனியாள் முயற்சி அடிப்படையிலோ நிகழமுடியும். இவ்வகையில் நிறுவன ரீதியான செயற்பாடுகள் பெரும்பாலும் பலவீனமான நிலையிலுள்ள தென்கிழக்காசிய வட்டகையில் ஆர்வத்தை மட்டும் பெரும் முதலீடாகக் கொண்ட தனிமனித முயற்சிகள் பெருத்த முக்கியத்துவமுடையன. இவ்வகையில் அ.யேசுராசாவின் தனிமனிதச் சேகரிப்புக்களிலிருந்து மேற்படி காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யேசுராசா அடிப்படையில் இலக்கியவாதி, சினிமா ஆர்வலர். சிறுகதை, கவிதை, கலை இலக்கியந் தொடர்பான பத்தி எழுத்துக்கள் எனப்பரந்துபட்ட செயற்பாட்டுக் களமுடைய அவர், தமிழில் குறித்துச் சொல்லக் கூடிய அலை சிறுசஞ்சிகையினதும் மற்றும் கவிதை, தெரிதல் முதலான சஞ்சிகைகள், திசை வாராந்தரப் பத்திரிகை என்பவற்றின் ஆசிரியராக அல்லது ஆசிரிய பீட அங்கத்துவராகச் செயற்பட்டவர். யாழ். திரைப்பட வட்டம், தமிழியல் வெளியீட்டகம் என்பனவற்றிலும் அங்கத்துவச் செயற்பாட்டாளராவார்.

மேற்படி யேசுராசாவின் ஆவணங்கள் ஏறத்தாழக் [illegible] கால யாழ்ப்பாணத்து [illegible] பயில்வின் குறுக்குவெட்டு முகத்தை வரைகிறது. காண்பியப் படைப்பாளிகள், நிகழ்ச்சிகள், நிறுவனங்கள் மற்றும் மையங்கள் (Centers) போஷிப்பு முறைகள் மற்றும் போஷகர்கள், காட்சிகள், முதன்மைக் காலங்கள், செல்வாக்குகள், பகிரங்கப்படுத்தல் முதலான படைப்பின் விநியோகிப்பு முறைகள், விமர்சனங்கள், அழைப்பிதழ்கள் மற்றும் அழைப்பு முறைகள், அவற்றினூடு கூடவே நகர்ந்த பதிப்பு முறை மாற்றங்கள் அவற்றினூடே வெளித்தள்ளப்படும். கருத்துநிலைகள், வர்க்க மற்றும் பால்நிலை நிலபரங்கள் என அவை வரலாற்றெழுத்துக்கான பெருந் தடயமாகி விடுகின்றன.

யாழ்ப்பாணத்திற்கு இவ்வகைப்பட்ட காட்சி புதியதும், முன்னோடியானதுமாகும். மேற்படி குறிக்கப்பட்ட ஆவணங்களில் பலவற்றையும் அருந்தலான சந்தர்ப்பங்களை விடுத்துப் பார்த்தால் பொதுவாக நாம் சேகரிப்பதில்லை என்பது மட்டுமல்ல: அவற்றின் தேவை முடிந்த பின் அவற்றை எப்போதும் வீச வேண்டிய பொருளாகவோ அல்லது கழிவாகவோதான் நாம் பார்த்துப் பழகியிருக்கிறோம். ஆனால், அவை தமது காலகட்டத்தின் பிரதிநிதித்துவங்களும், அதனால் குறித்த விடயங்களின் கடந்து வந்த காலங்களின் தடய மூலங்களுமாகும் என நாம் சாதாரணமாகக் கருதுவதில்லை என்பதோடு. அவற்றைக் காட்சிநிலைப் (exhibiton) படுத்தலாம் எனவும் நாம் எண்ணுவதில்லை. இவ்விரண்டு வகையிலும் இக்காட்சிக்கு ஒரு முன்னோடித் தன்மை ஏற்பட்டு விடுகிறது.

ஒருவகையில் கடந்து வந்த காலத்தின் [illegible]களைச் சேகரிக்கும் செயற்பாடாகவும், மறுபுறம் ஒருங்கு சேர்த்துப் பார்த்தல் மூலமாகவொரு வரலாற்று முன்மொழிவாகவும் மாறியுள்ள மேற்படி காட்சி, இலங்கைத் தீவின் காண்பியக் கலைவரலாற்றின் எழுதப்படாத மறுபாதியை, ஒரு பிராந்திய வரலாற்றை - அதன் முதன்மையை மௌனமாக முன்வைத்துள்ளது. செயற்பாட்டிலும், நோக்கத்திலும் வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் 43 குழுவுக்கு முன்பாகவே 1937 களில் உருவான வின்சர் கலைக் கழகத்திலிருந்து, 1960 களிற் செயற்பட்ட விடுமுறைகால ஓவியக்கழகத்திலிருந்து 1990 களை இலங்கைத் தீவின் சமகால காண்பியக் கலையில் முன்னிறுத்தும் போக்கிற்கப்பால், 1980களில் யாழ்ப்பாணம் காண்பியக் கலைப் பயில்வில் நடத்திய பயணத்தின் சுவடுகள் என்றயாவும் சேர்ந்து இலங்கைத்தீவின் எழுதப்படாத அல்லது விளிம்புநிலைப்படுத்தப்பட்ட மக்களின் கதையின் தடயமாகியுள்ளன என்பதுதான் அதில் பெரிய விடயம். அவ்வகையில் இக்காட்சி ஒரு மாற்று வரலாற்றை (Alternative-history) தனது ஆவணங்களால் எழுதிச் செல்கிறது. அதேநேரம் காண்பியக் கலை பற்றிய மேற்படி ஆவணங்கள், மேற்படி காட்சிக் கையேடு குறிப்பிடுவது போல் மறுவழமாகத் தாதே ஒரு காண்பியமாக மாறியுள்ளன.

இது காண்பியக் கலையின் வரலாற்றை மட்டுங் கூறாமல், கூடவே காண்பியப் படுத்தலின் (Visualization) வரலாற்றையும் சொல்கிறது.


வெறும் காண்பியக்கலைக்கு மட்டுமின்றி, எங்களைப் போன்ற ஒடுக்கப்படுகின்ற மக்கள் குழுக்களைப் பொறுத்த வரை கடந்து வந்த,

(சூரியகாந்தி 18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் போராட்டம் புலம்பெயர்ந்தவர்கள் கைகளில்

■ ஜெரா



**லண்டன் மக்களின் மனநிலை இப்போது எப்படியிருக்கின்றது?**

லண்டனை மையப்படுத்தியே புலம் பெயர் தமிழ்மக்களின் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கை இராணுவ புலனாய்வுத் துறையின் கவனிப்பு லண்டனிலும், புலம்பெயர் நாடுகளிலும் அதிகம் தீவிரமாயிருக்கின்றது. உண்மையில் ஈழப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் இலங்கை அரசும், மஹிந்தவும் எதிர்கொண்ட மிகப் பெரிய சவால் புலம்பெயர் தமிழர்கள்தான்.

ஆகவே அதை முடக்க அவர்கள் புலனாய்வுத் தாக்குதல்களை ஆரம்பித்தனர். மக்களை போராட்டத்துக்கு எதிராகத் தூண்டிவிடுவது இதில் பிரதானமானது. சாதிப்பிரச்சினைகள், பிரதேசவாதப் பிரச்சினைகள், உட்கட்சிக் குரோதங்கள் என பல்வேறு விதப்பட்ட பிரச்சினைகளை புலம் பெயர் தளத்தில் அரசு தன் ஆள்களை வைத்து தூண்டிவிடுகின்றது. இயக்கம் இருக்கும் வரைக்கும் இப்படியான பிரச்சினைகள் எழுந்ததில்லை. தலைமைப்பீடம் கேள்விக்குறியான நிலையில் இந்த சூழல் உருவாகியுள்ளது. இங்கு இருக்கும் தமிழர் அமைப்புகளுக்குள்ளும் ஊடுருவி தமது இனத்துரோக வேலைகளைச் செய்கின்றனர். ஆனாலும் புலம்பெயர் தமிழர்கள் இதையும் பெரும் சவாலாக எதிர்கொண்டு போராடிவருகின்றனர். லண்டனுக்கு ராஜபக்ஷ வந்திருந்தபோது அவரை ஓட ஓட விரட்டியடித்தது நினைவிருக்கலாம். ஆகவே எழுச்சியிலும், போராட்டத்திலும் இதுவரை எந்த வீழ்ச்சியும் ஏற்படவில்லை. இங்கிருக்கின்ற ஒவ்வொரு தமிழனும் அதே வீரியத்துடன் தான் இருக்கின்றான்.

**குறிப்பாக நீங்கள் நடத்திய போராட்டம் எவ்வாறானது? அது எப்படி உருவானது?**

முதலில் நாங்கள் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றையே ஒழுங்கு படுத்தியிருந்தோம். ஒரு நாள் அதாவது கொட்டும் பனியிலும், குளிரிலும் 24 மணிநேரம் தொடர்ச்சியாகப் போராடினோம். ஆகவே மறுநாள் மக்கள் வெகுவாகக் குறைந்தனர். இதனை சாதகமாகப் பயன்படுத்திய லண்டன் பொலிஸார் எம்மைக் கலைந்து போக எச்சரித்தனர். அதனால் போராட்டம் இளைஞர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. எமது கொடியால்தான் பிரச்சினை என்று கூறி புலிக் கொடியைப் பறித்து கிழித்தெறிந்தனர். அதை வைத்திருப்பவர்கள் பயங்கரவாதிகளாக்கப்படுவர் என்று எச்சரித்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே எமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தோம்.

**அது வெற்றியளித்ததா?**

ஓரளவுக்கு வெற்றியளித்தது. உலகம் முழுதும் இருந்து வந்த ஊடகங்கள் அதனைப் பதிவுசெய்தன. 12 நாடுகளில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் அந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பின்பு கொடி பறிக்கப்படவில்லை. தமிழர்கள் போராட்டம் நடத்தினால் அதற்கான பாதுகாப்பை லண்டன் பொலிஸார் தரும் நிலை உருவாகியிருக்கின்றது. எமது போராட்டம் அதற்குப் பின்பு விரிவடைந்தது. லண்டன் முழுதும் மக்கள் மயப்பட்ட போராட்டங்களை இதன்பயனாகவே தொடர்ந்தும் முன்னெடுக்கக் கூடியதாக இருக் கின்றது. ஈழத்தில் நடைபெற்றது பெரும் இனப் படுகொலைதான் என்பது பல்வேறு உலகநாடுகளுக்கும், உலகநாட்டு மக்களுக்கும் தெரியவந்தது.

**புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் தற்போதைய நிலை எப்படியிருக்கின்றது. அதன் இயக்கம் யார் கையில்?**

2009க்குப் பின்னர் புலம்பெயர் அமைப்புக்களை இயக்கும் சக்தி இல்லாது போய்விட்டது. ஏற்கனவே இருந்த அமைப்புகள் அதன்படியே இயங்குகின்றன. இப்போது புதிதாகவும் சில அமைப்புகள் முளைத்திருக்கின்றன. அவர்களுக்கு யார் பின்னணி என்பதை கண்டறிய காலமெடுக்கும். ஒவ்வொரு நாட்டிலும் இவ்வாறு உருவாகியிருக்கும் புதிய அமைப்புகளுக்கும், ஏற்கனவே விடுதலைப்புலிகளால் உருவாக்கப் பட்டிருந்த அமைப்புகளுக்கும் இடையில் சில முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால் சில போராட்டங்களில் அவை இணைந்து செயற்படத் தயங்குவதில்லை. இவற்றுள் ஊடுருவியிருக்கின்ற சிங்கள புலனாய்வு சதிகாரர்களால் மற்றும் ஏற்கனவே புலிகளோடு இருந்து தற்போது இலங்கை அரசாங்கத்தோடு இருக்கின்றவர் களால்தான் அவ்வப்போது பிளவுகள் தூண்டிவிடப்படுகின்றன.

ஆனால் எதிர் காலத்தில் இதில் மாற்றம் ஏற்படவாய்ப்பிருக்கின்றது. 2009இல் இருந்த பிளவுகள் இன்றில்லை. துரோகிகளும், புலனாய்வாளர்களும் மக்களால் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

**எப்படியான செயற்பாடுகளின் ஊடாக புலம்பெயர் அமைப்புகளும், மக்களும் சிதைக்கப்படுகின்றனர்?**

சில அமைப்புகள் தமிழீழம் சாத்தியமில்லை. அந்த எண்ணத்தைக் கைவிடும்படி வேண்டுகோள் விடுத்து வருகின்றன. வீதிப் போராட்டங்களிலும், கவனவீர்ப்பு போராட்டங்களிலும், உண்ணாவிரதப் போராட்டங்களிலும் ஈடுபடுவது எவ்வித பயனையும் தராது எனப் பிரச்சாரம் செய்கின்றனர். புலிக்கொடியை வைத்திருப்பதுதான் இப்போதிருக்கின்ற பெரும் பிரச்சினை என்கின்றனர். இது வெள்ளையர்களுக்கு பிடிப்பதில்லை என்கின்றனர். புலிகள் அமைப்பே சிதைந்த பின்னர் தமிழீழம் சாத்தியமே இல்லை என்று பிரசாரம் செய்கின்றனர். இதுபோன்ற செயற்பாடுகளாலும்; [illegible] எண்ணத் [illegible] போராளிகள் என்ற பெயரில்தான் ஊடுருவியிருக்கின்றனர். யாரையும் நம்பி களமிறங்க மக்கள் அஞ்சும் நிலை புலம்பெயர் தளத்தில் உருவாகிவருகின்றது.

**பிரான்ஸில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் பரிதி சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், மக்களில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதா?**

பரிதி அவர்களின் கொலைக்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்களின் போராட்ட முனைப்பு மங்கிப் போகும் என்றே பலரும் கருதினர். அதைக் கருதியே கொலையையும் புரிந்தனர். ஆனால் நிலைமை வேறானது. அங்கிருக்கின்ற அனைத்து மக்களும், அமைப்புகளும் ஒன்றுகூடி இன விடுதலைக்காக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிலையை அவரின் கொலை உருவாக்கியது. மக்கள் இன்னும் வீரியமாக பணியாற்றத் தொடங்கியிருக்கின்றனர்.

**தமிழீழம்?**

அதற்காகத் தானே போராடுகின்றோம். 30 வருடங்களிலும் கிடைக்கலாம். 300 வருடங்களிலும் கிடைக்கலாம். ஆனால் கிடைத்தே தீரும். 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழத்துக்கான போராட்டத்தை புலம்பெயர் தமிழர்களாகிய நாம் கையிலெடுத்திருக் கின்றோம். அது காலநீட்சியில் வேறுவடிவம் எடுக்கவும் வாய்ப்பிருக்கின்றது. ஆகவே தமிழீழம் கிடைக்கும் என்ற தளராத நம்பிக் கையில் எமது போராட்டம் வளர்ந்துகொண்டிருக்கின்றது.

**புலம்பெயர் தமிழர்களும் தமிழகமும் ஒரு கோட்டில் இணைந்து ஈழத்துக்கான போராட்டங்களை முன்னெடுப்பது சாத்தியமானதா?**

உண்மையில் உணர்வாளர்கள் அனைவரும் ஒரே கோட்டில்தான் நிற்கின்றனர். தமிழக அரசியல் வாதிகளும், அறிவுஜீவிகளும் புலம்பெயர்நாடுகளில் நாம் நடத்தும் போராட்டங்களில் கலந்து கொள்கின்றனர். அதற் கான ஜனநாயக உரிமை ஐரோப்பிய நாடுகளில் உள்ளது. ஆனால் இந்தியாவில் அது இல்லை. நாம் அங்கிருந்து வந்து அல்லது வேறு நாட்டில் வாழும் ஒருவர் இங்கு பொது இடத்தில் அரசியல் பேச முடியாது. சட்டச் சிக்கல்கள் ஏற்படும். இந்த நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பு என்ற அறிவிப்பால் நாம் இங்கே அடக்கி வாசிக்க வைக்கப் படும் நிலையிருக்கின்றது. ஆகவே இப்போதைக்கு இருவேறு பாதைகளிலும், இருதேச மக்களும் பயணித்தாலும் உணர்வு ரீதியாக ஒரு நேர் கோட்டிலேயே பயணிக்கின்றனர்.

**முன்னாள் போராளிகளைப் புலம்பெயர் சமூகம் எப்படி நோக்குகின்றது?**

இயக்கம் இருக்கும் போது போராளிகளுக்கு எப்படி மரியாதை கொடுத்தார்களோ, அப்படியே இப்போதும் மரியாதையளிக்க விரும்புகின்றனர். ஆனால், சிங்கள அரசின் சதிவேலைகளால் முன்னாள் போராளிகளை சந்தேகத்துடன் பார்க்க வேண்டியதாயிருக்கின்றது. போராளிகள் என்ற முகத்தோடு புலம்பெயர் தளத்துக்கு வருபவர்கள் சிலர் செய்யும் சதி வேலைகளால் இந்தநிலை உருவாகியுள்ளது. இறுதி நேரத்தில், சரணடைந்த பின்னர், ஓமந்தையில் முன்னாள் போராளிகள் சிலர் நடந்து கொண்ட விதம் எம்மத்தியில் ஒவ்வொரு போராளியின் மீதும் பெரும் சந்தேகத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது. புலம்பெயர்நாடு களிலும் சில முன்னாள் போராளிகள் செய்யும் வேலைகளாலும் அவர்களை சந்தேகக் கண் கொண்டே பார்க்க வேண்டியுள்ளது. இவற்றையும் தாண்டி உதவிசெய்ய முன்வருகின்றோம்.

**முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப புலம்பெயர் தமிழர்களிடம் ஏதும் திட்டமிருக்கின்றதா?**

இலங்கையில் யாரும் நேரடியாக உதவ முடியாது. எனக்கு தெரிந்த சில அமைப்புகள் ரகசியமான முறையில் உதவி வருகின்றன. இங்கு நடக்கும் நிகழ்வுகளில் சேகரிக்கப்படும் நிதி அவர்களுக்கே அனுப்பப்படுகின்றது. விடுதலைப் புலிகள் இருக்கும் காலத்தில் புலம்பெயர் தளத்தில் பாரிய நிதியிருந்தது. ஆனால் இன்று அந்த நிலை யில்லை. யாரும், எந்த ஓர்

“சு. பரமேஸ்வரன் புலம் பெயர்ந்து லண்டனில் வசித்து வரும் தமிழின உணர்வாளர். 2009 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழின அழிப்புப் போர் உச்சம் பெற்றபோது ஈழத்தமிழர்களுக்காக பிரிட்டிஷ் நாடாளுமன்ற வளாகத்தில் 23 தினங்கள் உண்ணாநோன்பு இருந்தவர். 2012 ஆம் ஆண்டு லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோது சர்வதேசத்தின் கவனத்தைத் திருப்ப மீண்டும் உண்ணாவிரதமிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி.”

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்



43

நெடுந் தொடர்

■ பா.உண்மை

கெட்டிஸ்பர்க் போரில் 6,000 பேர் இறந்து போனார்கள். இறந்தவர்களைப் புதைப்பதற்குக் குழிதோண்ட முடியாமல் தற்காலிகமாக மண்ணைத் தோண்டிப் புதைத்திருக்கிறார்கள். பிறகு, இறந்த எல்லா வீரர்களின் சடலங்களும் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டன. அந்தக் கல்லறையை நினைவுச் சின்னமாகப் பராமரிக்க வேண்டும் என்று அரசு தீர்மானித்தது.

1863 நவம்பர் 19 ஆம் திகதி கெட்டிஸ்பர்க்கில் நடந்த விழாவில் கலந்துகொண்டு லிங்கன் பேசினார். Gettysburg Address என்று போற்றப்படும் லிங்கனின் உருக்கமான உரை அமெரிக்க தேசத்தின் மீதும், மனிதர்கள் மீதும் அவர் கொண்டிருக்கும் அன்பை அழகாக வெளிச்சம் போட்டுக் காட்டியது.

'எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால், நமது முன்னோர்கள் இந்தக் கண்டனத்துக்குச் சுதந்திரத்தைக் கருவில் சுமந்து கொண்டிருக்கும் ஒரு புதிய தேசத்தைக் கொண்டுவந்தார்கள். எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்களாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கொள்கைக்காக, அதை அர்ப்பணித்தார்கள்.

இப்போது நாம் ஒரு பெரிய உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருக்கிறோம். அல்லது சுதந்திரத்தைக் கருத்தரித்த, சுதந்திரத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்தத் தேசம், நீண்ட காலம் நிலைத்திருக்க முடியுமா என்ற சோதனையில் இறங்கியிருக்கிறோம். அந்தப் போர் நடக்கும் ஒரு பெரிய போர்க்களத்தில் நாம் கூடியிருக்கிறோம். அந்தத் தேசம் நீடூழி வாழ வேண்டும் என்பதற்காக, தங்களுடைய வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு, அந்தப் போர்க்களத்தின் ஒரு பகுதியை இறுதியாக ஓய்வெடுக்கும் இடமாக அர்ப்பணிப்பதற்காக, நாம் இங்கே வந்திருக்கிறோம். நாம் அப்படிச் செய்வது ஒட்டுமொத்தமாகச் சரியானதும் நியாயமானதும் ஆகும்.

ஆனால், கொஞ்சம் பரந்துபட்ட சிந்தனையில் பார்த்தால், இந்த நிலத்தை நம்மால் அர்ப்பணிக்க முடியாது - நம்மால் புனிதமாக்க முடியாது -நம்மால் பரிசுத்தமாக்க முடியாது. இங்கு போரிட்டு மரணமடைந்தவர்களும் உயிரோடு இருப்பவர்களும் இதைப் புனிதமாக்கியிருக்கிறார்கள். மிக எளிய சக்தியை உடைய நம்மால், அதைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது. இங்கு நாம் பேசுவதை, உலகம் கொஞ்சம் கவனித்தாலும் கவனிக்கும், நீண்ட காலத்துக்கு அதன் நினைவில் இல்லாமல் போனாலும் போகும், ஆனால், அவர்கள் செய்ததை உலகத்தால் மறக்க முடியாது. இங்கு போரிட்டு மடிந்தவர்கள் செய்து முடிக்காமல் விட்டுப் போன பணியை, செய்து முடிக்க உயிரோடு இருக்கும் நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். நமக்கு முன்னால் மீதமிருக்கும் மிகப் பெரிய கடமைக்கு நம்மை அர்ப்பணிப்பதற்காக, நாம் இங்கே கூடியிருக்கிறோம். எந்த இலட்சியத்தை அடைவதற்காக அவர்கள் தங்கள் உயிரை இழந்தார்களோ, அந்த இலட்சியத்தை நாம் விசுவாசத்துடன் நிறைவேற்றுவோம். அவர்களுடைய உயிர்த் தியாகம் வீண் போகாது என்று நாம் உறுதி ஏற்போம். கடவுளின் அருளால் இந்தத் தேசம், சுதந்திரத்தோடு கூடிய ஒரு புதுப் பிறவியை எடுக்கட்டும். மக்களின், மக்களால், மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தை உலகத்திலிருந்து அழிக்க முடியாது.

கெட்டிஸ்பர்க், விக்ஸ்பர்க் வெற்றி அமெரிக்க யூனியனுக்குப் புதுத் தெம்பைக் கொடுத்தது. இப்போது கிட்டத்தட்ட மிசிசிபி ஆறு முழுவதும் அமெரிக்க யூனியனின் கைகளில், தென்பகுதிக் கூட்டமைப்பு மாநிலங்களின் படை, வடக்குக்குப் படை எடுத்து வரவேண்டுமென்றால், அதற்கு மிசிசிபி ஆறு நிச்சயம் மிகப் பெரிய இடைஞ்சலாக இருக்கும். தென்பகுதி மாநிலங்கள் மிசிசிபி ஆறு மூலமாக நடத்தி வந்த வர்த்தகமும் இதனால் பாதித்தது. இப்போது தென்பகுதிப் படைகளால் அமெரிக்க யூனியன் படைகளுடன் நேருக்கு நேர் மோத முடியவில்லை. எனவே, மிசிசிபிக்கு மேற்கே கெரில்லாப் போரில் இறங்கின.

★ ★ ★

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நியாயம் வைத்திருப்பார்கள். மற்றவர்களுக்குத் தவறாகத் தெரிகிற விடயம் அவர்களுக்குச் சரியெனப்படும். தனி நபர்கள் மட்டுமல்ல. அரசு இயந்திரங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.

அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்படுகிற தவறுகள், சாதாரண அப்பாவி மக்களைச் சமயத்தில் பிழிந்தெடுத்துவிடும். எதிர்ப்புகள் வலுக்கிறபோதுதான், அரசு இயந்திரம் அதைத் தவறு என உணர்ந்துகொள்ளும். அப்படித்தான் லிங்கனின் அரசிலும் நடந்தது.

அப்போது, நாட்டின் அவசரத் தேவைகளில் மிக முக்கியமாக இருந்தது படைவீரர்கள். இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்ப்பது, ஒரு பக்கம் ஆள்கள் போரில் பலியாகிக் கொண்டே இருக்க, இட்டு நிரப்ப வேண்டுமே! 1863 மார்ச் 3 ஆம் திகதி கட்டாய இராணுவ சேவைச் சட்டம் அமுலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தால் அமெரிக்க யூனியனில் இருந்த பாதிப்பேர் கொதித்தெழுந்துவிட்டார்கள். அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

ஒருவர் இராணுவத்தில் சேருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு எதனாலோ இராணுவத்தில் வேலை பார்க்கப் பிடிக்கவில்லை. உடனே, 'நான் வீட்டுக்குக் போகிறேன் சேர்' என்று சொல்லிவிட்டு, அவர்பாட்டுக்குப் போய்விட முடியாது. அவருக்குப் பதிலாக, இன்னொரு ஆளைச் சேர்த்துவிட்டுத்தான் விலக முடியும் என்றது சட்டம். மாற்று ஆளை ஏற்பாடு செய்ய முடியவில்லையா? அதனாலென்ன பரவாயில்லை. 300 டாலர்கள் மாற்றுத் தொகையாக (அதாவது அபராதம், நஷ்ட ஈடு மாதிரி) கொடுத்துவிட்டு, நீங்கள் பாட்டுக்கு வீட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கலாம் என்றது சட்டம்.

இந்தக் கட்டாய இராணுவச் சேவைச் சட்டத்தில்46,000 பேர் இராணுவத்தில் சேர்ந்தார்கள். 1,18,000 பேர் மாற்று நபர்களாகப் படையில் சேர்ந்தார்கள். இந்தச் சட்டத்துக்கு சில மாநிலங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. பொஸ்டன், டிராஸ், நெவார்க் ஆகிய நகரங்களில் கலவரம் வெடித்தது. இந்தக் கலவரங்களையெல்லாம் கூட, லிங்கனின் அரசு அடக்கி ஒடுக்கி விட்டாலும், ஒரு கலவரத்தில் கொஞ்சம் ஆடித்தான் போனது. அது நியூ யோர்க் நகரில் நடந்த கலவரம். 1863 ஜூலை 13. படைகளுக்கு ஆளெடுக்கும் இடத்தைச் சுற்றி வளைத்தது ஒரு கும்பல். அந்த அலுவலகத்தையே சூறையாடியது. அதோடு, அந்த அலுவலகத்துக்கு அருகே இருந்த நகைக்கடைகள், மளிகைக்கடைகள் எல்லாவற்றிலும் புகுந்து, எல்லாவற்றையும் நாசம் செய்தது இந்தக் கும்பல். நகரில் இனக்கலவரம் வெறியாட்டம் போட்டது. கறுப்பின மக்கள் தாக்கப்பட்டார்கள்.


நியூயோர்க்கில் தொடர்ந்து பல நாள்களாகக் கலவரம். பத்து லட்சம் டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன. இந்தக் கலவரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 500 இலிருந்து 1,200 பேர் இருக்கலாம் என்று குத்துமதிப்பாகச் சொன்னார்கள். உண்மையில் அதைவிட அதிகமாகத்தான் இறந்தவர்களின் எண்ணிக்கை இருந்தது. கலவரத்தை அடக்க லிங்கன் இராணுவத்தை அனுப்ப வேண்டியிருந்தது. லிங்கன் நியூயோர்க் நகரில் ஒரேஒரு மாதம் தான் படைக்கு ஆள் சேர்ப்பதை நிறுத்தி வைத்தார். ஒரு மாதம் கழித்து மறுபடியும் ஆள் சேர்க்கும் வேலையை ஆரம்பித்துவிட்டார். 1863 ஆம் வருடம் கடைசியில் அமெரிக்க யூனியனில் நடந்த பொதுத்தேர்தல்களில் முக்கியமான விடயம் ஆகிவிட்டது கட்டாய ராணுவ சேவைச் சட்டம். *(மீட்பர் வருவார்)*



உதயனின் "சூரியகாந்தியில்" உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.


உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:

சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 258



அனுப்புபவர் பெயர்:...............................................

விலாசம்:...............................................

...............................................

கையொப்பம்:...............................................

### இடமிருந்து வலம்

1. ஒன்றைச் செய்வதற்கு முடியாதவன்
6. புழுதியாய்ப் பறப்பது
7. குஞ்சு வருவது இதிலிருந்து
9. தேர் போன்ற வாகனம்
10. பாவம் புரிந்தவன்
11. குறிஞ்சி நிலத்துக்கு உரியவன்
13. பிள்ளைப்பேறு கிட்டாத தன்மை
14. விழி
15. சடலம்
16. பெருக்கற் குறி
17. கனம்
19. இணக்கச் சொல்
21. கல் தோன்றிப் பின்தோன்றியது
22. கூட்டுவதும் பெருக்குவதும் இதனால்

### மேலிருந்து கீழ்

1. கரம் உயர்த்து
2. இர
3. மிலேச்சன்
4. மட்டமானது
5. ஒரு பலகார வகை
8. அரிசியைத் தீட்டக் கிட்டுவது
9. இயலாமல் பணிவது
10. இடையில் இல்லாததை இணைப்பது
12. ஓர் இராசி
13. நாற்றம்
15. தடி
16. பத்தாம் திதி
17. கால்
18. வாகனம்
20. போதை தருவது
21. சமய

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 256 க்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) அறுசுவை (4) நாகம் (6) பரிகாரம் (8) பதம் (10) வித (12) துரு (13) ஆயர்பாடி (15) மகரம் (17) கர்வம் (18) தராசு (20) இருட்டு (21) புலம்பல் (22) சைகை

### மேலிருந்து கீழ்

(1) அறுபது (2) சுபம் (3) வைரி (4) நாரதர் (5) தம் (7) காவியம் (9) தருமர் (11) தடி (13) ஆரம் (14) பாதராட்சை (16) கவளம் (17) கற்பு (18) தரு (19) சுடுகை (20) இல்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 258**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (03.04.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.258இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 07.04.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 256 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**மு.கலைச்செல்வி,**
1 ஆம் வட்டாரம்
கல்யாண வேலவர் கோவிலடி,முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
**வ.இரத்தினசிங்கம்,**
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு**
**சி.தருண்,**
யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை
அராலி.

**4 ஆம் பரிசு**
**பி. சாருஜா,**
இல.117, மூர் வீதி, மன்னார்.

**5 ஆம் பரிசு**
**நகுலன் லக்ஷிகி,**
காளிகோவிலடி, துர்க்காபுரம், தெல்லிப்பழை.

**பாராட்டுப் பெறுவோர்**

**க.ராதாதேவி,**
தாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

**திருமதி தர்மராசா ரதி,**
கைதடி மத்தி, கைதடி.

**செ. சின்னத்துரை,**
131 டி -10, உருத்திரபுரம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

## அகால கால நினைவும் ஆற்ற முடியா வலியும்.....



எட்டு நாள்கடந்தும் ''பிணம்''
பெட்டியோடு கரைந்து உறைய
வெளிநாட்டில் வாழ.......
பெற்ற பிள்ளைகள் வரவுபார்த்து
'சவம்' தவம் கிடக்கும்
குடல் எடுத்த ஆத்மா
நிறம் கெட்டு உருவற்று அழிய
கடல் தாண்டி வருவர்
மக்கள்,மருகர் பறந்து
கண்ணீர்ப் பூக்கொண்டும்,
காசு பொதிகொண்டும்
என்ன வேடிக்கை...
செத்த பிறகே என்
முகத்தில் முழியென்று
நீத்த ஜீவன் சொல்லிச்சோ?
என்னவோ ....?

உயிரிருக்க வந்து பார்த்து
உச்சி முகர்ந்து
''அம்மா'' என்றழைக்கும்
ஒற்றைச் சொல்லுக்கு
ஈடாகுமா ஏதும்?
பனி விழும் நாட்டுப் பணத்தைப்
''பாண்டிற்கும்'' பாடைக்கும்
கணிசமாய்க் கரைத்தது விட்டுக்'
காவியாகி விடுவர்
''கடவுச்சீட்டுக்காரர்''

அயல் சுற்றம் பிள்ளைகுட்டி
எல்லோருமே விட்டு விட்டுப்போக
இறந்த அந்த ''அநாதை''யின்
காலைச் சுற்றித் திரிந்த
நாய் மட்டும் படுத்திருக்கும்
அவள் வீட்டு வாசல் படியில்
அகலாமல் நன்றியுடன்
நன்றி கெட்டது நாயல்ல...
...............................?

தேனாள் சுரேஷ்
வேலணை

## மறப்பேனா தாய் மண்ணை....



தத்தித் தவழ்ந்து சென்று அள்ளித்தின்ற
முற்றத்து மண்ணை
முதன் முதல் ''அம்மா'' எழுதிய
மாமர நிழலின் மண்ணை
கெந்திக் கோடு விளையாடிய
தெருவோர மண்ணை
பள்ளி கொண்டு செல்ல
அப்பாவுடன் கத்தரி நாட்ட
கொத்திய மண்ணை
வானொலி செய்த மண்ணை
அண்ணாவுடன் இடிந்த சுவரை
கட்டக் குழைத்த மண்ணை
விளையாட்டுப் போட்டியில் கால் தடக்கி
விழுந்து முத்தமிட்ட மண்ணை
இடம் விட்டு இடம் பெயர
பல தறப்பால்களை தாங்கிய மண்ணை
தண்ணீர்க்கு அவதிப்பட்டு
கடற்கரை ஓரத்தில் தோண்டிய மண்ணை
எம் வீரப் புதல்வர்களை இறுதிவரை
தாங்கிநின்ற மண்ணை
எறிகணை விழுந்து என் உடலை
மூடிய மண்ணை
அக்கணமே நான் இறக்க
அதே குழிக்குள் என்னைவைத்து
புதைத்த மண்ணை
விண்ணில் இருந்து எப்போதும் பார்ப்பேன்.
என் சொந்த மண்ணை
மறப்பேனா தாய் மண்ணை.

யாழ் மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றி பெறலாம் வாங்க

43

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

## உறவுகள் முறியும் போது ஏற்படும் பாதிப்பைச் சமாளிப்பதற்கான 10 வழிகள்

**பேசுங்கள் :-** பேசித் தீர்க்கக்கூடிய விடயமாக, இருந்தால் அதை எளிதாகத் தீர்த்து விடலாம். ஆனால் பிரச்சினை முற்றிவிட்டால் பிரிந்துவிடுவது நல்லது. அவரவர் வாழ்க்கையை அவரவர் வாழ வேண்டும்.

**ஏனென்று புரிந்து கொள்ளுதல் :-** பிரிவதற்கு உண்மையான காரணம் என்னவெனத் தெரிந்தால், அதை எளிதாகக் கையாளலாம். ஆனால் பிரச்சினைக்கான காரணம் என்னவெனத் தெரியாவிட்டால் அதைக் கையாள்வது சிரமம். அதனால் பிரச்சினையின் தன்மையை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

**உங்களை நிந்தித்துக் கொள்ளாதீர்கள் :-** எது நடந்ததோ அது நடந்ததுதான். அதை நாம் நினைத்தாலும் திரும்பப் பெற முடியாது. எதிர்காலத்தில் கவனத்தைச் செலுத்துங்கள். கடந்த காலத்தை மறந்து விடுங்கள்.

**வீட்டிலேயே அடைந்து கிடக்காதீர்கள் :-** ஒரு நண்பனுடன் பிரிவு ஏற்பட்டதற்காக வீட்டிலேயே அடைந்து கிடக்காதீர்கள். உங்களுக்கு வேறு நண்பர்கள் இருக்கிறார்கள் அல்லவா, அவர்களிடம் போய்ப் பேசுங்கள். அதே சமயம் அங்கேயும் போய் உங்கள் பிரச்சினைகளைச் சொல்லி அவர்களை அலுக்கச் செய்யாதீர்கள்.

**யதார்த்தமானவராக இருங்கள் :-** உறவு முறியும் போது, அதனால் ஏற்படும் துயர உணர்ச்சிகளை, தற்போதைய விடயங்களுடன் கலந்து விடாதீர்கள். இது வேறு, அது வேறு என்று தனித்தனியாக வைத்துக் கொள்ளுங்கள்.

**அலட்டிக் கொள்ளாதீர்கள் :-** உங்களுடன் பேட்மிண்டன் விளையாடும் நண்பரின் நட்பு முறிந்துவிட்டால், அதற்காகப் பெரிதும் அலட்டிக் கொள்ளாதீர்கள். இனிமேல் உங்களுக்கு புதன்கிழமை மாலை ஃப்ரீ என்று அர்த்தம். அவ்வளவுதான்! இதற்கான மற்ற இடங்களுக்குச் செல்வதை நிறுத்திவிடாதீர்கள்.

**போக விடுங்கள், ஆக வேண்டியதைப் பாருங்கள் :-** தவிர்க்க முடியாத சில விடயங்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். உறவு பிரிந்ததினால் ஏற்பட்ட இடைவெளியை, இன்னொரு உறவு நிரப்பும் அவ்வளவுதான். விடயத்தை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

**ஒதுங்கிப் பாருங்கள் :-** சில சமயத்தில் இந்தப் பிரச்சினையிலிருந்து வெளிவர இரண்டு மூன்று நாள்களுக்கு வெளியூர் செல்வது நல்லது. இது அந்தப் பிரச்சினையை மறக்கச் செய்யும். உறவு ஏன் பிரிந்தது என்பதற்கான காரணத்தையும் யோசிக்க வைக்கும்.

**பட்டியலிடுங்கள் :-** நீங்கள் இருவரும் சேர்ந்து செய்த நல்ல காரியங்கள் அனைத்தையும் பட்டியலிடுங்கள். அவரைச் சந்தித்திருக்காவிட்டால் மேற்சொன்ன நல்ல காரியங்கள் எதுவும் நடந்திருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நல்லதைக் கொண்டாடுங்கள்.

**நீங்கள் தனியாள் இல்லை :-** சில பேருடைய நட்பு எப்போதும் முடிந்தே போகாது. அத்தகைய நண்பர்களின் நட்பு இருக்கும் வரை நீ தனியாக இருப்பதாக நினைக்கத் தேவையில்லை. இது போன்ற சமயங்களில் உங்களைப் போன்று துயரத்தை அனுபவித்த நபர்களுடன் விடயங்களைப் பகிர்ந்து கொள்வது கூட நல்ல விடயம்தான்.

**அண்டை வீட்டார்-** நம் அண்டை வீட்டில் வாழ்பவர்கள் நண்பர்களைப் போன்று முக்கியமானவர்கள். நீங்கள் நண்பர்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் அண்டை வீட்டுக்காரர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது. அண்டை வீட்டாருடனான நட்பு வாழ்க்கையை எளிதாக்குவதுடன், மகிழ்ச்சியானதாகவும் ஆக்கும். அதேசமயம் அண்டை வீட்டாருடன் நல்ல உறவு இல்லாவிட்டால், அதுவும் துன்பமயமானதாகி விடும்.

ராகவன் அல்பி

எது நடந்ததோ அது நடந்ததுதான். அதை நாம் நினைத்தாலும் திரும்பப் பெற முடியாது. எதிர்காலத்தில் கவனத்தைச் செலுத்துங்கள். கடந்த காலத்தை மறந்து விடுங்கள்.

---

## எந்த வரலாற்று புத்தகத்தில்

போதி மாதவன்
கானகத்தில்
அலைந்தான்
பகலவன்
உச்சிப் பொழுதில்
உத்தமன்
உணர்விழந்தான்
பசியும் தாகமும்
வாட்ட
நினைவிழந்தான்
நிலத்தில்
வீழ்ந்தான்
இடைச்சிறுவன்
மாதவனைக்
கண்டு பதறினான்
ஆட்டுப்பால்
அன்பால்
அளித்து
அண்ணலை
மயக்கம்
தெளிவித்தான்
பசுந்தழை
பரம்பி நிழலிட்டு
மகிழ்ந்தார்
வரலாறு
கற்பித்த
பண்பான
பாடம் இது
பாவமறியா
பாலகனை
பசி தீர்த்து
அவன் அரும்
உயிரைக்
குடிப்பதற்கு
எந்த வரலாற்று
புத்தகத்தில்
கற்றுக்
கொண்டனர்
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களும் மனிதர்கள்தான்..!!!



பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டால் பெண்களின் உழைப்பை உறிஞ்சுகின்ற சமூகமாக ஆணாதிக்க சமூகம் இருந்து வருவதனை கண்கூடாக காணமுடிகின்றது. ஏழ்மைச் சூழலைக் கொண்ட குடும்பங்களில் நாம் இதனைத் தெளிவாகக்காண முடியும்.

சமுதாய எழுச்சியில் பெண்களின் வகிபங்கு என்பது அளப்பரியது. பெண்களைப் புறந்தள்ளிய எந்தவொரு சமூகமும் தேசிய சங்கமிப்பை ஏற்படுத்திக் கொண்டதாக சரித்திரமே இல்லை. இதனை உலக வரலாறுகள் நிரூபித்துள்ளன. எனினும் தந்தை வழிச் சமூக அமைப்பு என்று கூறப்படும் கருத்தியலின் அடிப்படையில் ஆணாதிக்க தன்மை மேலோங்கியுள்ள நிலையில் பெண்களின் கருத்துக்கள் எந்தளவுக்கு உள்வாங்கப்படுகின்றன என்பதும் சமூக மட்டத்தில் அவர்களது தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதும் கேள்விக் குறியாகவே உள்ளது.

பெண்கள் சமூகத்தின் கண்கள் என்பது ஆண்களாலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு விடயமாகும். எனினும் இது வெறும் வாய் மொழிக் கூற்றாகவே உள்ளதேயன்றி நடைமுறையில் பெண்கள்சார் அபிவிருத்தியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மேலெழச் செய்வதற்கும் ஆண்களின் ஒத்துழைப்பு போதுமானதாக அமையவில்லை. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெண்கள் இன்று பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருவதனை எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. அரசியல், சமூகம், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற பல்வேறு மட்டங்களில் பெண்கள் இன்னும் குறிப்பிடத்தக்க எழுச்சி காணவில்லை என்பது கசப்பான உண்மையாகும்..

சமத்துவத்தின் அடிப்படையில் பெண்களின் அரசியல் பங்களிப்பை பலப்படுத்துவதும் மற்றும் சமூக, பொருளாதார அரசியல் தளங்களில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பெண்களின் பாத்திரத்தை பலப்படுத்துவதும் இருபதாம் நூற்றாண்டின் பெண்களின் உரிமைக்கான போராட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்ததென கனிலா அபேசேகர போன்ற பெண்ணிலைவாதிகள் சுட்டிக் காட்டி இருக்கின்றனர். எனினும் இந்த இலக்குகள் எந்தளவுக்கு அடையப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயப்பாடுகள் வலுப்பெற்றுள்ளன.

பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டால் பெண்களின் உழைப்பை உறிஞ்சுகின்ற சமூகமாக ஆணாதிக்க சமூகம் இருந்து வருவதனை கண்கூடாக காண முடிகின்றது. வழ்மைச் சூழலைக் கொண்ட குடும்பங்களில் நாம் இதனை தெளிவாகக் காண முடியும். பெண்களின் உழைப்பில் குளிர் காயும் ஆண்கள் பெண்களை அடிமை நிலையில் இழிவுபடுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். பாதுகாப்பற்ற சமுதாயச் சூழலில் பலிக் கடாவாகும் தன்மை கொண்டவர்களாக பெண்களே விளங்குகின்றனர். பெண்களின் உடல் ரீதியான அமைப்புகள் மற்றும் சாப்புத் தன்மை என்பன பெண்களை எளிதில் பலிக்கடாவாகும் தன்மைக்கு இட்டுச் செல்கின்றன. பஸ் வண்டியில் கூட சுதந்திரமாக பயணம் செய்ய முடியாத நிலையில் ஆண்களின் சேஷ்டைகள் பெண்களை ஆக்கிரமித்துள்ளன..

கல்வித் துறையை பொறுத்தமட்டில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலம் மலையேறிய நிலையில் தற்போது அதிகமான பெண்கள் ஆண்களைக் காட்டிலும் கல்வி அபிவிருத்தி கண்டு வருவது மகிழ்ச்சிதரத்தக்க விடயமாக உள்ளது. பொதுவாக ஆண்களைக் காட்டிலும் கல்வித் துறையில் ஈடுபாடு, குடும்பத்தினரின் ஒத்துழைப்பு என்பன மிகுதியாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். சர்வதேச மகளிர் தின கோரிக்கைகளாக பல்வேறு அமைப்புகளும் பெண்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு கோரிக்கைகளை முன் வைக் கின்றன. எனினும் இவை அனைத்தும் காற்றோடு காற்றாய் வெறும் கோரிக்கைகள், கோஷங்கள் என்ற ரீதியிலேயே முடக்கம் பெற்று வருவதனை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது. மனித உரிமை பிரகடனத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. எனினும் இவற்றின் நடைமுறை செயற்பாட்டுத் தன்மைகள் எந்தளவுக்கு சாதகமாக உருவாக்கியுள்ளன என்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதனை மறுப்பதற்கில்லை..

ஆண், பெண் சமத்துவம் பேணப்பட வேண்டும். பெண்களும் மனிதர்களே என்ற ரீதியில் அவர் தம் கருத்துக்களும் ஆண்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தந்தை வழி சமூக அமைப்பு என்ற கருத்தியல் நிலையில் இருந்து மாறுபட்டு பெண்களின் உரிமைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற சமூக அமைப்புகளின் கோரிக்கைகள் நியாயமானதே என்ற போதும் இவற்றை அடைவதற்கான வழி வகைகள் குறித்து அதீத கவனம் செலுத்த வேண்டியமை மிகவும் இன்றியமையாததாகும். கொள்கைகள் அல்லது கோரிக்கைகளின் செயற்பாட்டுத் திறன் மிக்க சமகால நடவடிக்கைகளே பெண்களின் அபிவிருத்திக்கும் எதிர்கால வாழ்வுக்கும் கை கொடுக்கும் என்பதே உண்மை.

திருமதி.வ.அற்புதன்

## சாதனைப் பெண்மணிகள்



ஒலிம்பிக்கின் முதல் வீராங்கனை என்ற சிறப்புப் பெற்றவர் பேனி டுரக் என்ற அவுஸ்திரேலிய நாட்டுப் பெண்.

எட்டு முறை ஒஸ்கார் விருது பெற்ற முதல் பெண்மணி எடித் ஹெட்.

கோல்ப் கிளப் சம்பியன்ஷிப் பட்டத்தை அதிக முறை வென்ற முதல் பெண் மாரஜோரி எடி என்ற கனடா பெண்

ஐ.நா.சபையின் முதல் பெண் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் 1953 ஆம் ஆண்டு பதவி வகித்தார்.

கேரம் விளையாட்டின் முதல் உலக மகளிர் சம்பியன் பெற்றவர் அனுராஜ்.

19 வயதில் உலக அளவில் பளு தூக்கும் போட்டியில் 2 தங்கப்பதக்கம் பெற்ற முதல் இந்திய வீரர் கர்ணம் மல்லேஸ்வரி.

வாழ்நாளில் 1140 கோப்பைகள், 125 கேடயங்கள் வென்ற அமெரிக்க கூடைப்பந்து வீராங்கனை செரில் மில்லர்.

சிந்து சிவதாஸ்
ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு




இந்த பூகோள பிரபஞ்சத்தில் மட்டுமல்ல கல்தோன்றா மண்தோன்றா காலத்திலும் இதிகாசங்களிலும் பெண் என்பவள் போற்றுதற்குரியவளாகக் காணப்பட்டாள்.

பெண் உன்னத நிலையில் மதிக்கப்பட்டாள். பெண் தெய்வங்கள் புகழ்ச்சிக்குரியவையாகக் காணப்பட்டன. கால ஓட்டத்தில் இந்த மாற்றங்கள் தலைகீழாக மாறின. பெண் எதிர்மாறாக நடத்தப்பட்டாள். சமூகத்தில் பெண் தனது கௌரவத்தை இழந்தாள்.

இந்தத் தொடர்கதை இந்த நூற்றாண்டிலும் தொடர்ந்த வண்ணமாகவேயுள்ளன. பெண் என்பவள் தாயாக இருக்கின்றாள், மனைவியாக இருக்கின்றாள், சகோதரியாக இருக்கின்றார்கள் இவ்வாறு பல பாத்திரங்களில் இருக்கும் பெண்களின் தற்போதைய நிலையை ஆராய வேண்டிய தேவையுள்ளது.

"நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ" பாரதியின் பாடலை நினைவுபடுத்துகின்ற அளவுக்கு இன்றைய யாழில் பெண்களின் நிலைப்பாடுகளை பார்க்கின்றபோது பல பெண்கள் குடும்ப வன்முறையினால் பா[illegible]கள் கு[illegible]. பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றாள், ஒதுக்கி வைக்கப்படுகின்றாள். புறக்கணிக்கப்படுகின்றாள். இவ்வாறு பல துன்பங்களைச் சந்திக்கும் பெண்கள் பலபேர் உள்ளனர்.

இவ்வாறு ஒருபுறமிருக்க இன்று யாழ்ப்பாணத்தில் மட்டும் 4000 இற்கும் மேற்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. இந்தப் பெண்கள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்காக அன்றாடம் பெரும்பாலானோர் கூலி வேலை/ தோட்ட வேலைக்குச் செல்கின்றனர் இவர்கள் நாளாந்தம் உழைக்கும் வருமானம் போதியளவாக இல்லை. அத்துடன் மாலை நேரத்துக்கு பின்னரே தாம் வந்தே அன்றாட வீட்டுவேலைகளை மேற்கொள்கின்றார்கள். இந்த விடயம் அவர்களின் நாளாந்த வாழ்வியல் முறையாக காணப்படுகின்றது. இவ்வாறான பெண்கள் தமது வாழ்வியலை நோக்கிய பயணத்தை மிகுந்த சவாலுடன் எதிர்கொள்கின்றார்கள்.

இந்த நிலை மாறவேண்டும் எனின் சமூகத்தில் இருக்கக் கூடிய பெற்றோர், இளைஞர், சமூக அமைப்பின் பிரதிநிதிகள் பெண்களின் மனநிலையை மனதளவில் உணரவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் எடுக்கும் சமூகப் பொறுப்பு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதாக கீழ்வரும் விடயங்களை சமூகத்தின் பார்வைக்கும் செயற்பாட்டுக்கும் தருகின்றோம்.

★ தனி மனிதன் சமூக பொறுப்புள்ளவனாக செயற்படவேண்டும்.

★ தனி மனிதன் பெண்களை மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

★ குடும்பத்தில் உள்ளோர் பெண்களின் தனித்துவங்களை மதிக்கவேண்டும்.

★ குடும்பத்தில் உள்ளோர் பெண்களின் ஆற்றல், திறன்களை மேம்படுத்த வேண்டும்.

★ சமூகம் பெண்களின் கிராமமட்ட செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மை வாதம்

## சுயங்களின் வகை மாதிரி

■ ந.மயூரரூபன்

எமது சூழலில் இலக்கியத்தை அதன் மரபுசார் சட்டகங்களில் பொருத்தியே அணுகுகிறோம். படைப்பின் இரண்டு தளங்களான எழுத்து மற்றும் வாசிப்பு என்பன இதன் அண்மித்த சாலைகளிலேயே பயணிக்கவும் செய்கின்றன. குறிப்பாக படைப்புகளில் வாழ்ந்த அனுபவம் தன்னெழுச்சி என்பவற்றின் இருப்பை உறுதிப்படுத்தக்கண்டையவினையும் வாசிப்பு மனமே எம்மைச் சுற்றியுள்ளது. அதே போல் எழுதுபவனும் வாசிப்பவனும் தமது புற உலகு காட்டும் அல்லது தூர்முடல் அசையும் புவியியல் வெளிகளிலும் கருத்தியல் அடுக்குகளிலும் பிரக்ஞைபூர்வமாக உலவித் திரிய ஆசைப்படுகிறார்கள். அவர்களது அழகியல் வெளிப்பாட்டு - புரிந்து கொள்ளலுக்கான எல்லைகளையும் இதுவே வரைந்தும் கொள்கிறது.

ஒரு படைப்பு மனதின் சுதந்திரம்; உந்தித் தள்ளும் எல்லை கடந்த வெளிகளின் சந்திப்பினை நாம் அவ்வளவாக சுவைப்பதில்லை. படைப்பின் அகத்திலும் புறத்திலும் நாம் குறித்த இணைப்பினை (அது காலாவதியாகிப் போனாலும் கூட) கொழுவிக் கொண்டுள்ளோம். ஆக ஒரு படைப்பு தன்னிடத்தில் கொண்டிருக்கும் அகக்குணம் என நாம் நம்பும் ஒன்றையும், புறக்குணம் என நாம் நம்பும் இன்னொன்றையும் படைப்பின் வழி பிரித்தும் இணைத்தும் காண்கிறோம். அடையாளப்படுத்தப்படாத படைப்பின் தனித்துவ வெளிகளின் உடைப்பினைக் காண முடியாத சட்டகத்திரைதான் எம்முன் தொங்குகிறது.

பழக்கப்பட்ட பாதைகள்; புதிய திசைகளையும், புதிய நிலங்களையும், புதிய உயிரசைவுகளையும், வேறான ஓர் உலகத்தினையும் காணும் சாலைச் சந்திப்புகளை தவறவிட்டு விடுகின்றன.

இவ்வாறான ஒரு முதுசப் பார்வைதான், ஒரு படைப்பினை அணுகுவது குறித்து எம்மிடமுள்ளது.

அரிஸ்ரோட்டில் சொல்லுகின்ற பிரதிபலிப்புக் கோட்பாடும் இதுதான். சமூகத்தின் ஒத்த வகை மாதிரிகளின் பிரதிபலிப்பு என்பது ஒரு தனியனின் இயல்பான செயற்பாடு என்றால் இது பொருத்தமுடையது.

ஆனால் படைப்பு மனம்
இயல்பு நிலை கடந்தது

அது போல் ஒரு படைப்பு என்பது வெறுமனே 'சடப்பொருள்' போல அணுகப்படக்கூடியது அல்ல. ஒரு போதும் ஒரு படைப்பினை கல், மண், மரம் போன்ற ஒன்றாகப் பார்க்க முடியாது. ஒரு கலைப் படைப்பு என்பது கால நீட்சியில் வெவ்வேறு வாசிப்பு அனுபவங்களைத் தரக்கூடியது. அதாவது 'திருவாசகம்' இரு நூறு வருடங்களுக்கு முன் ஒரு வாசகருக்குத் தந்த அனுபவமும் தற்கால வாசகனுக்கு அப் பிரதி தரும் அனுபவமும் ஒன்றானதேயல்ல. எப்போது படைப்பு என்பது ஒரு தொடருறு (Process) செயல் நிலையாலானது. இங்கு படைப்புக்கான மதிப்புகளும் அதன் மீதான செயல்களும் காலந்தோறும் மாற்றங் கண்டு வருவதை நாம் உணருகிறோம்.

ஆனால் எங்கள் நனவிலி என்பது தூய்மை வாதத்தால் (Purism) கட்டுண்டது. படைப்பின் அடுக்கிலும் இயக்கத்திலும் அது தூய்மையை எதிர்பார்ப்பது.

எமது மனங்கள் பெருவானசுட்டுகளால் மூடுண்டு பழக்கப்பட்டது. எமது சமூகக் கட்டுமானத்தின் அடிப்படைக் கருத்தியலை சமூகத் தூய்மை வாதத்தின் கோடுகள் தான் எழுதுகின்றன. சமூகக் கட்டமைப்பின் கூறுகளில் கடவுளர்கள், பெண்கள், சாதி என மையப்படுத்தப்பட்டதும் எல்லைப்படுத்தப்பட்டதுமான தூய்மை - தூய்மையின்மையின் அடுக்குகளை நாம் இனங் காணலாம். எமது மரபுசார் கருத்தியல்கள் எல்லாமே மையங்களைச் சுற்றிச் சுழன்றோடுபவைதான். எல்லா மதங்களுக்கும் கடவுள் மையமாக இருப்பது போல, எல்லாக் கிரகங்களுக்கும் சூரியன் மையமாக இருப்பது போல, எங்களின் கருத்தில் மையங்களும் குறித்த புள்ளிகளிலேயே குவிந்துள்ளன. இங்கு தூய்மைவாதத்தின் சாட்டில் ஒருமை வாதத்தின் அதிகாரம் செறிந்த ஒரு பார்வை நிழல் விரிந்துள்ளதை உணர முடியும்.

படைப்பு வெளி மீதான பார்வையும் இவ்வதிகாரத்தின் மேலாகக் கட்டமைந்ததுதான். அதிகாரம் செறிவுற்ற அல்லது கருத்தியல் மையம் கட்டமைந்த வெகுசனக் கொண்டாட்டத்திற்குரிய படைப்புகளும் அவற்றின் மீதான ஒற்றைப் பரிமாண வாசிப்புமே எங்களின் படைப்புலக மரபுத் தொடர்ச்சியாக இருந்து வருகிறது - சில புறநடைகளைத் தவிர.

ஆனாலும் புற நடைகளின் மீதான கவனிப்பும் வாசிப்பும் எமது சூழலில் தாமதித்தேனும் ஏற்பட்டுள்ளமையும் கவனத்திற்குரியது. ஒத்த மாதிரியான சுயங்களின் உருவாக்கம் (unified self) என்கிற பாசிச கருத்தியலுக்கு எதிராக; மையத்திலிருந்து விளிம்பு நோக்கி நகரும் ஒருமையின்மையின் அழகியலைப் பேசும் படைப்பு - படைப்புப் பற்றிய பார்வைகள் அண்மித்த காலங்களில் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு ஒரு விடயத்தை நாம் அடையாளப் படுத்திக் கொள்ள முடியும். ஒரு படைப்பு; சமூகத்தின் நிறுவனங்களுக்காக அல்லது அதன் - அவற்றின் கருத்தியலை முன்மொழிவதற்காக எழுதப்படுபவை அல்ல. அவற்றின் அங்கீகாரத்திற்கும் படைப்பு தன்னுடைய நிறுவனத்துவம் கொண்டிருக்கக்கூடிய நுண்ணரசியல். ஒரு படைப்பாளி - படைப்பு கொண்டிருக்கும் நுண்ணரசியலோடு ஒருங்கிணையும் தன்மையற்றது. நுண்ணரசியல்களின் தளங்கள் தனியனுக்குத் தனியன் வேறுபடும் இயல்பினைக் கொண்டது. ஆனால் தூய்மைவாதத்தின் அதிகாரம் என்பது படைப்புகளில் முன்மொழியப்பட்ட ஒழுங்குகளையே எதிர்பார்க்கிறது.

ஒழுக்கம், நாட்டுப்பற்று, இனப்பற்று, சமயப்பற்று, நீதியின் சார்பு போன்ற நேர்காட்சி வாத (Positivism) மனோபாவத்துடன் தங்கள் பெருங்கதையாடல்களை இவை பேசுகின்றன. இதன் பின்புலத்திலேதான் நேர்கோட்டு நிலை வாசிப்பிற்கான மொழிதல் எதிர்பார்க்கப்படுகின்றது.


பொதுவாக ஒரு வாசகப்பிரதி எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டுமென எதிர்பார்க்கக்கூடாது. அப்படிச் சொன்னால் அப்பிரதி காலாவதியாகிவிடும். ஒரு பிரதி எப்போதும் தான் சொல்வதற்கு மேலதிகமாக எதையேனும் உள் வைத்துள்ளதாகவே அமைய வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் குறித்த பிரதிக்கு முக்கியத்துவம் கூடலாம் அல்லது குறையலாம்.

ஆனாலும் விடுபட்ட பகுதிகள் அங்கு இருக்க வேண்டும் அதுதான் ஒரு பிரதியின் நிலைப்பினைத் தீர்மானிக்கிறது.


ஒரு படைப்பும் வாசிப்பும் சமூக அமைப்பு மீதான கட்டவிழ்ப்பினைச் செய்ய முடியும். ஒரு பிரதி கொண்டுள்ள எழுதுபவன் சுயப்பிரக்ஞை சார்ந்த எழுத்துத்தளமும் எழுத்தின் பிரதிபலிப்புடன் தொடர்புற்ற வாசிப்புதளமும் இதன் சாத்தியத்தினை தருகிறது. ஒரு பிரதி தருகின்ற வாசிப்பு ஜனநாயகம் (ஒரு பிரதியை வெவ்வேறு வாசகர்கள் வெவ்வேறு வாசிப்புகளுக்கு உட்படுத்தலாம்) ஒரு படைப்பில் இருக்க வேண்டும்.

*" உன் இன்னுயிரை ஈர்ந்தது போதும்*
*லோகிதாசா எழுந்திரு"*
*செய்தியைச் செவிமடுத்த உங்கள்*
*அனைவருக்கும்*
*நன்றி எனக்கூறி விடைபெறுகிறார்*
*அறிவிப்பாளர்*
*லோகிதாசா எழுந்திரு*
*நாடகம் முடிந்தபின்*
*உன்னை வழமை போல கூட்டிப்போக*
*அப்பா வந்திருக்கிறார்*
*லோகிதாசா எழுந்திரு*
*கண்டியரசனில் உன் மாமா உன்னை உரலில்*
*போட்டு இடிக்க அம்மா பார்த்திருந்து*
*அழுகிறாள்*
*அரிச்சந்திரா நாடகத்தில்*
*நீ பாம்பு தீண்டி இறக்கிறாய்*
*எழுந்திருக்கவிடாமல் நீள்துயில் கொள்கிறாய்*
*இப்போது*
*இடையில் திரை மூடி அடுத்த காட்சி*
*தொடங்கலாம் நாடகத்தில்*
*லோகிதாசா எழுந்திரு*
*நீ பேராளியல்ல; குழந்தைப் பாத்திரம்தான்*
*[நீ பேராளியல்ல, சுகன்]*

ஒரு படைப்பு மனதின் சுதந்திரம்;
உந்தித் தள்ளும் எல்லை கடந்த
வெளிகளின் சந்திப்பினை நாம்
அவ்வளவாக சுவைப்பதில்லை.
படைப்பின் அகத்திலும் புறத்திலும்
நாம் குறித்த இணைப்பினை (அது
காலாவதியாகிப் போனாலும் கூட)
கொழுவிக் கொண்டுள்ளோம். ஆக
ஒரு படைப்பு தன்னிடத்தில் கொண்டி
ருக்கும் அகக்குணம் என நாம்
நம்பும் ஒன்றையும், புறக்குணம் என
நாம் நம்பும் இன்னொன்றையும்
படைப்பின் வழி பிரித்தும்
இணைத்தும் காண்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.டிசாந்தன்,
கனகரத்தினம் ம.வி.



த.மாதுரி, தரம்-7பி,
யா/கைதடி மு.ம.வி.




இ.பிருந்தா, தரம்-2ஏ,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை




அ.சோபிகன், தரம்-11சி,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

# வீட்டுக்குப் போ!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

"நான் ஒரிடத்தில் உட்கார்ந்து பையிலிருந்த உணவை எடுத்துச் சாப்பிட்டேன்" என்றான்.

"சரி. உன்னிடம் உணவு உள்ள பை இருக்கிறது. ஆனால் நீர் குடிக்கப் பாத்திரம் எதுவும் இல்லையே. தண்ணீர் எப்படிக் குடித்தாய்?" என்று போதிசத்வர் கேட்டார். "எதிரே ஒரு ஆறு இருந்தது. அங்கு போய்த் தண்ணீர் குடித்து விட்டு வந்தேன்" என்றான் பிராமணன். "அப்படியானால் நீ உணவு சாப்பிட்டு விட்டு பையை அதே இடத்தில் விட்டு விட்டு ஆற்றிற்கு போனாய். அந்த பையில் உணவு மீதமாகி இருந்ததா?" என்று போதிசத்வர் அவனைப் பார்த்துக் கேட்டார்.

அவனும் "ஆமாம். பையில் இருந்ததில் பாதியை நான் உண்டேன். மிகுந்ததை கட்டி எடுத்துக் கொண்டு போய் மனைவியிடம் கொடுக்கப் போகிறேன். இதோ அந்தப் பை" என்று காட்டினான். "நீ நதிக்குப் போன போது பையின் வாயைக் கட்டவில்லையே" என போதிசத்வர் கேட்டார். "கட்டவில்லைதான்" எனப் பிராமணன் பதிலளித்தான்.

"அப்படியானால் நதியிலிருந்து திரும்பி வந்துதான் பையின் வாயைக் கட்டினாய். கட்டு முன் அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்தாயா?" என்று அவர் கேட்டார். அவனும் "பார்க்கவில்லை. அப்படியே கட்டி எடுத்து வந்தேன். இதற்குப் பிறகுதான் என்னை எச்சரிக்கும் குரல் என் காதில் விழுந்தது" என்றான்.

போதிசத்வரும் "அப்படியானால் நீ ஆற்றில் போய்த் தண்ணீர் குடித்த போது பை இருந்த இடத்தில் ஏதோ நடந்திருக்கிறது. அநேகமாக ஒரு பாம்பு உன் பைக்குள் போயிருக்கிறது என்றே நான் நினைக்கிறேன். அதை கவனித்த யட்சனோ தேவதையோ உன்னை எச்சரித்தது. நீ வீட்டிற்குப் போகாவிட்டால் மறுபடியும் பசிக்கும் போது பையைத் திறப்பாய். அப்போது அதிலிருக்கும் பாம்பு உன்னைத் தீண்டி விடும். நீயும் இறந்து போவாய். நீ பையைத் திறக்காமல் வீட்டிற்குப் போனால் முதலில் பையை உன் மனைவியிடம் தான் கொடுப்பாய். அவளும் அதை ஆவலுடன் திறப்பாள். அப்போது பாம்பு அவளைக் கடிக்க அவள் இறந்து விடுவாள். இது தான் விஷயம்" எனக் கூறி அப்பையைத் தான் உட்கார்ந்திருக்கும் இடத்தருகே வைக்கும்படி அந்த பிராமணனிடம் சொன்னார்.

பிராமணன் அப்போதுதான் தன் பைக்குள் பாம்பு புகுந்திருக்கிறது என அறிந்து திடுக்கிட்டான். போதிசத்வர் கூறியபடியே உடனேயே அவர் பக்கத்தில் வைத்து போதிசத்வர் என்ன செய்கிறார் எனப் பார்க்கலானான்.

அப்போது அவ்வழியே சென்ற ஒரு பாம்பாட்டியை அவர் கூப்பிட்டு பையிலுள்ள பாம்பைப் பிடிக்கச் சொன்னார். அவனும் பையின் வாயை அவிழ்த்து சீறி வந்த நல்ல பாம்பைப் பிடித்து கொண்டு போய் விட்டான்.

அதன் பிறகு போதிசத்வர் பிராமணனிடம் " நீ இனிமேல் பயமில்லாமல் உன் வீட்டிற்குப் போகலாம்" என்றார். பிராமணன் அவருக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்து, கவலையை விடுத்துத் தன் வீட்டிற்குச் சென்றான்.

(முற்றும்)

# இருளில்தான் இருக்கிறோம்

தோமஸ் அல்வா எடிசன்
தோல்விகளைச் சந்தித்து
மின்விளக்கைக் கண்டுபிடித்தார்
ஒளியுடன்

அவருக்கு விருதுகள் கொடுக்கப்பட்டனவே
அன்றி சிறைவாசம் கொடுக்கப்படவில்லை
இலங்கை தேசத்தில் மக்கள்
இருளைத்தான் விரும்புகிறார்கள் போலும்

ஒளியேற்றி வைத்தாரை
ஒடுக்க நினைக்கும் தேசம் இது
மெழுகுவர்த்தி ஏற்றியதற்காய்
மெய் முழுதும் காயம்

மெழுகுவர்த்தி கூட
மெய்யுருகி நிற்கிறது
தன்னை ஏற்றி
சிறைப்பட்டவர்களுக்காய்

ஒளியை விரும்புவோர்
ஒழிந்ததாய் சரித்திரம் இல்லை
அறிவை விரும்புவோர்
அழிந்ததாய் வரலாறு இல்லை

இன்றாவது
இனியாவது
திருந்துங்கள்
இல்லையேல்
மெழுகுவர்த்தி கூட உங்களைச்
சுட்டெரித்துவிடும்!

அ.சுபாசினி
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

# மண் புழு



மண்புழுவில் 2000 இற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. 2 சென்ரிமீற்றர் நீளத்திலிருந்து 4 மீற்றர் வரை பல அளவுகளில் மண்புழுக்கள் உள்ளன. மண்புழுவுக்கு கண்களும், காதுகளும் கிடையாது. மண்புழு தோல் மூலமாகத்தான் சுவாசிக்கின்றது. நீண்ட நாள்களுக்கு உணவில்லாமல் மண்புழுக்களால் வாழ முடியும். மண்புழு இருபாலின உயிரி. ஓர் ஆண்டில் சுமார் 12 தொன் மண்ணை மண்புழுக்கள் உழுதுவிடும்.

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு.

## விடை தெரியுமா? 203

### உங்களுக்கும் பரிசுகள்

1. பச்சை நிறத்தில் ஒளிரும் கோள் எது?'
2. வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்?
3. மாலைதீவின் தலை நகரம் எது?
4. இலங்கையில் உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை எத்தனை?
5. இலங்கையின் நிலப்பரப்பு எத்தனை சதுர கிலோ மீற்றர்கள்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 30.03.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் ரூபா 75வீதமும் பரிசுகள் காசாகக வழங்கப்படும்.

### விடைகள் 201

1. விபுலானந்தர்
2. சிலிக்கா
3. இலத்தீன் மொழி
4. டி.எஸ்.சேனநாயக்கா
5. ஜான் வாக்கர்

### வெற்றி பெற்றோர் விவரம் (201)

* ப.அபிராம், தரம் -9, யா/ இந்துக் கல்லூரி

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

24.03.2013 முதல் 30.03.2013 வரை தருபவர் - வித்தியா

**மேடம்**- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சக ஊழியர்களின் பொறுப்புகளையும் சேர்த்துச் செய்யும் நிலை ஏற்படலாம். சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வேலைகளின் அவசரம் கருதி ஓய்வில்லாமல் பணிகளில் ஈடுபடுவார்கள். எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் சிரமம் இல்லாமல் பணிகள் நடைபெறும். கலைஞர்கள் புதிய பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவார்கள். புதிய வேலை வாய்ப்புகளும், பண வசதிகளும் கிடைக்கும்.

**இடபம்**- உங்களின் பணித்திறன் வளர்ந்து, குடும்பத்துக்குத் தேவையான பணவரவை ஆர்வமுடன் சம்பாதித்திடுவீர்கள். உறவினர்களின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனதில் மகிழ்ச்சி பெறுவீர்கள். எதிரியால் தொல்லை வராத சுமுகவாழ்வு பெறுவீர்கள். தொழில் வியாபாரம் சார்ந்த வகையில் அதிக மூலதனத்துடன் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். மாணவர்கள், அக்கறையுடன் படித்து அதிக தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**- செயல்களில் நிதானமும் பணச்செலவில் சிக்கனமும் பின்பற்றுவது அவசியமாகும். சகோதரர்களின் எண்ணத்திற்கு மாறுபட்ட வகையில் பேசவேண்டாம். எதிரியிடம் விலகுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மை பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதிப்பதால் மட்டுமே, ஒழுங்கு நடவடிக்கை வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

**கடகம்**- உங்கள் நலம் விரும்புவோரின் சமயோசிதமான ஆலோசனை கிடைத்து புதிய செயற்திட்டம் உருவாக்குவீர்கள். முயற்சியும், உழைப்பும் முழு அளவில் நன்மை பெற்றுத்தரும். கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணை உதவிகரமாக நடந்து அன்பு, பாராட்டு பெரியளவில் பெறுவர். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து லாபவிகிதம் கூடும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பொறுப்பான பதவி கிடைக்கும். மாணவர்கள், தகுந்த பயிற்சியால் சராசரி தேர்ச்சி வீதம் பெறுவர்.

**சிங்கம்**-வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அதிக அக்கறையுடன் பணிபுரிவீர்கள். புதிய வாய்ப்புக்கள் கிடைத்து, மனதுக்கு உத்வேகம் தரும். இளைய சகோதரர் தம்மால் இயன்ற உதவியை மனமுவந்து தருவர். இல்லறத்துணையிடம் கருத்து வேறுபாடு வளராத வகையில் பேசுவது நல்லது. தொழில் சார்ந்த வகையில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறையைப் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள் உடல் நல பாதுகாப்பில் கவனம் கொள்வதால் மட்டுமே ஈடுபாடு வளரும்.

**கன்னி**-நண்பர், உறவினர்களிடம் சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் மட்டுமே, அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். பணத்தேவையை சரி செய்ய அதிக உழைப்பும், அலைச்சல் மிகுந்த பயணமும் தேவைப்படும். வழக்கு விவகாரத்தில் அனுகூலமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை, உங்களிடம் கொண்ட நம்பிக்கைக்கு குறை வராமல் நடப்பது நன்மை தரும். பணியாளர், கூடுதல் பயிற்சி மேற்கொள்வர். மாணவர்கள் ஆசிரியரின் கண்டிப்பைத் தவிர்க்கும் வகையில், படிப்பில் தகுந்த ஆர்வம் மேற்கொள்வர்.

**துலாம்**- உடல் நல ஆரோக்கியம் தகுந்த படி பேணுவதால் நிறைவேற்ற வேண்டிய பணிகளில் ஆர்வம் வளரும். புத்திரர், உங்களின் கெடுபிடி காரணமாக விலகுவதால் தன்மையுடன் செயல்படுவர். எதிரியால் இருந்த தொல்லை மிகவும் குறைந்துவிடும். இல்லறத் துணையின் அதிருப்தி எண்ணத்தை மாற்ற அன்பு, பாசத்துடன் உறவினர் வீடு, இஷ்ட தெய்வ வழிபாட்டு இடங்களுக்கு அழைத்துச் செல்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை பணவரவு கிடைக்கும். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் அணுகுமுறை நல்லது.

**விருச்சிகம்**-வாழ்வில் சோதனைகளைக் கடந்து புதிய நம்பிக்கை தரும் பாதையில் செல்வீர்கள். முன்னேற்றத்துக்கான வழிவகை உண்டாகும். உடன்பிறந்தவர்களுக்குத் தேவையான உதவிபுரிவீர்கள். இல்லறத்துணையின் பாசம் நிறைந்த பேச்சு, மனதை இலகுவாக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால், தாராளமான பணவரவு பெறுவீர்கள். பணியாளர்களுக்கு தாமதமான சலுகைப்பயன் எளிய முயற்சியால் கிடைக்கும். மாணவர்கள், கூடுதல் பயிற்சிமுறை பின்பற்றி எதிர்பார்த்த தேர்ச்சியடைவர்.

**தனுசு** - கடந்த தினங்களில், உங்களை அவமதித்துச் செயற்பட்டவர்களுக்கு உணர்த்தும் வகையில், உழைப்பால் மேன்மை அடைவீர்கள். இல்லறத் துணையின் உறவினர்களிடம் இருந்த மனக்கிலேசம் சரியாகும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியை, பொறுமையைக் கடைப்பிடித்து சரிசெய்வது அவசியம். அதிகாரிகள் நிர்வாகத்தின் உத்தரவுகளை நிறைவேற்றுவதில், அதிக பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். மாணவர்கள், சகமாணவர்களின் உதவியால் கல்வியில் முன்னேற்றம் பெறுவர்.

**மகரம்**-உங்களின் சிறப்பான வாழ்வைக் கண்டு சிலர் பொறாமையால் பரிகாசத்துடன் பேசுவர். அவர்களிடம் விலகுவதால் நேரத்தை மிச்சப்படுத்தி மன அமைதியை பாதுகாத்துக் கொள்வீர்கள். பூர்வ சொத்தில் கிடைக்கிற பணவரவு கூடும். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, மனம் நெகிழ வைக்கும். தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் பின்பற்றி உற்பத்தி, விற்பனையின் அளவை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் பெற வேண்டிய சலுகைப் பயன், எளிதில் கிடைக்கும். மாணவர்கள் ஞாபகத்திறன் வளர்ந்து, திட்டமிட்ட தேர்ச்சி வீதம் பெறுவர்.

**கும்பம்** -உங்கள் மனதில் தேவையற்ற குழப்பமும் முக்கியமான செயல்களை நிறைவேற்றுவதில் தயக்கமும் ஏற்படும். உங்கள் நலனில் அக்கறை உள்ளவரிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவதால் நன்மை பெறலாம். வெளியூர் பயணம் தருகிற நன்மை, என்ன என்பதை உணர்ந்து மேற்கொள்ளலாம். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் செயற்படுவதால், நிர்வாகத்தின் கண்டிப்பைத் தவிர்க்கலாம். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவீர்கள்.

**மீனம்**- உங்களால் பலன் பெற்ற சிலர் உதாசீனமாக பேசி, மனக்கஷ்டத்தை ஏற்படுத்துவர். பெருந்தன்மை குணத்துடன் விலகுவதால் மட்டுமே உங்கள் பணிகளில் முழு ஈடுபாடும் அதனால் உரிய நன்மையும் பெற இயலும். பூர்வீக சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை உங்களின் [illegible] உணர்ந்து செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் திட்டமி[illegible] தேவைப்படும். மாணவர்கள், கடின முயற்சியால் மட்டுமே சிறந்த தேர்ச்சியை அடையலாம்.

## அவசரமாய் ஒரு மறு மொழி......

ஆங்கிலத்தில் ஆளுநருக்கு
அவசரமாய் ஒரு கடிதம்
வாங்கிவிட வந்த
ஆசிரியப் பெண்களுக்கு
வாசனண்ணா என்ன சொன்னீர்..
வரைந்தீரா கடிதமேதும்..?

பட்டணத்தில் வாழ்ந்து
பட்டங்கள் பல பெற்று
அரசாங்கத் தொழிலுக்காய்
அமைச்சரையும் கண்டு
அரியண்டம் பிடித்தல்லோ
வாய்த்ததிந்தத் தொழிலிவர்க்கு!

வாசண்ணா உங்களிடம்
வந்த ஒருத்திக்கு
வீட்டிலே கைக்குழந்தை
மற்றொருத்தி வந்து
மன்றாடி நிற்கின்றாள்
பாலூட்டும் வயதிலொரு
பாலகனாம் தனக்கென்று
பாவம் அவளுக்கு
என்ன சொன்னீர் தம்பி
ஏதாச்சும் எழுதினீரா..?

பாரிச வாதமுடன்
படுக்கையிலே கிடந்தவனைப்
பாவமாய் நினைத்திருக்க
பார்த்தீரா அவனையிங்கே.
கருக்கலைந்து போய்விடுமாம்
காரிகையாள் கலங்குகிறாள்.
என்ன சொன்னீர் ஐயா
ஏதாச்சும் எழுதினீரா..?

வாழாவெட்டித் தங்கையுடன்
வயதான பெற்றோருக்கும்
வகையின்றி வந்தாளுக்கும்
வழியேதும் சொன்னீரோ
வாசனையா உங்களைத்தான்!

காக்காய் வலிக்காரக் காரிகையாள்
உடுக்கடிக்கும் போதெல்லாம்
உசார் வந்தும் ஆடுவாளாம்
வற்றாப்பளைக்கு
வரமாட்டேன் என்கின்றாள்

வாசன் ஐயா இவளுக்கும்
வழியெதுவும் காண்பீரோ.

பட்டணத்துப் பள்ளியிலே
படிக்கின்ற பிள்ளைகளின்
கைப்பையில் என்ன
காக்காவலி மருந்தோ..?

மேசையிலே மாணவர்கள்
மேளமடித்தாலும்,
ஆசிரியை எழுந்து ஆடுவாளோ.
ஆரையா அடக்குவது
ஆரடி நீ ஆடென்று
அனைவருமாய் ஆடுவதோ?
அய்யோ அவளையங்கே
அனுப்பவேணடாமப்பா.

வாசன் ஐயா உங்களுக்கு
வழியெதுவும் தெரியாமல்
ஆளுநருக்கு எதையெழுதி
அவர் பணியைக் குழப்புவது.?
பாவம் அவரையிதில்
விட்டிடுங்கள்.

வன்னியிலே பலகாலம்
பணிசெய்த பலபேரும்
மாடுகளா மேய்த்தார்..?
கேடுகெட்ட புத்தியிதற்
கேதுசொன்னீர் வாசன் ஐயா?

பாடுபட்டுத்தேடிப்
பணத்தைத் தொலைத்தவர்கள்
கூடுவிட்டுப்போன
குருவிகளாய் வாழ்பவர்கள்
வாழ்விழந்து வகையிழந்து
வந்தார்க்கு வாழ்வளித்தோர்
மாடுகளாய் உனக்கு
மனதில் தெரிகிறதோ?


கேடுகெட்ட மானிடமே!
பல்லிளித்துப் பலபேர்க்குப்
பட்டங்கள் பல வாங்கும்
பாதகரை எங்கும்
பள்ளியிலே சேர்க்காதீர்.
நாட்டிற்கே உதவாத
நச்சுமரக் கூட்டமிது
வீட்டிற்கே அனுப்பிடென்று
விரைவில் ஒரு கடிதம்
வரைந்திடுவீர்
ஆளுநர்க்கு,/அவசரமாய்
ஆங்கிலத்தில்!/

நந்திமைந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் மாற்றம் வேண்டும்

மதுவிழி



"ஊருக்கு உபதேசம் உனக்கல்ல.." என எங்களிடத்தில் ஒரு சொற்பிரயோகம் வழக்கத்திலிருக்கிறது. ஆமாம் அதற்கிப்போ என்ன என நீங்கள் கேட்கமுன் விடயத்திற்கு வந்துவிட வேண்டும். இல்லையெனில்,அட போங்கப்பா நீங்களும் உங்கள் பழமொழியும் என நீங்கள் பத்திரிகையை மடித்துவிட்டு எழுந்துவிடுவீர்கள். அதனால் என்ன விடயம்பற்றி கீழே தொடரப்படவிருக்கிறது என்பதை சொல்லிவிடுகிறேன். பரீட்சைகள் இன்று பாடசாலை மாணவர்களுக்கு மிக சவாலான காலமாக பரீட்சைக் காலம் தான் இருக்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்ல, உயர் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கும் சரி பதவியுயர்வு பரீட்சைகளை எதிர்நோக்கும் ஊழியர்களுக்கும் சரி இந்த பரீட்சைகள் சில வேளைகளில் தண்ணி காட்டிவிடுகின்றன.மூன்று அல்லது மூன்றரை மணித்தியாலய வினாத்தாள்கள் வாழ்க்கையையே மாற்றிப்போட்டுவிடுகின்றன. அது சரியா தவறா என்பது பற்றி நான் இங்கு ஆராய வரவில்லை.இந்த கல்விமுறையின் சரி பிழையை ஆராய்வது இந்தப் பத்தியின் நோக்கமல்ல.அது அப்படியே இருக்க,இப்போதிருக்கின்ற இந்தக் கல்விமுறையில் வினாப்பத்திரங்களைக்கொண்டு பரீட்சைக்கு தோற்றுபவர்களை எடைபோடும் சந்தர்ப்பங்களில் எம்மில் அனேகமானோருக்கு பூரணமான வெளிப் பாட்டைக்காட்டக்கூடிய சூழல்கிடைப்பதில்லை.

பாடசாலைகளிலாக இருந்தால் க.பொ.த பரீட்சையில் சா.த மற்றும் உ.த பரீட்சைகளில் அந்த மூன்று மணித்தியாலயங்கள் தான் பின்னைய வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அளவிற்கு காணப்படுகின்றன.அதற்காக கண்விழித்து எத்தனையோ இரவுத்தூக்கங்களை மறந்து தயாராகி பரீட்சை மண்டபத்திற்கு மாணவர்கள் வருகின்றபோது எதிர்காலம் பற்றிய கனவு,கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான பதிலையளித்து பரீட்சையை சாதகமாக மாற்றவேண்டுமென்ற தவிப்பு, படபடப்பு என்பன எழுவது இயற்கையே.இருந்தும் தங்களை ஆசுவாசப்படுத்திக்கொண்டு வினாத்தாளுக்காக மாணவர்களின் காத்திருப்பு நீளும்.இது வெறும் பாடசாலைப் பரீட்சைகளில் மட்டுமல்ல, ஏனைய போட்டிப்பரீட்சைகளிலும், உயர்கல்விக்கூடங்களிலும் நடைபெறும் பரீட்சைகளுக்கும் பொதுவானதே.

சரி பரீட்சை மண்டபத்திற்கு வந்தாயிற்று. தயவுசெய்து பரீட்சை முடிவுறும் வரை பரீட்சார்த்திகள் அமைதியைப் பேண வேண்டும் என்பதோடு இன்னும் பல உறுதி அறிவுறுத்தல்களும் விளக்கப்பட்டு வினாத்தாளும் கையில் தந்தாயிற்று. அதன் பின்னர் பரீட்சார்த்திகள் வினாப்பத்திரத்தில் மூழ்கிவிட பரீட்சகர்கள் தமது உரையாடற்கலையில் மூழ்கிவிடுகிறார்கள்.அதற்காக எல்லோருமே அப்படியென கூறமுடியாவிட்டாலும் மிகமிக அதிகளவில் இத்தகைய செயற்பாடுகள் பரீட்சை மண்டபங்களில் நடப்பது கண்கூடு.தங்களினுடைய பிரத்தியேக விடயங்களிலிருந்து சமூக நடப்புக்கள் வரையும் சில தருணங்களில் சின்னத்திரை நாடகங்களும் இடைக்கிடையில் தலைகாட்டுவதும் உண்டு.இத்தகைய சூழ்நிலையில் அவர்களுக்கருகில் இருக்கின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சையில் சரியான முறையில் கவனம் செலுத்துவதென்பது சற்று கடினமானதாகவே இருக்கும்.

நாகரிகம் கருதியும் அழகு என்ற அடிப்படையிலும் அணிகின்ற ஆடைகள் மற்றும் பாதணிகளையும் மிகவும் பக்குவமானதாக இருக்கும்படி பார்த்துக்கொண்டால் நலம். ஆடையமைப்பு மற்றவர்களின் சிந்தனையை சிதறடிக்காமல் இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும். அதுபோல உயர்ந்த குதியுள்ள பாதணிகளை அணிந்து டொக் டொக் என்று தேவையற்ற ஒலியெழுப்பாதிருத்தலும் பரீட்சை மண்டபச்சூழலை அமைதியாக்க உதவும்.

இன்றைய தகவல்தொடர்பு உலகில் கைத்தொலைபேசிகளுக்கிருக்கின்ற மதிப்பு கனதியானது.இந்த கைத்தொலைபேசிகளை பரீட்சை மண்டபங்களில் பரீட்சார்த்திகள் மட்டுமல்ல பரீட்சகர்கள்

பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்ல, உயர் கல்வி கற்கின்ற மாணவர்களுக்குச் சரி பதவியுயர்வு பரீட்சைகளை எதிர்நோக்கும் ஊழியர்களுக்கும் சரி இந்த பரீட்சைகள் சில வேளைகளில் தண்ணி காட்டி விடுகின்றன. மூன்று அல்லது மூன்றரை மணித்தியாலய வினாத் தாள்கள் வாழ்க்கையையே மாற்றிப்போட்டு விடுகின் றன.

கூட மிக அவதானமாக கையாள வேண்டும்.பரீட்சை மண்டபத்தில்பரீட்சை நடந்துகொண்டிருக்கின்ற போது ஒரு பரீட்சகருக்கு அழைப்பொன்று வருகிறதென்றால் முதலில் அவர் அந்த அழைப்பின் முக்கியத்துவத்தைக் கணிப்பிட வேண்டும்.யாரிடமிருந்து, எத்தகைய நோக்கிற்காக இருக்கலாம் என்பதனடிப்படையில் அவசரமற்ற அழைப்புக்களை காரணத்தைக்கூறி தவிர்த்துவிடலாம். அவ்வாறல்லாது அது அவசரமான அழைப்பாகவே இருக்குமானால் பேசவே வேண்டிய கட்டாயமான தேவையிருக்குமானால் சற்றுத் தொலைவில் சென்று பேசலாம். அதை விடுத்து அதே மண்டபத்திலிருந்து பேசுவது மட்டுமன்றி எதிர்முனையிலிருப்பவருக்கு கேட்கவில்லை என்பதற்காக அதிக சத்தமாக பேசுவது சரியான அணுகுமுறையாக இருக்கமாட்டாது.ஏற்கனவே பரீட்சைப் படபடப்பில் இருக்கின்ற பரீட்சார்த்திகளுக்கு இத்தகைய செயல்கள் அதிக நெருக்கடியை ஏற்படுத்திவிடும்.அந்த கணத்தில் அவர்கள் என்ன எழுதவந்தார்கள் என்பதை மறந்து பரீட்சகர்கள் தொலைபேசியில் கதைத்த விடயத்தை எழுதிவிடுகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இவற்றோடு இன்னுமொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.அது பரீட்சை மண்டபத்தில் வைக்கப்படுகின்ற கடிகாரம்.தயவுசெய்து அவ்வாறு கடிகாரத்தை வைக்கின்ற போது அதன் நேரத்தை ஒன்றுக்கு இரண்டுமுறை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அது உங்கள் கடமை. கடிகார நேரம் தவறானதாக இருக்குமேயானால் பரீட்சார்த்திகள் தமது வெளிப்பாட்டை சரியான முறையில் காட்டுவதும் நெருக்கடிக்குள்ளாகும்.

எனவேதான் பரீட்சார்த்திகளை அவதானிக்கின்ற பரீட்சகர்கள் மனதளவில் சரியான வகையில் தயாராகவிருக்கவேண்டும். அவர்களிடமிருந்து எழக்கூடிய சத்தத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு மறுபக்கத்தில் பரீட்சகர்கள் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும்.இங்கு எல்லா பரீட்சகர்களையும் குறிப்பிடவில்லை. சரியான முறையில் நடந்துகொள்பவர்களை பாராட்டுவதோடு மற்றயவர்களை அவ்வாறிருக்கத் தூண்டுவதே இப்பத்தியின் நோக்கமாகும்.''ஊருக்கு உப தேசம் உனக்கல்ல'' என்றில்லாமல் எங்களையும் நாங்கள் அதற்கேற்ப தயார்படுத்திக்கொண்டு நல்லதொரு பரீட்சகராக பெயரெடுப்போம்.

# மனக்காடுகளில் அழியும் நாள்....


எங்களுடைய காலத்தில்தான்
அந்த ஊழி இருந்தது
ஆவிக்கடலில் துணை தேடியலையும்
நாளில் குழந்தைகள் மனிதர்களை
வெட்கம் கெட்டு முடித்து கலிகாலம்
அகாலம் பெருத்து பகை சூழ
நிலம் நடுங்கி வெடித்திற்று
தீயெரித்து செத்து வீழ
யாரும் மிஞ்ச வாய்ப்பில்லை
இருளின் பேரால் சபிக்கப்பட்டன நாட்கள்
ரத்தச்சிவப்பாய் மாற மடியெங்கும்
சதைகளின் துகள்கள்
உயிர் குரலில் பேச மனிதர்களில்லை
இறுகப்பற்றிய விரல்கள் விடுபட
சாத்தியமற்றது
மங்கிய விழிகள் தோல்வியின் முகம்
இப்போதும் மிஞ்சியதும் தனி மரணமே
உயிரும் பிதுங்கியழிய
நம் சத்தியமும் செத்தது
அந்த வெளி ஆவிகளின் பாடல்
உயிரற்ற கண்ததும்ப பறவைகள்
கூடுவிட்டகன்றன தீ எரிந்து முடிந்து
என்னிடம் பெருமூச்சு மட்டும்
அன்பு, நேசம், பாசம், இரக்கம் அழித்த
சொற்களாயின
அச்சத்தில் வேர்களகற்ற புதைக்கப்படுகிறது
எஞ்சிய நம்பிக்கையும்
மரணம் ,வெட்கம் இரண்டுக்கும் இடையில் நான்
அழிந்து செத்தேன்
காலம் சுருங்க அந்தியில் மொழியிழந்த
நாளில் அவலம்
மரணம் கலங்க கடைசித் தெருமுனையில்
வருகிறேன்
அவர்கள் பேசுகிறார்கள் நான் விழுகிறேன்
நம் இருவருக்கும் இடையில் வெறுமை
இருள் ஏறுகிறது நான் பின்னே
நடக்கிறேன்
மூடப்பட்ட விழிகளில்
நொருங்கிய வார்த்தைகள்
சிதறிக் கிடக்கின்றன
இவைகள் வெட்டிய மொட்டை மரங்கள்
வெட்டிய காடுகள்- அரண்கள் இருள்
அவன் பேசிய வார்த்தைகள் ஞாபகமில்லை
உரசிப்போயிற்று நூறு கனவு
எல்லோருக்காகவும் நான் அழுகிறேன்
பிரியாவிடை சொல்லமாண்டேன்
கல்லறை கடந்து அவன்
பேசிய வார்த்தைகளில்லை
காத்திருக்க எதுவுமில்லை
நான் வருகிறேன்
போய் வருவேனென்று சொல்லமாட்டேன்



சத்தியமலரவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீசருக்கு சகுனம் சரியில்லை



> சீசர் கூறுகிறார், கோழைகள் இறப்பதற்கு முன் பலதடவைகள் இறக்கிறார்கள், வீரனோ ஒரே ஒருதடவைதான் சாவை அணைக்கின்றான். மேலும் சாவைக்கண்டு மனிதன் ஏன் அஞ்சவேண்டும். அது அவசியமான ஒரு முடிவுதான். அது வரும்போது வந்தே தீரும்.

அசை போட ஒரு விடயம் 71


ரம்யன்

மார்ச்மாதம் 15ஆம் திகதி உனது உயிருக்கு ஆபத்து இருக்கிறது. எனவே அன்றைய தினம் குறித்து எச்சரிக்கையாக இருந்து கொள் என்று தெரிவித்த எதிர்வு கூறுபவனின் சொற்களை ஜூலியஸ் சீசர் மதிக்கவில்லை.

சாதாரண நிலையில் இருந்து ரோமாபுரியின் சர்வதிகாரியாக உயர்வடைந்திருந்த ஜூலியஸ் சீசருக்கு இன்னும் உயரவேண்டும் என்ற பேராசை ஏற்பட்டுவிட்டதாக அவனுடன் இருந்த பிரதானிகள் கருத ஆரம்பித்திருந்தார்கள். அதனால் சீசரைத் தொலைத்துக் கட்டிவிட அவர்கள் தீட்டிய சதித்திட்டத்தில் சீசரின் ஆத்ம நண்பன் புரூட்டஸ் என்பவனையும் இணங்க செய்துவிட்டார்கள். இந்த நிலையிற்றான் எதிர்வு கூறுபவனின் எச்சரிக்கை சீசருக்கு வழங்கப்பட்டிருந்தது.

சாத்திரங்கள் , ஆவிகள்,மந்திரவாதிகள், சூனியக்காரிகள்,தேவகணங்கள் போன்றவற்றில் எல்லாம் ஷேக்ஸ்பியர் காலத்தில் இங்கிலாந்து மக்கள் மத்தியில் மட்டுமன்றி அவர் தனது நாடகங்களுக்கு அடித்தளமாகப் பயன்படுத்திக்கொண்ட நாடுகளிலும் நம்பிக்கை இருந்துள்ளது. அதுமட்டுமல்ல உலக மகா கவிஞர்களில் அநேகர்களும் இப்படியான அமானுஷ்ய சங்கதிகளை பெரும்பாலும் தமது படைப்புகளில் பயன்படுத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பாரதத்தில் எழுந்த அவ்வாறான பெரும் காப்பியங்களில் குறிப்பாக மகாபாரதம் ,இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும் அமானுஷ்ய சக்திகள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.மகாகவி காளிதாசனின் காப்பியங்களிலும் இந்த அம்சம் கதையோட்டத்துக்கு மெருகூட்டியிருப்பதையும் வாசிப்போரின் உணர்வுகளுக்கு இதமூட்டுவதையும் அறிவோம்.

ஷேக்ஸ்பியர் தமது பல நாடகங்களில் ஏன் சரித்திர நாடகங்களிலும் கூட இந்த அம்சத்தைப் பயன்படுத்தத் தவறவில்லை. ஜூலியஸ் சீசரிலும் சீசரின் ஆவிதோன்றும் கட்டங்கள் உண்டு.



மார்ச்மாதம் 15 ஆம் திகதியாகிவிட்டது. ஜூலியஸ் சீசர் தலைநகர் நோக்கி செனட் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக , மனைவி கல்பூர்ணியாவின்சொல்லையும் மீறிப் புறப்படுகின்றார். கல்பூர்னியா தான் கனவில் கண்ட அச்சமூட்டும் காட்சிகளை கூறுகிறாள்.

நாம் ஏற்கனவே கேட்டும் கண்டும் உள்ள விடயங்களைவிட இவை பயங்கரமானவை. ஒரு பெண்சிங்கம் வீதியில் குட்டிபோட்டது. கல்லறைகள் கொட்டாவிவிட்டுப் பிணங்களை வெளியில் கக்கிற்று. மேகங்களின் மீது போராளிகள் நின்று மோதிக் கொண்டார்கள். அதனால் எமது தலைநகர் மீது இரத்தத் தூறல் விழுந்தது. போரின் சத்தம் வானைப் பிளந்தது. பூதங்கள் கூக்குரல் இட்டன, வீதிகளில் ஓடித்திரிந்தன என்று அவள் தன் கனவை விவரித்து சீசரைத் தடுத்தாள்.

சீசர் அசைந்துகொடுக்கவில்லை. இவைகளைக் கடவுளர்கள் ஏன் காட்டுகிறார்கள். இவை உலகத்துக்குப் பொதுவானவை- அதுதான் சீசருக்கும் என்றான்.

கல்பூர்ணியா விடவில்லை;
பிச்சை எடுப்போர் இறந்தால்
வால்நட்சத்திரம் தோன்றாது.
இளவரசர்கள் சாகும் போது முழு
விண்ணுலகுமே பளிச்சிட்டு பிர
காசிக்கும் என்றாள்.

சீசர் கூறுகிறார், கோழைகள் இறப்பதற்கு முன் பலதடவைகள் இறக்கிறார்கள், வீரனோ ஒரே ஒருதடவைதான் சாவை அணைக்கின்றான். மேலும் சாவைக்கண்டு மனிதன் ஏன் அஞ்சவேண்டும். அது அவசியமான ஒரு முடிவுதான். அது வரும்போது வந்தே தீரும்.

இந்த விதமாக மனைவியின் சொற்களைப் புறம் தள்ளிவிட்டு புறப்பட்டுச் செல்லும் ஜூலியஸ் சீசரின் கண்ணில் வீதியில் நின்றிருந்த எதிர்வுகூறுபவன் தெரிகின்றான். அவனைப் பார்த்து ஏளனமாக சீசர் கூறியது.

மார்ச்-15 வந்துவிட்டதே (Ides of march are come) என்பதாகும். அதற்கு எதிர்வு கூறுபவன், ஆம் சீசர் ,ஆனால் இன்னும் போய்விடவில்லை. (Ay- Seaser, but not gone) என்று பதில் கூறுகிறான். அதன் பின் செனட் சபைக்குச் செல்லும் சீசர் அங்கு சதித்திட்டம் தீட்டிக் காத்திருந்தவர்களுடன் ஒரு வாக்குவதத்துக்கு உள்ளாகிறார். அதைத் தொடர்ந்து காஸ்கா என்பவன் சீசரின் கழுத்தில் உடைவாளால் குத்துகிறான், தொடர்ந்து மற்றும் பலர் தமது வாள்களால் சீசரைக் குத்துகிறார்கள். கடைசியாக மார்க்கஸ் புரூட்டஸ் தன் வாளை உருவிக் கொண்டு வருகிறான். அதுவரை தெம்புடன் காணப்பட்ட சீசர் தன் ஆப்த நண்பனே வாளை உருவியதைப் பார்த்து திகைத்துப் போய் ''நீயுமா புரூட்டஸ்? (Et tu Brute) என்று கூறியவனின் மார்பில் புரூட்டஸ் வாளைப் பாச்சுகிறான் - உயிர் பிரிகிறது. "Et tu" என்ற சொற்றொடர் இலத்தின் மொழியில் இருந்து எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. "You too Brutus" என்பதையே இது குறிப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

## பெயருக்குப் பஞ்சம்

தமிழ் சினிமா உலகில் தட்டுப்பாடான விடயங்கள் இரண்டு உண்டு.

ஒன்று, கதை.

மற்றையது, படத்தின் பெயர்.

கதையைத்தான் ஏதாவது அந்நிய மொழி படங்களில் இருந்து உருவிக் கொள்ளும் வசதி உண்டு. ஆனால் படப் பெயரை இப்படி மாற்றுமொழிப் படங்களில் இருந்து தழுவ முடியாதே. அதனால் தலையைப் பிய்த்துக்கொண்டு இயக்குநர்கள் தம் படத்துக்கான பெயர் தேடும் படலத்திலேயே அதிக காலத்தைச் செலவிடுகிறார்கள்.

படத்தின் கதைத் தயாரிப்பு, படப்பிடிப்பு, படத்தொகுப்பு என்பவற்றை விடவும் என்ன பெயரை வைக்கலாம்? என்று யோசிப்பதிலேயே அவர்களின் அரைவாசி நாள் போய்விடுகிறது. அப்படி மாதக் கணக்கில் யோசித்து வைக்கின்ற பெயர்களைக்கூட ''இதை ஏற்கனவே நான் பதிவு செய்துவிட்டேன்'' என்று யாரேனும் போர்க்கொடி தூக்குவார்கள். அல்லது தமது மதம், இனம், சாதி, தொழில் என்று ஏதேனும் ஒன்றைத் தாக்குவதாகக் கூறி, இன்னும் சிலர் போராட்டங்களிலும் ஈடுபடுவார்கள்.

சரி, எதற்கு வீண் சோலி? என்று ஏற்கனவே வெளிவந்த திரைப்படங்களின் பெயர்களை இரவல் வாங்கிப் பெயரிடவும் பெருந்தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அஜித், விஜய் போன்ற உச்ச நட்சத்திரங்கள் கூட தமது படப்பெயரை படப்பிடிப்பு முடிந்த பின்னரே தீர்மானிக்க வேண்டிய இக்கட்டு நிலை தோன்றியிருக்கிறது. யாரேனும் நல்ல படப்பெயர் இருந்தால் இப்போதே பதிவு செய்துகொள்ளுங்கள். ஒருகாலத்தில் நீங்களும் அந்தப் பெயருக்காகப் போராடி இருந்த இடத்திலேயே நஷ்டஈடாக நல்ல காசு சம்பாதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கே திண்டாட்டம்

கு.நிரோஜன்

போர்மேகம் கருக்கொண்டு, இயல்பு வாழ்வு முடங்கியிருந்த காலத்தில் கூட மக்களுக்கும் சேவையாற்றி பல்லாயிரம் பேரின் உயிர்களைக் காத்த பெருமை யாழ்.போதனா வைத்தியசாலைக்குரியது.

மக்களின் உயிர்களைக் காக்க அசாதாரண காலப்பகுதியிலும் இயங்கியதால் மருத்துவர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் என்போரைக் காவுகொடுத்த வரலாறும் அதற்குண்டு. அப்படி இருந்தபோதும் தன்பணியில் அது தளரவில்லை. ஆனால் இப்போது அதிநவீன வசதி கொண்டதாக போதனா வைத்தியசாலை உருப்பெற்று வரும் நிலையில் சில முரண்பாடுகள் வைத்தியசாலைக்குள் முளைவிடத் தொடங்கியுள்ளன.

வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தனது பதவியை விட்டுத் திடீரென விலகுவதாக அறிவித்ததும் பின்னர் அந்தப் பதவி விலகலைக் கைவிட்டு பதவியில் தொடர்ந்ததும் இந்த முரண்பாடுகளின் விளைவே என்று கூறப்படுகிறது.

முரண்பாடு தொடர்பில் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

''உள்ளகப் பயிற்சிக்காக தென்பகுதியிலிருந்து 6 மருத்துவர்கள் வந்திருந்தனர். அவர்களுக்கு வைத்தியசாலை விடுதியினுள் இடம் இல்லாததனால் விடுதியில் தங்கியிருக்கும் தென்பகுதியைச் சேர்ந்த இரண்டு மருத்துவர்களை வெளியேறுமாறு கோரப்பட்டது. இதன்போதே மருத்துவ சங்கத்துக்கும் தனக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. தென்பகுதியைச் சேர்ந்த வைத்தியர்களை விடுதியிலிருந்து வெளியேற்ற மருத்துவ சங்கம் மறுத்துவிட்டது. இந்த முரண்பாட்டின் காரணமாகவே பதவி விலகத் தீர்மானித்தேன். சுகாதார அமைச்சுக்கும் மருத்துவ சங்கத்துக்கும் அதுபற்றி அறிவித்துவிட்டு சுகவீன விடுப்பில் இருந்தேன். பின்னர் சுகாதார அமைச்சுச் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கு அமைய மீண்டும் பதில் பணிப்பாளர் பதவியைத் தொடர்ந்தேன். வைத்தியசாலையிலுள்ள விடுதிகளிலுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் தாமாக உணர்ந்து விடுதியை விட்டு வெளியேற வேண்டும்-என்றார்.

அரச மருத்துவ அதிகாரிகளின் யாழ். கிளையின் தலைவர் மருத்துவர் எஸ்.நிமலன் இது குறித்து தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

வைத்தியசாலை விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையிலும் முதலில் மருத்துவ அதிகாரிகளுக்கே விடுதிகள் பகிரப்பட வேண்டும். பின்னரே மருத்துவ நிபுணர்களுக்கு வழங்க வேண்டும். மருத்துவ நிபுணர்கள் பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாயின் வைத்தியசாலையிலுள்ள விடுதியில் தங்கமுடியும். யாழ்ப்பாணத்தில் நிரந்தர தங்குமிடத்தைக் கொண்டிராத தென்பகுதியைச் சேர்ந்த மருத்துவர்களை வெளியேற்றினால் அவர்கள் என்ன செய்வார்கள்? இதேவேளை யாழ்ப்பாணத்தில் சொந்தமாக வீடுகளை வைத்திருக்கும் மருத்துவ நிபுணர்கள் அவற்றை வாடகைக்கு விட்டுவிட்டு வைத்தியசாலை விடுதியினுள் நீண்டகாலமாகத் தங்கியுள்ளனர். சிலர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போதும் கூட தாம் பயன்படுத்திய விடுதிகளைக் கையளிக்க மறுக்கிறார்கள்.

எனவே வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் அவர்களது விடுதிகளில் சென்று தங்குமாறு கூறிவிட்டு அந்த விடுதிகளை மருத்துவ மாணவர்களுக்கு வழங்குமாறு ஆலோசனை கூறினோம். ஆனால் அதனை பதில் பணிப்பாளர் ஏற்கவில்லை என்றார்.

இது குறித்து வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயலாளர் இரா.செல்வவடிவேல் கூறுகையில்,

''வைத்தியசாலையில் தங்குமிட வசதி போதியதாக இல்லை. வைத்தியசாலைக்கு வெளியே வாடகைக் கட்டடங்களிலேயே ஊழியர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலை மருத்துவப் பிரிவினருக்கு வைத்தியசாலைக்குரிய தங்குமிடங்களைப் பிரித்து வழங்குவதற்கு குழுவொன்று கடந்த வருடம் ஜனவரியில் உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவினர் ஒன்றுகூடி இடப்பங்கீடு தொடர்பில் ஏகமனதாக முடிவுக்கு வந்தனர்.

கடந்தகால அசாதாரண சூழ்நிலையில் கூட மக்களுக்கு சேவை செய்தவர்களுக்குக் கூட வைத்தியசாலையில் அறைகள் கொடுக்கப்படவில்லை. திடீரென வைத்தியசாலையில் பயிற்சி பெறுவதற்காக தென்பகுதியில் இருந்து வரும் வைத்திய மாணவர்களுக்கு உடனடியாக இட ஒதுக்கீடு செய்வது முடியாத விடயம். தனிப்பட்ட காரணங்களுக்காக இட ஒதுக்கீட்டில் உள்ள நியாயத்தை உணராமல் நிர்வாகத்துடன் முரண்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது'' -என்றார்.



இந்த விடயம் தொடர்பில் மருத்துவர் யமுனானந்தா கருத்து தெரிவிக்கையில்,

''நிர்வாகங்களில் பலதேவைகளுக்காக பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். எமது சமூகத்தில் மருத்துவர்களுக்கு உள்ள கௌரவத்தை அவரவர் பாதுகாக்க வேண்டும். தவறும் பட்சத்தில் மக்களுடனான ஒருங்கிணைவில் பாதிப்பு ஏற்படலாம். வேறு பல பிரச்சினைகளும் இந்த முரண்பாடுகளுக்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன்'' என்றார்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். ஆனால் வைத்தியசாலை இரண்டு பட்டாலோ மக்களுக்கு தான் திண்டாட்டம். எனவே பிரச்சினைகளை இனியும் வளர்க்காமல் உரிய தரப்புகள் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு மீளவும் வினைத்திறனுடன் யாழ். போதனா வைத்தியசாலை பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

## இருண்டவள் அல்ல

- P.அம்பிகா. கோண்டாவில்.

எந்த
ஊன்றுகோலுமின்றி
இருளில்
தட்டுத் தடுமாறி
நடக்கிறேன்;
விடியும் என்று.
விடிவெள்ளிகள்
வானில் தோன்றுகின்றன;
வானில் மட்டும்தான்!
நோய்கள்
நிமிடத்துக்கு
நிமிடம்
நலம் கேட்கும்;
முட்கள், குழிகள், சறுக்கல்கள்
காலின்
உதவியுடன்
கண்டுபிடிக்கிறேன்;
வாழ்க்கையை.
கற்றுக்கொண்டே
வழுக்கி வழுக்கி
நடக்கின்றேன்;
இல்லை!
பாதையைத் தடவுகிறேன்.;
அந்தக் கணத்தில்
வஞ்சகப் பேய்கள்
வலைவிரித்துப்
பயமுறுத்துகின்றன!
ஐயகோ!
என்ன செய்வேன்?
பெண் என்று கூட
அவை இரங்கவில்லை!
என் கால்களைத் தடக்குவதில்
கவனமாயிருந்தன!
நான்
விழக்கூடாது என்பதில்
கண்ணாய்
இருந்தேன்!
கடவுளே! என்று
வாய் தடுமாறி வருகிறது!
அவர் இருக்கிறாரா?
அவருக்குத் தான் தெரியும்
லிங்கனுக்காவது
தெருவிளக்குக் கிடைத்தது.
பாவம் நான்
நட்சத்திரங்களின்
உதவியுடன் படிக்கிறேன்
எத்தனையோ இடைஞ்சல்கள்!
இருள்லோகத்தை
கடந்து நடக்கிறேன்
நம்பமுடியவில்லை!
இப்போது கொஞ்சம்
கீழே பார்க்கிறேன்!
நம்பமுடியவில்லை!
என் வெளிச்சத்தில்
எத்தனையோ உலகங்கள்!
நான் நடந்தது
இருளில்தான்
ஆனாலும் நான்
இருண்டவள் அல்ல.

## பதிவு – அ.யேசுராசாவின்...

(சூரியகாந்தி 07ஆம் பக்கத் தொடர்ச்சி)



கடந்து கொண்டிருக்கும் காலங்களின் எந்தவொரு சிறுதுண்டாவணமும் மிக முக்கியமானவை. அவை எமது இருப்பையும், செயற்பாட்டையும் பதிவு செய்கின்றன. மறைக்கப்படும் வரலாறுகளுக்கு முன்னால் அவை அவற்றின் பிரதிநிதிகளாகவும், சாட்சியங்களாகவும் அவை நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ தோன்றுகின்றன.

இவ்வகையில் பரந்துபட்ட ஆவணப்பாதுகாப்பு என்பதை இதனோடு தொடர்புடைய நிறுவனங்களும், ஆர்வமுடைய தனியார்களும் மேற்கோள்ள வேண்டும். இச் செய்தியை எமது கல்வியூட்டலுக்குள் முறை சார்ந்தோ அல்லது முறைசாரா மட்டத்திலோ (Formal or Non Fromal) அறிவிக்கவேண்டும். குறைந்தபட்சம் அவ்வவ் நிறுவனங்கள் மற்றும் தனியாட்கள் தாம் சார்ந்த விடயங்களின் ஆவணங்களைப் பாதுகாப்புச் செய்தாலே எம்மை நாம் எமது சமூக, பொருளாதார, பண்பாட்டு வரலாற்றை எழுதுபவர்களாகிவிடுவோம்.

இதேவேளை, இவற்றைச் சமாந்தரமாக டிஜிற்றல் (Digital) நிலைப்படுத்தி மெய்போலி வெளி (Virtual Space) நிலைப்படுத்துவதன் மூலம் அதன் பாதுகாப்பை ஒப்பீட்டளவில் அதிகரிக்கலாம் என்பதோடு பரந்துபட்ட பார்வைக்கும் - பகிர்வுக்கும் அவற்றைத் தரமுடியும்.

இன்றே எம் கைக்கெட்டும் ஆவணங்களை அவற்றின் முதன்மை, எமது தனியாள் அல்லது நிறுவன நாட்டங்கள் அடிப்படையில் பரந்துபடச் சேகரிக்கத் தொடங்கினால் உலகத்தால் பந்தாடப்படுகின்ற ஒரு சிறிய இனக்குழுமத்தின் எழுதப்படாத பல கதைகளை எழுதும் தடயங்களைத் தந்தவராவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐஸ்கிறீம்

செ.செல்வதாஸன்

மழை ஓசையோடு போட்டி போட்டுக் கொண்டு "ஷெல்" வெடி ஓசை. .

மடுவிலிருந்து இங்கு முல்லைத்தீவு சுதந்திர புரம் வரை நடை பயணம்தான். மடுவிலிருந்து புறப்பட்டு நாற்பது நாள்களுக்கு மேலாகிவிட்டன. ஜன சமுத்திரத்துள் மிதந்து ஏதோ நம்பிக்கையுடன் இவ்வளவு தூரம்..

ஜெயபுரத்திலிருந்தபோது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் கொஞ்சங் கொஞ்சமாக "ஷெல்" சிதறல்களால் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனாலும் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் அன்று சுதந்திரபுரத்தை மக்கள் கூட்டம் அடைந்திருந்தது.

யாழ் மாவட்டத்தின் ஒரு மூலை குக்கிராமத் தினைப் பிறப்பிடமாகக் கொண்டாலும், தமிழ் மீதும், தமிழ்ப் பிரதேசம் மீதும் கொண்ட தீராக் காதலால் 1995 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இடப் பெயர்வின் பின்னர், வன்னிப் பிரதேசத்திலேயே பணியாற்ற முடிவெடுத்திருந்தார் பரமேஸ்வரன். இன்னும் ஓரிரு வருடங்களில் ஓய்வு என்று இருக்கை யில் போர் மடுவிலிருந்து அவரை மாத்தளன் வரை துரத்தியது.

தனது ஒன்பதாம் ஆண்டு படிக்கும் மகன் காந்தனையும் அழைத்துக்கொண்டு, சுதந்திரபுரம் வந்து சேர்ந்தார்.

சுதந்திரபுரத்தில் மூட்டை முடிச்சுக்களை இறக்கி வைத்த அவருக்கு, தேவிபுரத்தில் நீண்ட காலமாக வசிக்கும் தனது தாயாரின் தங்கையைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அவரது சிறிய தாயார் ஒரு கிறிஸ்தவரை மணமுடித்து, அங்கு வாழ்ந்து வருவதும், அவர்களை ஓரிரு தடவை சென்று பார்த்து வந்ததும் உண்டு.

இம் முறை மகனையும் அழைத்துக் கொண்டு அங்கு சென்று வரத் தீர்மானித்தார். போதிய ஓய்வு எடுத்துவிட்டு, மறு நாள் காலை ஒரு பத்து மணியளவில் மகனுடன் "கால்நடையானார்". ஊர்ந்து செல்லும் சனத் திரளில், தேவிபுரத்தை அவர்கள் சென்றடைய மத்தியானம் ஒன்று, ஒன்றரை மணியாகிவிட்டது.

ஆங்காங்கே முளைத்திருந்த ஒரு சாப்பாட்டுக் கடையுள் புகுந்தார். நல்லவேளையாகச் சாப்பாடு இருந்தது. பாட்டுக்கார சோமர் போட்டிருந்த சாப் பாட்டுக் கடை அது. பரமேஸ்வரனைக் கண்டதும் வரவேற்றுச் சாப்பாடு போட்டார். கொடுத்த காசை யும் ஏற்க மறுத்துவிட்டார் சோமர். பரமேஸ்வரனின் 'தெள்ளு' தமிழில், கொள்ளை ஆசை சோமருக்கு. பரமேஸ்வரன் இயற்றிச் சோமர் பாடிய பாடல், பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த காலம் அது. இப்போதும், உண்ணும் போதும் உறங்கும் போதும் அப் பாடல் காதினுள் தேன் வார்க்கும்.

சாப்பாட்டையும் முடித்துக்கொண்டு, தனது சிறிய தாயாரின் வீட்டிற்கு மகன் காந்தனுடன் சென்றார். ஆட்டுக்குக் குழை ஒடித்துக் கொண்டி ருந்த சந்தியாபிள்ளை இவர்களை இனங்கண்டு கொண்டார். குழை ஒடிப்பதனையும் நிறுத்திவிட்டு ஓடிப்போய் வரவேற்றார். தனது மனைவி திரேசு வைக் கூப்பிட்டார். திரேசம்மா பரமேஸ்வரனின் தாயாரின் தங்கை - கல்யாணம் செய்ய முன் அவரின் பெயர் சரசு, சந்தியாபிள்ளையைக் கண்டு, காதல் கொண்டு அவரைக் கல்யாணம் செய்தபின் அவரின் பெயர் "திரேசு" என்று ஆகிவிட்டது.

"சாப்பாடு என்னமாதிரியப்பா?... குஞ்சுகள் களைச்சுப்போய் வந்திருக்குங்கள்.." துரிதப்படுத்தி னார் சந்தியார்.

அண்மைய போர் எல்லோரையும் பாதித்தது போல அவர்களையும் பாதித்திருந்தது. காந்தனை வாஞ்சையுடன் கட்டித் தழுவினார். அவர் மிக மெலிந்திருந்தபோதும், உழைப்பால் உரமேறிய கரங்களும், முறுகித் திரண்ட கைத் தசை நார்களும், அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட சுருட்டு வாசனை யும் ஒருவித முரட்டுத் தன்மையை, உணர்த்து வதாகக் காந்தன் உணர்ந்தான். அவரின் பிடியி லிருந்து விலகிவிட ஆசைப்பட்டான். ஆனாலும் ஒரு பாச உணர்வுடனான ஸ்பரிஸத்தையும் உணரத் தவற வில்லை.

"கெதிப்படுத்தப்பா! ஏதும் இருக்கோ மழையும் வரப்போகுது. அதுகள் ஒழுங்காகச் சாப்பிட்டு எத்தினை நாளாகுதோ தெரியேல்லை" என்று அங்கலாய்த்தவாறு மீண்டும் துரிதப்படுத்தினார் சந்தியாப்பு.

"நாங்கள் இப்பதான் உதிலை சாப்பட்டுட்டு வந்தனாங்கள்.குஞ்சம்மா ஒன்றும் அவசரப்படாதை யுங்கோ.." என்றார் பரமேஸ்வரன் மாஸ்டர்.

இந்த வார்த்தைகள் சந்தியாபிள்ளையின் காதுகளில் விழுந்ததுதான் தாமதம், "அப்ப என்ன கோதாரிக்கு. இங்க வந்தனிங்கள். மத்தியானமாகப் போகுது. எத்தினை சனம் வந்து சாப்பட்டுட்டுப் போகுதுகள். நீங்கள் கடை தெருவில சாப்பிட்டுட்டு வாறியள்.? என்ன..? " என்றவாறு அணைத்து வைத்திருந்த காந்தனை தள்ளிவிட்டார் அவன் சிறு பையன் அவனுக்கு அழுகை வரும் போலிருந்தது.

அவனை வாரியணைத்தார் பரமேஸ்வரன். " குஞ்சியையா! நாங்கள் சாப்பட்டுட்டுத்தான் போவம். நீங்கள் போய் ஆடு மாடுகளைப் பாக்கிற அலுவல் களைப் பாருங்கோ!" என்றவாறு, கலங்கிப் போயிருந்த மகனை அணைத்துக் கொண்டார்.

தன் மகனை ஆசையோடு அரவணைத்துக் கொண்டான் பரமேஸ்வரன்.

" இதுதான் வந்தாரை வரவேற்கும் வன்னி. தமது வீட்டிற்கு வருகை தந்தவர்கள் விருந்து ஏதும் உண்ணாமற் போகும் போது அவர்களுக்குக் கோபம் வருகிறது. அல்லது தம்மை வந்தவர்கள் அவமதிக் கிறார்கள் என்று உணர்கிறார்கள்.

செல்விருந்தோம்ப வருவிருந்து காத்திருக்கும் மக்கள் இம் மக்கள். இப்போ "ஷெல்" விருந்த நடந்தது. அது ஓய சிலபேர் வருவார்கள். அதற்குப் பின் மழை. மழை ஓய இன்னும் சில விருந்தினர்கள் வருவார்கள். அவர்களையும் உபசரிப்பார்கள். அதிலேதான் இன்பம் இவர்களுக்கு. "ஷெல்" விருந்தோம்ப, மழை விருந்து காத்திருக்கும் இவர்கள், தமக்கெனச் சேர்த்து வைக்காது, தாம் இடம் பெயரும் வரையில் நெல்லு மூடைகளைக் குற்றி சாப்பாடு போட்டுக் கொண்டே இருப்பர். " எனத் தனது தமிழ்ப் புலமையைக் கலந்து வன்னி மக்களின் பண்புகளையும் எடுத்து கூறத் தொடங் கினார் பரமேஸ்வரன்

பரமேஸ்வரன் ஒருவாறாக "பாஸ்" எடுத்து, தனது மகனையும் கூட்டிக் கொண்டு கடல் வழியாக கப்பலில் வன்னியை விட்டுப் புறப்பட்டார். அங்கிருந்து புறப்பட்டு நேரடியாக யாழ்ப்பாணம் வந்து சேர முடியவில்லை. போரும் உக்கிர நிலைய டைந்து, முடிவுக்கும் வந்தது. பாதை திறக்கப்பட்ட பின் யாழ் மண்ணில் காலடி எடுத்து வைத்தனர்.

மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்பியதும், புலம் பெயர் உறவுகளும் யாழ் மண்ணில் கால் பதித்தன.

பரமேஸ்வரன் மாஸ்ரருக்கு எல்லாமே வெறுமை யாக இருந்தது.அவரும் இழுத்துப் பறித்து தனது ஓய்வூதியத்தை ஒருவாறு கையில் பெற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தார்.

ஒரு வெள்ளிக்கிழமை. மனப்பாரங்களைக் கொஞ்சம் இறக்கி வைத்துவிட்டு வருவதற்காக, மன ஓய்வு வேண்டி, மகன் காந்தனையும் அழைத்துக்கொண்டு, சந்நிதி கோவிலுக்குச் சென்றார்.

கோவிலடியில் குளித்து உணவருந்திவிட்டு, மர நிழலில் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டி ருந்தார். அவ் வேளை ஒரு"ஹயஸ்" வாகனம் ஒன்று வந்து இவரின் காலடியில் நின்றது. அது சிவாவின் "வான்" சிவா பரமேஸ்வரனின் மனைவியின் இரத்த உறவு. அவர்கள் இப்போது யாழ்ப்பாணம்"ரவுனில்" வீடு வாங்கி இருக் கின்றனர்.

" "வானிலை" ஆர் வந்தவை தெரியுமே?.. பிரசாந்தன், பெண்சாதி, பிள்ளையள், எங்கடை அம்மாவுமெல்லே நோர்வேயில இருந்து வந்திருக்கினம்.வந்து ஒரு கிழமை ஆகுது. இப்படியே சந்நதி கோவிலையும் கும்பட்டுட்டுப் போவம் எண்டு வந்தவை. அவையைக் கோயி லடியில இறக்கி விட்டுட்டு, அப்படியே உங் களைக் கண்டிட்டு "வானை" இவடத்திற்கு விட்டிட்டன்." என்று மூச்சு விடாமல், நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, சொல்லி முடித்தார் சிவா.

பிரசாந்தன் சிவாவின் தம்பியார். எண்பது களிலே நோர்வே போய், பின்னர் இங்கு மட்டு விலிலிருந்து பெண் அனுப்ப, பிள்ளை குட்டிகளோட இப்ப, இருபது, இருபத்திரண்டு வருசத்துக்குப் பிறகு வந்து நிற்கிறார்கள். கோயில் உட் பிரகாரம் சுத்திக் கும்பட்டுவிட்டு, "வான் நின்ற மர நிழலடிக்கு அவர்களும் வந்தனர்.

இரத்த உறவுகள் அந்நியப்பட்டுப் போய் இப்ப கோவிலிலாவது சந்தித்ததில், பரமேஸ்வரனுக்குப் பரம திருப்தி. வெறுமையாக இருந்த மனதில் ஏதோ ஒரு தெம்பு தோன்றிய உணர்வு.

பரமேஸ்வரன் இன்னார் என சிவா அறிமுகம் செய்து வைத்தான். பரமேஸ்வரனின் மகன் தகப்பனுடன் ஒட்டிக் கொண்டான். பரமேஸ் வரனை இனங்கண்டு சுகம் விசாரித்தார். வன்னி நிலவரங்களைக் கேட்டறிந்தார். பின்னர் கொஞ்ச தூரம் தள்ளிப் போய்நின்று கொண்டனர்.

நோர்வேயிலிருந்து வந்தவர்களின் உடல் வனப்பும், உடை வடிவமும் காந்தனுக்கு, வியப்பாக இருந்போதும், அவர்களை மனதுக்குப் பிடித்துப்போய் விட்டது.

பிரசாந்தனின் தாயார் தனது தோளில் கொழுவி யிருந்த, நீண்டு தொங்கிய கைப்பையைத் திறந்தாள். அதிலிருந்து காசை எடுத்து தனது பேர்த்தியிடம் ஏதோ கூறிக் காசைக் கொடுத்தாள். புரியாத பாஷையில் ஒவ்வொருவரையும் நோக்கி, கையை நீட்டி ஏதோ கணக்கெடுத்தாள் போலும்.

ஓடிப் போய் ஒரு "சொப்பங் பாய்க்" இல், எதிரே நின்ற வாகனத்தில் ஐஸ் கிறீம் வாங்கி வந்தாள். தான் கணக்கெடுத்தவாறு, ஒவ்வொரு வருக்கும் ஒரு ஐஸ் கிறீம் கொடுத்தாள். அந்த அப்பம்மாவுக்கும்தான். அவவும் சின்னப் பிள்ளை போல ஆவலுடன் வாங்கிச் சுவைக்கத் தொடங்கினார். அவர்களுடன் வந்தவர்களுக்கும், அவளுக்கும் மேலதிகமாக ஒரு ஐஸ் கிறீம் அவளின் கையிலிருந்தது.

சிறிது தூரத்தில் மர நிழலில் பரமேஸ்வரன், மகனை மடியில் வைத்துக் கதைத்துக் கொண்டி ருந்த சிவாவிற்கு அந்த ஐஸ் கிறீமைக் கொண்டு வந்தாள். கதைத்துக் கொண்டிருந்த சிவாவிடம், "இந்தாங்கோ பெரியப்பா !" என்று ஐஸ் கிறீமைக் கொடுத்தாள். சிவா அதனை ஆசையாக வாங்கிக் கொண்டு அவளின் முதுகில் செல்லமாகத் தட்டி அனுப்பினான். "பாருங்கோ, வந்து ஒரு கிழமைதான் பெரியப்பாவோடை நல்லா ஒட்டிக் கொண்டுட்டா.பெரியப்பாவுக்கு தராமல் ஒண்டும் சாப்பிட மாட்டாள். நல்ல கெட்டிக்காரி." என்று அவள் துள்ளி ஓடுவதை ரசித்தவாறு அவளுக்கான "சேர்ட்டிபிக்கற்றை" வாசித்தார் சிவா பெரியப்பா.

ஐஸ் கிறீமைப்பார்க்க காந்தனின் வாயில் எச்சில் ஊறியது. அவனும் சின்னப் பையன்தானே

இவை எல்லாவற்றையும் மௌனமாக அவ தானித்துக் கொண்டிருந்த காந்தனுக்கு முகத்தில் வியப்புத் தோன்றியது.

ஏனோ தெரியாது, பல மாதங்களின் பன், இன்று சந்தியாரின் நினைவு அவனின் மனதில் எழுந்தது. அவரின் முறுக்கேறிய கைகளின் ஸ்பரிசம் ஒரு இனம் புரியாத இங்கிதத்தை ஏற்படுத்தியது. அவர் இந்த "ஷெல்" அடியில் தப்பிப் பிளைத்து வந்திருப்பாரோ..?... அவர் இப்போது எங்கிருக்கின்றாரோ.?" என்ற எண்ணமும், ஏக்கமும் அவன் மனதில் எழுந்தது.

அவனுக்கும், அவனது அப்பாவிற்கும் அவர்கள் ஐஸ் கிறீம் வாங்கிக் கொடுக்காத போதிலும், அன்று சந்தியாபிள்ளையர் , "அப்ப சாப்பிட்டுட்டு என்னத்துக்கு இங்க வந்தனிங்கள்" என்ற அந்த உரிமையுடனான கடும் தொனி வார்த்தைகள் இப்போது அவனுக்கு ஐஸ்கிறீமாக இனித்தது. ஏனோ தெரியாது அவனுக்கு சந்தியாப்புவை உடனடியாகப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் பூரான்கள்; கொண்டுவந்தது யார்?



சுகாதாரப் பிரச்சினைகள் பலவற்றையும் இறப்புக்களையும் ஏற்படுத்தி வரும் வெள்ளைப்பூரானின் தாக்கம் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வருவதற்கு முற்பட்ட காலத்தில் இங்கு இருக்கவில்லை. ஆனால் ஆபத்தான பல விளைவுகளை ஏற்படுத்தவல்ல ஒரு வகை வெளளைப் பூரானின் தாக்கம் இந்தியா வின் சில பகுதிகளில் பலகாலமாக இருந்து வந்தது. கடந்த 10 தொடக்கம் 15 வருடங்களாக யாழ்.குடாநாட்டில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வரும் இந்த வெள்ளைப்பூரான் இந்தியப் படை இங்கு ஏற்றி வந்த பொருள்களுடன் வந்து சேர்ந்ததா? இதன் தாக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள் ளப்படும் நடவடிக்கை-கள் மற்றும் ஆராய்ச்சிகள் என்ன? போன்ற விடயங்கள் பற்றி பொது வைத்திய நிபுணர் மருத்துவர் சி.சிவன்சுதனுடான நேர்காணல தரப்படுகின்றது.

■ சந்திப்பு: பஞ்சவர்ணன்

**கேள்வி:**- யாழ்.குடாநாட்டில் பூரான் கொட்டுவதனால் ஏற்பட்டு வரும் தாக்கங்கள் சம்பந்தமான உங்கள் கருத்து என்ன?

**பதில்**- பூரான் அல்லது கொடுக்கன் என்று அழைக்கப்படுகின்ற இந்த உயிரினம் பல நூற்றாண்டு காலமாக இங்கு இருந்து வருகிறது. 1999 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் இதனால் பெரிய சுகாதாரப் பிரச்சினைகள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் அதற்குப் பிற்பட்ட காலத்திலேயே வெள்ளைப் பூரான் எனப்படும் ஒரு வகைக் கொடுக்கனினால் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளும் ஏன் இறப்புக்களும் கூட ஏற்பட ஆரம்பித்தன. பலர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலே நீண்ட நாள்களாக சிகிச்சை பெற வேண்டி இருந்தது.


**கேள்வி**- பூரான் கொட்டுவதனால் ஏற்படும் தாக்கம் இவ்வாறு திடீரென அதிகரிக்கக் காரணம் என்ன?

**பதில்:**- அனைத்து வகையான கொடுக்கன் கொட்டுகையாலும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று சொல்லிவிட முடியாது. ஒருவகையான வெள்ளைப்பூரானின் கொட்டுகையினாலேயே பல ஆபத்தான விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன. இதுவரை இலங்கையில் 15 இற்கும் அதிக வகையான கொடுக்கான்கள் இனங்காணப்பட்டிருக்கின்றன. இவற்றின் கொட்டுகையினால் பொதுவாக பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதில்லை.

**கேள்வி**- இது காரணமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

**பதில்:**- 1999 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலே 12 இற்கும் அதிகமானோர் வெள்ளைப்பூரான்கள் கடியினால் மரணமாகினர். இன்னும் பலர் பல நாள்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலே பராமரிக்கப்பட்டனர். இந்தத் தாக்கங்கள் சம்பந்தமாக ஆராய்ந்த போது யாழ்.குடாநாட்டில் வெள்ளைப் பூரானின் தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்கு ஏற்படும் அறிகுறிகளும் இந்தியாவிலே ரெட் ஸ்கோபியன் என்று அழைக்கப்படுகின்ற கொடுக்கனின் தாக்கத்தால் ஏற்படும் அறிகுறிகளும் ஒத்திருக்கக் காணப்பட்டன. எனவே இவை இந்தியாவில் வந்திருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் வலுத்தது.

அத்துடன் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே வெள்ளைப்பூரான் கொட்டுகைக்கு உள்ளானவர்களுக்கு 'பிரசோசின்' என்ற குளிசை மருந்தை சிகிச்சையாக அறிமுகப்படுத்தினோம். இந்தச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட பின் வெள்ளை பூரான் கொட்டுகையினால் ஏற்படும் இறப்புக்கள் குறைவடையத் தொடங்கி தற்போது ஏறத்தாழ முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளதுடன் உடலில் ஏற்படும் பல்வேறு தாக்கங்களும் குறைக்கப்பட்டன.



**கேள்வி :**- இந்த வெள்ளைப் பூரான் சம்பந்தமாக நீங்கள் தொடர்ந்து செய்து வரும் ஆராய்ச்சிகள் சம்பந்தமாகவும், அதன் முடிவுகள் சம்பந்தமாகவும் கூற முடியுமா?

**பதில்:**- இது சம்பந்தமான மேலதிக ஆராய்ச்சிகளை 2010 ம் ஆண்டு ஆரம்பித்தோம். ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டத்திலே எமது வைத்தியசாலையிலே வைத்திய நிபுணருக்கான விசேட பயிற்சியை பெற்று வந்த டாக்டர் பானு அவர்கள் பெரும் பங்காற்றினார். வெள்ளைப்பூரான் தாக்கத்திற்கு உட்பட்டு வருபவர்களின் நிலை சம்பந்தமான சகல தகவல்களும் பெறப்பட்டன. தொடர்ந்து வைத்திய நிபுணருக்கான பயிற்சியினைப் பெறுவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த டாக்டர் நந்தன திஸநாயக இந்த ஆய்வில் பெரிதும் ஆர்வம் காட்டி, ஆய்வின் வெற்றிக்காக கடுமையாக உழைத்ததுடன் பல வெள்ளைப் பூரான்களை ஆய்வுக்காகச் சேகரித்தார்.

பரந்து பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் எமது இந்த ஆய்வில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் குலரத்தின அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறார் சேரிக்கப்பட்ட வெள்ளைப்பூரன்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகத் தின் விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் பிரிவைச் சார்ந்த பேராசிரியர் கித்சிறிரண வீரவினதும், ஜயர்ணி நாகசேனவினதும் பங்களிப்பினால் இந்தப் பூரான்கள் இலங்கையில் இதுவரையில் கண்டறியப்படாத புதிய வகை என்பதும் இவை இந்தியாவில் இருக்கும் ரெட் இந்தியன் ஸ்கோபியனை ஒத்தவை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த ஆராய்ச்சி முடிவுகள் அமெரிக்காவின் மார்சால் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகள் சம்பந்தமான சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:**- வெள்ளைப் பூரான் கொட்டுகையினால் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில்**- கொடுக்கன் கொட்டுகைக்கு உட்பட்டவர்கள் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். இயலுமாயின் வைத்தியசாலைக்கு வரும்போது கொட்டிய கொடுக்கனையும் போத்தல் ஒன்றில் போட்டுக் கொண்டு வந்தால் அதனைச் சரியான முறையிலே இனங்காண உதவியாக இருக்கும். தற்போது கொடுக்கப்படுகின்ற 'பிரசோசின்' என்கின்ற மாத்திரை மூலம் இதனது தாக்கங்களை நல்ல முறையிலே கட்டுப்படுத்தக் கூடியதாக இருப்பதால் இது தொடர்பாகப் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

**கேள்வி:**- இவை உண்மையிலேயே IPKF காலத்தில் யாழ் குடா நாட்டிற்குள் வந்தடைந்து பெருக்கம் அடைந்திருக்கிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறதா?

**பதில்:**- இந்த வகைக் கொடுக்கன் புதிதாகவே யாழ் குடாநாட்டில் கண்டறியப்பட்டிருக்கிறது. இவை இலங்கையில் வேறு எந்தப் பகுதியிலும் இதுவரை கண்டறியப்படவில்லை. இவற்றின் அமைப்பும், இயல்புகளும் கொட்டும் பொழுது ஏற்படும் தாக்கங்களும் இந்தியாவில் இருக்கும் இந்தியன் ரெட் ஸ்கோப்பியன்'' என்னும் கொடுக்கனை ஒத்தாக இருக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் IPKF இவை உண்மையிலேயே இந்தியாவில் இருந்து தான் வந்தவையா? எக்காலப் பகுதியிலே வந்தவை என்பது பற்றி அறியப்படவில்லை. ஆனால் பல பொருள்களுடன் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த போது அந்தப் பொருட்களுடன் இந்த வகைக் கொடுக்கன்களும் இங்கு வந்து சேர்ந்திருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு.

IPKF இங்கு வந்திறங்கிய காலத்திற்கும், இதன் தாக்கங்கள் குடாநாட்டிலே அவதானிக்கப்பட்ட காலத்திற்கும் இடையே 10 வருட வித்தியாசம் இருக்கிறது. இந்தக் காலப்பகுதியிலே இங்கு வந்து சேர்ந்த இந்தக் கொடுக்கன்கள் பெருக்கம் அடைந்து குடாநாட்டு மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிலைக்கு வந்திருக்கலாம்! வெள்ளைப் பூரான் கொட்டுகையினால் ஏற்பட்ட முதலாவது இறப்பு 1999 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

**கேள்வி:** இந்த வெள்ளைப் பூரான் சம்பந்தமாக மேலும் என்ன ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. என்ன செய்யப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக கூற முடியுமா?

**பதில்:**- ஆய்வுக்காக வெள்ளைப் பூரான் ஒன்று போத்தல் ஒன்றினுள் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. அது பாத்தலினுள் 50ற்கும் அதிகமான பிள்ளைகளைப் பெற்றெடுத்து இருப்பது எமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. அத்துடன் இவை இவ்வளவு வேகமாக பெருக்கமடையக் கூடியவை என்பதை அறியும்பொழுது அச்சமாகவும் இருக்கிறது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இவற்றின் வாழ்க்கை முறை அறியப்பட வேண்டும். அத்துடன் இவை கொட்டும் பொழுது வெளிவரும் நச்சுப் பொருளின் தன்மையும் ஆராயப்பட வேண்டும். ஆய்வுகள் தொடர்கின்றன.

**கேள்வி:**- தற்போதைய நிலையில் கொடுக்கனின் கொட்டுகை காரணமாக சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கை எவ்வாறு அமைந்திருக்கிறது?

**பதில்:**- வாரம் தோறும் ஏறத்தாழ இருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களின் சிகிச்சையிலே பிரசோசின் எனப்படும் மருந்து அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக பல இறப்புகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கன்களின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் கொடுக்கன் கொட்டுகையினால் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

இலங்கையிலே யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு எந்தப்பகுதிகளிலும் இந்த வகையான வெள்ளைப் பூரானின் கொட்டுகை அவதானிக்கப்படவில்லை. பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால் இந்த வகையான பூரான்கள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவலடையும் நிலை ஏற்படலாம். ★

# தமிழீழப் போராட்டம்...

(08 பக்கத் தொடர்ச்சி)


அமைப்புக்கும் பணம் தரத் தயாரில்லை. செய்தால் நேரே செய்கின்றோம் என்கின்றனர். அவ்வாறும் போராளிகளுக்கு உதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது. இப்போதி ருக்கின்ற நிலையில் நிரந்தரமாக உதவக் கூடிய நிலையில்லை. இலங்கை அரசு உலக தொண்டு நிறுவனங்களை அனுமதித்தாலே போதும். நாம் உதவிசெய்ய வாய்ப்பு ஏற்படும். நாம் எதிர்பார்ப்பதும் அதைத்தான்.

## அமெரிக்க தீர்மானம்?

நந்த தம் இந்திய – இலங்கை – அமெரிக்கா நாடுகள் நடக்கும் நாடகம். இது ஓர் ஏமாற்று வேலை. எமது படுகொலைகள் அவர்களுக்கான அரசியல் ஆதாயப் பொருளாக பண்டமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. எந்த நாட்டிலும் கேட்டுக் கேள்வியற்று நுழையும் அமெரிக் காவால், இவ்வளவு படுகொலை ஆதாரங் களை வைத்திருக்கும் இலங்கைக்குள் நுழைய முடியாதாம். இது போன்ற தீர்மானங்கள் நமக்கு பயன்தருவதைவிட ஆதிக்க சக்திகளுக்கே அதிக லாபத்தை தருகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவிலிருந்து
ஆர்.சிவராஜா



# திருவிழா முடிந்து விட்டது எல்லோரும் திரும்பி விட்டனர்!

இலங்கையை பொறுத்தவரை இந்த தீர்மானம் பல பாடங்களை சொல்லித் தந்திருக்கிறது. கடந்த தடவை 15 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன. இம்முறை அது 13ஆகக் குறைந்தது ஏன் என்ற இலங்கை சிந்திக்க வேண்டும். மோசமான இராஜ தந்திர செயற்பாடுகளைத் தவிர வேறு காரணங்கள் இதற்கு இருக்க முடியாது என்கிற கசப்பான உண்மையை இலங்கை உணர வேண்டும்.

திருவிழா களைகட்டியிருந்தது... திருவிழா களைகட்டியிருக்கிறது... திருவிழா முடிந்து விட்டதுவிட்டது. திருவிழா முடிந்ததும் எல்லோரும் திரும்பி போய்விடுவார்கள்...

இதுதான் ஜெனீவாவில் நடந்த மனித உரிமைகள் மாநாட்டின் இரத்தினச் சுருக்கம்.

கடந்த 10ஆம் திகதி முதல் இங்கு ஜெனீவாவில் இலங்கை விடயம்தான் முக்கியமாக அனைத்து தரப்பாலும் பேசப்பட்டது. இலங்கைக்கு எதிராகத்தான் கொண்டுவந்த தீர்மானத்தை எப்படியாவது பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென அமெரிக்கா கண்ணும் கருத்துமாக இருந்தது. அதேபோல் இந்தத் தீர்மானத்தை நீர்த்து போகச் செய்யும் இராஜதந்திர முயற்சிகளை இலங்கை அரசும் எடுத்திருந்தது.

இலங்கை ஒன்றும் தனியாக இந்த முயற்சிகளில் ஈடுபடவில்லை. இலங்கைக்கு ஆதரவாக சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, ஆகிய நாடுகள் செயற்பட்டன. அவை இலங்கைக்கு தேவையான இராஜதந்திர கள வசதிகளைச் செய்து கொடுத்தன.

அதாவது இந்த நாடுகள் தங்களுடன் நட்புடன் இருக்கும், மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் இதர நாடுகளின் ஆதரவை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

இலங்கையைப் பொறுத்தவரை அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் அவர்கள் ஆரம்பத்தில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் நிச்சயமாக இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாவோ தமக்கு ஆதரவை வழங்குமென இலங்கை நம்பி இருந்தது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து இராஜதந்திரிகள் மட்டத்தில் பரவலாகப் பேசப்பட்ட அதேசமயம் தமிழ் நாட்டில் எழுந்திருந்த மாணவர் போராட்டம், தி.மு.கவின் பதவிகள் ராஜினாமா உட்பட்ட விடயங்கள் இந்தத் தீர்மானத்தில் தாக்கங்களை ஏற்படுத்துமென பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜெனீவாவில் இருந்து அவசர அவசரமாக புதுடில்லிக்கு அழைக்கப்பட்ட இந்தியத் தூதுவர் திலீப் சின்ஹா, புதுடில்லியில் இந்திய வெளியுறவுத்துறை செயலர் ரஞ்சன் மாத்தாய், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனன், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்தி இருந்தார். எனவே அவர் ஜெனிவா திரும்பும் வரை அனைத்து இராஜதந்திரிகளும், இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை பார்த்துவிட்டு ஒரு முடிவெடுப்போம் என்ற பாணியில் இருந்தனர்.

அதேசமயம் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் நாள் நெருங்க நெருங்க அமெரிக்கா தனது காய் நகர்த்தல்களை செவ்வனே செய்து கொண்டிருந்தது. இலங்கைக்கு ஆதரவான நாடுகளைக் குறிபார்த்து அவர்களுடன் பேச்சுக்களை அமெரிக்கப் பிரதிநிதிகள் நடத்தினர். இப்படியாக சந்திப்புக்களை நடத்தி நான்கு தடவை திருத்தத்தை செய்து இறுதியாக ஒரு வடிவத்தினை அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தது அமெரிக்கா. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக தீர்மானம் அப்போது நலிவடைந்து இருந்தது.

இப்படியாக நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்த போது தான் இங்கு ஜெனீவாவில் இலங்கை அரசின் முக்கிய பிரதிநிதி ஒருவரை நான் சந்திக்க நேரிட்டது. அவர் வேறு யாருமல்லர். புலிகளுடனான சமாதான முயற்சிகளின் போது முக்கிய பிரதிநிதியாக செயற்பட்டவரும், இப்போது ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதியுமான கலாநிதி பாலித்த கொஹோன்னதான் அவர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உணவு விடுதியில் சந்தித்த போது அவருடன் இலங்கை விடயம் குறித்து கேட்டேன். "உண்மையில் நான் வந்தது இலங்கை விடயம் குறித்து பேசுவதற்கல்ல. பாலஸ்தீனம் தொடர்பில் ஒரு மீளாய்வுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் வந்தேன். இலங்கை விடயத்தை பேச எமது நாட்டு குழுவினர் உள்ளனர். அவர்கள் அந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்" என்றார் பாலித்த.

"ஒன்றை நான் உங்களிடம் சொல்ல வேண்டும்... பாலஸ்தீனம் குறித்து நான் பேச வந்துள்ளேன். அப்படியான இடங்களில் எல்லாம் மனித உரிமைகளை துச்சமாக நினைத்து செயற்படும் தரப்பினர் இலங்கையில் மனித மீறல்களை பற்றி பேசுவது பற்றி வியப்பாக இருக்கிறது" என்றும் குறிப்பிட்டார் பாலித்த.

பாலஸ்தீனம் பற்றிய மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளத்தான் அவர் வந்துள்ளார் என்பதை என்னால் உறுதியாக நம்ப முடியாமல் இருந்தது. ஏனெனில் இலங்கை, இந்தப் பிரேரணை விடயத்தில் ஒரு நெருக்கடியை சந்தித்திருந்தது. எனவே "உண்மையாகவே பாலஸ்தீன விடயம் பற்றி பேசத்தான் வந்தீர்களா?" என்று நான் திரும்பத் திரும்பக் கேட்டது அவருக்கு சிரிப்பை ஏற்படுத்தி விட்டது. "உண்மை அதுதான்" என்று கூறி அமைதியானார் கொஹோன்ன.

இதற்கிடையில் ஜெனீவாவில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். அவரிடம் நேர்காணல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்த அவர்கள், இலங்கை பிரச்சனைகள் குறித்து கேள்வி எழுப்பத் துவங்கினர். அந்தச் சந்தர்ப்பத்தில் யாருடனோ தொலைபேசியில் தொடர்புகொண்டு தமிழ்நாட்டு ஊடகவியலாளர்கள் விடுத்த கோரிக்கை குறித்து ஆலோசனை கேட்டார் கொஹோன. பின்னர் தொலைபேசி அழைப்பை துண்டித்த அவர் "உடனடியாக நேர்காணல் தருவது என்பது கடினம். சற்றுப் பொறுத்து பார்ப்போம்" என்று கூறி நிலைமையைச் சமாளித்தார்.

இது ஒருபுறமிருக்க உணவு விடுதியில் அமெரிக்கத் தூதுவர் டோனஹோ அம்மையார் சில இராஜதந்திரிகளுடன் பேசிக் கொண்டிருந்தார். அது முடிந்த கையோடு அவருடன் ஊடகவியலாளர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து பேச்சுக் கொடுத்தோம். "இந்தியா என்ன சொல்கிறது... தமிழ்நாட்டின் நிலைமை தாக்கங்களை தருமா?" என்று நாம் கேட்டோம். "மாணவர்களின் போராட்டத்தை அமெரிக்கா கவனித்துக் கொண்டிருக்கிறது... பொறுத்துப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு அவசர அவசரமாக வெளியேறினார் தூதுவர்.

நிலைமைகள் இப்படி இருக்க, தமிழகத்தில் இருந்து வந்திருந்த நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான், ஜெனீவாவில் திரண்டிருந்த தமிழ் இன உணர்வாளர்களுடன் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருந்ததை காண முடிந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கனடாவில் இருந்து வருகை தந்திருந்த பிரபல சட்ட நிபுணர் கேரி ஆனந்தசங்கரி, பிரிட்டிஷ் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் ரவி குமார், பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் தலைவர் கிருபாகரன் போன்ற பலரும்கூட பன்னாட்டு இராஜதந்திரிகளுடன் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருந்ததை காண முடிந்தது.

இதில் குறிப்பாக கேரி ஆனந்தசங்கரி, கிருபாகரன் போன்றோர் மனித உரிமைகள் பேரவைக்குள் பல தடவைகள் இலங்கை தமிழர்கள் படும் பிரச்சினைகள் குறித்து உரையாற்றியிருந்தனர்.

அமெரிக்கத் தீர்மானம் குறித்து அடிக்கடி கேரி ஆனந்தசங்கரி எங்களுடன் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொண்டிருப்பார். அவர் அப்போது எங்களிடம் தெரிவிக்கும் விடயங்கள் பின்னர் சரியாக நடந்திருக்கும். பல்வேறு இராஜதந்திரிகளுடன் அவர் அடிக்கடி சந்தித்து பேசுவதால் நிலைமைகள் எப்படி உள்ளன என்பதை அவரின் ஊடாக எம்மால் அறிய முடிந்தது. பிரிட்டிஷ் தமிழர் பேரவையின் செயலாளர் ரவி குமார், இலங்கையின் இப்போதைய நிலைமையை பற்றி கேட்டறிந்து மிகவும் வேதனைப் பட்டுக் கொண்டதைக் காண முடிந்தது.

ஜெனீவாவுக்கு வந்திருந்த இன்னுமொரு முக்கியஸ்தர் சுந்தரம். நாடு கடந்த தமிழீழ அரசின் முக்கிய உறுப்பினர் அவர். அமெரிக்காவில் இருந்து வந்திருந்த அவர், தனது குழுவினருடன் வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலருடன் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருந்தார்.

சுந்தரம் ஒரு நல்ல ஓவியர். அமெரிக்க அதிபர் ஒபாமாவின் ஓவியத்தை வரைந்து, அதை அவரிடம் காட்டி அதில் அவரின் கையொப்பத்தை பெற்றுள்ளதை அவர் எம்மிடம் காட்டியபோது ஈழத்தமிழர் ஒருவர் இப்படி இருப்பதை நினைத்து எமக்கும் பெருமையாக இருந்தது.

முள்ளிவாய்க்காலின் இறுதிப்போர் தொடர்பில் அவர் தனது கற்பனையில் வரைந்திருந்த ஓவியமொன்றை எமக்கு காட்டினார். அந்த சோகத்தை நேரடியாகவே பார்ப்பது போலான ஒரு உணர்வே எமக்கு ஏற்பட்டது.

ஜெனீவாவில் கள நிலைமைகள் இப்படிச் சென்று கொண்டிருக்க கடந்த வியாழன்தான் மனித உரிமைகள் சபை சூடு பிடித்திருந்தது. அமெரிக்கத் தீர்மானம் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்றதால் எல்லாமே பரபரப்பாக இருந்தது.

இலங்கை நேரப்படி சரியாக பத்து மணிக்கு விவாதம் ஆரம்பமானது. இலங்கை சார்பில் பாகிஸ்தான்தான் கடும் ஆதரவாக பேசத் தொடங்கியது. அதற்கு முன்னர் இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் பேசினாலும் அவை இலங்கைக்கு தீவிர ஆதரவை தரும் வகையில் பேசவில்லை. ஆனால் பாகிஸ்தான் அமெரிக்கத் தீர்மானம் மீது வாக்கெடுப்புக்கு கோரியதுடன் இலங்கைக்கு அழுத்தங்கள் வழங்குவதில் இருந்து சர்வதேச சமூகம் விலகிச் செயற்பட வேண்டுமெனக் கத்தியது.

எல்லோர் கவனமும் இந்திய பிரதிநிதி என்ன பேசுவார் என்பதில்தான் இருந்தது. இந்திய பிரதிநிதி பேச ஆரம்பித்தார். எல்லோரும் வைத்த கண் வாங்காமல் அதனை பார்த்துக் கொண்டிருந்தனர். 13 ஆவது திருத்தம், வடக்குத் தேர்தல், படைக் குறைப்பு என்றவாறான பழைய பல்லவியை சற்று வித்தியாசமாக கூறிய இந்திய பிரதிநிதி, சுதந்திரமான விசாரணை தேவை என்று மட்டும் கூறி நிறுத்திக் கொண்டார்.

இந்தியா இறுதி நேரத்தில் வாய் மூல திருத்தத்தை கொண்டுவரும், சர்வதேச விசாரணையை கோரும் என்றெல்லாம் கதைகள் சொல்லப்பட்டிருந்தன. ஆனால் இந்திய பிரதிநிதி அப்படி எதையும் கூறாதது அனைவரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியது.

இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தீர்மானத்துக்கு ஆதரவாக 25 நாடுகளும் எதிராக 13 நாடுகளும் வாக்களித்தன. 8 நாடுகள் நடுநிலை வகித்தன. கபோன் என்ற நாடு வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. என்றாலும், அந்த நாடு அமெரிக்க தீர்மானத்தினை ஆதரித்தார்கள் என்று சபைக்கு அறிவித்துள்ளனர்.

இதன் பின்னர் சபைக்கு வெளியில் செய்தியாளர்களை சந்தித்த அமெரிக்கத் தூதுவர் டொனஹொவிடம் சர்வதேச விசாரணை தொடர்பில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அமெரிக்கப் பிரேரணைக்கு அங்கீகாரம் சிறந்த முறையில் கிடைத்துள்ளதாகவும், இலங்கை தொடர்பில் உடனடியாக கதவை இழுத்து

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறியோடும் வேட்கையோடும் போராட வேண்டும்.......

■ ஆர். சிவராஜா

**ஜெனிவாவில் இருந்து செந்தமிழன் சீமானின் விசேட பேட்டி**



"மிகப்பெரிய பேரழிவைச் சந்தித்தாலும் அதில் இருந்து மீண்டுவரக் கூடிய பேராற்றலும் வலிமையும் எமது மக்களுக்கு உண்டு. எந்த நிலையிலும் நாம் சோர்ந்து விடக் கூடாது. உலக நாடுகள் எம்மை வஞ்சிக்கின்றன. எம்மைக் கைவிடு கின்றன. ஆதரவுக் கரம் நீட்ட யாரும் இல்லாத நிலையில் நமக்காக நாமே வெறியோடும் வேட்கையோடும் போராட வேண்டிய தேவை உள்ளது.

ஈழத் தமிழ் இனம் தனது விடுதலையை வென்றெடுக்க யாரையும் நம்பிப் போராடப்புற[illegible]இல்லை என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கட்டடத்தில் நின்றபடி கூறுகின்றார் செந்தமிழன் சீமான். அதனால் அமெரிக்கத் தீர்மானம் எதிர்பார்த்தபடி இல்லை என்பதற்காக வருத்தப்படத் தேவையில்லை என்பது அவரது கருத்து நிலைப்பாடு. மிகப் பெரும் அழிவில் இருந்து மீண்டெழும் வல்லமையைக் கொண்டுள்ள தமிழ் இனம், வெறியோடும் வேட்கையோடும் தனது விடுதலைக்காகத் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவருடனான சந்திப்பில் பகிர்ந்து கொண்டவைகள் இனி....

"அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானம் தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியுள்ளதாகக் கருதுகிறீர்களா?"

"இல்லை. நாங்கள் எதிர்பார்க்கும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை இதில் இல்லை. என்றாவது ஒரு நாள் இவ்வாறான செயற்பாடுகளின் முடிவில் அது தெரிய வரும். இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையா, போர்க் குற்றமா என்பது அப்போது புரியும்.

இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்க உலக நாடுகள் இன்று தயங்குகின்றன. தலையீடற்ற விசாரணை, ஒரு பன்னாட்டு விசாரணை நடந்தால் மட்டுமே உண்மை உலகத்துக்குத் தெரியவரும்.

போர்க்குற்றம் செய்த நாடு ஒன்றுடன் அங்குள்ள ஓர் இன மக்கள் இணைந்து வாழ்வது சாத்தியமில்லை. எனவே தமிழ் மக்கள் இலங்கையில் சுதந்திரமாக வாழ வழி செய்யும் வாக்கெடுப்பு தேவை என்ற நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் அதற்கான எந்த நகர்வும் இங்கு இல்லை.

போர்க்குற்றம் என்பதையும் இந்தச் சபை ஏற்கவில்லை. நடந்த விவாதத்தில் அதனை யாரும் சொல்லவுமில்லை, முன்மொழியவுமில்லை. எமது பிள்ளைகள் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். எமது பெண்கள் பெருமளவில் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இன்றுவரை ஆள்கடத்தல் நடக்கின்றது. இதைப்பற்றி யாருமே பேசவில்லை."

"இந்தியாவின் நிலைப்பாடு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"இலங்கையுடன் பகைத்துக் கொள்ளக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு இந்தியா இங்கே பேசுகின்றது. ஆயிரம் ஆண்டுகளாக எங்களுக்கு நட்பு உள்ளது என்று சொல்கின்றது. தமிழ் நாட்டுக்குள் தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்கும் அது மதிப்பளிக்கவில்லை. அது சிக்கல் என்று நினைத்து இங்கே வந்து பேசுகின்றது. ஜெனிவாவில்கூட தீர்மானமான, தெளிவான கருத்தை முன்வைக்கவில்லை. நாங்கள் எதிர்பார்க்கும் தீர்மானத்தை அது முன்வைக்கவில்லை."

"மாணவர்களின் போராட்டம் உச்ச நிலையை அடைந்துள்ள ஒரு நிலையில், இந்தியா இங்கு தெரிவித்த கருத்துக்கள், தமிழ் நாட்டின் கோரிக்கைகளை அது ஏற்கவில்லை என்றுதானே அர்த்தப்" படுகிறது.

"ஆமாம்! ஏற்கவில்லை. போன தடவையும் தீர்மானத்துக்கு ஆதரவளித்தது, இம்முறையும் ஆதரவளித்திருக்கிறது. அதனால் எந்தப் பயனும் இல்லை.

"அமெரிக்காவுக்கு கிடைத்த வெற்றி என்பதைவிட இது தமிழ்நாட்டுக்கு கிடைத்த தோல்வி என்று பார்க்கிறீர்களா?"

"நாங்கள் வலிமையற்ற மக்கள். எங்களுக்கு அரசியல் அதிகாரம் இல்லை. அப்படி என்னும்போது இந்த அளவுக்குத் தான் எங்களால் செய்ய முடியும். இது தோல்வி என்று சொல்ல முடியாது. இந்தத் தீர்மானத்தில் இந்தியா எதிராக வாக்களித்திருந்தால்கூட நாங்கள் ஒன்றும் செய்திருக்க முடியாது. ஆனால் தமிழ் நாட்டில் எழுந்துள்ள அரசியல் எழுச்சிக்குப் பணிந்து தான் இந்த இரண்டு தடவைகளும் இந்தியா வாக்களித்துள்ளது. இல்லையெனில் எதிர்நிலை தான் எடுத்திருக்கும். 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் - எமது மக்கள் அழித்து ஒழிக்கப்பட்டுக்கொண்டிருந்த நாள்களில் இந்தியா கொண்டிருந்த நிலைப்பாடுகளில் இப்போது மாற்றம் உள்ளது. அதனால் இதனை தோல்வி என்று நான் பார்க்கவில்லை."

"தமிழ்நாட்டு மாணவர் எழுச்சி இந்தத் தீர்மானத்துக்குப் பின்னர் தணிந்து விடுமா?"

"அது தணியாது. முத்துக்குமார் இறந்தபொழுது எழுந்த மாணவர் எழுச்சியை அடக்கினார்கள். இப்போது மீண்டும் எழவில்லையா? அதுபோல இது தணியாது. ஏனெனில், பரந்து விரிந்து கிடக்கும் இந்த உலகத்தில் என்றைக்கு எமது இனம் எமக்கென்று ஒரு தேசத்தை அடையுமோ அன்றைக்குத்தான் இந்த வேட்கையும் வெறியும் அடங்கும். தவிர மற்றப்படி இதனை அடக்குவது சாத்தியமில்லை."

"இங்கு வந்து நிலைமைகளை பார்த்த பின்னர் உங்களின் மனப்பதிவு எப்படி உள்ளது. ஐ.நா. சபையூடாக தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா?"

"நான் இந்தச் சபையின் நடவடிக்கைகளைப் பார்க்க வேண்டும் என்றுதான் இங்கு வந்தேனே தவிர, இந்தச் சபை எமக்கான விடுதலையைப் பெற்றுத்தரும் என்று வரவில்லை. இங்குள்ள பன்னாட்டுத் தலைவர்கள், பெரிய பெரிய தலைவர்கள் எமக்காகப் பேசி எமக்குரிய விடுதலையைப் பெற்றுத் தருவார்கள் என்று நினைத்து வரவில்லை. ஆனால் நாங்கள் போராடிப் பெறப் போகின்ற தேச விடுதலையை இந்தச் சபைதான் அங்கீகரிக்க வேண்டியுள்ளது."

"உப்புச் சப்பில்லாத இந்தத் தீர்மானத்தால் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட்டிருக்கும் ஈழத் தமிழருக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?"

"இந்தத் தேச விடுதலைப் போராட்டத்தை, இந்த உரிமை கோரும் போராட்டத்தை நாம் தொடங்கும்போது இந்தியா எமக்கு இன விடுதலையைப் பெற்றுத் தருமென்றோ, அமெரிக்கா பெற்றுதருமென்றோ. இங்கு ஐ.நாவில் உள்ள உறுப்பு நாடுகள் பெற்றுத் தருமேன்றோ ஆரம்பிக்கவில்லை. நாம் நமது வலிமையை நம்பி, நாமே போராடி உரிமைகளைப் பெறுவது என்ற உயரிய லட்சியத்துடனேயே நின்றோம். இப்பொழுதும் அதே உணர்வுடன்தான் நாம் நிற்க வேண்டும்.

மிகப்பெரிய பேரழிவைச் சந்தித்தாலும் அதில் இருந்து மீண்டு வரக்கூடிய பேராற்றலும் வலிமையும் எமது மக்களுக்கு உண்டு. எந்த நிலையிலும் நாம் சோர்ந்து விடக் கூடாது. உலக நாடுகள் எம்மை வஞ்சிக்கின்றன. எம்மைக் கைவிடுகின்றன. ஆதரவுக் கரம் நீட்ட யாரும் இல்லாத நிலையில், நமக்காக நாமே வெறியோடும் வேட்கையோடும் போராட வேண்டிய தேவை உள்ளது. அதை எமது மக்களும் உணர்ந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்."

## திருவிழா முடிந்து விட்டது......

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூடிவிட முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேசமயம் இந்தியத் தூதுவர் திலிப் சின்ஹாவிடமும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். சுதந்திர விசாரணைகள் என்பதும் கிட்டத்தட்ட அப்படித்தான் என்ற சாரப்பட அவர் பதில் அளித்தார்.

இப்படியாக ஜெனிவாத் திருவிழா ஒரு வழியாக முடிவுக்கு வந்தது. இங்கு சில விடயங்களை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இறுதி நேரத்தில் இந்தியா திருத்தங்களை கொண்டு வரலாம் என்ற எதிர்பார்ப்பு சில மறைமுக தாக்கங்களை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. ஏனெனில் அமெரிக்காவுக்கு சுமார் 32 நாடுகள் வரை ஆதரவை வழங்கி இருந்தன. அதாவது திருத்தம் வரும் என்று கூறப்படுவதற்கு முன்னர் இருந்த நிலைமை இது. கடினமான தீர்மானமாக இருந்தபோது அதற்கு இருந்த ஆதரவு, அது மென்மையான பின்னர் குறைந்த காரணம் என்ன என்பதுதான் வேடிக்கை.

இந்தியா இறுதி நேரத்தில் சில கடும் திருத்தங்களை கொண்டு வந்தால் அதற்கு ஆதரவளித்து இலங்கையின் பகையை தேடிக் கொள்வானேன் என்று சில நாடுகள் நினைத்து விட்டன. இதனால் அவை நடுநிலை வகிக்க தீர்மானித்து விட்டிருந்தன. ஆனால் நாய் வைக்கோலை தின்னவும் செய்யாது, தின்னும் மாட்டுக்கு கொடுக்கவும் செய்யாது என்னும் பழமொழிக்கமைய தீர்மானத்தில் திருத்தங்களை கொடு வராமலும், தீர்மானத்தைக் கொண்டுவந்த அமெரிக்காவை பெரும்பான்மையுடன் நிறைவேற்ற விடாமலும் செய்திருக்கிறது இந்தியா.

இறுதி நேரத் திருத்தங்கள் என்பது நடைமுறைச் சாத்தியமற்றவை என்பது பல தரப்பிலும் சுட்டிக் காட்டப்பட்ட போது, இல்லை அப்படி முடியும் என்று வாதிட்டவர்கள் இப்போது தலைகவிழ்ந்து நிற்கின்றனர். எப்படியோ ஈழத்தமிழரை காப்பாற்றாவிட்டாலும், [illegible] [illegible] வரப்போகும் ஆபத்துக்களில் இருந்தாவது இந்தியா தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. ஆனால் வல்லமை மிகுந்த ஒரு நாடு இப்படி பல வீனமான இராஜதந்திர நகர்வுகளை எடுப்பது கவலைக்குரிய விடயம்தான்.

இலங்கையை பொறுத்தவரை இந்த தீர்மானம் பல பாடங்களை சொல்லித் தந்திருக்கிறது. கடந்த தடவை 15 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தன.

இம்முறை அது 13ஆகக் குறைந்தது ஏன் என்ற இலங்கை சிந்திக்க வேண்டும். மோசமான இராஜதந்திர செயற்பாடுகளைத் தவிர வேறு காரணங்கள் இதற்கு இருக்க முடியாது என்கிற கசப்பான உண்மையை இலங்கை உணர வேண்டும்.

அடுத்தபடியாக, இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகள் ஒன்றும் முழுமையாக இலங்கையை ஆதரித்ததாகக் கூறவில்லை. அவை இலங்கை தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தன. நல்லிணக்க ஆணைக்குழு சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்தல், மனித உரிமைகள் பாதுகாப்பு, நீதித்துறையில் தேவைப்படும் சுதந்திரம் உட்பட்ட பல விடயங்களைச் சுட்டிக்காட்டி இருந்தன. இந்த விடயங்களை இலங்கை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் அடுத்த மார்ச் மாதம் மற்றுமொரு கண்டம் இலங்கைக்கு காத்திருக்கிறது. அதில் இலங்கை சற்று நெருக்கடிகளை எதிகொள்ளத்தான் செய்யும்.

இருந்தாலும் இலங்கை அதற்கு கவலைப்படாது. ஏனெனில் இந்தியா இலங்கைக்கு மீண்டும் கைகொடுக்காமலா போய்விடும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரெங்கன்

வடகொரியாவால் இவ்விதமான எச்சரிக்கை அடிக்கடி விடப்படுவது அண்டை நாடுகளைப் பதற்றத்தில் ஆழ்த்துவது ஒரு புறமிருக்க, அவைகளும் விழிப்புற்று தம் தரப்பில் ஆயத்தங்களை மேற்கொள்வதற்குத் தூபமிட்டுள்ளது.

# குமுறும் எரிமலை நிலையில் கொரிய தீபகற்பம்



உலக நடப்புகள் ஒரு பார்வை

கொரிய தீபகற்பத்தில் மீண்டும் போர் மேகங்கள் சூழத் தொடங்கியிருப்பது அப்பகுதிகளில் உள்ள நாடுகளில் பதற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக தென்கொரியாவும் அமெரிக்காவும் மட்டுமல்லாது ஜப்பானும் மிகுந்த பதற்றத்துக்கு உள்ளாகி இருக்கின்றன.

இந்த நிலைமைக்குக் காரணம் அண்மையில் அணுகுண்டு ஒன்றை மட்டுமன்றி தொலைதூர இலக்குகளைத் தாக்கவல்ல ஏவுகணைகளையும் பரிசோதித்துள்ள வடகொரியா, இந்தப் பிரதேசங்களில் உள்ள அமெரிக்கத் தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தக் கூடிய தகுதியைத்தான் பெற்றிருப்பதாக அடிக்கடி கூறி வருவதாகும்.

வடகொரியா அணுகுண்டைப் பரிசோதித்ததையடுத்து, அதன் மீதான பொருளாதாரத் தடைகளை இறுக்கும்படியாக அமெரிக்கா ஐ.நாவை வலியுறுத்தி வருவது அந்த நாட்டை ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது. அதனால், அமெரிக்காவைக் குறிவைத்து ஆத்திரமூட்டும் கருத்துக்களை வெளியிட்டுவருவதுடன், வடகொரியா அண்டை நாடுகளில் உள்ள அதன் தளங்களின் பெயர்களையும் குறிப்பிட்டு அச்சுறுத்தல்களை வெளியிட்டு வருகின்றது.

அமெரிக்காவின் மத்திய பகுதி நிலைகள்வரை சென்று தாக்கும் வல்லமையுள்ள ஆயுதங்கள் தம்மிடம் இருப்பதாக அண்மையில் அச்சமூட்டியிருந்த வடகொரியா, இப்போது குவாமிலுள்ள அமெரிக்கப் படைத் தளத்தையும் ஜப்பானில் பிரதான பகுதியிலும் ஒகினாவிலுள்ள படைத் தளங்களையும் பெயர் குறிப்பிட்டு அவையெல்லாம் தமது தாக்குதல் எல்லைக்குள் இருப்பதாக அச்சுறுத்தியுள்ளது. இந்த அச்சுறுத்தல்கள் மூலம் வடகொரியா எதனைச் சாதிக்க விரும்புகிறது என்பது தெளிவாகத் தெரியாது போனாலும், தனது தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு குறிப்பாக அணுகுண்டுத் தயாரிப்பு மற்றும் ஏவுகணைப் பரிசோதனைகளை அமெரிக்கா முன்னின்று ஐ.நா. மூலம் தடைசெய்ய முயல்வதை அது விரும்பவில்லையென்பது மட்டும் தெரிகின்றது. வடகொரியாவின் தன்முனைப்பான இந்தத் தடைநடவடிக்கைகளையடுத்து தன் எல்லைப் பகுதியில் தென்கொரியா தனது கடற்படைக் கப்பல்களில் விசேட ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் கப்பல்களை நிலைகொள்ளச் செய்துள்ளது. இவை மூலம் ஏவப்படும் குண்டுகள் வடகொரியாவின் பிரதான படைத் தளங்களை நிர்மூலமாக்கிவிடக் கூடியவை என்று அறிவிக்கப்பட்டது. அதே சமயம் எல்லைப் பகுதியில் அணு குண்டுகளை சுமந்து சென்று குண்டுகளை வீசும் திறன் கொண்ட விமானங்களை அமெரிக்காவும் நிறுத்தியுள்ளது.

வடகொரியா கடந்த வியாழக்கிழமை விடுத்த எச்சரிக்கையில், அமெரிக்கா ஒன்றை மறந்து விடக் கூடாது. குவாமிலுள்ள அண்டர்சன் தளத்திலிருந்து பி 52 ரக போர் விமானங்கள் ஏவப்படும் பகுதியும், ஜப்பானிய பெரு நிலப்பகுதியில் ஒகினாவாவில் அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள் செயல்படும் இடங்களும் எமது தாக்குதல் எல்லைக்குள்தான் இருக்கின்றன என்று எச்சரித்துள்ளது.

வடகொரியாவால் இவ்விதமான எச்சரிக்கை அடிக்கடி விடப்படுவது அண்டை நாடுகளைப் பதற்றத்தில் ஆழ்த்துவது ஒரு புறமிருக்க, அவைகளும் விழிப்புற்று தம் தரப்பில் ஆயத்தங்களை மேற்கொள்வதற்குத் தூபமிட்டுள்ளது.

எவ்விதத்திலும் தவறுதலாகவாவது தாக்குதல் எதுவும் நடைபெற்றுவிடுமானால் பெரும் அனர்த்தம் ஒன்று ஏற்படும் அபாயம் இருக்கிறது. தவிர்க்கமுடியாத வகையில் போர் நிகழுமானால் அதனால் பல நாடுகள் பாதிக்கப்படும்.

அது அண்டை நாடான சீனாவிலும் எதிரொலிக்கும். எனவே தான் இப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைத் தணிப்பதற்கு தம்மால் முயற்சி மேற்கொள்ளப்பட முடியும் என்ற வகையில் சீனத் தலைவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கப்படுமானால் பயனளிப்பதாகவிருக்கும் எனலாம்.

### மீட்கப்பட்ட பகுதிக்கு சிரியாவில் ஒரு பிரதமர் நியமனம்

சிரியாவில் புரட்சிவாதிகள் கைப்பற்றியுள்ள பிரதேசங்களை முறையானதொரு ஆட்சியின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, புரட்சிவாதிகள் கைப்பற்றியுள்ள பகுதிகளுக்கென பிரதம அமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

துருக்கியில் இஸ்தான்புல் நகரில் கூடிய புரட்சிவாதிகளின் கூட்டணி, காஸானா ஹிட்டோ என்பவரைப் பிரதமராக அறிவித்துள்ளது. அமெரிக்காவில் பல வருடங்கள் வாழ்ந்தவரான ஹிட்டோ ஒரு தகவல் தொழில்நுட்ப அறிஞர் ஆவார். கடந்த புதன்கிழமை இஸ்தான்புல்லில் நடைபெற்ற கூட்டணி மாநாட்டில் பிரதம மந்திரி பதவிக்கு போட்டியிட்ட ஹிட்டோவுக்கு 48 வாக்குகளில் 35 வாக்குகள் கிடைத்தன.

அது வெளிப்படைத் தன்மை கொண்ட ஜனநாயகத் தேர்தல் என்று புரட்சிவாதிகள் கூறிக் கொண்டார்கள். ஹிட்டோவுக்கு இராணுவ அனுபவமில்லையென்று கூறி சில புரட்சிவாதிகள் அவரை ஆதரிக்கமறுத்து விட்டனர். அரசதரப்பிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள பகுதிகளில் பொதுச் சேவைகளை மேற்பார்வைசெய்வது அவருடைய முதல் பணியாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

சுதந்திர சிரிய இராணுவத்தின் தலைவர் அண்மையில் விடுத்த அறிவித்தல் ஒன்றில் சகல தரப்பினரையும் ஒரு குடையின் கீழ் ஆளக்கூடிய, எந்த அரசின் கீழும் தமது குழுவினர் பணியாற்றத் தயாராய் இருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்தார்.

### லெபனான் மீதான சிரியாவின் தாக்குதல்

லெபனானின் எல்லைப் பகுதியில் சிரிய விமானங்கள் நடத்தியுள்ள தாக்குதலை குறித்து அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் பலமாகக் கண்டித்துள்ளன. அந்நாட்டின் இறைமையை மீறிய செயல் இது என்று அவை கண்டித்துள்ளன.

லெபனான் நகரான அர்சாலுக்கு அருகில் சிரிய விமானம் நான்கு ஏவுகணைகளை செலுத்தி தாக்குதல் நடத்தியதாக முன் வந்த செய்திகள் கூறின.

### இஸ்ரேலில் கூட்டணி அரசு

இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தலைமையிலான கூட்டணி அரசு பதவிக்கு வந்துள்ளது. இரண்டு மாத காலம் அரசியல் கட்சிகளுடன் நடத்திய தீவிர பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வந்ததுள்ளது. இந்தக்கூட்டணிக்கு நெதன்யாஹு தலைமைவகிப்பார். இக்கூட்டணியில் பலஸ்தீனத்தில் யூத குடியேற்றங்கள் இடம்பெறுவதை ஆதரிக்கும் கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 10 வருட காலத்தில் முதல் தடவையாக தீவிர பழைமைவாதக் கட்சிகள் புதிய அரசில் சேர்த்துக்கொள்ளப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் நொதன்யாஹு பேசிய போது மீண்டும் மீண்டும் கூறிய முக்கிய விடயம், பலஸ்தீனியர்களுடன் அமைதியை நிலைநாட்டிக்கொள்வதற்கு அவர்களுடன் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இணக்கப்பாடு செய்துகொள்ளப்படும் என்பதாகும்.

### வல்லுறவுக்கு எதிரான சட்டத்தில் இறுக்கமான மாற்றம்

இந்தியாவில் வல்லுறவுக் குற்றம் புரிபவர்களுக்கு எதிராகச் சட்டத்தில் இறுக்கமான மாற்றம் கொண்டுவருவது தொடர்பான சட்டமூலம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய லோக்சபை (மக்கள் சபை) ஏற்றுக்கொண்டது. இந்தச் சட்டத்தின்படி வல்லுறவுக்குள்ளாகும் நபர் இறந்து போவாரெனில் குற்றம் புரிந்தவருக்கு மரணதண்டனை விதிப்பதற்கும் வகைசெய்யப்பட்டுள்ளது.

அண்மையில் புதுடில்லியில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் வல்லுறவுக்குள்ளாகி மரணமான சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் களேபரங்களைத் தோற்றுவித்திருந்ததையடுத்து இந்தப் புதிய சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளது.

இழிவான நோக்கத்தோடு பெண்களைப் பின்தொடர்வது, இரவில் தடவிப்பார்ப்பது, மார்பு உறுப்புகளைப் பார்த்து அல்லது ஆண் பெண் உறவைக் கண்டு களிப்பது தொடர்பான குற்றங்களுக்கும் தண்டனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. இந்த சட்டவரைவு ராஜ்ய சபையில் (மாநிலங்கள் அவை) நிறைவேறியதும் சட்டமாகிவிடும்.

### பெண் உரிமை போராளி மலாலா பாடசாலைக்குத் திரும்பினார்

பாகிஸ்தானில் பெண் கல்வியை வலியுறுத்தி வந்தமைக்காக தலிபான்களால் தலையிலும், கழுத்திலும் சுடப்பட்டு லண்டனில் சிகிச்சைபெற்று வந்த சிறுமி மலாலா யூ சாப்ஸி கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் தனது பழைய பாடசாலைக்குத் திரும்பினார்.

15 வயதான மலாலா கடந்த ஒக்ரோபரில் பாடசாலையிலிருந்து கல்லூரி பஸ்ஸில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது தலிபான்களால் சுடப்பட்டுக் காயமடைந்தார். பெண் கல்வியின் உரிமைக்காகக் குரல் எழுப்பிய இச்சிறுமி தனது கனவு நிறைவேறியிருப்பதாக கூறினார். மத்திய இங்கிலாந்தில் தற்போது வாழ்ந்துவரும் மலாலா அங்குள்ள பேர்மிங்ஹாம் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் மேற்கல்வியைத் தொடரப் போகின்றார்.

''நான் மிகவும் அதிர்ச்சியடைந்திருந்தேன். மீண்டும் பள்ளிக்குப் போக வேண்டும் என்ற எனது கனவு நிறைவடைந்திருப்பதால் மகிழ்ச்சியடைந்துள்ளேன்'' என்றார் அவர்.

உலகில் உள்ள சகல சிறுமிகளுக்கும் இந்த அடிப்படைச் சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் என்பது தமது விருப்பம் என்றும் மலாலா கூறினார்.

1997 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி பிறந்த மலாலாவுக்கு சிறுவர்களுக்கான சர்வதேச அமைதி விருதும் 2011 ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் சமாதான விருதும் கிடைத்துள்ளன. 2012 ஒக்ரோபர் 9 ஆம் திகதி தலிபான்களால் அவர் தலையிலும் கழுத்திலும் சுடப்பட்டுக் காயமடைந்தார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரக்கு மாளிகை ஆபத்து

ஔண்யன்

பாண்டவர்களைக் கொல்வதற்கு 'துரியோதானன் குரூப்' மேற்கொண்ட தந்திரங்களில் ஒன்று அரக்கு மாளிகை. அரக்கு எனப்படும் பொருள் கற்பூரத்தை ஒத்தது. எளிதில் தீப்பிடித்துக் கொள்ளும். எனவே தனது 'அன்புப் பரிசாக' பாண்டவர்களுக்கு, ஒரு அரக்கு மாளிகையை வாரணாவதம் என்ற கானகத்தில் அமைக்குமாறு தன் எடுபிடிகளுக்கு கட்டளையிட்டான் துரியோதனன். பணிகள் தொடங்கின. மாளிகையின் அத்திபாரத்திலிருந்து முகடு வரை எல்லாமே அரக்கையே மூலப்பொருளாகக் கொண்டிருந்தன. ஆனால் பார்ப்பவர்களால் அதனை எளிதில் இனங்காண முடியாது.

பாண்டவர்களுக்கென துரியோதனின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அரக்கு மாளிகையில் ஒரு நல்லநாளில் பாண்டவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

''காடு தீப்பற்றி எரியும்போது.... எலிகள் பூமிக்குள் உள்ள வளையில் புகுந்து தப்பிவிடும்'' என்று பாண்டவர்களுக்கு மறைமுகமாக எச்சரிக்கை செய்தார் விதுரர். ஓரிரவில் பாண்டவர்கள் அயர்ந்து தூங்கும் சமயத்தில், அரக்கு மாளிகையில் பட்டது ஒரு பொறி. அந்தப் பொறி சில நொடிகளிலேயே பெருந்தீயாகி மாளிகையை எரித்து சாம்பராக்கிய பின்னே ஓய்ந்தது. நல்லவேளையாக, துரியோதனனின் 'நல்லிணக்க' முயற்சியை முற்கூட்டியே அறிந்து, சுரங்கப்பாதை ஒன்றை அமைத்து வைத்திருந்ததால், அதனூடாகப் பாண்டவர்கள் தப்பித்துக்கொள்ள முடிந்தது.

எத்தனையோ ஆயிரம் வருடங்களை பூமிப்பந்து கடந்துவிட்டிருக்கின்றபோதும், முன்னைய காட்சிகளினதும் சம்பவங்களினதும் நீட்சிகள் ஏதோ ஒருவடிவில் மீளுயிர்ப்புக் கொள்ளவே செய்கின்றன. அரக்கு மாளிகையும் அதற்கு விதிவிலக்கல்லவே. வாரணாவதத்துக்குப் பதிலாக வன்னி.

துரியோதனன் கானகத்தின் நடுவே ஒரேயொரு அரக்கு மாளிகை மட்டுமே கட்டினான். ஆனால் இப்போதோ போரின் தீ நாக்குகள் படர்ந்த வன்னி முழுதுமே அரக்குமாளிகையாக உருமாற்றப்பட்டிருக்கிறது.

மக்கள் மீளக்குடியமர அரசு, ஆயிரத்தெட்டு சாட்டுகளைச் சொல்லி அவர்களை நிரந்தர நலன்புரி நிலைய வாசிகளாக வைத்திருக்கவே விரும்பியது. அப்படியான சாட்டுகளில் ஒன்று, போர் நடைபெற்ற இடங்களில் உள்ள வெடிபொருள்கள் அகற்றப்பட்ட பின்னரே அந்தப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்ற அறிவிப்பு.

அதற்கேற்றாற்போலக் கட்டம் கட்டமாகவே மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். சில இடங்களில் மீள்குடியமர்வுக்கு கொண்டு செல்லப்பட்ட மக்கள், உங்கள் பகுதிகளில் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் பூர்த்தியாகவில்லை, அது வரை இங்கேயே தங்கியிருங்கள் என்று சாமம், ஏமம் என்றும் பாராமல் கட்டாந்தரைகளிலும், காடுகளிலும் இறக்கிவிடப்பட்ட சம்பவங்களுக்கும் குறைவிருக்கவில்லை.

இந்த லட்சணத்தில் நடந்தேறிய மீள்குடியமர்வு நடவடிக்கை பூர்த்தியாகி விட்டதாகவும், நலன்புரி நிலையங்கள் யாவும் மூடப்பட்டுவிட்டதாகவும். உலக சாதனையொன்றை நிகழ்த்தி விட்ட சந்தோஷத்தோடு பெருமையடித்துக் கொண்டது அரசு. ஆனால் உண்மையில் மக்களின் நிலங்களில் விதைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் எல்லாமே முழுமையாக அகற்றப்பட்டிருக்கவில்லை.

## விளைவு?

மண்ணுக்குள் உயிர்குடிக்க காத்திருக்கும் வெடிபொருள்களிடம் சிக்கி சிறுவர்கள் சிலர் உடல் சிதறநேரிட்டிருந்தது. சிலர் கால்களை இழக்க வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட 3 வருடங்களாக முக்கித்தக்கியும் அரசால் ஏன் வெடிபொருள்களை முற்றாக அகற்றமுடியவில்லை?



அதற்கு நிறையக் காரணங்கள் உண்டு. இறுதிப் போரின்போது, முன்னேற வேண்டும், நிலங்களை விழுங்க வேண்டும் என்ற அவசரத்தில் படைத்தரப்பு வெடிபொருள்களை கணக்கு வழக்கற்றுப் பயன்படுத்தியது. பல்குழல்கள், ஆட்டிலறிகள், கொத்துக் குண்டுகள், எரிகுண்டுகள் என பெயரறியாக் குண்டுகளையெல்லாம் வன்னியெங்கும் பொழிந்து தள்ளியதாக இறுதிவரை அங்கேயே இருந்து, தப்பித்த மக்கள் சொல்கிறார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளின் போதுகூட, இத்தகைய வெடிபொருள் பிரயோகம் பற்றி அவர்கள் சாட்சியம் உரைத்திருந்தனர். எனவே வெடிபொருள் அகற்றும் நிறுவனங்களை சுதந்திரமாகச் செயற்பட படைத்தரப்பு அனுமதியளித்திருக்கவில்லை. ஏனெனில் உலகளாவிய ரீதியில் தடை செய்யப்பட்ட குண்டுகளை இறுதிப்போரில் தாம் பயன்படுத்திய சங்கதியை, வெடிபொருள் அகற்றும் நிறுவனங்கள் போட்டுடைத்துவிடும் என்று அவர்களுக்குப் பயம்.

சரி, அவ்வாறு இல்லாவிட்டால் படைத்தரப்பாவது வெடிபொருள்கள்களை அகற்றியிருக்கலாம்தானே?

அப்படியும் செய்ய அரசுக்கு மனமில்லை. கைவிடப்பட்ட இரும்புகளின் குவியல்களால் நிறைந்திருக்கும் வன்னியில், அதுவும் போரின் இறுதிக் காட்சிகள் நிகழ்ந்த இடங்களில், அந்த இரும்புகளிடையே ஏராளமான வெடிபொருள்களும் பதுங்கிக் கிடக்கின்றன. அவற்றை அகற்றுவதை விடவும், புலிகளால் புதைக்கப்பட்ட தங்கம் எங்காவது இருக்கிறதா? பணம் எங்காவது இருக்கிறதா? என்று தேடி அலைவதிலேயே படையினரின் கவனம் முழுதும் குவிந்திருப்பதாக மக்கள் சொல்கிறார்கள். அதைவிட 'சைட் பிஸ்னஸாக' பழைய இரும்புகளை வெட்டி, 'நைஸாக' விற்கும் பணிகளும் கெட்டித்தனமாக நடப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால், ''எங்கட வீட்டில வெடிக்காத குண்டுகள் இருக்கு. சின்னப்பிள்ளையள் உள்ள வீடு. ஏதும் நடந்திடுமோ எண்டு பயமாக் கிடக்கு. ஒருக்கா வந்து கிளியர் பண்ணிவிடுங்கோ'' என்று பொதுமக்கள் வெடிபொருள்களை இனங்கண்டு, இராணுவ முகாம்களுக்கு சென்று முறையிட்டாலும்கூட, அதைப்பற்றி அவர்கள் அக்கறைப்படுவதில்லை என்று அவர்கள் முறைப்படுகிறார்கள்.

''பார்க்க சிங்காரக் கொண்டையாம். உள்ளே ஈரும் பேனுமாம்'' என்ற கதையாக, கம்பள விரிப்பிடப்பட்ட வீதிகளைக் காட்டி, அபிவிருத்தியின் உச்சம் வன்னியில் எட்டப்பட்டிருப்பதாக அரசு கூறினாலும், உள்ளே நிலை வேறாகவே இருக்கிறது. ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு அரக்கு மாளிகை போன்று, கண்ணுக்குத் தெரியாத வகையில் வெடிபொருள்களை ஆங்காங்கே கொண்டிருப்பதாக மக்கள் அச்சப்படுகிறார்கள். தமது வீட்டு வளவுகளில் மறைந்திருக்கும் இந்த வெடிபொருள்கள் பற்றிய அச்சத்தால் அவர்கள், தமது நடமாட்டங்களை தமது காணியிலேயே மட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. அதைத்தானே அரசும் விரும்புகிறது.

எல்லா இடங்களிலும் பொல்லாத வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற பயத்தால், இறுதிப்போரின் கோரங்கள் நிகழ்ந்த பகுதிக்குள் மக்கள் எதையும் தேடிக்கண்டறிய முனையமாட்டார்கள் அல்லவா? வெடிபொருள் பயம் இல்லாவிட்டால் அவர்கள் எல்லா இடங்களியும் தோண்டிக் கிளறினால், மீட்கப்படும் ஆயிரமாயிரம் எலும்புக்கூடுகளின் சாட்சியங்களால் உலகின் முன் அரசு கூனிக்குறுக வேண்டியிருக்கும்.

சாட்சியங்கள் வழித்து துடைக்கப்படும் வரை அரக்கு மாளிகைகள் எப்போதுமே நிலைத்திருக்கும்.

# ஜெனிவா: ஆட்டம் சமநிலை..

(சூரியகாந்தி 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதியின் சக்கரம் எப்பொழுதும் மெதுவாகத்தான் சுற்றும் என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களைப் பொறுத்தவரை இது ஒத்திவைக்கப்பட்ட நீதி எனலாம்.

அதேசமயம், தீவிர தமிழ்த் தேசிய சக்திகள் வற்புறுத்தியது போல இனப்படுகொலை பற்றியோ போர்க்குற்றம் பற்றியோ குறிப்பிடப்படாததும் ஒரு தோல்வியே. இது முதலாவது.

இரண்டாவது -இந்தியாவின் இரட்டை வேடம் ஒரு தோல்வியே.

மூன்றாவது - தீர்மானத்தின் கடும் தொனி குறைக்கப்பட்டமை ஒரு தோல்வியே.

நாலாவது - சர்வதேச விசாரணைக்கான ஒரு பொறிமுறைக்குரிய செயன்முறைத் திட்டம் எதுவும் இதில் இல்லையென்பது ஒரு தோல்வியே.

ஐந்தாவது - கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் தமிழர்கள் ஒரு தரப்பாக உயர முடியவில்லை என்பதும் தோல்விதான்.

எனவே, ஜெனிவாவில் தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றியையும் தோல்வியையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அது ஒரு ஒத்திவைக்கப்பட்ட வெற்றி எனலாம்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் ஜெனிவாவில் அரசும் தமிழர் தரப்பும் பெற்ற வெற்றி தோல்விகளின் அடிப்படையில் கூறின், எந்த ஒரு தரப்பும் முழுமையாக திருப்திப்பட முடியாத நிலைமையே காணப்படுகிறது. இதில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட மாணவர்களின் எழுச்சியானது யாரும் எதிர்பார்க்காத ஓர் அரசியல் அதிசயம் எனலாம்.

கெலும் மக்ரே இப்படியொரு விளைவை கற்பனை செய்திருப்பாரோ தெரியாது. கடந்த சில தசாப்தங்களில் தமிழ்ப் பரப்பில் நிகழ்ந்த மிக பிரம்மாண்டமான எழுச்சி இது. எந்தவொரு அரசியல் கட்சியினாலும் திட்டமிடப்படாத, எதிர்பார்க்கப்படாத தன்னியல்பான ஓர் எழுச்சி இது.

கருணாநிதியின் உள்நோக்கங்கள் எதுவாயிருந்தாலும் அவர் நடுவன் அரசிலிருந்து விலகியமை தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு வெற்றிதான். அவரை அந்தளவுக்கு அசைத்தது மாணவர்கள்தான்.

